
நாச்சியப்பன்
பாடல்கள்
1
தமிழாலயம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நாச்சியப்பன் பாடல்கள்

பதிப்பாசிரியர்

நா. செல்வம்

தமிழாலயம்

137, ஜானி ஜான் கான் சாலை

சென்னை—600 014

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | — | Nāchiappan Pādalgaḷ |
| Author | — | Nārā Nāchiappan |
| Editor | — | N. Selvam |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | August, 1980 |
| Copy right holder | — | Author |
| Paper Used | — | 10-9 + 11.6 kg White Printing |
| Size of the book | — | Crown octavo |
| Printing types used | — | 10, 12, 18 Points |
| Number of Pages | — | 80 + 264 = 344 |
| Number of Copies | — | 1200 |
| Printers | — | Novel Art Printers<br>Madras-600 014<br>Phone: 82731. |
| Binding | — | Paper Back |
| **Price** | — | **Rupees Fifteen only. Rs. 15** |
| Subject | — | Stories in Verse |
| Publishers | — | Thamizhalayam<br>137, Jani Jan Khan Road,<br>Madras-600 014. |

# படைப்பு

1945-ஆம் ஆண்டில் நான் பாடல்கள் எழுதத் தொடங்கினேன். 35 ஆண்டுகளுக்குப் பிறகு சில பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிடும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இந்த வாய்ப்பும் சில அன்பர்களின் தூண்டுதலால் நானே உருவாக்கிக் கொண்ட நல்வாய்ப்பாகும்.



இருபது ஆண்டுகளுக்கு முன் புலவர் கவிஞர் சுற்றுலா ஒன்று மாமல்லபுரம் சென்றது. அங்கு மாமல்லபுரம் கடற்கரையில் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு பாட்டரங்கம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பாரதியார் பற்றி நான் எழுதிய சில எண்சீர்விருத்தப் பாடல்களைப் பாடினேன். தலைவர் அப்பாடல்களைப் பெரிதும் பாராட்டினார். மேலும் நான் எழுதியபாடல்களைப் படிக்க விரும்புவதாகக் கூறினார். ஆர்வத்தோடு சில பாடல்களைத் தொகுத் தெழுதி அவரிடம் கொண்டு போய்க் காட்டிப் படித்துப் பார்த்து ஒரு முன்னுரை வழங்குமாறு வேண்டினேன். தெம்பூட்டும்படியான பாராட்டுரை ஒன்றை மிக விரைவில் எழுதிக் கொடுத்தார். அம்முன்னுரையுடன் சில பதிப்பகத்

தாரை அணுகி வெளியிட வேண்டியபோது, பாடல்கள் விற்பனை யாவதில்லை. கதை எழுதுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

நான் கதைகள் எழுதினேன், கைச்செலவுக்கு. பாடல்கள் எழுதினேன், மனநிறைவுக்கு.

1972-இல் இளந்தமிழன் திங்களிதழ் தொடங்கியபோது பாடலாகவே கதை எழுதத் தொடங்கினேன்.

அந்தக் கதைப் பாடல்களின் தொகுப்பே இன்று உங்கள் கையில் புத்தகமாக விரிந்துள்ளது.

பாவலர் சுரதா அவர்கள் என்னைக் காணும் போதெல்லாம், நிறைய எழுதியிருக்கிறீர்கள்; சொந்த அச்சகம் வைத்திருக்கிறீர்கள் ஏன் ஒரு தொகுதிகொண்டு வரக் கூடாதென்று கேட்பார். தொகுதி கொண்டுவர இந்தத் தகுதிகள் போதுமா? நாட்டின் பகுதிகள் தோறும் மிகுதியாக விற்பனையாகும் தகுதியல்லவா வேண்டும்? சந்தையில் விலைபோகாத சரக்கை உருவாக்குவது வாணிக முறையன்றே என்று பல காலம் வாளா விருந்தேன்.

நண்பர்கள் பார்வையில் மிகக் காலங் கடந்து வெளிவரும் இந்நூலினை முதலில் படித்துப் பார்த்துத் தம் ஆய்வுரைகளை வழங்கியிருப்பவர்கள் இன்று தமிழ் நாட்டின் தலைசிறந்த அறிஞர் பெருமக்களாகத் திகழ்பவர்கள்.

சிறந்த பாடல்களைப் படித்து மகிழ்ந்து பாராட்டிக் கூட்டங்களிலே பிறர் சுவைக்குமாறு எடுத்துச் சொல்லிச் சுவை கூட்டும் இயல்பு வாய்ந்த மாண்புமிகு நீதிபதி ச. மோகன் அவர்கள், இத்தொகுதியினை முழுக்கப் படித்துத் தம் கருத்துரையை முன்னுரையாக வழங்கியுள்ளார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள், தமிழகத்துக்குப் புதுப்புது நூல்கள் வழங்குவதே தம் பணியென்று

செயலாற்றி வருபவர். பழந்தமிழ் நூல்களையும் பதிப்பித்து அவை மறைந்து விடாது காக்கும் செயல்புரிந்து வருபவர். அவர்கள் தம் ஆக்கப்பணிகளுக்கும் நிறுவனப் பணிகளுக்கும் இடையிலே நேரம் ஒதுக்கி, கடமை யுணர்வுடன் நூல் முழு தையும் படித்து, சிறந்த பகுதிகளை யெல்லாம் குறிப்பெடுத் துக்கொண்டு ஓர் அரிய ஆய்வுரையை வழங்கியிருக்கிறார்கள்.

சிலம்பொலி செல்லப்பன் என் கல்லூரித் தோழர். அவருடைய ஆய்வுரையை நோக்கினால், அவர் எவ்வளவு ஈடுபட்டுப் படித்திருக்கிறார் என்பதையும், பிறர் மனங் கொண்டு சுவைக்குமாறு எவ்வளவு திறமையாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றிருக்கிறார் என்பதையும் காண லாம். சிலம்பொலியார் தொட்ட கவிதை மணக்கும்; அவர் கையாளும் பாட்டு மெருகு ஏறிக் காட்சி பெறும்! தமிழ் இலக்கியச் செல்வங்களை யெல்லாம் மக்கள் மனத்தில் பரப்பி வரும் சிலம்பொலியார் என்னுடைய பாட்டுக்கும் விளக்க வுரை எழுதியிருக்கிறார்.

தமிழண்ணல் டாக்டர் இராம பெரியகருப்பன் அவர்கள் சிறந்த தமிழ்க் கவிஞர். நான் பாட்டெழுதத் தொடங்கிய காலத்திலேயே தானும் பாட்டெழுதத் தொடங்கியவர். தம் அயராத உழைப்பாலும் முயற்சியாலும், இயல்பான ஆற்றலாலும் ஒரு பெரும் பேராசிரியராய்த் திகழ்பவர். ஆய்வுலகில் தலைசிறந்து விளங்கும் தமிழண்ணல் தம் கருத் துரையை வழங்கியிருக்கின்றார்.

டாக்டர் பொன் கோதண்டராமன் அவர்களை அவருடைய மாணவர்கள் பொற்கோ என்று குறிப்பிடுவர். பொன் போன்ற நல்ல மனமுடைய அவர்கள், தம்பால் பயின்ற மாணவர்களையும் பொன் மணிகளாக்கிச் சுடர் விடச் செய்துவரும் ஆற்றலாளர். தமிழ் மொழி ஆய்வில், தலைசிறந்த இடம் பெற்றுத் திகழும் அவர்கள் என் பாடல்கள்

முழுவதையும் படித்துப் பார்த்து அவற்றின் சாறுகளை யெல்லாம் பிழிந்து தந்திருக்கிறார்கள். வாழும் நக்கீரர்; பிழைபொறுத நெஞ்சினர்; தவறில்லாத நூல்களே வெளி வர வேண்டும் என்ற சீரிய கொள்கையினர். இந்நூலில் ஏற்பட்ட சில தவறுகளைச் சுட்டிக் காட்ட அவர் தவறவில்லை. அவற்றைப் பிழைதிருத்தம் என்ற தலைப்பில் இறுதிப் பக்கத் தில் வெளியிட்டிருக்கிறேன்.

டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள் இலக்கியத் திறனாய்வு உலகத்தில் தனியிடம் பெற்றுத் திகழ்பவர்கள். பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்லாது அண்மைக் காலத் தில் அன்றன்று பூத்துவரும் புதுமலர்களையும் ஆய்ந்து, திறன்காட்டி மகிழும் செந்தமிழ்ப் பேராசிரியர். எதையும் நுட்பமாகப் பார்த்து,செவ்விய தீர்ப்பு வழங்கும் திறனுடை யார். அவர்களுடைய தெளிவுரையையும் பெறும் பெருமை பெற்றுள்ளது இந்நூல்.

டாக்டர் ந. வீ. செயராமன் அவர்கள் கோவை, தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர். இலக்கிய நூல்கள் பலவற்றை விளக்கங்களோடு பதிப்பித்து தமிழ்ப்பணி புரிந்துவரும் தமிழன்பர்.ஆய்வுக் கண்ணோட்டத் துடன் இந்நூலினைப் படித்து அரியதோர் கட்டுரையினை வழங்கியிருக்கிறார்கள்.

சென்னை அரசினர் மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருமதி சு. இராசலட்சுமி இராமச்சந்திரன் அவர்கள் செந்தமிழ்ச் சுவையில் ஊறித் திளைத்தவர்கள். தம்மிடங்கற்பாரையெல்லாம் தமிழ்ப்பற்றுடையவராக்கும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்கள் இந்நூலின் ஒவ்வொரு வரியையும் படித்துச் சுவைத்து இதன் சாரத்தை யெல்லாம் வடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மருதூர் ச. அரங்கராசன் அவர்கள் ஆசிரியராகவும் மாணவராகவும் திகழும் அரிய நிலையினர். நுண்ணறிவின்

நோக்கித் தெள்ளிதின் விளக்கும் சிறந்த ஆய்வாளர். தம் ஆசிரியரே வியக்கும் திறன்வாய்ந்த மாணவர். இலக்கிய ஈடுபாட்டில் மெய்மறந்த தன்மையர். அவர்தம் ஒப்பிய லாய்வுக் கட்டுரையை இந்நூல் பெற்றுப் பெருமை பெறு கின்றது.

டாக்டர் க. ப. அறவாணன் அவர்கள், செனகால் நாட்டின் தக்கார் பல்கலைக்கழகத்தில் ஒப்பியல் ஆய்வுப் பணி புரியும் தக்கார் ஆவர். இளைஞர். எழுச்சியும் துடிப்பும் உடை யவர். முயற்சியில் இளையாதவர். தமிழன்பால் என்பாலும் அன்புடையராகித் திகழ்பவர். நடுநிலை பிறழாத ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அவர் வழங்கிய ஆய்வுரை யொன்றை இந்நூல் பெற்றுச் சிறக்கின்றது.

மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பணிபுரியும் தி.வ. மெய் கண்டார் ஒரு செந்தமிழ்த் தேனீ! சுறுசுறுப்பும் விறு விறுப்பும் கொண்ட தொண்டர். தமிழன்பர்க்கெல்லாம் தனியன்பராய்த் திகழ்பவர். இளந்தமிழன் இதழ் தொடங் கிய காலத்தி லிருந்து என் பணிகளுக் கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் தந்துவருபவர். இந்நூல் வெளிவருவதற்குப் பல வகையிலும் உதவியவர்.

ஓவியர் அமுதோன் காவிய உணர்வோடு தீட்டிய கண் கவர் வண்ணப் படம் அட்டையை அழகு செய்கிறது.

மேற்குறித்த அனைவர்க்கும் என் நன்றி!

தமிழறிஞர் பதின்மர் பாராட்டுப் பெற்று வெளி வரும் இந்நூல், தமிழ் மக்கள் பாராட்டினையும் பெற்று விடுமாயின் நான் தமிழ் கற்றதன் முழுப்பயனையும் பெற்று விட்டதாகக் கருதி மகிழ்வேன்.

எனவே இந்நூலைத் தமிழ் மக்கள் குமுகாயத்தின் திருமுன் படைக்கின்றேன்.

அன்பன்,

12—8—1980 **நாரா நாச்சியப்பன்**

## ஆய்வுரைகள்


மாண்புமிகு நீதிபதி ச. மோகன் 9
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் 11
சிலம்பொலி சு. செல்லப்பன் 17
டாக்டர் தமிழண்ணல் 29
டாக்டர் பொற்கோ 34
டாக்டர் தா. வே. வீராசாமி 37
டாக்டர் ந. வீ. செயராமன் 48
திருமதி சு. இராசலட்சுமி இராமச்சந்திரன் 58
மருதூர் ச. அரங்கராசன் 61
டாக்டர் க. ப. அறவாணன் 69


## பாடல்கள்


காவலர் இல்லத்தில் 1
வாழவைத்தான் 14
இனிய பாதி 27
பண்பின் பரிசு 38
பம்பாய்ப் பஞ்சாங்கம் 51
ஒளி மின்னல் 59
வங்கங் கடந்த மங்கை 70
இருளகன்றிட ஒளிபெருகிட 88
பொன்னும் வெள்ளியும் 95
கொய்யாக் காதல் 102
இளவரசி முல்லை 135
ஈரோட்டுத் தாத்தா 192
நெறிசூடி 210
நல்வழிப்பா 215
பிள்ளைத் தமிழ் 225
மங்கல மங்கை 238
குறிப்புகள் 245
பாட்டு முதற்குறிப்பு அகரமுதலி 257
பிழை திருத்தம் 264



பாவலர் நாரா நாச்சியப்பன்

# இன்ப நீரோடை

**மாண்புமிகு நீதிபதி ச. மோகன்**
உயர் நீதிமன்றம், சென்னை.

பொதுவாக பாடல்கள் உள்ளத் துடிப்பை எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் பொருள் நயம் செறிந்தும் இருக்க வேண்டும். இவை இரண்டும் கலந்த எழில் உருவம் தான் பாடல்கள். இந்த அடிப்படையிலே நான் திரு. நாச்சியப்பன் பாடல்களை ஊன்றிப் படித்தேன். ஒவ்வொரு பாடலும் பொருள் நயம் செறிந்து விளங்குகின்றது. அதே சமயத்தில் புரட்சிக் கருத்துக்கள் இழையோடியிருக்கின்றன.

வேதனையில் வெந்த நெஞ்சத்தின் குமுறலும் ஏமாந்தார் சொத்தை ஏப்பமிடும் கூட்டத்தாரின் எக்களிப்பும் என்னை மிகவும் கவர்ந்தன.

கொய்யாக் காதலில் மதத்தின் பேரால் இழைத்த கொடுமைகள் அருமையாக வர்ணிக்கப்படுகின்றது.

> "எழில்புரியில் புத்த மென்னும்
> எதிர்ச்சமயம் தன்னை மக்கள்
> தழுவிவரல் காணீரோ? நீர்
> சிவபக்தர் தாமோ? சைவம்
> தழைக்கும்வழி ஈதோ? சற்றுச்
> சாற்று" மெனக் கேட்டானுக்குப்
> "பிழைக்கும்வழி சமயஞ் செய்யும்!
> பேச்சுவிடு பொழிவாய் இன்பம்!"

இவ்வரிகள் புலவர் நாச்சியப்பனின் கவித் திறனையும் எளிய நடையையும் அழகாகப் பொருள் ஆழத்தோடு இயம்புகின்றன. சுருங்கச் சொன்னால் அவருடைய கவிதைகள் ஒரு இன்ப நீரோடை. பருகப் பருக பரவசம் ஊட்டும். அவர் கவித் திறனால் தமிழ் உயரும்.

அவருக்கு என் உளங் கனிந்த பாராட்டுதல்கள்.
வளர்க அவர் தம் கவி நயம்!

12-6-1980 ச. மோகன்

# இனிய ஓவியங்கள்

**டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்**

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை-6000 020.

தமிழ் நாட்டில் பாரதிதாசன் பரம்பரையில் தோன்றிய கவிஞருள் நாச்சியப்பன் அவர்களும் ஒருவர். சமுதாயச் சீர் திருத்தம் என்ற அமைப்பில் பல கவிதைகளை அவர் பாடியுள்ளார். எண்ணச் சிதறல்களின் இனிய ஓவியங்களாக அவை அமைந்துள்ளன.

20-ஆம் நூற்றாண்டில் கூட சாதி மத பேதங்கள் விலகி அன்பு இதயங்கள் இணைவது இயலாததாக 'காவலர் இல்லத்தில்' என்ற கவிதை காட்டுகின்றது.

'வாழவைத்தான்' என்ற கவிதையில் தனக்குக் கிடைக்காத பொருளைப் பெறுவதற்காகச் செய்யும் அநியாயத்தை எடுத்துப் பேசுகின்றார்.

'இனிய பாதி' என்ற கவிதை திருமணம் ஆன பின்னரும் பிற மகளிரை விரும்பும் மனிதர் இருக்கின்ற நிலையைத் தெரிவிக்கின்றது.

தீண்டாமை என்பது தேவையற்ற கொள்கை எனப் 'பண்பின் பரிசு' என்ற கவிதை பறை சாற்றுகின்றது

நால்வருண பேதமெனும் நாசமுறு குட்டையிலே
காலுந் தலைமுடியும் கட்டோடே ஊறியதால்
சாத்திரமே பார்க்கும் சழக்கர்கள்; பீடற்ற
ஆத்திரமே கொண்ட அறிவற்ற மூர்க்கர்கள்
ஆர்ப்பரித்தார்; (பக். 45)

மூடப்பழக்கத்தை முட்டித் தள்ளுகின்றது 'பம்பாய்ப் பஞ்சாங்கம்' என்ற கவிதை.

'வங்கங் கடந்த மங்கை' என்ற கவிதை பெரும்பான்மை யான செட்டி நாட்டார் வேறுநாடு சென்று வாழ்கின்ற, பொது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கவிதை யாக அமைந்துள்ளது. இவ்வாறு எல்லாக் கவிதைகளும் சமுதாயப் புரட்சியை நோக்கமாகக் கொண்டு அமைந் துள்ளன.

'இளவரசி முல்லை' என்ற கவிதை உயர்ந்த கற்பனை வளங்கொண்டு இன்பம் பயக்கிறது. அதுவும் சமுதாயப் புரட்சியாகவே அமைந்துள்ளது.

பொதுவாகக் கவிதைக்குரிய எளிமை இனிமை ஆழம் உடைமை ஆகியவை நாச்சியப்பன் கவிதைகளில் காணப்படு கின்றன.

பல புதிய உவமைகளும் சிறந்த ஓசைச்சுவையும் கவிதையில் நிரம்பி வழிகின்றன.

சென்றால் உயிர்க்கச்சம் செல்லா விடில்தலைவர்
கொன்றாலும் அச்சமெனக் கோழை நடுங்குதல்போல்
வந்த புலிக்கஞ்சி ஓடும் வழிப்போக்கன்
சிந்தை கலங்கமலைப் பாம்பெதிரே சேருதல்போல்
(பக். 42)

பூத்தமலர் பேய்க்காற்றில் பொன்னிதழைப்
போக்கடித்து
மீத்துநிற்கும் காம்பேபோல் மெய்குலைந்த
தோற்றமுடன் (பக். 78)

பட்டுப் படபடெனப் பட்டாசு விட்டதுபோல்
கொட்டி யளந்தாளக் கோதைக்கு மாற்றுரைக்க

தாய்க்குத் தெரியாமல் தானாய் அடுக்களையில்
போய்க்கையைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்
டான்போல (பக். 86)

உண்ணவரும் பேரலைகள் கண்டும் அங்கே
உறுதியுடன் உயர்ந்திருக்கும் கரையைப் போலே
மண்ணுலகில் நிலைத்திருக்கும் புகழைக் காண
மனங்கொண்டேன் உதவிடுவாய் கவிதை மன்னா!
(பக். 98)

பண்ணோடும் சொற்களிலே உயிரைத் தேக்கி
நிகரற்ற கவியாக்கி இனிமை சேர்த்து (பக். 100)

வீடோமுட் காடாகி நெஞ்சைக் குத்தும் (பக். 140)

நினைத்ததொரு செயல்நடக்க வேண்டுமென்று
நெஞ்சாரப் பொய்சொல்லும் மனித ரெல்லாம்
தினைத்துணையும் பயன்நல்காப் பொய்யை நாளும்
திறமாகப் பயின்றுவரல் காணும் போதில்
பனைக்கழுத்தில் ஊறிவரும் சாற்றுக் கள்ளைப்
பாலென்று குடிப்பதனை ஒக்கு மென்றே
அனைத்துமொழி நல்லோர்கள் கூறி யுள்ள
அமுதமொழி மறந்தவனும்அல்ல லுற்றான்! (பக். 142)

நடக்கின்ற போதெல்லாம் கால் வலிக்கும்
நடவாமல் இருக்குங்கால் மனந் துடிக்கும்
கிடக்கின்ற இடைவெளியைக் குறைத்து நெஞ்சைக்
கிள்ளிவரும் துயரத்தை யொழிப்ப தற்கு
நடக்கின்ற செயலன்றி மருந்து வேறு
நானிலத்தில் இல்லையென எண்ணிக் கொண்டு
கடக்கின்றாள் பெருங்காட்டைக் காதல் கொண்டார்
கடக்கரிய துன்பெல்லாங் கடப்பா ரன்றோ! (பக் 157)

எனப் பல சான்றுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

கவிதையில் தமிழ் உணர்வு எல்லாப் பகுதிகளிலும் ஏறு நடை போடுகின்றது. சான்றாக :

தோன்றும் மணியன் துணையானால் உம்பெண்ணும்
ஆன்ற புலவர்களும் அன்புத் தமிழும்போல்
ஊன்றி மணவாழ்வில் ஒற்றுமையாய் வாழ்ந்திடுவார்
(பக் 12)

கண்ணில் பதிந்தாள் கருத்தில் பதிந்துவிட்டாள்
எண்ணக் கருவறையில் எங்கும் நிறைந்துவிட்டாள்
(பக் 14)

மொழிப்பற்றையும், கவிதைச் சிறப்பையும் நினைக்கும் போது கீழ்க்கண்ட வரிகள் நம்மைத் தட்டி எழுப்புகின்றன.

தப்புச் சுதிசேர்த்துத் தாளந் தறிகெட்டுச்
செப்பமில்லாப் பாப்பாடும் சீரற்ற பாடகன்போல்
(பக் 16)

ஒப்பனையும் பொய்நடிப்பும் உல்லாச மாய்நினைத்துக்
கற்பனையும் தீதாய்க் கழிகின்ற பேர்வழிகள்
தன்மானங் கெட்டுத்தந் தாய்நாட்டு மானமுமே
என்றும் பறிபோம் இழிநிலையைச் சேர்த்துவிட்டார்
(பக் 16)

வன்மனத்துப் பேயர்களால் வாடும் திருநாடே
கண்ணில் அனல்காட்டிக் கண்டிப்பாய்ச் சென்றவளை
எண்ணித்தான் பின்தொடர்தல் ஏற்ற வழியன்றென்று
(பக் 18)

என அறிவுரையும் பகர்கின்றார்.

இறைவன் அருளால் அமைகின்ற இயல்பான அழகை,
தேடாமல் பெற்ற திருவழகும் தேர்ந்தெடுத்த
ஆடை யழகும் அரும்பு நகையழகும்
கண்டவர்கள் கண்ணைப் பெயர்க்காமல் கள்ளமுதம்
உண்டவர்கள் போலாம் ஒருதன்மை உண்டாக்கும்

பேரழகைப் பெற்றிருந்தாள் பெண்ணழகின்
தத்துவங்கள்
சேர உருவான செய்ய திருவனையாள்! (பக் 27)

என்று வருணிக்கும் பொழுது ஆசிரியரின் கவித்திறம் மிளிருகின்றது.

சமுதாயம் எவ்வாறு திருந்தும் அதற்கு அடிப்படையாகச் செய்யவேண்டியவை எவை என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாகப் பேசுகின்றார். அதற்குச் சான்றாக :

......முதலில் திருந்துவது
தன்கடமை என்று தனிமனிதன் எண்ணமிட்டால்

இந்தச் சமுதாயம் எப்போதோ முன்னேற்றச்
சிந்து படித்திருக்கும், சிந்தை தெளிவின்றி

மாற்றார்மேற் குற்றஞ் சுமத்தும் வழக்கத்தைப்
போற்றா திருந்தால் புவியே திருந்திவிடும் (பக் 36, 37)

வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பல செய்திகளை நாச்சியப்பன் அவர்கள் கவிதையாகத் தருகின்றார்.

......இளம்வயதில்

ஓடிப் பொருள்சேர்த்தால் ஓய்ந்துவரும் காலத்தே
வாடிக் கிடக்காமல் வாழ்வு சிறப்பாகும் (பக் 73)

வாழ்க்கையில் சோம்பலை நீக்கிச் சுறுசுறுப்பையும், உழைப்பையும் உருவாக்க உதவும் கவிதை ‘ஒளி மின்னல்’ என்ற கவிதை.

20-ம் நூற்றாண்டில் சமுதாயப் புரட்சியைத் தோற்றுவித்து, மூட நம்பிக்கையை அகற்றிய பெரியாரின் வாழ்க்கை பற்றிய கவிதை பாராட்டத் தக்க நிலையில் அமைந்துள்ளது. அவ்வை வழியிலே நின்று ஆத்திசூடியை நெறி சூடி ஆக்கி 105 நெறிசூடிகளையும் தந்துள்ளார் ஆசிரியர். தமிழ் இலக்கிய வாழ்வில் அறக் கருத்துகளை உடைய நூல்கள் பல, குறள் காலம் தொடங்கி இன்றுவரை

வந்துள்ளன. அந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்க நிலையில் ஆசிரியரின் 'நல்வழிப்பா' அமைந்துள்ளது. இனிய ஓசையோடு ஆசிரியவிருத்தங்கள், பிள்ளைத் தமிழ் ஆகிய பகுதிகள் பொருட்சுவையோடு அமைந்துள்ளன. பாரதி தாசனின் பிரதிபலிப்பாக 'மங்கல மங்கை' என்ற கவிதை அமைந்துள்ளது.

முழு நிலையில் நோக்கும்போது 20-ஆம் நூற்றாண்டுச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி நல்உணர்ச்சியைத் தரும் கவிதைத் தொகுப்பாக நாச்சியப்பனின் பாடல்கள் அமைந் துள்ளன. தமிழ் இதனால் மிகுந்த பயன் அடையும் என்று நம்புகிறேன். சிறந்த கவிதைகளைத் தமிழ் இனத்திற்குத் தந்து தமிழ் இனத்தை வளர்க்கப் பாடுபடுகின்றார் கவிஞர் நாச்சியப்பன் அவர்கள்.

அவரைப் பாராட்டிப் போற்றி மகிழ்கின்றேன்.

28-6-1980 **ச. வே. சுப்பிரமணியன்**

# நம்பிக்கை ஒளி!

**சிலம்பொலி சு. செல்லப்பன்**
உதவி இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
குறளகம், சென்னை-600 001.

சொல் வளமும், பொருள் வளமும், சுடர்மிக்க கற்பனையும் கலந்து வெல்லக் கவியெழுதி விந்தைச் சுவை படைக்கின்ற இந்த வீரக் கவிஞர் யார்? இவருடைய எழுதுகோலில் எத்தனை வகை வண்ண ஓவியங்கள் மின்னிப் பளபளக்கின்றன! பாரதியும், பாவேந்தரும் இவர் வடிவில் ஒன்றாகி வந்து தம் புதுமைத் தமிழை மீண்டும் பொழிகின்றார்களோ! ஆம். கவிஞர் நாச்சியப்பன் புரட்சிக் கவிஞரின் அடிச்சுவட்டில் புதுமைக் கவிஞராய் நடைபோட்டுப் புகழ் என்னும் உச்சி நோக்கிச் செல்லும் ஒரு பூந்தமிழ்க் கவிஞர். இவருடைய பாடல் தொகுப்பு ஒரு பைந்தமிழ்ப் படையல் ஆகும். இயற்கை அழகும், உவமை நயங்களும், இன்பத்துப் பாலின் இனிய கவர்ச்சியும், உலகியல் நடைமுறைகளும் இப்படைப்பில் பின்னிப் பிணைந்துள்ளன. இவர்தம் பாவியல் வண்ணங்களில் ஈடுபடும் கற்றுணர்ந்தோர் நெஞ்சம் களிப்பால் துள்ளும், கல்லாரும், இவர் கவியின் சொல்லாற்றல் கேட்டுச் சொக்கி விடுவர் எனில் வேறென்ன விளம்ப வேண்டும்?

இத் தொகுப்பில் உள்ள ஒவ்வொன்றும் தனித் தனிக் காவியமாய்க் கருதத் தக்க சிறப்புடையன. கதை நிகழ்ச்சிகள்—சிறு கதையும் காவியமும் கலந்தவையாக இடம் பெற்றுள்ளன. பொதுவாக அனைத்துப் பாடல்களிலும் பெண்ணின் பெருமை, பெண்ணைத் தாழ்வு செய்யும்

பேதையரின் கயமை, பெண்ணின் வீரம், பெண்ணுரிமைக்குப் போராடும் உறுதி மிக்க பாங்கு, பெண்ணின் அறிவாற்றல், அறவொழுக்கம் போன்ற செய்திகள் பேசப்படுகின்றன. இதில் சூழ்ச்சியில் ஈடுபட்டுச் சூது செய்யும் பெண்ணையும் காண்கிறோம்; சாதி வெறியினால் சான்றாண்மையை அழிக்கத் துடிக்கும் சாகசத்தையும் காண்கிறோம்; சாதிக் கொடுமையை எதிர்த்துச் சால்பை நிலை நாட்டும் சமத்துவ வேட்கையையும் காண்கிறோம். அறம் வெல்லும் மறம் அழியும் என்ற கவிஞரின் நம்பிக்கை ஒளி எல்லாப் பாடல் களிலுமே சுடர் விடுகிறது.

முதல் பாடலில் இரு இளைய உள்ளங்கள் அன்புக் காதலில் இணைவதும், இதற்குப் பெற்றோரும் மற்றோரும் ஒத்துப் போவதும், காவல் துறையினர் கட்டியங்கூறி வாழ்த்துப் பாடிக் காதலரைச் சேர்த்து வைப்பதும், முடிவில்—

வாழைமர மின்றி வளர்க்கும் நெருப்பின்றி
மேள முழக்கமின்றி வேத மொழியின்றி
நெஞ்சில் நிறைந்திருக்கும் நீங்காத காதலொன்றே
எஞ்சி யிருக்க எழுந்தம் மலர்க்கொடிக்கே (பக். 13)

பூமாலை சூட்டி நின்று புகழ் வாழ்வில் அடிவைப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் எல்லாம் கவிஞர் காதல் மணத்தின் வெற்றியில் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது.

**வாழவைத்தான்** எனும் பாடல் காமுகன் கண்ணப்பனின் கயமையை எடுத்துக் காட்டுகிறது. “கண்ணிற் பதிந்தாள் கருத்தில் பதிந்து விட்டாள்” (பக். 14) என்று அவன் ஏங்கு வதும், அந்த இனியவள் வெறுத்தபோது அவளை வலுவில் கையைப் பற்ற முனைவதும், அவளின் மாமன் மகன் வந்து காப்பதுவும், வேறு ஒருவனுக்கு திருமணம் முடிக்கத் திட்ட மிட்டு மணவறையில்—

எங்கும் சிரிப்பொலியும் இன்பமிகு பேச்சொலியும்
பொங்கும் உளமெல்லாம் போற்றுகின்ற
வாழ்த்தொலியும் (பக். 23)

சூழ, மணமக்கள் வீற்றிருப்பதுவும், அவளை அடைய முடியாமல் தோல்வியுற்றவன் திருமணத்தைத் தடுக்கக் கருதி தீய நஞ்சு போன்ற செய்தியை அனுப்புவதும், தெய்வமகன் வந்து அவளைத் திருவாகக் காப்பதுவும் மிக அழகாக வருணிக்கப்படுகின்றன.

கற்பு பெண்ணுக்கு மட்டுமே உரியதுஎன்பதை மாற்றிப் பாடினார் பாரதியார்; ஆண், பெண் ஆகிய இரு பாலார்க்கும் கற்பைப் பொதுவில் வைப்போம் என்ற இலக்கணமும் வகுத்தார். அவர் வகுத்த அவ்விலக்கணத்திற்கு இலக்கிய விளக்கமாகத் திகழ்கிறது '**இனிய பாதி**' என்னும் கவிதைப் பகுதி.

**பண்பின் பரிசு** என்னும் பாடல், சாதி வெறிகொண்ட கயவர்களுக்குச் சாட்டையடி வழங்குகிறது. இப்பாடலில் பெண்ணழகு மிக அருமையாக வருணிக்கப்படுகிறது. 'தங்க உடல் நிறமும்; தாமரைப் பூஞ் செம்முகமும்' கொண்ட பெண்கள் இவர் கவிதையால் மேலும் அழகு பெறுகின்றனர்.

"பெண்கள் செய்த குறும்புச் செயல்களைக் கணக்கெடுத்தால் பெய்த மழையின் பெரிதாகும்" (பக். 40) என்னும் உவமை மிகவும் ஆழமும், நுட்பமும் வாய்ந்தது.

ஓர் உயர்குலப் பெண் ஆற்றில் மூழ்குகிறாள். சேரி இளைஞன் ஒருவன் அவளைச் சின்னமான் கன்றுபோலச் சேர்த்தணைத்துத் தூக்கி வந்தான். சனாதனிகள் செய் நன்றி மறந்து அவன் சாதிச் சிறுமையை எண்ணிப் பழிக்கின்றனர். கையை வெட்ட உத்தரவு பிறக்கிறது; அணங்கு சாதியின் ஆதிக்கத்தை எண்ணிப் புலம்புகின்றாள்.

ஆற்றில் விழப் போனவளை மீண்டும் தடுக்கின்றான் புலையன். "ஊராருக்கு அஞ்சி உயிர்விட்டுச் சாவதினும் சேரிக்கு வாநீ சிறப்பாக வாழ்ந்திடலாம்" (பக் 43) என்று கனிவாக அழைக்கிறான்.

பூசுரர் கூட்டம் புலையனுக்கு ஒரு நீதியும், உயர் சாதிப் பெண்ணுக்கு ஒரு நீதியும் வழங்குகிறது. அவனது கைகள் வெட்டப்பட வேண்டும் என்றும், அவளையோ வெயில் நேரத்தில் நெய்பூசிக் குளிப்பாட்டினால் 'தோஷம்' நீங்கி விடுமென்றும் சாதிக்கொரு நீதி வழங்குகின்றார் சேஷகிரி சாத்திரியார். புலையனோ துணிந்து நீரிலிருந்து காப்பாற்றிய பெண்ணைக் கைப்பிடித்து வாழ்விலும் காப்பாற்ற முனைகிறான்.

**பம்பாய்ப் பஞ்சாங்கம்** என்னும் பாடலில் பஞ்சாங்கம் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்க முயல்வதையும், மாமியின் கொடுமையையும் அதை எதிர்த்துப் போராடிப் புது வாழ்வு பெறும் பெண்ணின் உறுதியையும், தெள்ளத் தெளிவாகக் கவிஞர் காட்டியிருக்கின்றார். இப்பாடலில்,

> கொண்டுவிற்றே ஆதாயம் கூட்டும் தொழிலில்லை
> கண்டுமுதல் கொடுத்து வட்டி கணக்கிட்டே
>
> உள்ள பொருள்வளர்க்கும் ஓங்கு தொழிலில்லை
> கள்ள வணிகத்தால் கைக்கூலித் தீவழியால்
>
> சேர்த்த பொருளில்லை; செம்மை நலங்காத்து
> கூர்த்த மதியாலும் கோடாத நெஞ்சாலும்
>
> நாடி வருவார்க்கு நல்லறிவுப் பேரொளியைப்
> பாடிப் பெருக்குகின்ற பைந்தமிழின் ஆசிரியர்
>
> (பக். 52)

என ஆசிரியத் தொழிலின் பெருமை அருமையுறப் பேசப் படுகிறது. ஆசிரியரின் மகள் வீதியில் விளையாடும்போது

பட்ட சிறுதுயரத்தையன்றிப் பெருந்துயரம் அறியாப் பேதை. அவளோ, இப்பொழுது,

பத்துநா ளாகப் படுந்துயரம் மோர்கடையும்
மத்தும்அறி யாதுசெக்கு மாடும் அறியாதே! (பக். 52)

இந்த அடிகள் பாரதியின், 'தாளம் படுமோ தறிபடுமோ யார் படுவார்' என்ற அடிகளை நினைவுக்குக் கொண்டு வருகின்றன. போர்க்களத்தில்,

சென்றால் உயிர்க்கச்சம் செல்லா விடில்தலைவர்
கொன்றாலும் அச்சமெனக் கோழை நடுங்குதல்போல்
வந்த புலிக்கஞ்சி ஓடும் வழிப்போக்கன்
சிந்தை கலங்கமலைப் பாம்பெதிரே சேருதல்போல்
ஆற்றுக்குத் தப்பிப் பிழைத்தெழுந்தாள் சாதியெனும்
மாற்றானுக் கஞ்சி மனங்கலங்கித் தத்தளித்தாள்.
(பக். 42, 43)

எனத் தவிப்பின் துடிப்பு பேசப்படுகிறது.

திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியால் தீயன் ஒருவன் நல்லவனாய் மாறிவிடுவதைக் காட்டுவதே **'ஒளிமின்னல்'** என்னும் பகுதி. வள்ளியின் கணவன் ஒரு குடியன்-ஊதாரி. கொள்ளைக்காரனாகவும் மாறிவிடுகிறான். வள்ளி தன் தோழியிடம் சொல்லிப் புலம்புவதுபோல் ஆசிரியர் அமைத்திருக்கும் பகுதி அவன் பண்புநலத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பார்த்திபனைப் போல் இவரும் பாராளா விட்டாலும்
நேர்த்தியற்ற பெண்தொடர்பில் நிச்சயமாய்
அர்ச்சுனர்தான்;
நீதித் தருமனுக்கு நேரில்லை என்றாலும்
சூதில் அவனேதான், தோற்பதிலும் அப்படியே!
(பக். 62)

இக்கொடியவன் சேர்ந்துள்ள கொள்ளைக் கூட்டத்தாருள் ஒருவன் வள்ளியைத் தூக்கிவந்து விடுகிறான். "எதைக் கொள்ளையடித்தாலும் ஏழு பேரும் சரியாகப் பகிர்ந்து கொள்ளும் நம் வழக்கத்திற்கு ஏற்பவே இப்பெண்ணையும் நாம் பகிர்ந்து கொள்ளவேண்டும்" என்கிறான். முகத் திரையை நீக்கியதும் தன் மனைவி என்பதை அறிந்த வள்ளி யின் கணவன் சீறுகிறான். அவள் 'அத்தான்' என்று புலம்பி அவன் மார்பில் சாய்கிறாள். அவன் மனம் திருந்திப் புது வாழ்வு தொடங்குகிறான். இதிகாசத் தலைவர்களாய் இருந்தாலும் அவர்களிடம் உள்ள இழிந்த குணங்களை நகைச்சுவையோடு சுட்டிக்காட்டி அவைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுவது ஆசிரியரின் அறிவு நுட்பத்திற்குச் சான்றாய் நிற்கிறது.

**வங்கங் கடந்த மங்கை** என்னும் பாடலில் ஒரு தலைவன் கட்டிய மனைவியைத் துறந்து கடல்தாண்டிச் சென்று அங்கு வேறு ஒரு பெண்ணை மணந்து வாழ்வதும், மனைவி கப்பலேறிச் சென்று அவனைக் கண்டு, புதிய வளுடன் உறவு பாராட்டி அவள் மனத்தை மாற்றித் தன் கணவனை வென்றெடுக்கும் திறமும் பேசப்படுகின்றது. சிலப்பதிகாரக் கண்ணகி செய்யத் தவறியதை இக்காலப் புதுமைப் பெண், சாதித்து காட்டுகின்ற பாங்கு பாராட்டத் தக்கது.

**இருள் அகன்றிட ஒளி பெருகிட** எனும் பாடல், தொழிற்சங்கத் தலைவன், முதலாளியுடன் சேர்ந்து தன் இனத்தவர்களுக்குத் தீங்கு செய்வதையும், பின் தொழிலாளர் புதுத் தலைமை கண்டு போராடி வெல்வதை யும், உழைக்கும் குடும்பத்தினர் உவகை அடைவதையும் காட்டுகின்றது.

கோரிக்கை தன்னைக் குறையாமல் ஏற்குமட்டும்
போருக்கு நிற்போம் (பக். 90)

என்னும் புரட்சிப் போக்கு நன்கு காட்டப்படுகிறது.

**பொன்னும் வெள்ளியும்** என்னும் பாடல் ஒரு புதுமையான கோணத்தில் அமைந்துள்ளது. சிலை வணக்கம் செய்வாரின் தலையறுத்த கஜினியையும், அண்ணன் தம்பிக்குள்ளேயே போரிட்டும் காட்டிக் கொடுத்தும் கட்டோடு அழிந்துபோகும் இந்திய மன்னர்களின்-இந்திய மக்களின் பேதமையையும், புலவர் பாடும் புகழுக்கு ஏங்கிய கஜினி பர்தோசி என்னும் கவிஞனைப் பாடல் இயற்றச் சொல்லிப் பாராட்டி மகிழ்ந்ததையும் மிகவும் உருக்கமாக ஆசிரியர் இப்பகுதியில் வடித்துக் காட்டியுள்ளார்.

கல்லடுக்கிக் கட்டிவைத்த கோயி லுள்ள
கடவுளையும் விடவில்லை கஜினி மன்னன் (பக். 96)

என்ற அடிகள் கஜினியின் பிடிவாதத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன.

கோயில் கொள்ளையடிக்கப்படுவதைக் கண்டபோதும் மார்க்கண்டேயனைக் காப்பதற்காக எமதர்மனையே உதைத்துத் தோன்றிய சிவபெருமானின் கையாலாகாதனத்தை,

வாட்டமுற்ற பக்தர்எல்லாம் அழுதிருந்தும்
வரவில்லை சிவபெருமான் (பக். 96)

என்ற அடிகள் வாயிலாக ஆசிரியர் விளக்கிக் காட்டும் பகுதி சிந்தனையைத் தூண்டி நிற்கிறது.

இறுதியில் இரண்டு குறுங்காவியங்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. **சூாய்யாக் காதல்** என்னும் காவியத்தில் கதைச் செறிவு இல்லையெனினும் ஆங்காங்கே பளிச்சிடும், கவிதை மின்னலால் ஒளிபெறுகிறது.

'வரலாகும்' எனக் கேட்ட சுந்தரிக்கு
மனமகிழும்; செவிகுளிரும்; உதடு கொஞ்சம்
விரியும்; எழில் பல்மின்னும்! வாயில் நோக்கி
விரையும் கால் (பக். 107)

எனும் அடிகள் பல மெய்ப்பாடுகளின் உறைவிடமாயுள்ளது.

இறுதியில் 'இளவரசி முல்லை' என்னும் பாடல் இடம் பெற்றுள்ளது. இதில் கயவன் ஒருவன் நண்பனுக்கும் காதலிக்கும் இரண்டகம் செய்கிறான். மன்னனையும், மக்களையும் ஏமாற்றுகிறான். காதலரைப் பிரித்துக் கொடுமை செய்கிறான். இறுதியில் உண்மை வெளிப்பட்டுத்தண்டனை அடைகிறான். பின்னர் உண்மையான காதலர்கள் அரச நிலைவிட்டு அன்பு நிலை தேடி வாழச் செல்லுகிறார்கள். இந்நிகழ்ச்சி மிக்க நயத்துடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பாடலில் நகைச் சுவையும் காவியச் சுவையும் மலிந்துள்ளன.

காத்திருந்த கண்ணிரண்டும் பூத்துப் போச்சாம்
காதலர்மேல் நம்பிக்கை தோற்றுப் போச்சாம்
பூத்திருந்த சோலைகளும் இருண்டு போச்சாம்
பொழுதடையும் மாலையெலாம் வெறுத்துப் போச்சாம்
(பக். 153)

என்ற வரிகளில் நடைநயமும், பொருள் நலமும், உணர்ச்சி வேகமும் நிறைந்துள்ளன.

எப்போதும் சிள்வண்டின் ஒலியிருக்கும்
இடையிடையே காய்சருகு சலசலக்கும்
கொப்போடு கிளைமுறியும் ஓசை கேட்கும்
குமுறிவரும் காட்டாற்றின் சீற்றம் கேட்கும்
எப்போதோ புலியுறுமும் சத்தம் கேட்கும்
இடையிடையே யானைகளோ பிளிறி யோடும்
(பக். 154)

என்னும் வரிகள் இயற்கை வருணனையில் கவிஞர் எவ்வளவு தூரம் கைதேர்ந்தவர் என்பதைக் காட்டி நிற்கின்றன.

நாளைக்கு வருவேன்நான் என்று சொல்லி
ஞாயிறுபோய் மலைப்பின்னே ஒளிந்து கொண்டான்
(பக். 184)

என்றும்,

மாக்கோல மிடுகின்ற மங்கை யல்லள்
மணக்கோலந் தரவந்த காத லன்பன்
நோக்காலே கலந்துயிரில் பின்னி விட்ட
நூன்முடிச்சு; பிரிக்கொண்ணா அன்புச் சிக்கல்!
(பக். 185)

என்றும் உள்ள அடிகள் எண்ணி எண்ணி இன்புறற்குரியன. இக்கவிதைத் தொகுப்பில்,

காதல் உளத்துக் கணவனைத்தாம் கைப்பிடித்த
மாதர்க்குக் கற்பே மதிப்புடைய சொத்தாகும் (பக். 12)

இருதோளும் நல்லறிவும் அன்பு நெஞ்சும்
இருக்குயட்டும் வாழ்வுக்குப் பயமே இல்லை (பக். 148)

என்பன போன்ற செறிவுரைகள் பல மிளிர்கின்றன. கவிதை நயம் வாய்ந்த இடங்கள் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுகின்றன. காதலன் காதலியை,

கண்ணில் பதிந்தாள் கருத்தில் பதிந்துவிட்டாள்
எண்ணக் கருவறையில் எங்கும் நிறைந்துவிட்டாள்
(பக். 14)

என்று நினைவு கொள்வதும், அலைகள் ஒன்றன்மேலொன்றாக எழுந்து வருவதை,

வந்த அலைமறைய வாரி நுரையெழுப்பிப்
பிந்தி வருமலையும் பின்னும் மறைந்தொழியும்
ஒன்றொழிய மற்றொன்றோ ஓங்கி யுயர்ந்துவரும்
வென்றெழுமுன் னாலே விழுந்து கரைந்துவிடும் (பக்.53)

என்று வருணிப்பதும், பயணத்தின் இன்றியமையாமையை

உள்ளூருக் குள்ளேயே வாழ்வை ஓட்டி
உட்கார்ந்து கொண்டிருந்தால் உலக ஞானம்
தெள்ளியதாய் வளராதென் றறிஞர் சொல்வார்;
திருநாடு முழுவதுமே சுற்றி வந்தால்
வள்ளுவரைப் போலறிஞர் ஆக லாகும்;
வளஞ்சேர்க்கும் வாணிபத்தின் திறமை சேரும்;
உள்ளந்தான் விரிவாகும்;...... (பக். 142)

எனப் புலப்படுத்துவதும்,

நடக்கின்ற போதெல்லாம் கால்வ லிக்கும்
நடவாமல் இருக்குங்கால் மனந்து டிக்கும் (பக். 157)

என உள்ளத் துடிப்பை எடுத்துக் கூறுவதும், நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவனவாக உள்ளன.

ஆசிரியர் புதிய புதிய உவமைகளைக் கையாண்டு நம்மைக் களிப்பில் ஆழ்த்துகிறார். சான்றுக்குச் சில கீழே காட்டப்படுகின்றன.

உண்டசோற் றுண்டையது தொண்டைக் குழியளவே
தங்கிவிட்டால் உண்டாம் தடுமாற்றம் போல (பக்.60)

சொன்னவன்தான் நடந்துவிட்டான் கதிர்மறையச்
சூழ்ந்தநிழல் போலமைதி சூழ்ந்த தங்கே (பக். 119)

பேனொன்று கூந்தலுக்குள் நுழைந்தாற் போலப்
பின்புறமாய்க் கூடாரத் துட்புகுந்தான் (பக். 180)

கவிஞர் தம் கொள்கைகளைக் கதை மாந்தர்களின் வாயிலாக வெளிப்படுத்துவது உள்ளம் ஈர்க்கத் தக்கதாய் உள்ளது. தாய்மொழியில் பேசாமல் அயல் மொழியில் பேசுவதே பெருமை எண்றெண்ணித் திரியும் போலிகளை வலிமையாகச் சாடுகிறார்.

தான்பிறந்த நாட்டுத் தமிழ்மொழியிற் பேசாமல்
வான்வழியே வந்து குதித்திங்கு வந்தாற்போல்

ஆண்டு கழிந்த அயல்நாட் டவன்மொழியில்
வேண்டுமென்றே பேசித்தாம் மேன்மையுள்ளார் போல்
நடித்து (பக். 16)

உலவும் இவர்களை என்னென்பது?

நால் வருண நஞ்சு மக்களை பேதப்படுத்திக் கொடுமை பல விளைத்துள்ளதைக் கண்டிக்கும் முறையில்

மனுநீதி அறமானது ஒருநாள் அதை
மாற்றும் நாளே தமிழர் திருநாள்

என்றார் பாவேந்தர். நம் கவிஞரோ,

சாத்திரங்கள் பேசிச் சதிசெய்தெம் கூட்டத்தைச்
சூத்திரராய்த் தாழ்த்திவைத்த சூதெல்லாம் தூளாகிப்
போகும் ஒருநாளில்! பொல்லாத தீக்கொடுமை
வேகும்! எரிதழலில் வெந்தொழியும்! அந்நாள்
வரும்விரைவில் (பக். 48)

என நம்பிக்கையூட்டுகிறார். ஆம்! அந்நாள் வரும் மிகு விரைவில்!

இந் நூலுள் பெரும்பாலும் பெண்ணுரிமை, சாதிக் கொடுமை போன்ற கருத்துக்களே எல்லாப் பாடல்களிலும் இழைந்தோடுகின்றன. இவை இக் காலத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் கருத்துக்கள். இன்றைய உலகம் எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளாக இன்னும் பல உள்ளன. சமூக அரசியல் பொருளாதார முரண்பாடுகள்-ஏற்றத் தாழ்வுகள்; மக்கள் வாழ்வில் மேன்மேலும் சுமத்தப்படுகின்ற நெருக்கடிகள் இவைபற்றிக் கவிஞர் எழுதியுள்ள கவிதைகள் அடுத்தடுத்த தொகுதிகளாக வெளிவந்த வண்ணமிருக்க வேண்டுமென்பது என் ஆவல். உயரத் துடிக்கும் ஒவ்வோர் உள்ளத்தின் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் திரு. நாச்சியப்பன் அவர்களின் கவிதைகள் அமைந்து சிறக்கின்றன. தமிழ்த் தாய்க்கு இவ்வரிய அணிகலனைச் சூட்டி

யுள்ள கவிஞரை உள்மாரத் தமிழுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

என்றென்றும் அழியாமல் இருக்கும் செய்யுள்
எழுத்தினிலே என்புகழைப் பதித்து விட்டால்
நன்றென்பேன் ... (பக். 98)

என்பது இந்நூலுள் வருகின்ற பாடலடிகள். கவிஞர் நாச்சியப்பன் அவர்கள் இந்நூலை இயற்றியதன் மூலம் என்றென்றும் அழியாமல் இருக்கும் செய்யுள் எழுத்தினில் அவர் புகழைப் பதித்துவிட்டார். அப்புகழ் மேன்மேலும் வளர்வதாகுக!

23-6-1980 **சு. செல்லப்பன்**

# கைவந்த கலை

'தமிழண்ணல்'
டாக்டர் இராம. பெரியகருப்பன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

கவிஞர் நாரா நாச்சியப்பன் பொன்னிக் கவிக்குடும்பப் புகழ் மிகுந்த 'பாட்டாளி'. தமிழார்வமும் தமிழறிவும் சூழ வளர்ந்த மாணவப் பருவத்தினராதலால், ஆழமான புலமையும் கூர்மையான பார்வையும் அவரிடம் உண்டு. கொஞ்சு தமிழை நெஞ்சு கலந்து பாடுமவர் பாரதிதாசன் பரம்பரையாதற்குரிய பண்புநலன் மிக்கவர். உயரிய எண்ணங்கள், சீரிய சிந்தனைகள் இவை அவருக்கு உரிமையுடையவை. தளை பிசகாத யாப்பு, சுருதி பிழையாத பண்போல அவருடைய பாடல்களில் ஒலிக்கக் காணலாம்.

இன்று புதுக்கவிதை பெருகி வளரும் காலம். ஆனால் இன்றையப் புதுக்கவிதையைப் புதருக்கு ஒப்பிடலாம். இப் புதரில் மணமுள்ள மலர்கள் மிகக்குறைவாகவே பூக்கின்றன; நிறமுள்ள பூக்களும் மிகச் சிலவே. தும்பும் தூறுமாய் வேரும் கொடியுமாய்ப் புதர்தான் இங்கே மண்டிக் கிடக்கிறது. இவர்கள் செய்யும் புதுமையெல்லாம் பொருள் விளங்காத பிறமொழிச் சொற்களை அளவின்றிப் பெய்வது; உரோமன் எழுத்துக்களை அப்படியே தமிழில் எழுதுவது; புராணக் குப்பைகளில் கிடந்து புரள்வது; தமிழில் புதுக்கவிதை கூடாதென்று யாரும் கூறுகிறார்கள்? அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு மீண்டும் மணிப்பிரவாளக் காலத்தைக் கொணர நினைக்கும் இவர்களின் கூச்சலை—வெறுங் கூச்சலே

என உலகறியச் செய்யவேண்டும். தமிழுக்குப் பகையாகும் இதுகள் தமிழ்ப் புலவர்களை, சங்க இலக்கியத்தை, மரபு வழியைப் பார்த்துப் பார்த்துக் கூவும் நேர்த்தியைப் படம் பிடித்துத்தான் பார்க்கவேண்டும். தமிழால் வாழும் தமிழ் இதழ்கள்—தமிழர்களிலேயே கொள்கையின்றி வாழும் இரண்டும் கெட்டான்கள் இப் பிறமொழிப் புகுத்தலை—தமிழ்ச்சொற் கொலையை ஏற்கின்றனர்; ஏற்கவைக்க முயல்கின்றனர்.

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை" எனத் தொடங்கும் ஒரு தனிப்பாடல் போல, இன்று மறைமலையடிகள் இல்லை; கணக்காயர் பாரதியார் இல்லை என்ற நெஞ்சழுத்தம் இப் புல்லுருவிகளுக்கு.

உதிர்ந்துவிடும் இலைதழைகளாம் இதுகளை உதறிவிட்டுப் புதுக் கவிதைகளிலேயே புதுமைமிகுந்த கவிதைகளை, மொழி வளம் சிதையாத கவிதைகளைத் தொகுத்துப் பாராட்டும் காலம் வந்திருக்கிறது. சிற்பத்தொழில் தெரியாதவன் கோயில் கட்டமுடியாது; மொழி நலம் அறியாதவன் காவியம் தீட்டவோ, கவிதை யெழுதவோ முயலுதல் இயலாது என்ற உண்மையை அனைவரும் ஒப்புங்காலம் உருவாகியிருக்கிறது. இத்தகைய காலத்தும் "நாச்சியப்பன் பாடல்கள்" போன்ற மரபுக் கவிதைகள் வெளிவருகின்றன என்பது சிந்தனைக்குரியது. கலிவெண்பாவும், விருத்தமும் தமக்குக் கைவந்த கலை என்பதைப் பாவலர் நாச்சியப்பன் இந்நூலில் தெளிவுபடுத்துகிறார். தமிழ் ஆற்றலுடைய மொழி; பாட்டு வடிவத்திற்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய நெளிவுசுளிவுள்ள மொழி. கலிவெண்பாவில் கதைப் பாங்கான ஒரு செய்தியை, எவ்வாறு 'ஓட்டமும் நடையு' மாகச் சொல்லிச் செல்ல முடியும் என்பதற்கு இந்நூல் தக்க எடுத்துக்காட்டு.

பாட்டு பழைய பாட்டையிலேதான் செல்கிறது. எனினும் புதுமையாக இதிற் சமுதாயப் பார்வை தலை நீட்டுகிறது. எல்லாமே கதைக் கவிதைகள்தான், பெரும் பாலும். 'காவலர் இல்லத்தில்' என்பது ஒரு சிறுகதை. எல்லை மீறித் திரைப்படம் பார்க்கச் சென்ற ஏந்திழையாள், காதலனைக் காவலர் இல்லத்தே மணம் முடிக்கப் பெறுவது, ஒரு 'செய்தி' போன்ற நிகழ்ச்சியே!

காவல்துறை அதிகாரியே திருமணத்தை நடத்தி வைக்கின்றார். எனினும் காதல் நிகழ்ச்சிகளைப் பச்சையாய்க் கூறாமல், பக்குவமாய் வெளிப்படுத்துகிறார் பாவலர்.

படத்தில் வருங்காதல் பார்க்கும் பொழுதில்
மடப்பெண் அவள்செய்த மட்டற்ற செய்கையெலாம்
ஈண்டுரைத்தல் காதல் இலக்கியத்திற் காகாதாம்.
தீண்டும் இரண்டுயிர்கள் தேர்ந்தநல்லின்பத்தைப்
பாரறியக் கூறுவது பச்சை மொழியாகும்
ஊரறியக் கூறல் உயர்ந்த செயலன்று (பக்.7)

இன்று இளைஞர்கள் பெண்களைக் கண்டால் 'வெறி'ப் பதையும் பின்தொடர்வதையும் கண்டு மனம்நொந்து ஆசிரியர் விண்டுரைக்கும் பாவடிகள் காரசாரமானவை.

பக்கத்தே போய்நின்றான்; பல்வரிசை தான்விரியக்
கெக்கக்கே என்று சிரித்தான்; திரும்பினாள்
அள்ளி விழுங்குபவன்போல் ஆவலொடு
தான்பார்த்தான். (பக். 15)

பாவலர் நாச்சியப்பன்,

நோக்கம் இலையென்று நோக்கும் விழிமொழியே
யார்க்கும் உரைத்துவிடும்; அத்தை உணராமல்
பின்தொடர்ந்து பின்தொடர்ந்து பேதையரைத்
துன்புறுத்தும்
வன்மனத்துப் பேயர்களால் வாடும்திருநாடே! (பக்.18)

எனவும்,

உன்னுமல் கண்ணப்பன் உன்ம வெறிபிடித்த
செந்நாய்போல் நாளும் தொடர்ந்து திரிந்தான் (பக்.18)

எனவும் கழறும் பொழுது, அவர் நெஞ்சத் துடிப்பை நம்மால் உணரமுடிகிறது.

'காவலர் இல்லத்தில்' மட்டுமன்றி 'வாழவைத்தான்' 'இனியபாதி' என்ற கதைப் பாடல்களிலும் 'இளவரசி முல்லை' என்ற வரலாற்றுக் கற்பனைப் பாடலிலும் பிறவற்றிலும் பெண்மைக்கு இழைக்கப்படும் தீங்கைக்கண்டு ஆசிரியர் கொதித்தெழுந்து சீறுவதையே காண்கிறோம்.

'வங்கங்கடந்த மங்கை' நகரத்தார் சமூகக் கதைபோல மின்னுகிறது. அழகம்மை, மூன்றாண்டுப் பிரிவு எல்லாம் இனம் காட்டும் குறிப்புக்களாகும். இந்த நாட்டின் 'இருள் அகன்றிடவும் ஒளி பெருகிடவும்' பாவலர் காணும் கனவுகள் பலவாகும்!

நாச்சியப்பன் பாடல்களிலேயே, 'பண்பின் பரிசு' தீண்டாமைக் கொடுமையை மையமாகக்கொண்டு, மிகச் சிறப்பாக விளங்குகிறது. அவர் ஒரு காலத்தில் என்னைப் போல் பெரியாரின் கூடாரத்தில் வளர்ந்த புரட்சிச் சிந்தனை உடையவரே. 'ஈரோட்டுத் தாத்தா' என்ற அவர் பாடலும் இதனை வெளிப்படுத்தும். ஒருபுலையன் தொட்டுக்காத்ததால், ஆற்றில் விழுந்து தப்பித்த உயர்குலத்து மகள் தீட்டாகி விட்டாள் எனக் கொதிக்கும் 'புருஷர்களை' நாம் இப் பாடலில் காண்கின்றோம். கதை முடிவு என்னவோ நந்தனாரைப்போல இருக்கிறது. ஆயினும் தாகூர் 'புலைச்சியைப்' போல், இப் பாடலும் படிப்பவர் மனத்தில் கிளர்ச்சியைத் தருகிறது. 'பம்பாய்ப் பஞ்சாங்கமும்' சிறந்த சீர்திருத்த மனப்பான்மையை வளர்ப்பதாகவுளது.

பொதுவாக அழகிய கவிதைகள்; சீரிய கூரிய செழுந் தமிழ் வழக்குகள்; சீர்திருத்தப் பார்வை; பெண்மையின்

உயர்வுக்கு வாதிடல்; தீமையைக் கலங்காது கண்டித்துக் கழறுதல்; நல்ல உவமைகளைக் கையாளுதல்; பெரும்பாலும் கதைப்பாங்காகவும் சிறிது காப்பியப் புனைவாகவும் பாட முயலுதல் ஆகியவை இந்நூற் சிறப்புகளாம்.

பாவலர் நாரா நாச்சியப்பனவர்கள் 'மருமக்கள் வழி மான்மியம்' போல, 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' போல நல்ல நகைச்சுவை அங்கதங்களைப் படைக்க வேண்டும். அவர் பாட்டு இக்காலச் சமுதாயத்தைப் படம்பிடித்தாற் போல் காட்டவேண்டும். அத்தகைய வளர்ச்சியை இத்தொகுப்பில் காண்கின்றோம்; இன்னும் நிரம்ப எதிர் பார்க்கின்றோம்.

13—6—1980 தமிழண்ணல்

# அன்றலர்ந்த புதுமலர்

**டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)**
*இளநிலைப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
சென்னைப் பல்கலைக் கழகம்.

கவிஞர் திரு நாச்சியப்பன் அவர்களின் பாடல் தொகுப்புகளில் ஒன்றுகத் திகழும் இந் நூலைப் படித்து மகிழும் வாய்ப்பினை இந்நூலாசிரியர் எனக்கு அன்போடு வழங்கினுர். நூல் முழுதையும் சலிப்பில்லாமல் மகிழ்வோடு படித்து முடித்தேன். அந்த அளவுச்கு இந்த நூலில் புதுமை களும், தனித்தன்மைகளும் அமைந்துள்ளன.

உரைநடையில் அமைந்துள்ள இக் காலச் சிறு கதைக ளோடு ஒப்ப வைத்து எண்ணத் தக்க வகையில் ஒவ்வொரு கவிதையும் அமைந்துள்ளது. ஒவ்வொரு கவிதையையும் ஒரு சிறு காவியம் என்று சொன்ஞல் தவறில்லை. இந்த நூலில் காணும் ஒவ்வொரு சிறு காவியமும் சிறந்த நோக்கத்தின் அடிப்படையில் எழுந்துள்ளது என்பது இந்த நூலை ஒரு முறை படிப்பார்க்கும் நன்கு விளங்கும். இன்றைய சமுதாயத்தின் தேவைக்கு ஏற்றபடி புதுமைக் கருத்துகளையும், புரட்சிக் கருத்துகளையும் அழகுற அமைத்துக் கவிதைகளைப் பின்னியிருக்கிருர் ஆசிரியர். புதுமைகளையும் புரட்சிகளையும் படைப்பதோடு காக்க வேண்டிய சிறந்த சில பண்பாட்டுக் கூறுகளையும் போற்ற உரிய இடம் தரும் போதுதான் ஒரு கவிஞன் மக்கள் மனதில் இடம் பெற்று உயருகிருன். கவிஞர் நாச்சியப்பன் அவர்கள் தம் கவிதைகளின் மூலம் வழங்கியுள்ள கதைகளில்

போற்றத்தக்க பண்பாட்டுக் கூறுகளைச் சிறப்புறப் போற்றியிருப்பது குறிப்பிடத் தக்கது. ஒவ்வொரு கவிதையும் ஒரு கலைப் படைப்பாகத் திகழ்கிறது.

இவருடைய கவிதையில் காணும் மொழிநடை இனிய எளிய நடையாக அமைந்துள்ளது. கவிதையில் ஆர்வம் கொண்ட யாரும் இவர் கவிதைகளை எளிதில் படித்துச் சுவைக்கலாம். எடுத்துச் சொல்லும் கருத்துகளும் இங்கே இவர் ஆண்டுள்ள சொற்களும், தொடர்களும் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தோடு தொடர்புடையனவாக இருப்ப தால் இங்கே காணும் கவிதைகள் உயிரோட்டம் உடையன வாகவும், ஆற்றல் மிக்கனவாகவும் உள்ளன. இன்றைய உலக நடைக்கேற்ப இவர் எடுத்தாண்டுள்ள சொற்களும் தொடர்களும் பல இடங்களில் நம் மனத்தைக் கவர்ந்து கவிதைகளோடு நம்மை எளிதில் ஒன்று படுத்துகின்றன.

நூலில் பல்வேறு இடங்களில் மிகப்பெரிய சீர்திருத்தக் கருத்துகளைப் பழமைவாதிகளும் தம்மை மறந்து ஒப்பு கின்ற வகையில் திறம்படவும், சுவை படவும் இந் நூலாசிரியர் வழங்கியிருக்கிறார். இது இந்நூலாசிரியரின் தனித்திறம்.

மரபு, புதுமை ஆகிய இரண்டையும் இணைக்கின்ற இயல்பு பொதுவாக நல்ல கவிதைகளுக்கு உண்டு. இவருடைய கவிதைகளில் காணும் உவமைகள் இந்த உண்மையை நமக்குப் பளிச்செனவிளக்குகின்றன. இன்றைய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றபடி ஆசிரியர் பல புதிய உவமைகளைப் படைத்துக் கொடுத்திருக்கின்றார்.

மக்கள் வழக்கில் நன்கு இடம் பெற்றும், இலக்கியத்தில் இடம் பெறாத சில நல்ல வழக்குச் சொற்களுக்கு இந் நூலாசிரியர் இலக்கியத் தகுதி வழங்கியிருக்கிறார். இத்தகைய வழக்குச் சொற்கள் பக்குவமாக இந்நூலில் ஆளப்பட்டிருப்பதால் இவருடைய கவிதைகள் அன்

றலர்ந்த புது மலர்போல் புதுமைப் பொலிவு பெற்று விளங்குகின்றன.

கற்பனைத் திறம் இல்லாத யாரும் இலக்கியப் படைப்புத் தொழிலில் ஒருபடிகூட முன்னேற முடியாது. கற்பனையை வேண்டத்தக்க கற்பனை, வீண் கற்பனை என்று இரண்டாகப் பிரித்துக் கொண்டால் இந்த நூலில் காணும் கற்பனைகளில் வீண் கற்பனையே இல்லையென்று சொல்லலாம். இந்நூலில் காணும் பல கற்பனைக் காட்சிகள் உயிரோவியங்களாக நம் கண்முன் வந்து நிற்கின்றன.

கவிஞர் நாச்சியப்பன் அவர்கள் மரபு பிறழாத யாப்பில் இயல்பாகவே இந்தக் கவிதைகளைப் பாடியிருக்கிறார். வெண்பா யாப்பையும், விருத்த யாப்பையும் மிகுதியாகக் காணுகிறோம்.

கவிதையும் உரைநடையும் உலக மொழிகளுக்கெல்லாம் இரண்டு கண்கள் போல அமைந்தவை எனலாம். உள்ளமும் உணர்வும் இருக்கும்வரை கவிதைக்கு உரிய இடத்தை யாரும் குறைக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. கவிதைகளை 1. ஓசை நயத்தைப் போற்றும் கவிதைகள், 2. ஓசை நயத்தைத் துறந்த கவிதைகள் என்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். இந்த இரு பிரிவுகளும் கவிதைகளின் இரண்டு பிரிவுகளே தவிர எதிரிகள் அல்ல. மரபுக் கவிதைகள் புதுக்கவிதைகள் ஆகிய இரண்டு வகைக் கவிதைகளிலுமே நல்ல கவிதைகளும் உண்டு; வெற்றுக் கவிதைகளும் உண்டு. கவிஞர் நாச்சியப்பன் அவர்களின் கவிதைகள் மரபுக் கவிதைகளில் வரவேற்கத்தக்க நல்ல கவிதைகள். கதைகளைச் சிறு காவியங்களாகப் பாடும் இத்தகைய புதிய முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டும். தமிழகம் கவிஞர் நாச்சியப்பன் அவர்களின் நன்முயற்சியைப் பாராட்டி ஊக்குவிக்கும் என்று பெரிதும் நம்புகிறோம்.

30—5—1980 **பொற்கோ**

# அறிவியக்க மின்வெட்டு

**டாக்டர் தா. வே. வீராசாமி**
இணைப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை-600 020

## இருநெறி

கவிதை வெள்ளம் இருபதாம் நூற்றுண்டில் கரை புரண்டு ஓடியது. நாட்டு விடுதலை இயக்கத்துடன் சமுதாயச் சீர்திருத்த இயக்கமும் வீறுநடை இட்டுச் சென்றது. முன்னதன் பயணம் பாரதியின் வழியில் சென்றது என்றால் பின்னது பாரதிதாசனின் வழியில் சென்றது, இரண்டின் இடைவெளி தொடக்கத்தில் சின்னஞ்சிறிதாக இருந்தாலும் வரலாற்றுப் பாதையிலே அவற்றின் வளர்ச்சி தனித்தனிக் கிளைகளாக வெளிப்பட்டுள்ளது. அவ்வளர்ச்சியில் சீர்திருத்த இயக்கத்தின் குரலைச் செவ்விய நெறியில் எடுத்துக் காட்டுவது 'நாச்சியப்பன் பாடல்கள்'.

## புரட்சிக் கவியின் நெறி

புரட்சிக் கவி என்ற பெயரைத் தாங்கி வெளிவந்த கவிதை நெறி எத்தனையோ 'மாந் தோப்பில் மண'மாக, மணம் வீசிற்று. 'சஞ்சீவி பர்வதச் சார'லாய்ப் பொழிந்தது. 'எதிர்பாராத முத்த'மாய் இனித்தது. இத்தகைய புரட்சிக் கவியின் நெறி இனிய தென்றல் வடிவம் தாங்கி நாச்சியப்பன் பாடல்களாய் உலா வரும்போது பாரதிதாசனின் பாநெறி பூவிரி காவிரியாய்ப் புதுப் பொருள் பல தாங்கிப் பழைய பண்பாட்டு முரசு கொட்டும் பாங்கினைக் கேட்க முடிகிறது.

## பழைய கரு - புதிய நெறி

பழைய கருக்களைக் கையிலெடுத்து பழந்தமிழ்ச் சொற்களையும் தொடர்களையும் பின்னிவிட்டு புதிய மறுமலர்ச்சி வேகத்தைக் குழைத்தெடுத்துப் புத்தாரம் பூட்டும் நிலை அந்நெறியில் காணும் போக்கு. கவிஞர் நாச்சியப்பன் அந்நெறியிலே அடியிட்டுச் செல்கிறார். ஆயினும் புதிய காலத்தில் தோன்றியுள்ள பல மாற்றங்களை அவருடைய கவிதைக் கண் காணாமலில்லை; சீர்திருத்த மனம் சிந்திக்காமலில்லை. பாரதிதாசனின் புரட்சிக் குரலில் மின்னிய புத்தொளியின் வேகத்தை உணர்ந்த பின்னர் இன்றைய சமுதாயத்தின் மாற்றங்கள் சிலவற்றையும் கவிதை உலைக் களத்தில் இட்டுக் காய்ச்சி வடித்துத் தந்துள்ளார்.

## காதல் பாதை

அமுதவல்லி செல்லத் துரையின் காதலைச் சோலையிலே சுதி எழப் பாடத் தொடங்கினாலும் இன்றைய நிலைக்கு ஏற்ப காதல் பாதை திரைப்பட அரங்கிற்குச் செல்லுகிறது. பெண்மையின் செயல்கள் திரையரங்கச் சூழலில் படமும், காதல் மடமும் இணைகின்ற வகையில் உருவாகின்றன. பாரதிதாசன் வழி சற்றும் சிதையாமல்,

ஈண்டுரைத்தல் காதல் இலக்கியத்திற் காகாதாம்

என்று திரையிட்டு மறைத்து விடுகின்றார் கவிஞர். காதல் காவலர் கண்காணிப்பால் காவல் நிலையத்திற்குச் செல்ல பெற்றோர், அதிகாரிகள் கூடி நடத்திய பேச்சுகளால் இல் வாழ்க்கை மலர்கிறது. காதல் வாழ்வில் பொய்ம்மை புகுந்து திரையிட்டு மறைக்கும்போது மெய்ம்மை அறம் நல்வழி காட்டினால் பழைய அகவாழ்வு மலரும் என்ற அறிவு

நெறியைக் கூருமல் கூறிக் 'காவலர் இல்ல'த்தில் காதல் பயிர் வளர்க்கக் கவிதை நீர் வார்க்கின்ருர் கவிஞர்.

காதல் என்பது தங்கு தடையின்றிப் பொங்கிப் பரவி வரும் வெள்ளம் அன்று. அன்றைய திணைப்புனமும், அருவியும், நீர்வரவும் காதல் களங்களாக இன்றைய சூழலில் அமைதற்கு இயலாதவை. இதனை உணர்ந்த கவிஞர் தட்டெழுத்துப் பயிலும் கல்வி அகத்தில் காதல் என்ற பெயரில் வெறிநாய்கள் மேய்வதையும், பெண்ணை மணப்பதுடன் அவள் சொத்தைக் களவாடும் வாய்ப்பாகச் சூழ்ச்சித் திட்டம் தீட்டுவதையும் கண்டு மனம் துடிக்கிருர். பொய்ப்பழி தூவத் தயங்காத புல்லர் கூட்டத்திடையே தெய்வமகளுக ஆணழகன் ஒருவன் உருவாவதையும் அவன் 'பைங்கிளிகளைக் கொத்தப் பறக்கும் கொடும் பருந்து'களை விரட்டுவதையும் நல்லுணர்வு பரப்பு நாட்டில் நல்லறிவுக் கருத்தைப் பரப்புவதையும் **வாழவைத்தான்** வாயிலாக எடுத்துரைக்கிருர் கவிஞர்.

## திருமணத்தின் பின்

திருமணம் என்பது மனநிறை வாழ்வில் அல்லாமல் மூட நம்பிக்கைப் பஞ்சாங்க மூட்டையில் இல்லை என்பதைப் **பம்பாய்ப் பஞ்சாங்கம்** கிழிபடக் காட்டுவதுடன் ஒருவன் ஒருத்தி என்ற மண ஒப்பந்த வலிமையை '**வங்கங் கடந்த மங்கை**' வாழ்வில் புலப்படக் கவிதைச் சிறகடிக்கிருர் நாச்சியப்பன்.

## 'பாதி' வழி

'கைலைபாதி காளத்தி பாதி' பாடிய சமய நெறியைத் தமிழ்ப்பாவுலகம் நன்கறியும். அந்நெறியின் வடிவை மட்டும் தாங்கிப் பிடிப்பது போல் காட்டி 'இனிய பாதி' என்ற தலைப்பை ஈந்துள்ளார் கவிஞர். புதிய வரவுக்கேற்பப்

பேருந்தில் மகளிர் வண்டி புகுகிறது. ஆணின் வீழ்ச்சி 'காதல்' மலர்ச்சியாக மாறும்போது இனிய பாதியின் வடிவம் மெள்ள வெளிப்படுகிறது. ஆயினும் இனியபாதியின் பின்னர் இன்னுமை விளங்குகிறது. மாறுவேடம் போன்ற சிறுசிறு கலை நுணுக்கங்கள் பாரதிதாசனின் 'வீரத்தா' யாய் 'கழைக் கூத்தியின் காத'லாய், அண்ணுவின் 'வேலைக்காரி'யாய், கலைஞரின் 'ரோமாபுரிப் பாண்டிய'ஞய் வெளிப்படுகின்றன. இம் மாறு வேட வளர்ச்சி பின்னர் அமைந்துள்ள 'இளவரசி முல்லை'யிலும் தாமரைப் பெண்ணுள் வணிகஞக மாறும் மாற்றமாக மலர்கிறது. கவிதை நெறியில் ஓர் இயக்கம் ஊட்டும் ஆற்றல் இது என்பதை இதஞல் நன்கு அறிய முடிகிறது.

## பொருளாதாரப் புயல்

காதல் நெறியிலே பழமையைப் புதுமை வளர்ச்சியில் சுழலவிட்ட கவிஞர், குடும்பச் சூழலில் பொருளாதாரம் புயலாக மாறிச் சிக்கல்களை உண்டாக்குவதையும் மறக்கவில்லை. 'குடும்ப விளக்'காகக் குடும்பத்தின் அமைதி அழகைப் பாரதிதாசன் காட்டும் போதே அறிவின்மையால் அக்குடும்பம் 'இருண்ட வீ'டாக இலகுவதைக் காட்டினர். அந்நிலை குடும்பமும் குடும்பத்தில் வாழும் உறுப்பினர்களும் கொண்ட உறவு நிலையை ஒட்டியது. ஆனல் வளர்ந்து வரும் சமுதாயத்தில் பொருளாதாரச் சூழல்கள் குடும்பத்தின் உருவத்தைக் குலைக்கிறது. தொழிலாளர் இயக்கங்களின் தலைவர்கள் செம்மை நெறி மாறி முதலாளிகளின் ஆசை வலையில் சிக்கித் தவருன வழியில் தொழிலாளர்களை நடத்திச் செல்லும்போது குடும்பம் சீர்குலைகிறது. அப்போது நல் வாழ்வு காண 'அறிஞர்' வழி 'முன்னேற்றச் சங்கம்' அமைப்பதைக் கவிஞர் காட்டுகின்ருர்.

இன்றைய சூழலில் தொழிலாளர்களிடையே தோன்றி யுள்ள பல முன்னேற்ற சங்கங்களின் 'இருப்பு நிலையை'

எடுத்துக் காட்டும் 'உண்மை' உரை இது. இந்நிலையைக் காட்டத் தூண்டியது இன்றைய வாழ்வில் கவிஞர் கண்ட 'இருள்நிலை'.

## புத்த மணம்

பழைய கதைக் கருக்களையோ சூழலையோ முற்றிலும் கவிஞர் புறக்கணிக்கவில்லை. அத்தகைய சூழலில் புகும் போது அவருடைய பரந்த உலகியல் பட்டறிவு மேலோங்கி நிற்கிறது. பல நாடுகள் சுற்றி வந்த விரிந்த மனக்காட்சி வெளிப்படுகிறது. இந்திய இலக்கியங்களில் வளர்ந்து வந்த வளர்ச்சி நிலை புலப்படுகிறது.

இந்திய வைதீகச் சூழலுக்கு எதிர்ச் சூழலாக எழுந்தது புத்த மதம். அதன் கொள்கை ஒளியில் தமிழிலக்கியம் படைத்துத் தந்தது மணிமேகலை. அதன் பின்னர் புத்த மதம் தமிழிலக்கிய வளர்ச்சியில் தன் ஆற்றலை மிகுதியும் செலுத்தவில்லை. சமணம் பரவிய வேகம் புத்தத்திற்கு எதிராக அமைந்தது. வைதீகமும் அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. இந்நிலையில் தமிழில் புத்த மணம் வீசுதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இருபதாம் நூற்றாண்டில் வங்க இலக்கிய வளர்ச்சியில் விவேகானந்தர் உரையும் தாகூரின் கவிதை ஒளியும் கலந்து தமிழகத்தில் பரவத் தொடங்கின. புத்தர் 'ஆசிய ஜோதி' யாக மொழி பெயர்ப்பு வடிவில் சின்னஞ்சிறு வடிவந்தாங்கிக் 'கவிமணி'க் குரலாய் ஒலித்தது. அண்டைய மலையாள இலக்கியத்தில் 'ஆசான்' பாக்களில் 'கருணை' வாக அது கலந்து மணந்தது.

தமிழ்ச் சீர்திருத்த இயக்கத்திலும் புத்தரின் அறிவும் இரக்கமும் போற்றப் பெற்றன. எனினும் இப்புத்த

வெள்ளம் போதிய அளவு தமிழ்க் கவிதையில் செல்வாக்குப் பெற்றது எனக் கூற இயலவில்லை.

எனினும் கவிஞர் நாச்சியப்பன் பாடல்களில் இச்செல் வாக்கு இளவேனிலாய் மறு வடிவம் எடுத்திருப்பதை உணரமுடிகிறது. **'பண்பின் பரிசு'** என அது முதலில் வெளிப் படுகிறது. கங்கைக் கரையிலே இந்நிகழ்ச்சி உருப்பெறு கிறது. நீரிலே அடித்துச் செல்லப் பெற்ற உயர்குல மங்கையைப் புலையன் காப்பாற்றினான். உயிர் காப்பதை விடச் சாதியின் வேலியே பெரியதெனப் போற்றப் பெற்றுச் சேரிக்குத் தீ வைக்கிறது பழமை. ஆத்திரம் பொங்கும்போது அன்பை வளர்க்கத் துன்பப்பகை போக்க புத்தர் வந்து புலையனைத் தன்னோடிணைக்கும் காட்சியைக் கண்கள் குளமாகக் கருணைச்சுவை வடிந்தொழுகக் காட்டுகிறார் கவிஞர்.

அரசியல் சட்டம் தீட்டிய அறிஞரும் செஞ்சோதிப் பெருமானின் அணைப்பிலே அடைக்கலம் புகும்போது சாதிச் சட்டம் பொசுக்கும்போது புத்த நெறியே பொன்னெறி யாகப் பொலிகிறது இக்கவிதை நெறியில்.

## ஒருத்தி ஒருவன்

மேலும் ஒருவனுக்கு இரு மகளிர் என்ற நிலை ஏற்படும் போது பின்னர் வந்தவள் அந்நிலையைப் பொறுது நல்வாழ்வு காணப் 'புத்தமடம் ஒன்றுக்குப் போய்ச் சேர்ந்தாள் பிக்குணியாய்'(பக்86) மாறிவிடுகிறாள். இவ்வாறு குடும்பத்தில் துன்பம் வீசும் போது பாதுகாப்பை நாடி நல்ல இல்லமாக அமைவது புத்த மடம் என்று புதுவழி காட்டுகிறார் கவிஞர். வங்கங் கடந்த மங்கை என்ற பகுதியில் சேய்நாட்டு மண் மிதித்த அறிவு வளமே இத்தகைய கவிதை முடிவுகளைக் காணுமாறு செய்கிறது.

கவிஞர் பெற்ற 'சேய்நாட்டுச் செல்வம்' இத்தகைய புதிய சூழலில் தமிழ்க் கவிதைகளை உலவ விடுவதற்கு வாய்ப் பளிக்கிறது.

## எதிர்முனை

புத்தமதத்தின் செல்வாக்குக் கொய்யாக் காதலாய் அரும்புகிறது. உபகுப்தன் கதை போல் தொடங்கிப் பின் உணர்வுக்கு அடிமையாகி உளம் வருந்தும் புத்த சீடன் கதையாகி அரசுச் சூழலில் நுழைந்து காதல் பொறாமைத் தீயில் பொசுங்கி மறுபடியும் துறவுலகையே நாடுகிறது கதை. இங்ஙனம் துறவு வட்டம் உருவெடுக்கச் சுந்தரி —பெண்ணின் கொடியாளைப் படைத்துச் செல்வது, புத்த மதக் கதைகளில் காணும் 'சுஜாதை'களின் எதிர்முனை வடிவம். இதன் வளர்ச்சியில் ஆணில் கொடியவனாக இளவரசி முல்லையில் காணும் பொன்னப்பனைக் கவிஞர் படைத்துள்ளார். அழகும் (சுந்தரி) செல்வமும் (பொன் னப்பன்) நிலையா என்ற புத்தரின் அறவழிக்குக் கால்கோள் கொள்வதாக இப் படைப்புகள் அமைந்துள்ளன.

## கவிதைப் பொன்

கவிதை என்பது ஆள்வோரின் பல்லக்குத் தூக்கியாக அமைந்தது பிற்காலத்தில். தொல் பழங்காலத்தில் கவிதையின் சொல்லும் தொடரும் பழங்கால மக்களின் மனத்தில் அச்சத்தை ஊட்டும் மந்திரமாக விளங்கியது. அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களை அளிக்கும் என அஞ்சிப் புலவரைப் போற்றினர். ஆயினும் ஆட்சியாளரின் கை வலுக்கும் போதும், வெற்றி பல மன்னரிடத்துக் குவிந்த போதும் கவிதை அவர்தம் புகழைப் பாடும் 'பதிற்றுப் பத்து'க்களாய் மாறிவிட்டன. எனினும் ஒரு சில 'கோவூர் கிழார்'கள் பொது நலம் நாடும் புலவர்

களாய் விளங்கினர். 'சொல்லியதைச் சொல்லிவிட்டேன்; செய்வதைச் செய்து கொள்' என்ற நெறியில் கவிதை உலகம் சென்றது.

ஆனால் இறைநெறி தலை எடுத்தவுடன் 'யாமார்க்கும் குடி அல்லோம்' என்று பாடத் தொடங்கியது. அப்பாட்டின் எதிரடியாகக் கஜினி முகம்மதின் கை, இறை உருவங்களை உடைத்தெறிந்தது; கோவில்களை எல்லாம் தரைமட்டமாக்கியது. எனினும் அக்கைக்குப் பர்தோசிக் கவிஞனின் கவிதையை அணிந்து கொள்ள ஆசை எழுந்ததை வெகு நாகரிகமாக நாச்சியப்பன் காட்டுகிறார். சீர்திருத்தக்கவி உள்ளம் கஜினியின் சமயத் தாக்குதலுக்கு முதலிடம் கொடுக்கிறது. கஜினியின் கை கோவிலையும் சிலையையும் இடித்த போது,

நெற்றிக் கண் திறந்துறுத்துப் பார்த்ததாலே
நீறானன் என்னுமொரு கதையுமில்லை

என்று அறிவியக்க மின்வெட்டைப் பாய்ச்சிவிட்டு பாலைவன கஜினி மனத்தில், கவிதைப் பசுமையின் ஏக்கத்தை மெள்ளெனத் திறந்து காட்டி காப்பியம் பாடச் செய்து அக்காப்பிய வரியிலெல்லாம் 'தன் புகழ் மணக்கும்' வெல்லப் பாகினை வழிய விடுகிறார். அதன் ஊடே செல்வத்தின் 'பற்றுள்ளம்' படரும்போது கவிஞனை ஏமாற்றிப் பொன்னுக்கு வெள்ளிக் காசளித்த பெரும்பாவத்தைச் சுட்டும்போது சமயக் காழ்ப்பெல்லாம் பொருளாசைப் பிடியில் சிக்கும் அரசு வாழ்வை அழியாமல் காட்டுகிறார். இங்கு அரசைக் கவியுள்ளம் சபிக்கிறது. தடிபிடித்த கொள்ளையனை மன்னனென்று பாடிய தவறு கருதிக் கவிஞன் உயிர் காற்றில் பறக்கிறது.

முடிவிலோ வியப்பிலாழ்த்திக் கொள்ளையின்பம் காண முயன்றான் கஜினி என்ற எதிர்த் திருப்பத்தை அமைக்க முயன்று தோல்வியைத் தழுவுவதை ,

இத்தேச மக்கள்கொண்ட துயரமெல்லாம்
எழுந்தொன்றாய்ச் சேர்ந்ததுவே கஜினி நெஞ்சை

எனத் துயரக் களஞ்சியத்தைத் திறந்து காட்டுகிறார் கவிஞர். கவிஞனின் ஏமாற்றம் ஆட்சியாளர்களின் ஆளும் வேட்கை, கொள்ளை இன்பம் காணும் கொடுமை ஆகிய வற்றையெல்லாம் காட்டுகிறார். எனினும், கவிஞனின் துயரைவிட மதத்தின் வலியற்ற வடிவே கவிதையின் முற்படு பொருளாக வெளிப்படுகிறது.

## 'முல்லையோ முல்லை'

முடிவாக 'இளவரசி முல்லை' என்ற குறுங் காவியம் இப் பாடல் தொகுதியில் தனி மணம் வீசுகிறது. கற்பின் அடையாளம் முல்லையாகப் பண்டுதொட்டு வழங்கி வருகிறது. தஞ்சை மன்னனின் மகளாக முல்லை வளர்கிறாள். அவளைக் காதலித்த முத்தப்பனே தொடக்கத்தில் காதலை வெறுத்த 'பட்டினத்தார்'ராக இருந்தவன். அவனுக்குக் காதல் பெருமையை உணர்த்திய அவன் நண்பன் பொன்னப்பனே தாமரை என்ற பெண்ணைக் காதலித்தவன். நட்பு, காதல் என்பவற்றை பொய்யாக்கிக் காதலியைக் கை விட்டு, நண்பன் வாழ்வைக் குலைத்து, அவன் காதலியை மணந்து அரசுச் செல்வத்தைத் துய்க்க, ஆசைப்படுகிறது பொன்னப்பன் மனம்.

இந்த வாழ்க்கை, இதுவரை தமிழ்க் குறுங்காப்பியத்தில் காணாப் புதுமை. பொன்னப்பனைப் படைப்பதும், அவன் போக்கினை விரிப்பதும், கவிதைக்கு எளிய செயலன்று. 'மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் குடிலன், தன்னலம் என்ற புலத்தில் தழைத்துச் செழித்த நச்சுமரம். அவ்வளர்ச்சியில் பிறர்க்குக் கேடுபுரியும் போது புனுகு பூசும் பண்பும் கூட பிறர்க்கு அரிதாகவே புலப்படும்.

பொன்னப்பனின் நெறியோ சொன்ன சொல்லை மாற்றும் மாற்றுவாழ்க்கை! கொண்ட காதலைக் கொலை செய்யும் கொடிய கத்தி! பூண்ட நட்பைப் புறக்கணித்துக் கழுத் தறுக்கும் பொங்கு தீ!

இத்தகைய படைப்பைப் படைத்து அத்தீயினுள்ளே 'முல்லை'யையும் 'தாமரை'யையும் இட்டுக் கருகச்செய்வதும், 'முத்'தை இட்டுப் பொரியச் செய்வதும் கவிதை உலகில் காணு நிலை. அதில் வெற்றி பெற்றுள்ளது 'இளவரசி முல்லை'.

இங்கே காணும் தலைசிறந்த உவமைகள் எளியனதாம். எனினும் அவற்றின் ஆற்றல் சொல்லற்கரியன.

சூதாகக் கொலை புரிய வந்த பொன்னப்பன் கூடாரத் தில் நுழையும் செயலுக்குக் கவிஞர் நெஞ்சில் தோன்றிய உவமை இதோ:

பேனென்று கூந்தலுக்குள் நுழைந்தாற் போலே
பின்புறமாய்க் கூடாரக் கூட்புகுந்தான்

எனக் கூறும்போது திருக்குறள் 'தலையின் இழிந்த மயி'ரினைக் கூறிய பெற்றிமை இங்குப் புலப்படுகிறது. இவனுடைய இழி செயலால் கவிஞர் உள்ளக் கசப்பெல்லாம் திரள்வதால் 'சுண்டெலி'போல் பின்புறமாய் நழுவிச் சென்ற காட்சியைக் காட்டும்.

நாளும் காணும் எளிய பொருள்கள், எனினும் படிப் போர் மனத்தில் அருவெறுப்பைப் பாய்ச்சிக் கதை மாந்தரின் உண்மை வடிவை உணர்த்துவதில் பெருவெற்றி பெறு கின்றன.

அதேபோன்று முல்லை, 'காவியம்போல் அழகுடையாள்' எனவும் கவிஞர் காட்டத் தவறவில்லை. இவ்வாறு

நாச்சியப்பன் ஏடெல்லாம் எளிய உவமை மணக்கும். அவற்றிலெல்லாம் கவிஞரின் தனிமனம் புலப்படும்.

இத்தகைய பாடல்கள் சீர்திருத்த மணத்தில் "ஈரோட்டு நெறி'யில் 'வாழ்வளிக்க' முயலும் பகுத்தறிவு நெறி.

பழமைக் கருவும் புதுமைக் கருவும் உருவாக, எளிய அணிகள் மின்ன, தெள்ளுநடை சலசலக்க உங்கள் முன் 'நாச்சியப்பன் பாடல்கள்' இன்றைய உலகைக் காட்ட முயன்று வெற்றி பெற்றுள்ளன.

26-5-1980

வீ

# கற்பனை சிறக்கும் கருத்துக் கோவை

**டாக்டர் ந. வீ. செயராமன்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர்,*
*தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,*
*கோயமுத்தூர்—3.*

*தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு ஒரு மறுமலர்ச்சிக் காலம். சிறுகதை, புதினம், நாடகம் முதலாய இலக்கிய வகைகள், செய்யுள் ஊடகத்தை விடுத்து, உரைநடை வடிவில் படைப்பிலக்கியங்களாக இக் காலத்தில் உருப்பெற்று வருகின்றன.*

செய்யுள் ஊடகத்தின் கட்டமைப்பில் அண்மைக் காலத்தில் மேலைநாட்டுத் தாக்கம் படிந்தது. இதனால் செய்யுளின் கட்டமைப்பு நெகிழ்ந்தது; படிப்படியாகச் சிதைந்தது; இறுதியில் 'வடிவற்ற உரு'வாக உருக் கொண்டது. 'புதுக்கவிதை' என்ற பெயரில் 'கவிஞர்களின்' மனப்போக்குக்கு ஏற்ற வகையில் பலவேறு வடிவங்கள் உருவாகின.

'இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனைத் தேர்கள், தனிமொழிச் சேனை, பண்டித பவனி' - இவை எதுவுமில்லாத நிலையில் 'கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறை' என்ற முழக்கத்துடன் புதுக் கவிதை நாயகர்கள் தமிழிலக்கிய வீதிகளில் ஆரவாரத்தோடு உலா வந்தனர்,

இவற்றுக்கிடையே மரபுக் கவிதை மலர்களும் ஆங்காங்கே பூத்து இலக்கியச் சோலையில் இனிய நறு மணத்தைப் பரப்பின. புதுமைப் பொலிவோடு நறுமணம் பரப்பும் வண்ணக் கவிதை மலர்களில் கவிஞர் நாரா நாச்சியப்பனின் படைப்பிலக்கியமாகிய இந்த எண்ண மலரும் ஒன்று.

கவிஞர் நாரா நாச்சியப்பன் தமிழிலக்கிய உலகுக்கு நன்கு அறிமுகமானவர்; காட்சிக்கு எளியர்; நிலையில் திரியாது அடங்கிய தோற்றத்தர்; ஆழ்ந்த புலமை நலம் வாய்க்கப் பெற்றவர்; அமைதி கொண்ட உருவினர்.

நாரா நாச்சியப்பனின் கவிதைகள் மரபு உலையில் சுவையோடும் மணத்தோடும் ஆக்கப்பெற்ற புதுமைப் பொங்கல்; வடிவால் பழமை மணமும்,பொருளால் புதுமைச் சிறப்பும் கலந்து, கற்பனைச் சிறப்புடன் இலங்கும் கருத்துக் கோவை.

இந்நூலில் பன்னிரண்டு கவிதைக் கதைகள் உள்ளன; இவற்றுள் சில உண்மைச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டவை. சொல்லழகு, பொருள் நயம், சந்தச் சிறப்பு, கற்பனைக் கவின், உவமை நலம் ஆகிய அனைத்துக் கோணங் களிலும் ஒவ்வொன்றும் மற்றொன்றை விஞ்சியுள்ளன.

களவுக் காதலில் திளைத்த மணி—அமுதவல்லி என்னும் தலைமக்களின் திருமணம் காவலர் இல்லத்தில் எளியமுறை யில் நடப்பதை விளக்கும் கதைக் கவிதை 'காவலர் இல்லத் தில்' என்ற முதல் கவிதை.

தென்றல் வரக்கண்டு தேன்கொண்ட பூவினங்கள்
நின்று தலையாட்டி நீண்டசுகம் கண்டிருக்கும்
வண்டுவந்து கூடி மகரயாழ் மீட்டிநின்று
கொண்ட நலம்பாடிக் கொண்டிருக்கும்; பக்கத்து

நின்று வளர்ந்துகனி நீட்டும் மரங்களிலே
சென்றிருந்து பச்சைக் கிளிகள் பழம்பருப்புத்
தின்று பறந்திருக்கத் தேனுன நல்லிசையை
வென்று குயில்பாடும் வேளையொரு சோலையிலே

என நூலின் நுழைவாயில் இனிய சோலைக் காட்சியோடு நம்மை வரவேற்கின்றது. சோலையின் அழகுக் காட்சி இக் கவிதை மலர்ச் சோலையின் சிறப்பையும் கவினுறச் சித்தரிக்கும் கட்டளைக்கல்லாக விளங்குகின்றது.

கவிஞரின் வண்ணனைக் கற்பனைக்கு ஒரு சான்று: அமுதவல்லியின் கண்ணீரை வண்ணிக்கும் கவிஞர் 'வெட்டும் விழியூறி வீழுங்கண் ணீரருவி பட்டிதழின் கன்னத்தில் பாய்ந்து வரக் கண்டானே' எனப் பாடுகின்றார். இங்கு அமுதவல்லியின் கண்ணீர் மட்டும் பாய்ந்தோடவில்லை; கவிஞரின் கற்பனை ஊற்றும் பெருக்கெடுத்துப் பீறிட்டுப் பாய்கிறது.

இக்கதையின் இறுதிக் காட்சியில் 'வாழை மரமின்றி, வளர்க்கும் நெருப்பின்றி, மேளமுழக்கின்றி, வேதமொழியின்றி' மணி அமுதவல்லிக்குப் பூமாலை சூடும் காட்சி கவிஞரின் சமுதாயப் புரட்சி காணும் வேட்கையை விளம்புகின்றது.

கோதையென்னும் பெயர் கொண்ட கோதையை அவள் மாமன் மகன் மாதவன், கண்ணப்பன் என்னும் கயவனிடமிருந்து காத்து மணங்கொண்ட நிகழ்ச்சியை விளக்கும் கதை 'வாழவைத்தான்'.

பிறமொழி பேசும் போலி நாகரிக இளைஞர் சமுதாயத் துக்குக் கவிஞரின் சொற்கள் சாட்டையடியாய் விழுகின்றன.

தான்பிறந்த நாட்டுத் தமிழ்மொழியில் பேசாமல்
வான்வழியே வந்து குதித்திங்கு வந்தாற்போல்
ஆண்டு கழிந்த அயல்நாட் டவன்மொழியில்
வேண்டுமென்றே பேசித்தாம் மேன்மையுள்ளார்
போல் நடித்து...

இங்ஙனம் கவிஞரின் சாட்டைச் சொடுக்கு நீண்டு செல்கிறது.

திருமணத்தின் மேளம் கொட்டுகிறது; முழக்கம் காதைச் செவிடாக்குகின்றது.

பட்டுப் படுபடெனத் தட்டுக் கெடுகெடெனக்
கெட்டுக் கிடகிடெனக் கெட்டிமே ளம்முழங்கும்

எனக் கவிஞர் ஒலிக் குறிப்பு மொழியாட்சியால் படிப்போர் வாயினுள்ளேயே மேளமுழக்கம் நிகழ்த்தச் செய்து விடுகின்றார்.

கொண்ட மனையாளை விடுத்து கண்ட பெண்களின் பின்னே சுற்றிக் 'காதல்' செய்யும் கயவனுக்குப் புத்தி புகட்டும் நீதியைக் கொண்டது 'இனிய பாதி' என்னும் கதை. சந்த இனிமை பயின்ற கலிவெண்பா யாப்பில் கவிஞரின் கற்பனையோட்டம் இங்குத் துள்ளாட்டம் போடுகின்றது.

'ஊரவர் கௌவை எருவாக, அன்னை சொல் நீராக மாலை மலரும் இந்நோய்' என்று வள்ளுவர் கூறும் காதல் நோய்ப் பயிர்க் காட்சியைக் கருத்திலிருத்தி

பார்வை தொடக்கிவைத்த பாசம் உரையாடல்
நீரால் வளர்ந்து நெடும்பயிராய் முற்றி
உளங்கலக்கும் காதல் உருவெடுத்து நாளும்
வளம்பெற் றுயர்ந்து வளர்ந்து செழித்ததுவாம்

எனவரும் காதல் பயிர்க்காட்சியைக் கவிஞர் காட்டுகின்றார்.

கங்கையில் மூழ்கிய கன்னியொருத்தியைக் காத்தான் ஒருவன்; காத்தவன் 'புலையன்' ஆதலால் அவனுக்குத் தண்டனை வழங்கியது உயர்மட்ட சாதி; பொங்கியெழுந் தான் புலையன்; அந்நிலையில் 'புலையனை'ப் புத்தர் அரவணைத்

தார். இக் கருப்பொருளைக் கதையாகக் காட்டுகின்றது 'பண்பின் பரிசு'.

நதியைப் பெண்ணாக உருவகிக்கும் மரபு நிலைதிரியா மாட்சியுடன் 'பொங்கி நுரைததும்பிப் புன்னகைசேர் மங்கையைப்போல் கங்கையெனும் தெய்வமகள்' எனக் கவிஞரின் வண்ணனை உருவகத்துடன் 'பண்பின் பரிசு' தொடங்குகின்றது. காசி நகரத்து இளம் பெண்கள் குழுவொன்று கங்கையாடச் செல்கிறது. கவிஞரின் சொல்லோவியமும் இங்குத் தொடர்கிறது. 'மேற்குலத்தார் தம்மினத்துப் பெண் மக்கள்; தங்க நிறமுடையார்; விம்மித் திரியும் பருவத்தார்; வாழ்க்கையெனுப் வையத்தடியெடுத்து வைக்காத வண்ணங்கள்; கொய்யாக் கனிகள்; குறும்பு விளையாட்டார்'—கவிஞரின் வண்ணனையில் எளிமையும் இனிமையும் கண் சிமிட்டுகின்றன.

'பண்பின் பரிசு' கவிஞரின் உவமைப் பரிசுகளாலும் விம்மிப் பூரிக்கின்றது.

செய்த குறும்புச் செயல்கள் கணக்கெடுத்தால்
பெய்த மழையில் பெரிதாகும்
சென்றால் உயிர்க்கச்சம் செல்லா விடில் தலைவர்
கொன்றாலும் அச்சமெனக் கோழை நடுங்குதல்போல்
வந்த புலிக்கஞ்சி ஓடும் வழிப்போக்கன்
சிந்தை கலங்கமலைப் பாம்பெதிரே சேருதல்போல்
காலகண்டன் வந்தக்கால் கட்டிமார்க் கண்டேயன்
ஓடிச் சிவலிங்கம் ஒன்றித் தழுவினாற்போல்

உவமைகள் தொடர்கின்றன; அவற்றை விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்.

அடுத்து வரும் கதைக் கவிதை 'பம்பாய்ப் பஞ்சாங்கம்' காதலித்த பெண்ணை மணந்து, பின்னொரு நாள் அவளைத்

தனியே விடுத்துச் சூதாய்ப் பிரிந்தான் தலைவன். தலைவி அவனைத் தேடி இல்லம் சென்றாள். தலைவியைப் பிரியுமாறு பம்பாயிலுள்ள பஞ்சாங்கக்காரன் கூறினான் எனச் செய்தி அறிந்தாள் அவள். தோழியின் ஆலோசனைப்படி, மீண்டும் தலைவன் இல்லம் சென்று போராடி உரிமையை நிலைநிறுத்து கிறாள் தலைவி. இக்கதையைக் கலிவெண்பா யாப்பில் கூறுவது 'பம்பாய்ப் பஞ்சாங்கம்.' சமுதாயத்தில் புரையோடிய பொருளற்ற மூடப்பழக்கத்தைச் சாடும் கருப்பொருளைக் கொண்டது இக்கதை.

கவிஞரின் கற்பனையில் சென்னைக் கடற்கரைக் காட்சி எண்ணப் படம் விரிக்கின்றது.

சென்னைக் கடற்கரையில் சிற்றலையும் பேரலையும்
ஒன்றன்பின் ஒன்றாக ஓடித் தொடர்ந்துவந்து
மோதிக் கரைமணலை முத்திப் பணிந்தங்கே
வேதன் அடியார்போல் வீழ்ந்து மறைந்தனவே
வந்த அலைமறைய வாரி நுரையெழுப்பிப்
பிந்தி வருமலையும் பின்னும் மறைந்தொழியும்
ஒன்றொழிய மற்றொன்றே ஓங்கி உயர்ந்துவரும்
வென்றெழுமுன் னாலே விழுந்து கரைந்துவிடும்

என இங்ஙனம் கடலலைகளின் கவினுறு காட்சிகளைக் கவிஞர் சொற்கோலம் புனைந்து காட்டுகின்றார். உண்மைக் கவிதைப் பெருக்கு கடலலைபோலவே ஒன்றை அடுத்து மற்றொன்றாக ஓடிவருகின்றது.

காதல் திருமணத்தைக் கைவிட்டுப் பஞ்சாங்க
வேதத் திருமணமாய் வேறொன்று செய்தற்குத்
திட்டமிட்ட கண்ணன் செயல்தடுத்துத் தன்னுரிமைப்
பட்டயத்தை நாட்டப் பயணம் புறப்பட்டாள்

என வரும் சொற்கள் சமுதாய மூடத்தனத்தைக் குழி தோண்டிப் புதைக்க கோதையர் கொதித்தெழ வேண்டும் எனக் கூறுமல் கூறுகின்றன.

கட்குடியிலும் சூதிலும் கைப்பொருளை யிழந்த கணவனை விடுத்துத் தாய் வீடு சென்ருள் வள்ளி என்னும் நங்கை. தோழர்களோடு கூடிக் களவிலும் ஈடுபட்டான் கணவன். ஒருநாள் மனைவி வள்ளியையே தோழர் களவுப்பொருளாய்க் கொண்டுவந்து பங்கிட்டுக் கொள்ள முயன்றபோது அவர் களில் ஒருவனுய் இருந்த கணவனுக்குப் புத்தி வந்தது. தோழர்களை விடுத்து மனைவியோடு வாழ முற்பட்டான். கலிவெண்பா யாப்பில் இக்கதை நிகழ்ச்சியைக் கூறுவது 'ஒளி மின்னல்'.

கவிஞர் இக்கதை நிகழ்ச்சியைக் கவிதையாய் வடித்துத் தந்திருப்பதில் காப்பியக் கதைகளின் தாக்கத்தைக் காண் கின்ருேம்.

பார்த்திபனைப் போலிவரும் பாராளா விட்டாலும்
நேர்த்தியற்ற பெண்தொடர்பில் நிச்சயமாய்
அர்ச்சுனர்தான்!
நீதித் தருமனுக்கு நேரில்லை என்ருலும்
சூதில் அவனேதான்; தோற்பதிலும் அப்படியே

என்றும்,

தீவலம் வந்த திருவாட்டி கண்ணகியும்
கோவலர்க்கு முன்னே கொடுத்துக் கொடுத்தேதான்
வாழ்விழந்த காதை வழிவழியாய் நாமறிவோம்

என்றும் வரும் பகுதிகள் இக்கருத்துக்குச் சான்றுரைகள்.

தன் கணவன் சூதாடித் தோற்பதைச் சொல்லவும் முடியாமல், சொல்லாமல் இருக்கவும் முடியாமல் வள்ளி படும் துயர நிலையை,

உள்ளத் துதித்த உரைவந்து தொண்டையிலே
உள்ளும் புறமும் ஒருவழியும் போகாமல்
திக்கித் திணறச் சிறுவிழிநீர் கன்னத்தே
தொக்கித் துளித்துளியாய்த் தோளை நனைத்துவிழ
வள்ளி யழுதநிலை

எனக் கவிஞர் பாடுகின்றார். இந்நிலை 'சொல்லாடாள் சொல்லாடா நின்றாள் அந்நங்கைக்குச் சொல்லாடும் சொல்லாடும்தான்' எனவரும் கண்ணகியின் துயரநிலையை நமக்கு நினைவூட்டுகிறது அன்றோ! மேலும் வள்ளி-தோழி பாத்திரப் படைப்பும் கண்ணகி-தேவந்தி பாத்திரப் படைப்புக்களோடு ஒப்பு நோக்கத்தக்க பகுதி அல்லவா?

தன்னை விட்டுப் பொருள் தேடப் பிரிந்து சென்ற நாயகன், பொருளைமட்டுமின்றி, தன் வாழ்க்கைக்குத் துணை யாகப் பூவையொருத்தியையும் கொண்டான் என அறிந்து வங்கங் கடந்து சென்று தன் உரிமையை நிலைநாட்டிய செய்தியைக் கலிவெண்பா யாப்பில் கவினுறக் கூறும் கதையே அடுத்துவரும் 'வங்கங் கடந்த மங்கை.' பண்டைக்கால அகப் பொருள் மரபாகிய பொருள்வயிற் பிரிவு இக்கதைக்கு மையக் கருவாக விளங்குகின்றது.

தொழிலாளர் சங்கங்களில் அரசியல் தலைவர் ஊடுருவல் நிகழ்த்தித் தொழிலாளர்களைத் துவளச் செய்யும் குறைபாடு களைக் கருவாகக் கொண்ட கதை நிகழ்ச்சி 'இருளகன்றிட ஒளிபெருகிட' என்னும் பகுதி. 'இன்பத்தை ஏந்திவரும் கன்னலன்றோ இந்நாள்; மணவாழ்வில் புத்துணர்வு சேர்க் கும் நாள்; சிரிப்பும் விளையாட்டும் ஆர்க்கும் புதுநாள்; அணி மணிகள் கொண்டுவரும் வீட்டு விழாநாள்: செல்வப்பெரு நாள்'—எனச் சம்பளநாளினைச் சுவையோடு வண்ணிக்கும் பகுதி சமுதாய விளக்கமாகத் திகழ்கின்றது.

கஜினி மன்னன் வரலாற்று நிகழ்ச்சியொன்றை மூலமாகக் கொண்டு அமைந்த 'பொன்னும் வெள்ளியும்' சிறந்த சந்த நயம் அமைந்த எண்சீர் விருத்தத் தொகுதி. கஜினி மன்னனுக்குக் காவியம் படைத்த புலவனின் முடிவைக் கூறும் வகையில், கஜினியின் மனமாற்றத்தை ஆசிரியர் படைத்துள்ள திறம் சுவைமலிந்துள்ளது.

சொத்தெல்லாம் பறிபோகப் பார்த்திருந்தும்
தூய்தான கடவுள்சிலை உடைந்த போதும்
குத்துயிராய் மக்கள்வதை யுற்ற போதும்
கொடியனையார் கற்பழிக்கப் பட்டபோதும்
இத்தேச மக்கள்கொண்ட துயர மெல்லாம்
எழுந்தொன்ருய்ச் சேர்ந்ததுவே கஜினி நெஞ்சில்

இரத்த வெள்ளத்தில் குளித்துக் களித்த மாமன்னன் கஜினியின் மனத்தில் மாற்றம் நிகழ ஒரு பாவலன் பலியான கதை இங்கு இனிய சந்தத்தில் விளக்கப் பட்டுள்ளது.

இராகமாலிகைபோல, பல்வேறு பாடல்களின் சந்தக் கலம்பகமாக அளவில் விரிந்த 'கொய்யாக் காதல்' என்னும் வரலாற்றுக் கவிதைக் கதை அமைந்துள்ளது. அடுத்து வரும் 'இளவரசி முல்லை'யும் அளவில் விரிந்ததேனும் எண்சீர் ஆசிரிய விருத்தக் கோவையாக விளங்குகின்றது. இவ்விரு வரலாற்றுக் கதைகளும் மீண்டும் மீண்டும் படித்துச் சுவைக்கத்தக்க களஞ்சியங்கள். கருத்துச் செறிவும் கற்பனைத் திறனும் இவ்விரு கதைகளிலும் இனிய பின்னலோடு கோலங் கொண்டுள்ளன.

இறுதியில் அமைந்த 'ஈரோட்டுத் தாத்தா' தமிழரின் தளைப்பட்ட வாழ்வில் துயர்போக்கிய தன்மானத் தந்தை பெரியார் பற்றிய கதைச்சித்திரம். கவிஞரின் சொல்லழகும் பொருளழகும் இப்பகுதியில் களிநடம் புரிகின்றன.

கவிஞர் நாரா நாச்சியப்பன், புரையோடிய சமுதாயக் கோணல்களைப் போக்கும் இனிய கதைக் கவிதைகளை மேலும் படைக்கவேண்டும்; புதுக்கவிதைப் போர்வையால் புழுங்கிக் கிடங்கும் தமிழுக்கு மரபு மணம் கூட்டவேண்டும்; பண்பாட்டுப் பொருண்மைக் கூறுகளைச் செவிமணக்கப் பாட வேண்டும் என்ற வேண்டுகோளைத் தமிழுலகின் சார்பில் கவிஞருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கவிஞரின் 'நாச்சியப்பன் பாடல்களை', தமிழ் நெஞ்சங்கள் பயன் கொள்ளவேண்டும் என அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

10-6-1980 **ந. வீ. செயராமன்**

# நல்ல சுவை விருந்து

**திருமதி சு. இராசலட்சுமி இராமச்சந்திரன்,**
எம். ஏ. எம். லிட்.
தமிழ்ப் பேராசிரியர்,
அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை-1.

புதுக்கவிதை என்றதொரு புதியபாடல் பெருகிவரும் இந்நாளில் திரு நாச்சியப்பன் அவர்கள் மரபுநெறி பிறழாமல்—எதுகைமோனை தவறாமல்—சீரழகு குன்றாமல் தம் கவிதைகளைப் படைத்திருப்பது பாராட்டற்குரிய தாகும். கவிதைக்குரிய நான்கு தகுதிகளும் இவர் கவிதை யில் அமைந்து விளங்குகின்றன. ஆழ்ந்த உணர்ச்சியும், அழகிய கற்பனையுமாய் வாசகர் மனத்தைக் கவர்வதோடு மட்டுமன்றி, நல்ல வடிவமும் சிறந்த பொருளும் அமையப் பெற்று வாழ்க்கையைப் பண்படுத்தும் ஒரு சிறந்த சாதன மாய் இக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது. நல்ல தமிழ்ப்பண்பைப் பாடல்கள்தோறும் அறிவிக்கும் இவர் தன் பாத்திரங்களுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களையும் வைத் திருப்பது, பாடலுக்கு இனிமை சேர்க்கின்றது.

இனம் பேசிக் குலம் பேசும் வழக்கொழித்து அன்புவழி காட்டும் அதிகாரியின் நல்லுள்ளத்தை முதல் கவிதை பேசு கின்றது. இக்கவிதையில் புதுமை நோக்கு காணப்படினும், நாகரிகம் என்ற போர்வையிலே இளைஞர் சமுதாயம் நெறி யின்றி நடக்கும் போக்கைக் கண்டிக்கிறார். அதுவே 'இனியபாதி'யாக அமைந்துள்ளது.

கண்டகண்ட பெண்களெல்லாம் காதலியராய்க்
கொண்டு
வண்டு மலர்க்குமலர் தாவுதல்போல் வாழ்க்கையினைத்
தாங்கள் நடத்துவதும் தையலரைத் தூற்றுவதும்
ஈங்கித் தமிழகத்தில் எத்தனைநாள் செல்லும்,

....................முதலில் திருந்துவது
தன்கடமை என்று தனிமனிதன் எண்ணமிட்டால்
இந்தச் சமுதாயம் எப்போதோ முன்னேற்றச்
சிந்து படித்திருக்கும்

என இவர் தீமைகளைக் கண்டு சாடுவதைக் காண்கிறோம்.

சமுதாயத்தின் செல்லரித்த பகுதிகளைச் செப்பனிட்டுக் காட்டுகிறார் 'பண்பின் பரிசு' மூலம். தீண்டாமையாகிய நச்சுப்புகை மக்களை மறைத்து மாளச் செய்வதையும், அப் புகை நீங்கிய நல்ல காற்றைப் பின் மக்கள் உயிர்மூச்சாய்க் கொள்வதையும் இக்கவிதை விளக்குகின்றது.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள் வேண்டும் புதுமைப் பெண்ணுக்கு எனப் "பம்பாய்ப் பஞ்சாங்கம்" காட்டுகின்றது.

குடிகெடுக்கும் பெருங்குடியின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது 'ஒளி மின்னல்'. வாழ்வில் வளம் சேர்க்க வங்கங்கடந்த தன் காதலன்தான் வாழ்வில் தறி கெட்டுப்போனவகை கூறக்கேட்டே, தன் வாழ்வில் வளம் சேர்க்க வங்கங்கடந்த அழகம்மை கதையை அடுத்துப் பெற வைக்கின்றார்.

தொழிலாளர் படும்பாட்டை எடுத்து வருணித்து "இருளகன்றிட ஒளிபெருகிட" வழிகளைக் காட்டுகின்றது அடுத்த கவிதை. கஜினிமுகம்மதுவின் சிறிய விளையாட்டால் உயிரிழந்த பெருங்கவிஞன் பர்தோசியின் வரலாறு கதைப்

பாடலாய்—'பொன்னும் வெள்ளி'யுமாய்த் தரப்பட்டுள்ளது. விலைமகளின் வன்னெஞ்சத்தால் பல நல்லுயிர்கள், வாழ்விழந்த சோகக் கதையைக் 'கொய்யாக் காதலும்'. நம்பிக்கைத் துரோகம் செய்தார் நாள் எல்லை வாழ்ந்ததில்லை என்பதை, 'இளவரசி முல்லை'யும் விளக்குகின்றன. ஈரோட்டுத் தாத்தாவின் அஞ்சலியாக ஒரு கவிதை அமைந்துள்ளது.

சுருங்கச் சொன்னால் திரு. நாச்சியப்பன் கவிதைகளைப் படித்த பின்னர், நல்ல சுவையான விருந்தை அளவாகச் சாப்பிட்டதைப் போன்ற மனநிறைவு ஏற்படுகின்றது. இத்தகைய வாழ்வை வளமாக்கும் கவிதைகளை மேன்மேலும் எழுதவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**சு. இராசலட்சுமி இராமச்சந்திரன்**

# ஓரடைத் தேனின் ஒவ்வொரு துளியும்

**மருதூர் ச. அரங்கராசன்**
மருதூர் அஞ்சல்,
வழி-பொன்பரப்பி, திருச்சி மாவட்டம்—621710

*கதை வளம் வாய்க்கப் பெற்ற அனைவரும் கவிநலம் வாய்க்கப் பெற்றவர்களாய் இருந்துவிடுதல் இல்லை. அல்வாறேதான் கவிநலம் வாய்க்கப் பெற்றவர்களும். இரண்டனுள் ஒன்றிருந்தால் பிறிதில்லை எனுநிலையே யாங்கணும் காணக் கிடக்கின்றது. அதனாற்றான் கதைவளம் ஒன்றே வாய்க்கப் பெற்றவர்கள் உரைநடையில் எழுது கிறார்கள்; கவிநலம் ஒன்றே வாய்க்கப் பெற்றவர்கள் பிற மொழிக் கதைகளை மொழிபெயர்க்கப் புகுதருகிறார்கள். இருதிறனும் அமையப் பெற்றவர்கள் என்று சொல்லத் தக்கவர்களோ விரல்விட்டு எண்ணுமளவே உள்ளனர். அவர்களுள்ளும் குமுகாயம் உய்ய வேண்டும் எனும் பெரு நோக்கில் வேட்டெழுந் தெழுதுவார் ஓரிருவரே ஆவர். அவர்களுள்ளே முதன்மை இடத்தைப் பெறுகிறார் இந்நூலா சிரியரும் புலவரேறுமாய திருமலி நாரா நாச்சியப்பனார் அவர்கள். என்னை? இந்நூலுள் குமுகாய நலன் கருதாது யாண்டும் வெற்றெனத் தொடுத்திலராகலான் என்க.*

'கவிஞர்' எனத் தமக்குத்தாமே அறிமுகமாகும் இற்றைநாட் புலவர்கள் (?) பலர் கொச்சைச் சொற்களில் இச்சை வைத்துப் பச்சை புச்சையாய் எழுதி, பண்புடை

யாளர்கள் அஞ்சிப் பதைப்பதையும் பொருளாக் கொள்ளாது, ஏதுமறியாப் பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சு பாய்ச்சி வருகின்றனர். இந்நிலையிற்றான் புலவரேறு நாரா நாச்சியப்பனாரின் பாப்பணி சான்றோர்க்கு மகிழ்வைத் தருகின்றது. இளமுள்ளங்களைக் கெடுக்கும் வண்ணம் மறைத்தெழுத வேண்டியதை விரித்தெழுத இவரது பண்பு இடந் தருவதில்லை. காட்டாக ஒன்றைக் குறிப்பன்:

காதலனுங் காதலியும் திரைப்படம் பார்க்கிறார்கள். படத்தில் வருங் காதற் செய்கைகளைக் கண்ட காதலி தன் காதலனிடத்து இன்பமாக இருக்கின்றாள். இச்சிறு நிகழ்ச்சியையே பாவியமாப் படைக்கும் ஆற்றலர்கள் (?) எண்ணற்றோர் இருக்கின்றனர். ஆயின், புலவரேறு அவர்களினத்துச் சேரத் தயாராக இல்லை. ஆதலாற்றான்,

படத்தில் வருங்காதல் பார்க்கும் பொழுதில்
மடப்பெண் அவள்செய்த மட்டற்ற செய்கையெல்லாம்
ஈண்டுரைத்தல் காதல் இலக்கியத்திற் காகாதாம்.
தீண்டும் இரண்டுயிர்கள் தேர்ந்தநல் லின்பத்தைப்
பாரறியக் கூறுவது பச்சை மொழியாகும்
ஊரறியக் கூறல் உயர்ந்த செயலல்ல
சற்றுக் குறிப்பிட்டால் சார்ந்தபொருள் கற்பனையால்
பெற்றுக் களித்தல் பெரியோர் கடனாகும் (ப-ள்: 7—8)

என்று பண்புறக் குறித்தமைந்தார். திருநீலகண்ட நாயனாரை "இளமைமீ தூர இன்பத் துறையினில் எளியர் ஆனார்" என்ற மட்டில் சான்றாண்மை தோன்றப் பண்புறக் குறித்தமைந்த தெய்வப்புலவர் சேக்கிழாரொடு புலவரேற்றை ஒப்புநோக்கி மகிழ்கின்றனன்.

புலவரேற்றின் கதைபுனைதிறனைத் தொடக்கத்திற் குறித்தனன். அதற்குச் சான்றாக ஒன்றனை மட்டுமிவண் செப்புவன்;

கோதை என்பாட்குத் திருமணம்; வீடொடு வீதியும் விழாக் கோலம் பூண்கிறது; மேளம் ஒலிக்கிறது; மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம். கோதையை அடைய எண்ணி முடியாமற் போன கயவனொருவன் அவள் திருமணத்தைத் தடுக்குங் கெட்ட நோக்குடன் முடங்கல் ஒன்றெழுதி ஓராளிடம் கொடுத்தனுப்புகின்றான். புலவரேறு கூறுகிறார்:

ஆளனுப்பி வைத்தான்; அணங்கவளைக் கொட்டவொரு
தேளனுப்பி வைத்தான் திருவில்லாப் புன்மகனே
(பக். 23)

என்னே உணர்ச்சி! திருமணம் தடைபடப் போவதை புலவருள்ளம் அறிந்து கொண்டு விடுகிறது; 'ஆளெனும் பெயரில் தேளனுப்பி வைத்தானே' என்று வருந்துகிறது; 'திருவில்லாப் புன்மகனே' என்று பொங்கிச் சீறுகிறது— தேறுகிறதா அத்துடன்? இல்லை. பாவியத்தைப் படிப்பவர்க்கும் திருமணம் தடைபடப் போஞ்செய்தியை முன்னதாகவே அறிவித்துவிடத் துடிக்கிறது. வெளிப்படையாகக் கூறிவிட்டால் கதையின் சுவை குன்றிப் போமே! எனவே குறிப்பாகச் சுட்ட முனைகிறது. எப்படி? மண விழவிற்கு முழவொலிக்கிறது. எவ்வண் தெரியுமா?

பட்டுப் படுபடெனத் தட்டுக் கெடுகெடெனக்
கெட்டுக் கிடகிடெனக் கெட்டிமே ளம்முழங்கும்
(பக். 24)

மேளமுழக்கே காதில் ஒலிக்கும்படியான அருமையான சந்தமமைந்த இம்மங்கல முழக்கில் அமங்கலத்தை மறை முகமாப் புகுத்துகிறார் புலவரேறு. மேற்போக்கிற் பார்ப்பார்க்கு ஒலிக்குறிப்பெனத் தோன்றினும் ஆழ நோக்குவார்க்கு அதன்கண்ணுள்ள "படு,படு—கெடு, கெடு— கெட்டுக் கிட, கிட"— போன்ற அமங்கலச்

சொற்கள் புலனுகாமற் போகாது. இதனைத்தான் திறனாய்வாளர்கள் 'குறிப்புமொழி' எனப் போற்றிப் புகழ்வர்.

காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக என எதிர்மறைமுகத்தான் வாழ்த்தமைத்து, கோவலன்-கண்ணகி பிரிவை முன்னதாகவே உய்த்துணர வைத்த இளங்கோவடிகளுடன் புலவரேற்றை ஒப்பு நோக்கி மகிழ்கின்றனன்.

ஆற்றோடு அடித்துச் செல்லவிருந்த ஒரு பார்ப்பனப் பெண்ணை, இனத்தால் இழிந்தவனென்று கற்பிக்கப்பட்ட புலையனொருவன் உயிரையுந் துச்சமென மதித்து, உடன் பாய்ந்து காப்பாற்றுகின்றான். நன்றி கிட்டுமென நல்லமனம் நாடுகிறது; 'இழிகுலப் பிறவி நீ, எங்குல மடமகளைத் தொட்டனையா? பெற்றனை தண்டனை' என்று ஆர்ப்பரிக்கிறது பார்ப்பனீயம். புலவரேறு குமுறுகிறார்:

நால்வருண பேதமெனும் நாசமுறு குட்டையிலே
காலுந் தலைமுடியுங் கட்டோடே ஊறியதால்
சாத்திரமே பார்க்கும் சழக்கர்கள்; பீடற்ற
ஆத்திரமே கொண்ட அறிவற்ற மூர்க்கர்கள் (பக். 45)

என்றும்,

மூடத் தனத்தின் முழுமுண்டச் சண்டிகள் (பக். 42)

என்றுஞ் சீறுகிறார்.

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்

என்ற அப்பரோடு புலவரேற்றை ஒப்புநோக்கி மகிழ்கின்றனன்.

கடிசொல் இல்லை காலத்துப் படினே

என்பது தொல்காப்பியம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவில கால வகையி னானே

என்றார் பவணந்தியாரும். எனவே மரபை மீறுவதென்பது அறக்கழிவுடைய செயலாகாது. அதுபற்றியே நம்முடைய புலவரேறும் பழையன கழித்துப் புதியன புகுத்தினார் சிற்சில இடங்களில். காட்டாக ஒன்றைக் குறிக்கக் கடவன்:

கடல் கடந்து வேற்றுநாடு சென்று வணிகம் மேற்கொள்ளுந் தலைவர்கள் தங்களுடன் தலைவியரை உடனழைத்துச் செல்லற் கூடாது. என்னை?

முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை

என்பது தொல்காப்பியமாகலான். துணைவியரையும் உடனழைத்துச் செல்வார் தாய் நாட்டை மறந்து அயனாட்டிலேயே தங்கிவிடக் கூடுமே என்னும் அச்சமே பற்றி இத்தகையதோர் இலக்கணம் எழுந்ததெனலாம். ஆயின், மனைவியரைப் பிரிந்து சென்றவர், அயனாட்டிலேயே புதியள் ஒருத்தியை மனைவியாய்த் தேர்ந்து கொண்டு தங்கிவிடின் என்செய்வது? அது போன்றதொரு சூழல் நேர்ந்த போதுதான் பெண்களும் கடல் கடந்து செல்லலாம் என்று கூறி இலக்கிய மரபை மீறுகிறார் புலவரேறு.

நங்கையர்கள் கப்பலிலே நாயகனைப் பின்தொடர்தல்
பங்கமென்று சொன்ன பழமை பழித்தெழுந்தாள்.
கப்பற் றுறைபோனாள் கட்டணத்தைத் தான்கொடுத்தாள்
எப்படியும் வாழ்வில் இணைந்திடுவேன் என்றுரைத்தாள்
(பக் 79)

'மரபு தெரியாமல் பாடிவிடவில்லை; மரபை மீறியே பாடுகின்றேன்' என்பதை முதலிரண்டடியில் குறிப்பாய்ச் சுட்டினார் புலவரேறு.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான

என்று தொல்காப்பியர் கூறினராகவும்,

அன்ன நடையார் அலர்ஏச, ஆடவர்மேல்
மன்னும் மடல்ஊரார் என்பதோர் வாசகமும்
தென்உரையில் கேட்டறிவ துண்டு. அதனையாம்
தெளியோம்

என்று பெரிய திருமடலில் மரபைச் சுட்டி, அதனை மீறுதலையுங் குறித்த திருமங்கையாழ்வாரொடு புலவ ரேற்றை ஒப்பு நோக்கி மகிழ்கின்றனன்.

புலவரேற்றின் தமிழ்ப்பற்று பக்கந்தோறும்—அடிதோறும்—ஏன்? எழுத்துதோறும் மணக்கக் காணலாம். காட்டொன்று சுட்டுவன்.

தான்பிறந்த நாட்டுத் தமிழ்மொழியிற் பேசாமல்
வான்வழியே வந்து குதித்திங்கு வந்தாற்போல்
ஆண்டு கழிந்த அயனுட் டவன்மொழியில்
வேண்டுமென்றே பேசித்தாம் மேன்மையுள்ளார்
போனடித்துத்
தப்புச் சுதிசேர்த்துத் தாளந் தறிகெட்டுச்
செப்பமில்லாப் பாப்பாடும் சீரற்ற பாடகன்போல்
ஒப்பனையும் பொய்நடிப்பும் உல்லாச மாய்நினைத்துக்
கற்பனையுந் தீதாய்க் கழிகின்ற பேர்வழிகள்
தன்மானங் கெட்டுத்தந் தாய்நாட்டு மானமுமே
என்றும் பறிபோம் இழிநிலையைச் சேர்த்துவிட்டார்
(பக். 16)

இதுபோலும் பகுதிகள் எண்ணில. அன்றியும், கதைமாந்தர் கட்கு அவரிட்ட மணியன், மலையப்பன், கண்ணப்பன், வள்ளி, வஞ்சி, முத்தப்பன், பொன்னப்பன், தாமரை, முல்லை—போன்ற தூய செந்தமிழ்ப் பெயர்களை நோக்கவும் அவரது தமிழ்ப்பற்றுத் தெற்றெனப் புலனாகா நிற்கும்,

உவமைகளைக் கையாள்வதிலும், கற்பனைகளை நிகழ்த்துவதிலும், தங்கொள்கையினை வழாஅமல் நடாத்துவதிலும் புலவரேற்றிற்கு ஒப்பாவார் யாருமிலை என்பதினின்றே மிக்காவார் இன்மையும் இனிது பெறப்படும்.

ஓர் எழுத்தாளரின் படைப்புகளையெல்லாம் அவை தோன்றிய கால அடிப்படையில் வரிசைப் படுத்தினால் முதற்படைப்பிற்கும் இறுதிப் படைப்பிற்கும் நிறைந்த வேறுபாடுகள் தோன்றும் என்றும், முதற் படைப்பிலிருந்து ஒவ்வொரு படைப்பும் படிப்படியாய்ச் செம்மையுந் தெளிவும் பெற்றுப் பொலிவுடன் வளர்ந்து வருவதைக் காண முடியும் என்றும் திறனாய்வாளர்கள் கூறுவர். ஆயின், நமது புலவரேற்றின் தொடக்க காலப் பாடல்களே செம்மையில் முழுமையும், தெளிவில் நிறைவும் பெற்று மிகுசிறப்புடன் விளங்குகின்றதாகலான் பிற்காலப் பாடல்களினின்றும் அவற்றைத் தனியே பிரித்தறியக் கூடவில்லை. வெவ்வேறு காலங்களில் வேறுபட்ட சூழல்களில் தோன்றிய பாடல்களாயினும் அவையனைத்தும் ஒக்கச் சிறக்கக் காணலாம். ஓரடைத் தேனின் ஒவ்வொரு துளியும் ஒத்த இனிப்பினதாய் இருப்பது போல, புலவரேற்றின் இந் நூலுள்ளும் அனைத்துப் பகுதியும் வேறுபாடின்றிச் சிறக்கக் காணலாம். இந்நூலுள் சிறந்த பகுதியென்று ஒரு சிலவற்றைத் தனியே எடுத்துச் சுட்டப் போதருதல் திருக்குறளுள்ளேயே சில குறள்களைத் தேர்ந்து சிறந்த குறள்கள் எனச் செப்பும் செயலுக்கு ஒப்பாகும்.

'பாரதியின் பாடலை உணர்ச்சிக்காக ஒருமுறை படித்தேன்; கற்பனைக்காக ஒருமுறை படித்தேன்; சந்தத்திற்காக ஒருமுறை படித்தேன்; கருத்திற்காக ஒருமுறை படித்தேன்—ஒவ்வொரு முறையும் அது படித்தேனாக இனித்தது' என்றார் ஒரு திறனாய்வாளர். அது நமது

புலவரேற்றின் பாடல்கட்கும் பொருந்துவது கண்டு மகிழ்கின்றனன்.

இந்நூலுள் 'இளவரசி முல்லை' என்னும் பாவியத்தில் 'தாமரை' என்பாள் தன் காதலற்குக் கடிதமொன்றெழுது கின்றாள். அதனைக் கண்ணுற்ற காதலன் உவக்கின்றான். எப்படி?

அன்னப்பெண் தாமரையாள் எழுத்தொவ் வொன்றும்
ஆயிரந்தேன் குடத்திற்கு நிகராம் என்றே (பக். 141)

உவக்கின்றான். இவ்வரிகள் நமது புலவரேற்றின் எழுத்திற்கும் பொருந்தும். தாமரையின் எழுத்துகள் அவளது காதலனுக்கு மட்டுமே உவப்பைத் தரும். ஆயின், நமது புரவரேற்றின் எழுத்துகளோ அவற்றைப் படிக்கப் புகுதருவார் அனைவர்க்கும் உவப்பை நல்கும் என்ப தொருதலை.

பிறமொழிச் சொற்களையெல்லாம் அப்படியே ஆண்டும், தேவை இல்லாத இடங்களில் எல்லாம் தொடர்களைப் பிரித்து ஒன்றின் கீழ் ஒன்றாய் எழுதி, தாள்விலை அறியாது பக்கங்களைக் கொன்னே நிரப்பியும் படைப்பவர்க்கோ படிப்பவர்க்கோ புரியா நிலையில் அமைகின்ற தரந்தாழ்ந்த உரைநடையை மிகச்சிறந்த 'வசன கவிதை' எனக் கூறித் திரிபவர்கள் நிறைந்துள்ள இக்காலத்தில் புலவரேறு நாரா நாச்சியப்பனாரின் பணி இமயமென உயர்ந்து நிற்கிறது. அன்னார் இதுபோலும் தரமான அணிகளை அடுத்தடுத்துத் தமிழன்னைக்குச் சூட்டிக் கொண்டே இருக்க வேண்டுமென விருப்புடன் வேண்டி அமைகுவன்.

வெல்க தமிழ் !

1-7-1980

ச. அரங்கராசன்

# விடை தெரியவில்லை

**டாக்டர் க. ப. அறவாணன்**
ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகம்,
தக்கார் பல்கலைக் கழகம்,
தக்கார், செனகால்.

கவிஞர் நாரா நாச்சியப்பர் கவிதைக்கு—கவிதைக் காதைக்கு ஒரு திறனாய்வு எழுத வேண்டும் என்று கேட்ட உடனே ஒப்புக் கொண்டேன். முதற் காரணம்: அவர் மீது எனக்குள்ள மதிப்பு. இரண்டாவது: அவர் எழுத்தில் எனக்குள்ள மதிப்பு! ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர்தம் எழுத்துகள் தமிழை அணி செய்து வருகின்றன. அவர் கைப்பட்டு வெளிவந்த இதழ்கள் பல! அவர் விழிப் பார்வையில் வெளிவந்த நூல்கள் பல! அவர் எழுத்தில் இளந்தமிழனின் மான உணர்வும், பர்மாத் தமிழனின் கண்ணோட்டமும் எனக்குப் பிடித்த சிறப்புகள்! பிடித்த சிறப்புகளைக் கவிதைகளில் பிடித்து வைத்துப் படைப்பவரைப் படித்தவர்க்குப் பிடிக்கும் அல்லவா?

அவர் கவிதைத் தொகுதியில் எல்லாவற்றையும் நான் படிக்கவில்லை. ஒரு கதைக் காவியத்தை முற்றுமாக—வரி வரியாக சொல் சொல்லாக எழுத்து எழுத்தாகப் படித்தேன். அதன் பெயர்: **இளவரசி முல்லை.** பக்கம் 135 இலிருந்து 191 வரை அது விரவி நிற்கிறது. 199 எண்சீர் விருத்தங்கள்; ஒரு வெண்பா. ஆக 200 பாடல்கள்! 800 வரிகள்; ஏறத்தாழ 8000 சொற்கள்! இந்த எல்லைக்குள் ஓர் இனிய கதை சொல்லி முடிக்கப் பெறுகிறது. கதை,

வரலாற்றுக் கதை. 'கடல் காற்றுத் தள்ளுகின்ற கப்பல்'கள் (பக்கம் 191) நிறைந்த காலத்தைப் பின்புலமாகக் கொண்ட காலக் கதை!

கலை கலைக்காகப் பார்வையினர், 'முன்னொரு காலத்தை மையமாக வைத்துப் படைக்கப்படும் கதைகளையும் கவிதைகளையும் புறக்கணிப்பர். இன்றையநிகழ்வில்அயர்ந்து கிடக்கத் துடிப்பர்! ஆனால், பலநூறு ஆண்டுகளாக, தனக்கென ஒரு வரலாறு சமைப்பதில் தோற்றும், சரிந்தும், அயர்ந்தும் கிடக்கும் ஓரினத்தைத் தட்டி எழுப்ப அவர்தம் பழைய வரலாறு ஒரு கட்டாயக் கருவி! சப்பானியர்தம் வீர வரலாற்றிற்கும், விவேக வரலாற்றிற்கும் அவர்களுக்கு ஊட்டப்படும் 'சப்பானிய' என்ற இனப்பெருமை ஒரு முதன்மைக் காரணம்! உலக வரலாற்றில் இரண்டு உலகப் போர்களுக்கு மூலவர்களாக இருந்த செருமானியர் வளர்ச்சிக்கும் தன்னினப் பெருமையே தலையாய காரணம்! 'தான் தமிழன்; தன்னினம் தமிழினம்' என்பதை நினைவூட்ட வேண்டிய நிலையில் இருக்கும் தமிழர்க்குப் பழைய பெருமையை நினைவூட்டுவது தேவை; தவிர்க்க முடியாத் தேவை. எனவே கவிஞர், 'முன்னொரு காலத்தை'த் தன் காவியப் பின்னணியாகக் கொண்டமை ஒரு சமுதாயத் தேவை!

**கதை**: மதுரை நகர் வாழ் முத்தப்பனும் பொன்னப்பனும் நண்பர்கள்! முத்தப்பன், பெண்காதல், பேதைமை என்பவன்; பொன்னப்பன், பெண் காதல் சாதனை என்பவன். பொன்னப்பன் தாமரை என்ற ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். முத்தப்பன் தன் தந்தையின் கட்டளைக் கிணங்க தஞ்சை அரண்மனை செல்ல வேண்டியுள்ளது. நண்பனை வருத்தத்துடன் பிரிகிறான். தஞ்சையில் அரண் மனையில் சீரிய பணியில் அமர்கிறான்.

பொன்னப்பன், தன் நண்பனைக் காணுதற்காகத் தஞ்சைக் கேகுகிறான்.

அங்கே காதலை ஒரு காலத்தில் தூற்றிப் பேசிய முத்தப்பன், தற்போது போற்றிப் பேசுவதைக் கேட்டு வியக்கிறான்.

காரணம்: தஞ்சையில் முத்தப்பன் — அரசிளங்குமரி முல்லையர் தம் காதல் முகிழ்த்து வளர்ந்து மலர்ந்து மணந்து நிற்கிறது.

அரண்மனை இளவரசியின் காதல் தன் அன்பன் முத்தப்பனுக்குக் கிடைத்ததை எண்ணிப் பொன்னப்பன் மகிழ்ந்திருக்க வேண்டும். ஆனால் அவன் மகிழவில்லை! கடுகுபோல் சின்ன மனம் கொண்ட பொன்னப்பன், 'குடிலன்' ஆகிறான்.

சதிகள் தொடருகின்றன.

முத்தப்பன் நாடு கடத்தப்படுகிறான்.

பிரிந்த காதலன், திரும்பி வாராமை, மதுரைத் தாமரையை அங்கிருந்து விரட்டுகிறது. ஆண் வேடத்தில் தலைவனைத் தேடித் தையல் தஞ்சை அடைகிறாள்.

அங்கே — பொன்னப்பன், முத்தப்பன் பிரிவில் தவிக்கும் முல்லையை அவள் விருப்பத்திற்கு மாறாகச் சுற்றி வருவதை நேரில் காண்கிறாள் தாமரை!

முல்லையிடம் தான் யார் எனப் புலப்படுத்திக் கொள்கிறாள். "என் காதல் போயினும் உன் காதலை வெற்றி பெறச் செய்வேன்" என்று முல்லையிடம் வஞ்சினம் மொழிந்து விட்டு முத்தப்பனைத் தேடிப் புறப்படுகிறாள்.

இடையில், முல்லையை மணக்க வேண்டும் என்ற ஒரு தலைக் காமத்தால், பொன்னப்பன், வெற்றித்தளபதி புயங்கனை மறைமுகமாகக் கொல்கிறான்!

புயங்கனுக்குத் தன் மகளை மணம் முடிக்க எண்ணி இருந்த தஞ்சை மன்னர், பொன்னப்பனைப் புது மாப்பிள்ளை ஆக்க முடிவு செய்கிறார்.

மணநாள், மணநேரம் நெருங்குகிறது!

தாமரை முத்தப்பனுடன் தஞ்சை திரும்புகிறாள். முல்லை முத்தப்பனுடன் கடாரக் கப்பலில் தப்புகிறாள்.

ஊடே, புயங்கனைக் கொன்றவன் பொன்னப்பனே என்ற உண்மை, அரசன் காதுக்கு எட்டுகிறது. பொன்னப்பன் சிறைப்படுகிறான்!

நல்ல முடிவைக் கொண்ட கதை. ஆனால் அரிய கதை அன்று! முத்தப்பனின் நண்பன் பொன்னப்பனின் மன மாற்றத்திற்குரிய காரணம், பொன்னப்பன் தன் காதலி தாமரையைத் துறக்கக் காரணம், அரசன் பொன்னப் பனைத் திடும் என ஏற்க, அவன் சொற்பேச்சைக் கேட்கக் காரணம், தவறேதும் செய்யாத தாமரையின் துன்ப எதிர் காலம் ஆகியவை விரிவாகச் சொல்லப்பட்டிருத்தல் வேண் டும்! கதையின் பாவிகம், சூழ்ச்சியின் வீழ்ச்சியா, நட்பா, காதலா,பேதைமையா எதுவெனத்தெரியவில்லை!ஏதேனும் ஒன்றை மையமாக வைத்துக் கதை வளர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். மனத்தில் எந்தப் பாத்திரமும் நிலைக்கவில்லை! காரணம். ஒரு பெருங்காவியத்திற் குரிய 'கதைக்கரு', சிறுபாவியத்திற்குள் அடங்க முடியாமல் தவிக்கிறது! தஞ்சை அரசனின் செயல்கள், அவனைப் பேதை மனோன் மணி சீவக மன்னனை விட மோசமாகக் காட்டுகின்றன! 'வல்லமையும் வீரமுங் கூர்மதி'யும் (ப. 190) அவனுக்கு இருப்பதாக நம்ப இயலவில்லை!

"நல்ல மனமுடையார், நல்ல செயலுடையார் வெல்லுவதே வைய விதி" என்ற கவிஞர் தம் வரி, தாமரை என்ற மதுரைவாழ் நல்ல மனமுடைய பெண்ணின் எதிர் காலத்திற்கும், புயங்கன் என்ற நல்ல செயலுடைய தளபதியின் கொலைக்கும் விடையிறுப்பதாக இல்லை! தடையளிப்பதாகவே இருக்கிறது!

ஆனால் கதை அழகுற எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. சொல்லப்பட்டிருக்கிறது. ஓரிரண்டு சான்று.

பொன்னப்பனின் காதல் மடலை வேலைக்காரி, அவன் காதலி தாமரையிடம் கொடுக்கிறாள். தாமரையோ, 'தடிப்பயல்கள் கொடுப்பதெல்லாம் வாங்கி வந்தா என்னிடத்தில் தருகின்றாய்' (ப. 139) என்று அவள் மீது பாய்கிறாள். கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து எரிகிறாள்! பொன்னப்பன், தாமரை மீது கொண்டிருக்கும் காதல் 'ஒருதலைக் காமமோ' என்று ஐயுறுகிறோம்!

வேலைக்காரி அப்பால் செல்கிறாள்.

உடன், தாமரை, வேலைக்காரிக்குத் தெரியாமல், பத்து முறை கிழித்தெறிந்த துண்டை எல்லாம் (ப. 139) இணைத் தெடுத்துப் படித்துப் பார்க்கும் போது, தாமரையின் காதல் நெஞ்சம் எழிலுறப் புலப்பட்டு நிற்கிறது. இனிமை யுறப் புலப்படுத்தப்பட்டு நிற்கிறது.

பொன்னப்பனுக்குத் தானும் ஒரு காதல் மடல் பதிலுக்கு எழுதி, அதனை வேலைக்காரியிடம் கொடுத்து, "உடன் சென்று கொடுத்திடுவாய்... – இன்னொரு கால் எழுதுதற்கும் எண்ண வேண்டாம் என்றவனை எச்சரித்து வருவாய்" என்று தாமரை கூறும்போது, நம்முள் புன் சிரிப்பு புலர்கிறது!

—E—

"பொன்னப்பன் இம்முடங்கல் பெற்றடைந்த பூரிப்பை இன்னதென்று விளக்கப் போமோ" (ப. 141) என்று கவிஞர் எழுதும்போது, முன்பு தோன்றிய புன் சிரிப்பு பூரிப்பாய் நம் நெஞ்சுள் நிறைகிறது.

**கவிதை:** ஒரு கதை, கதையாக உரைக்கப்படாமல், கவிதையாகப் பாடப்படும் போது, கதை பின்னுக்குத் தள்ளப்படுகிறது. கதை அல்லது கருவைக் கொண்டு, கவிதையை முற்றுமாக எடையிடுவது முற்றுமாகச் சரியன்று! ஒரு பாட்டு, அதன் சொற்களால், அது சொல்ல வரும் கருத்தால் மூடப்பட்டிருக்கலாம்! ஆனால் பண்ணால் அது சிறந்திருக்கலாம்! சிறந்திடும் கரு நொண்டியாக இருந்தாலும், கருவின் உருவம் அன்ன நடையிடலாம்; அன்ன நடையிடும்!

இதோ பாருங்கள்: பெண்ணை வருணிக்கும் வரிகள்: "அணிகளிலும் துணிகளிலும் ஆசை வைத்தே அலைகின்ற மங்கை" (ப. 136) "வான்கதிரின் அனல்மாற்றிக் குளிர வைத்த வடிவழகி" (ப. 146)

'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு' என்ற வரியில் உள்ள 'மண்டிக் கிடக்கும்' என்ற சொற் கூட்டத்தில் பாரதியின் பாமாண்பைக் காண்பர்; 'Wandering bird' என்பதில் உள்ள 'Wandering' என்ற சொல்லில் ஆங்கிலக் கவிஞனின் மாண்பை அறிவுறுத்துவர்; "இப்படை தோற்கின் எப்படை செயிக்கும்' என்பது மனோன்மணியச் சுந்தரம் பிள்ளையை நினைவுறுத்தும். இப்படிப் பல; பலர். கவிஞர் நாரா நா கவலையைப் பற்றி எழுதும் தொடர் இது: '**அரிக்கின்றகவலை**' (ப.135) 'அரித்தல்' என்ற வினையின் அருமையையும், 'கின்று' என்ற நிகழ்கால இடைநிலையின் ஆட்சியையும் இணைத்து நினைக்கும் போது, நம் எண்ணக்கை, கவலையின் அரிப்பைச் சொறிவதற்காக ஐந்து விரல்களையும் நீட்டுகிறது.

இதுபோன்றே இன்னோர் இடத்தில் அணிகளையும் துணிகளையும் தேடும் பெண்டிரை '**அலைகின்ற மங்கை**' (ப. 135) என்று கவிஞர் குறிப்பிடும் இடம், பெண்டிர் சிலர் தம் பேதைமையைத் துல்லியமாகத் துலக்குகிறது.

பனங்கள்ளை நாரா நா வருணிக்கும் முறையைப் படியுங்கள்: "*பனைக் கழுத்தில் ஊறி வரும் சாறு*" (ப. 142)

அரசனின் ஆணைக் கிணங்கப் புறப்படும் இளைஞர் பட்டாளத்தின் உயிர்த் துடிப்பை இரண்டே வரிகளில், "முண்டாவைத் தட்டிக் கொண்டு இளைஞர் எல்லாம் முன்னேற்றச் சிந்து இசைத்துக் குழுமலானார்" (ப. 177) என்று படைக்கிறார். 'முன்னேற்றச் சிந்தும்' முண்டாவைத் தட்டுதலும் நம் கருத்துக் காதுகளில் எதிரொலி எழுப்புகின்றன.

உவமை கவிஞர்களை அடையாளங் காட்டும் கருவி. எச்சில் உவமைகளை மீண்டும் மீண்டும் எடுத்து எடுத்து உமிழ்வதே பல பாவலர்தம் பொதுப்போக்கு; பொழுது போக்கு. நாராநா ஒரு புது உவமையை ஆளுகிறார். இவ் வுவமையை முதல் முதலாண்ட பெருமை நாராநாவிற்கே உண்டு! குடிலப் பொன்னப்பன், கறுப்பிருட்டில், புயங்கன் எனும் தளபதியைக் கொல்ல வேண்டும் என்ற பொல்லா நினைவுடன் பாடிவீட்டில், பூனைபோல மெல்ல மெல்ல நுழைகிறான். அவன் நுழைவு எப்படி இருக்கிறதாம். கருங் கூந்தலின் ஊடே பேன் ஒன்று நுழைந்தது போல இருக்கிறதாம். (ப. 180) உவமைகளின் கூட்டத்திற்குப் பார்க்க: (ப. 186).

**வருணனை**: கண்டதை, கேட்டதை அப்படியே சொற்களில் புனைந்துரைப்பது அரிய கலை. ஆங்கிலத்தில் வேர்ட்சுவொர்த்தின் இயற்கைப் புனைவுகளை மெத்தப்

புகழ்வர். பிரெஞ்சு மொழியில், செனகால் கவிஞர் செங்கோர் இதில் திறம் பெற்றவர் என நுவல்வர். கவிஞர் நாராநா, தாமரை நடந்து - கடந்து செல்லும் காட்டை வருணிக்கும் பகுதி இயற்கைப் புனைவின் செழுமைக்குப் பொருத்தமான காட்டு: (ப. 154 — 156) பசியால் துடிக்கும் தாமரை, மாம்பழம் பறிக்க விரும்புவதும், எட்டிப் பறிக்க உடலில் திறன் இல்லாமல் வெதும்புவதும், முடிவில் மண்ணில் விழுந்த பழம் ஒன்றை எடுத்துத் துடைத்துச் 'சிறிது பசி' தணிப்பதும், நெஞ்சைத் தொடும் நிகழ்வுகள்! அவளுக்கு நெடுந்தூரம் நடந்து நடந்து கால் வலிக்கிறது. சரி, கொஞ்சம் அமர்ந்து களைப்பாறிப் புறப்படலாம் என்று அமர்கிறாள்; அப்போதோ மனம் வலிக்கிறதாம் (ப. 157).

**சொல்லாட்சி**: சில பாவலர்களை அவர்தம் சொற்களாலேயே நினைவு கூர்வர்; சிலர் அவர்தம் சொல்லாட்சியாலேயே பெயர் குறிக்கப் பெறுவர்; Beauty என்ற சொல் நினைவு வந்தால், கவி கீட்சு நினைவிற்கு வருவார்; சங்கப் புலவர்களுள் சிலர், சில சொற்களாலேயே அழைக்கப்படுவர்; 'புனையா ஓவியம்' என்ற சொற்றொகுப்பே நக்கீரரை நினைவுறுத்தும். நாராநா, "வழுச்சேறு" (ப. 136) என்பார், "காந்தக்கண்" என்பார் (ப. 136) "முன்னேற்றச் சிந்து" என்பார் (ப. 177) "காதலர் தம் திருமணத்திற்கு முற்பட்ட உறவை" உள்ளத்தால் **மெய்**யுறவு (ப. 143) என்று குறிப்பார். '**மெய்**'யுறவு என்ற சொற்கூட்டு உடலையும் உண்மையையும் ஒருசேர உணர்த்தும் மாண்பை நினைக.

**சொல்லை வெட்டுதல்:** பாவலன், தன் கற்பனை இறக்கைகளைச் சிந்தனைத் துடிப்பில் விரிக்க விட்டுப் பறக்கும்போது சில சொற்கள், இலக்கணச் சீர்களுக்காகத் துண்டுபடும்! காரிகை இதனை 'வகையுளி' எனப் பெயரிடும்! யாப்புவழு என ஒதுக்கிடும்!பாவியங்களைப் படைக்கும் பல

பாவாணர்கள், இந்த வகையுளி வழுவில் விழுவர். விதி விலக்காக இருப்பதற்குப் பெருந்திறமை வேண்டும். கவிஞனிடம் சொற்களும் இலக்கண விதிகளும் மண்டியிட்டுக் கிடத்தல்வேண்டும். கவிஞர் நாரா நா, இருபாக்களில், முல்லையைப் படம் பிடிக்கிறார். ஓரிடத்தில்கூட வகையுளி யில் வீழாமல் வாழுகிறார்! நாச்சியிடம் காணத்தகும் குறிப் பிடத்தக்க சிறப்புகளுள் இதுவும் ஒன்று!

**கருத்து**: நாராநாவின் இப்படைப்பில், கருத்துகள் தனி யிடம் பெற்றுள்ளன. கலை கலைக்காக என்ற முதலாளித் துவத் தத்துவத்தில் சிக்காமல், கலை சமுதாயத்திற்காக என்ற நோக்கில் அவர்தம் பாவியம் நடையிடுகிறது. சொல்லப்படும் கருத்துகள், படைப்புகளுடன் ஒன்றாமல், நீர்மேல் எண்ணெயாக மிதக்கவில்லை! அவை கதை மாந்தருடன் இழைந்து நிற்கின்றன!

கருத்துகளில் முத்தப்பன் பொன்னப்பன் உரை யாடலாக அமைந்துள்ள பெண்ணைப் பற்றிய—காதலைப் பற்றிய கருத்துகள் தலைமையானவை. ‘பெண்ணுறவு யோசம், காதல் வாழ்வு நாசம் ஆகவே அவை வேண்டாம்’ என்று முத்தப்பனும், அவையிரண்டும் வேண்டும் என்று பொன்னப்பனும் பரிமாறிக் கொள்ளுவன ஒவ்வொருவரும் படித்து முடித்து வைத்து கொள்ளத்தக்கன. இந்த எரிந்த எரியாக் கட்சிப் பட்டிமன்றைக் “காந்தக் கண் பார்வையிலே வீழ மட்டும் காளையர்கள் பேசுகின்ற பேச்சு” (ப. 136) என்று பொன்னப்பன் தலைகட்டுவது சுவைக்கத் தகுந்தது.

நல்ல நண்பர்களின் வாய்ச் சண்டை துனியாகி அவர் உறவைத் துணிப்பதில்லை; வாதம் முடிந்தவுடன் பிணித்து விடும் என்பதை நாராநா, ‘நண்பர்க்குள்ளே எழுகின்ற வாய்ப்போரும் நின்று போகும்’ (ப. 138) என்பார்.

ஆண் பெண் காதல் மெய்யுறவை, உடல் உறவிற்குப் பின் நிலையைச் “சிறு குழந்தைத் தனமாகப் பின்பு மாறும்” (ப. 140) என்று குறிப்பார்.

இன்றைய சமூகத்தில், முற்றி அழுகிவிட்ட முதன்மைத் தீங்கு 'பொய்யும் புனைவும் உரைப்பாரே வெல்வர்; மெய்யும் நேர்மையும் ஏட்டுச் சரக்குகள்! அவற்றை நம்புவோர், வெல்லார் வாழ்வில் உயரார் என்ற நினைப்பும் நடப்புமாகும்! இதனாலேயே வன்முறைகள் ஓங்குகின்றன; வல்லான் வகுத்ததே வாய்க்கால் ஆகிறது! பலர் கூடி ஆர்ப்பரித்தால் பொய், மெய்யாக நம்பவைக்கப்படுகிறது; மெய், பொய்யாக நம்பவைக்கப்படுகிறது! இதனை நாரா, தெளிவுற, அழகுற, "மயங்காமல் பிழை செய்து முடிப் பவர்க்கே மனக்கருத்து நிறைவேறும்" என்று சுட்டுவர் (ப. 183).

அனைத்தினும் மேலாக, கவிஞர்தம் காப்பியக் கடை வெண்பா—கருத்து வெளிப்பாட்டில் அவர்தம் திறமையை யும், வெண்பாப் புனைவதில் அவருக்குள்ள ஆற்றலையும் ஒருசேர உணர்த்தும்.

சூதாடி வென்றவரும் சூழ்ச்சியிலே வென்றவரும்
வாதாடி வென்றவரும் வாழ்ந்து சிறந்ததில்லை
நல்ல மனமுடையார்; நல்ல செயலுடையார்
வெல்லுவதே வைய விதி! (ப. 191)

முடிவாக,

இப்பாவியத்தில் கதை என்ன?

பாவியக் கதை நிகழ் காலம் எப்பொழுது?

பாவியக்கதை உணர்த்தும் கருத்து எது?

இவையனைத்திற்கும் விடை கிடைத்துவிட்டன! விடை எளிதில் பெறமுடியா ஒரே வினா? இப்பாவியத்தின் தலைமை யாருக்கு?

முல்லைக்கா?

தாமரைக்கா?

பாவியப் பாக்கள் மொத்தம் இருநூறு.

இவற்றுள் நூறு பாடல்கள் தாமரையையே சுற்றி வருகின்றன; ஐம்பது விழுக்காடு!

கதையும் தாமரைக் காதலன் பொன்னப்பன் வழி தொடங்கி—தாமரைத் தியாகத்துடன் நிறைவுறுகிறது.

முல்லை, அரசிளங்குமரி என்பதொன்றும், பொன்னப்ப னின் கட்டாயக் காதலுக்கு இசையாதிருந்தாள் என்ப தொன்றும் அவள் சிறப்புகள்!

ஆனால், தாமரையோ, பொன்னப்பனைக் காதலித் தமை, அதற்காக வீடுதுறந்தமை, காதலனைத் தேடிப்புறப்பட்டமை, கடுங்காட்டில் அல்லலுற்றமை, மாறுவேடம் பூண்டமை, அந்தப்புரம் நுழைந்தமை, முல்லையைச் சந்தித்தமை, காதலனின் துரோகம் அறிந் தமை, முல்லைக்கும் முத்தப்பனுக்கும் வாழ்வு தர முடிவு செய்தமை, முத்தப்பனைத் தேடிக் கொணர்ந்தமை, முல்லையையும் முத்தப்பனையும் ஒன்று சேர்த்தமை, முடிவாகத் தன் காதல் வாழ்வை நேர்மைக் கடைப் பிடிப்பால் தியாகம் செய்தமை ஆகிய நிகழ்வுகள் தாமரையைத் தலைமை நிலைக்கு ஏத்துகின்றன!

எனவே அரசிளங்குமரி என்ற சிறப்பால் பாவியத் தலைமை முல்லைக்குப் போயினும், செயலால், பாவியத் தலைமை தாமரைக்கே சென்று சேருகிறது!

காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையை விட்டுப் பிரியும் கடாரக் கப்பலில், முல்லையும் முத்தப்பனும் இணைந்து தப்பும்போது,

கடற்கரை மணல்வெளியில் நின்று கொண்டு, ஒரு கை, அவர்களை வழியனுப்புகிறது!

அந்தக் கை தாமரையினுடையது! தாமரையின் கண்மலர்களில் கண்ணீர் துளிர்க்கிறது!

அக்கண்ணீர்த் துளி, தன் காதல் வாழ்வு பொன்னப் பனின் சிறைவாழ்வோடு போய்விட்டதே என்ற துன்பக் கண்ணீரா?

அல்லது,

முல்லையும் முத்தப்பனுமாவது இணைந்து வாழ முடிந்ததே என்ற இன்பக் கண்ணீரா?

விடை தெரியவில்லை!

ஆனால் தாமரையின் கண்கள் நனைகின்றன! நம் விழிகளும் அவளுடன் இணைகின்றன! நனைகின்றன!

நான்கௌரி (Nan Cowry)<br>
அந்தமான் கப்பல்<br>
மாலை மணி 7. 17-7-80

**க. ப. அறவாணன்**

# காவலர் இல்லத்தில்

**காத்திருந்தாள்;**

**காத்திருந்தான் சோலையிலே**

தென்றல் வரக்கண்டு தேன்கொண்ட பூவினங்கள்
நின்று தலையாட்டி நீண்டசுகம் கண்டிருக்கும்;

வண்டுவந்து கூடி மகரயாழ் மீட்டிநின்று
கொண்ட நலம்பாடிக் கொண்டிருக்கும்; பக்கத்து

நின்று வளர்ந்துகனி நீட்டும் மரங்களிலே
சென்றிருந்து பச்சைக் கிளிகள் பழம்பருப்புத்

தின்று பறந்திருக்கத் தேனனை நல்லிசையை
வென்று குயில்பாடும் வேளையொரு சோலையிலே

அந்திப் பொழுதுமணி ஐந்துக்(கு) அமுதவல்லி
குந்தி யிருந்தாள், குறுகுறுக்கும் நெஞ்சுடனே!

நாடோறும் எப்படியோ நானும் பறந்துவந்தே
ஏடுகொண்டு மெல்லமெல்ல இங்குவரும் காதலரைத்

தேடிவழி பார்த்திருப்பேன்; செல்லத் துரையவரோ
ஓடிவரக் கண்டதில்லை; ஓர்நாளும் முந்திவரக்

கண்டதில்லை; நானேதான் காத்திருக்க நேர்ந்ததுவே
கண்டுவிட வேண்டுமவர் காதல்உளம் கொண்டவரா

என்பதனை என்றே எழுந்தங்கே நின்றசெடிப்
பின்போய் ஒளிந்திருந்தாள்; பெண்ணுள் அமுதவல்லி!

செங்கதிரோன் மாலைச் சிவப்பேறிக் கொண்டிருந்தான்
எங்கெங்கோ சென்ற பறவை யினமெல்லாம்
கூடிப் பறந்தனவாம்; கூடுகளைத் தேடினவாம்;
தேடிவந்தான் அவ்வேளை; தேன்மலரை யொத்தாளைக்
காணாமல் காத்திருந்தான்; கண்ணிரண்டும் பூத்திருந்தான்!
வீணாக நெஞ்சுக்கு வேலை கொடுத்திருந்தான்!

பாணன் இசைபோற் பயிலும் மொழியுடையாள்
காணக் கிடைக்காத கல்வயிரப் புன்னகையாள்
தேடிவந்து காத்திருக்கும் சிற்பச் சிலையனையாள்
ஓடிவந்து காத்திருக்கும் உள்ளத் துயிரனையாள்
பூங்கொடிபோல் மேனிப் புதுமை யழகுடையாள்
தீங்கனிபோல் பேசித் தினமும் மயக்கிடுவாள்
ஆசைக் குரிய அமுதவல்லி என்னுளத்துப்
பூசைக் குரிய பொருளாவாள் என்றும்
நிலைத்த வடிவாகி நெஞ்சில் இருப்பாள்
மலைத்தேன் சுவையை வடிக்கும் இதழுடையாள்
கன்னக் கதுப்பிலே கைவைத்தால் நெய்மணக்கும்
மின்னும் விழிப்பார்வை மேலும் வெறிகூட்டும்
தோளைப் பிடித்துவிட்டால் காதல் துடிப்பேறும்
தாளை மலர்போலே தாங்கிப் பிடித்தாலும்
நெஞ்சு களிகூரும்; நித்தம் மடிக்கிடந்து
கொஞ்சும் கிளியெங்கே; கூடும் உயிரெங்கே
இன்றேன் வரவில்லை? என்ன நடந்ததுவோ
என்றேங்கி யேங்கி யிருந்தான் மணியன்!

## சந்தித்தார்; சிந்தை மறந்தார்

பிணையதனைக் காணுமல் பேதலிக்கும் மான்போல்
துணையைப் பிரிந்து துடிக்கும் புருப்போலே

காத்துக் கவன்றிருக்கும் கட்டழகன் பின்வந்து
பூத்த மலர்க்கண்ணைப் பொன்னின் தளிர்போன்ற

கைகளினுல் மூடிக் களித்தாள் அமுதவல்லி.
ஐயயோ வென்றே அலறி விடுவித்துப்

பின்னுல் திரும்பினுன்; பேச்சுக்கு வேலையில்லை!
தன்னெஞ்சை யூடுருவித் தாம்செல்லும் அம்பிரண்டு

கண்டான்! அவளுந்தான் கண்டாள்! இணையிரண்டு
கண்களுமே ஒன்ருய்க் கலந்திருந்த காட்சியிலே

மண்ணுலக மில்லை; மலர்க்கொடிகள் தாமில்லை;
எண்ணக் கவலைகள் ஏதுமில்லை; சுற்றத்

தடையில்லை; பெற்ருேர் தருங்கொடுமை இல்லை;
இடைவெளியைத் தாண்டி இணையும் விழிகளுடன்

ஒன்ருய்க் கலந்திருந்த உள்ளம் தவிர்த்தங்கே
நின்று நிலைத்ததொன்று நீள்புவியை வாழவைக்கும்

காதல் அதுவே! களிக்கும் நிலையதுவே!
மோதும் இரண்டுளங்கள் முட்டப் பிறக்குமொளி!

சேரும் இரண்டுளங்கள் சிந்துகின்ற முத்தமது!
கூடும் இரண்டுயிர்கள் கொட்டும் வயிரமது!

கட்டுண்ணும் ஈருயிர்கள் காணுகின்ற தேனமுதம்!
விட்டுப் பிரியாதார் மேவுகின்ற பேரின்பம்!

காதல் அதுவே! களிக்கும் நிலையதுவே!
மாதமுத வல்லி மணியன் இருவருமே

நின்றார் நெடுநேரம் வேறு நினைப்பின்றி
குன்றனைய தோளானைக் கோபித்துக் கேட்டுவிட
எண்ணி யிருந்ததெலாம் ஏந்திழையாள் தான்மறந்தாள்
கண்ணுக்குக் கண்ணான காதலனைக் கண்டுவிட்டால்
பேசிக் களிப்பதல்லால் ஏசிப் பிரிவதுண்டோ?
வாசிக்கும் புத்தகத்தை வாங்கி நெருப்பினிலே
போட்டுக் கொளுத்துவதோ? பூவெடுத்துக்கொண்டையிலே
சூட்டாமல் கல்லின்மேல் தூவிக் கெடுப்பதுவோ?
குந்திக் குரலெடுத்துக் கூட்டமுதப் பாட்டிசையைச்
சந்தப் படிபாடித் தண்டமிழின் இன்பத்தைக்
காணாமல் கத்திக் கசப்படையச் செய்வதுவோ?
ஆணழக னோடன்பால் ஆசைக் கதைபேசி
வாழ்வின்பம் காணாமல், வந்தவனைத் தான்சினந்து
பாழ்படுத்த லாமோ? பகைக்கப் புரிவதுவோ?
இவ்வாறு வேறுநினைப் பேதும் மறந்தவராய்க்
கவ்வும் இணைக்கண்ணில் காதல் ஒளிபெருக்கி
நின்றிருந்த போது நிலவும் அமைதியினைக்
கொன்றந்தச் சேயிழையாள் கூறத் தொடங்கினாள்.

## சிந்தித்தாள்;
## தெரிவித்தாள்

அத்தான்! மணியத்தான்! அன்பான என்னத்தான்!
எத்தனைநாள் நாமும் இருந்திடுவோ மிவ்வாறே!
கூடிச் சிரித்திருப்போம். கொஞ்சம் இருட்டிவிட்டால்
வாடிப் பிரிந்திடுவோம், வாழ்க்கை தொடங்கவில்லை
எத்தனைநாள் அத்தான் இனிப்பொறுக்கமாட்டேன்நான்
சித்தந் துடித்தந்தச் சேயிழையாள் சொன்னதற்கே

அன்புடையாய் என்றன் அமுதவல்லிப் பெண்ணேநாம்
இன்பத் திருமணத்தை ஏற்றுக் குடித்தனத்தைச்
செய்யத் துடிக்கின்ருய் செந்தா மரைமுகத்தாய்
மெய்யாய் உரைக்கின்றேன், மேற்படிப்புத் தேர்வினிலே
வெற்றியுற்ற பின்னே விழைகின்றேன் இல்லறத்தைப்
பற்றுவிட்டேன் என்று பதைக்காதே! உன்னை
அடையத் துடித்தாலும் என்றன் அறிவால்
மடைப்பெருக்காம்அன்பைமறைத்துவைத்துவாழ்கின்றேன்!
கல்வி முடிந்தவுடன் கட்டழகி தோள்களிலே
நல்ல மலர்மாலை நாடும் மணமாலை
போட்டுக் களிப்படைவேன் பொன்னுன வாழ்க்கையிலே
கூட்டும் பொருளெல்லாம் கொண்டுவந்து சேர்த்திடுவேன்
கண்ணல்ல கட்டிக் கரும்பல்ல தண்டமிழின்
பண்ணல்ல முத்தம் பதித்துவிடு என்றுரைத்தான்.

## திரைப்படத்திற்கு அழைத்தாள்

### தேனையாள்

முத்தமிருக் கட்டும் முடிவும் இருக்கட்டும்
இத்தினத்தில் உள்ளத் தெழுந்த ஆசையினைக்
கூறுகின்றேன்; அன்பரே கூறி விடுகின்றேன்;
மீறிப் பதிலுரைக்க வேண்டாம்நான் வேண்டுகின்றேன்!
இன்று திரைப்படத்திற் கென்னை உடன்அழைத்துச்
சென்றுவர வேண்டும்; சிறியாள் விருப்பமிது!
நாட்டிலுள்ள பெண்களெல்லாம் நாயகரின் கைகோர்த்துக்
கூட்டுப் பறவைகள்போல் கூடித் திரைப்படங்கள்
கண்டுவரும் காட்சியினைக் கண்டேன் மனத்தினுள்ளே
கொண்டுவிட்ட ஆசையிது கூட்டிச்செல் வீரா

மறுக்காமல் சொல்வீர் மனவிருப்பம் தன்னை
நறுக்காமல் சொல்வீரே நல்ல முடிவுரைப்பீர்

என்றுருகிக் கேட்டாள்; இளைஞன் மனங்கசிந்தான்
என்றாலும் சொல்லுகின்றான் என்றன் அமுதவல்லிப்

பெண்ணே உனதருமைப் பெற்றோருங் காணமல்
எண்ணம் பதைத்திடுவார் எங்கெங்கும் தேடிடுவார்

கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்தவர்கள் பூத்திருக்கும்
வண்ண மலரை வடிவழகி யுன்னைத்தாம்

சற்றுப் பிரிந்தாலும் சஞ்சலமே கொண்டிடுவார்
சுற்றத்தார் பக்கத்தார் சூழ்ந்து பழித்திடுவார்

நெஞ்சு கலந்துவிட்டோம் நேரிழையே என்றாலும்
துஞ்சு மணமாலை சூடுவதன் முன்னாலே

ஆசைகளைக் கொஞ்சம் அடக்கி யிருப்பாயே
மாசற்றாள் என்றபெயர் மாறா திருப்பாயே

என்று மணியன் இறைஞ்சினன்; அப்பெண்ணே
நின்றாள் விழியிரண்டும் நீர்சொரியத் தாமரைதான்

கூம்பிக் கருத்ததுபோல் கொள்ளை யழகுமுகம்
தேம்பி யழுது சிலசொல் லுரைக்கின்றாள்.

அத்தானே அத்தான்என் ஆசை யடக்குதற்கே
எத்தாலும் பேசி எனைத்தடுக்கக் கற்றீரே!

அன்பு மனமிருந்தால் ஆசை யடைந்தவளை
இன்பப் படுத்தாமல் எத்தனையோ காரணங்கள்

சொல்லித் தடுப்பதுண்டோ? சூழ்ச்சியெலாம் நானறிந்தேன்
செல்லத் துரையேநீர் சென்றிடலாம் என்றுரைத்தாள்!

வெட்டும் விழியூறி வீழுங்கண் ணீரருவி
பட்டிதழின் கன்னத்தில் பாய்ந்துவரக் கண்டானே

காதல் துடிப்புணர்த்தும் கட்டழகி நெஞ்சிரண்டும்
மோதும் அலைபோலே முன்னேக்கிப் பின்வீழ்ந்தே

ஆடிக் கவலையுறும் அந்தநிலை கண்டானே
சூடி யிருந்த மலர்சிரிக்கத் தோகையவள்

வாடும் மலர்முகத்தைக் கண்டானே நெஞ்சத்தில்
ஓடிவரும் காதல் உணர்ச்சியினல் மாதவளைத்

தொட்டு முகந்திருப்பித் தோளில் அணைத்தபடி
கட்டழகே என்னன்பே கண்ணீர் நிறுத்திவிடு

பேசும் படங்காணப் பெண்ணேநீ இப்பொழுதே
வா, சிரிப்பாய்! என்றுரைத்து வண்ண மலர்முகத்தின்

நீரைத் துடைத்துவிட்டான்! நெஞ்சங் களித்தவளும்
தோளைப் பிடித்துத் தொடர்ந்து நடந்தாளே!

**படங்கண்டாள்;**

**காதல் மடங்கொண்டாள்.**

புத்தம் புதுவயிரம் போல்மின்னும் புன்னகையின்
முத்துப்பல் காட்டி முழுதுஞ் சிரிக்காமல்

அண்ணல்கை கோத்தே அழகு மயில்போலே
பெண்மானேர் காளையுடன் பேசி நடப்பதுபோல்

சிங்கம் நடந்துவரச் சிற்றன்னம் தொடர்ந்துவரும்
இங்கிதம்போல் தானும் இணைந்து நடந்தாள்!

படத்தில் வருங்காதல் பார்க்கும் பொழுதில்
மட்ப்பெண் அவள்செய்த மட்டற்ற செய்கையெலாம்

ஈண்டுரைத்தல் காதல் இலக்கியத்திற் காகாதாம்,
நீண்டும் இரண்டுயிர்கள் தேர்ந்தநல் லின்பத்தைப்

பாரறியக் கூறுவது பச்சை மொழியாகும்
ஊரறியக் கூறல் உயர்ந்த செயலல்ல

சற்றுக் குறிப்பிட்டால் சார்ந்தபொருள் கற்பனையால்
பெற்றுக் களித்தல் பெரியோர் கடனாகும்!

பேசும் படமுடியப் பெண்ணமுத வல்லியுடன்
பேசி நடந்துவந்தான்; பீடு நடையுடையான்.
பாட்டுச் சிறப்பும் படத்தில் நடித்தபெண்கள்
கூட்டும் உணர்ச்சியையும் கோதை மதிப்பிட்டாள்!
சண்டையிட்ட நாயகனின் சாதுரியத் தைமெச்சிப்
பண்டைமன்னர் போல்நடித்த பாங்கும் அவள்புகழ்ந்தாள்!
நாயகியாய் வந்தாள் நடிப்பில் வெளிப்பட்ட
தூய்தான காதல் துடிப்பைப் புகழ்ந்துரைத்து
காதல் இலட்சியத்தைக் கைப்பிடித்து நாமிருவர்
வாழ்தல் விரைவினிலே வாராதோ என்றுரைப்பாள்.
கேட்டுவந்த கேள்விகளுக் கெல்லாம் இடமறிந்து
வாட்டம் அடையாமல் மாற்ற முரைத்துவந்தான்.
சாலை வழிநடந்து சஞ்சலந்தா னில்லாமல்
கோல நிலவொளியில் கூடியுரை யாடிவரும்
காதலரை ஐயுற்றுக் கண்வைத்துப் பின்தொடர்ந்த
சேதி யறிவானின் செய்கையினைத் தாமறியார்.

## காவலர் இல்லத்தில் காதலியின் தந்தை

பொன்னை நிகர்த்தவளும் போர்ப்புலியை யொத்தவனும்
இன்னும் மணத்தால் இணையாத பேர்களென்று
தானுணர்ந்து காவல் தலைமையதி காரியிடம்
மீனின் விழியாளை மின்னற் கொடியாளைக்
காதல் மணியனுடன் காண நடத்திவந்தான்!
காதலியும் காதலனும் காவல் நிலையமுற்றார்!

மாலைப் பொழுதுமுதல் மங்கையினைக் காணுமல்
வேலை புரியாமல் வீற்றிருந்த பெற்ருேரும்
காரிருளே சூழ்ந்துவரக் கண்டனரே யல்லாமல்
சேருமெழில் மாது திரும்பிவரக் காணவில்லை;
அன்னை மனங்கலங்கி; யாதும் புரியாமல்
என்னென்ன வோகேட்க ஏற்ற விடையின்றித்
தந்தை புறப்பட்டார்; தாம்சண்ட பேரையெல்லாம்
இந்த வழியில் எழிலான பெண்ணொருத்தி
செல்லக்கண் டீரோ! என் செல்வத்தைக் கண்டீரோ
சொல்லுமெனக் கேட்டுத் தொடர்ந்து வழிதேடிக்
காவல் நிலையத்தும் கால்வைத்து மேலேறித்
தாவி யதிகாரி தம்முன்னே போய்நின்றே

ஐயா பெரியவரே! அன்புடனே நான்பெற்ற
கொய்யாப் பழமனையாள் கொப்பு மலரனையாள்
பண்புடனே நான்வளர்த்த பச்சைக் கிளியனையாள்
கண்ணின் மறையாமல் காவலிட்டுக் காத்திருந்த
பூத்த மலர்ப்பாவை போனவள்தான் மாலையிலே
காத்திருந்து காத்திருந்து கண்ணிரண்டும் பூத்தனவே!
தேடியலைந் தென்றென் செருப்புகளும் தேய்ந்தனவே!
ஓடிவிடு வாளென் றுரைப்பதற்கோர் காரணமும்
இல்லை அவள்விருப்பம் ஏதும் மறுத்ததில்லை.
நல்லொழுக்கம் அன்பு நடத்தையிலே கோணுமை
கொண்ட குலக்கொடியை; கொத்தும் பருவத்தைக்
கண்ட பழக்குலையைக் காணவில்லை; யாரேனும்
மின்னும் விழியாளை வீதி வழிமறித்துச்
சென்றிருக்க லாமென்று சிந்தை கலங்குதையா!

வாழ்க்கை நடத்த வரும்பருவம் கண்டதுமே
தாழ்க்கா தொருவன்கைத் தாலிக்குப் பெண்ணிவளின்

சந்தனத்துச் செங்கழுத்தைத் தத்தமிட்டு வைத்திருந்தால்
இந்தத் துயரமில்லை; இப்பொழுதே எப்படியும்

தேடிப் பிடித்துவந்தால் செய்நன்றி நான்மறவேன்
கூடிக் களித்திருக்கக் கோதைக்கோர் நாயகனைப்

பார்த்து மணமுடித்துப் பாரம் ஒழித்திடுவேன்
வார்த்தைபல சொல்லி வளர்த்துவிட்டேன் மன்னிப்பீர்.

பேரும் மலையப்பன்; பெற்றெடுத்த தந்தையென்றன்
ஊரும் திருவரங்கம்; ஓடிநான் தேடுகின்ற

பெண்ணும் அமுதவல்லி ஐயா பெருமனது
பண்ணி யவளைப் பலவிடத்தும் தேடி

அழைத்துவர வேண்டுகின்றேன்; அன்பு மனைவி
பிழைத்திருக்கவேண்டுமெனில்பெண் திரும்பவேண்டுமையா!

என்று பலப்பலவாய் ஏங்கி மலையப்பர்
கன்றிழந்த தாய்ப்பசுவாய்க் காவல் நிலையத்தில்

நின்று புலம்புகையில் நீர்விழியில் ஊற்றெடுக்க
ஒன்றும் புரியாமல் உட்கார்ந்து விட்டவரைக்

கண்டும் அதிகாரி கண்கலக்கம் கொள்ளாமல்
தொண்டு கருத்தாகித் துள்ளிச் சலாமிட்டு

நின்று பணிகேட்கும் நேர்மையுள்ள காவலரில்
நன்றொருவர் தம்மை வரவழைத்துக் காணாத

பெண்ணின் அடையாளம் பிழையாமல் கூறியவள்
வண்ண உடைக்குறிப்பும் வந்திருந்த தந்தையினைக்

**பருவமழைபோல்**
**பாவை வந்தாள்**

கேட்டுக் களத்தியெங்கும் தேடிவரத் தாம்பணித்தார்.
வாட்டமுற்ற நெல்லுக்கு வாய்க்காலில் தண்ணீரைப்

பாய்ச்சும் வழியாயும் போதில் பருவமழை
வாய்ந்த நிலேபோல வந்தாள் அமுதவல்லி!

காதல் மணியனுந்தான் காதலியின் பின்வந்தான்
சேதி யறிவோனும் சேர்ந்தங் கதிகாரி

முன்னே வணக்கம் மொழிந்துவிட்டுக் காதலரைத்
தன்னே டழைத்துவந்த காரணத்தைச் சாற்றிநின்றன்.

எண்ணுத போதில் எதிர்நிற்குந் தந்தையினைக்
கண்ணுலே கண்ட அமுதவல்லி மெய்மறந்தே

அப்பா!வென் றேடி அவர்தோளிற் சாய்ந்தாளே!
எப்பாலுந் தேடி யெதிர்பார்க்கும் செல்வத்தைத்

தன்முன்னே கண்டெடுத்த தந்தையும்தான் இன்னமுதம்
அன்னவளேத் தாங்கி யகமகிழ்ச்சி கொண்டாரே!

என்ன வருமோ எதுவருமோ என்றேங்கி
நின்ற மணியனைத்தன் நேரில் அழைத்தந்தக்

காவல் அதிகாரி கண்ணில் சினம்காட்டி
யாவும் மனந்தெளியக் கேட்டறிந்தார்; அப்போதே

கொண்ட சினந்தாழ்ந்து கூடும் கருணையினல்
செண்டுமணம் போலுறவு சேர்ந்தவிரு நெஞ்சுகளின்

அன்பின் திறமறிந்தார்; ஆதரவு தான்காட்டி
இன்பம் வளர்த்துவிட எண்ணமிட்டார் அன்புளத்தால்.

## அதிகாரி சொன்ன அன்புவழி!

தந்தை மலேயப்பர் தம்மை யழைத்தருகே
சொந்தக் கருத்தொன்றைச் சொன்னர் அதிகாரி.
பெற்ற திருமகளின் பேரன்பைக் கொண்டவனைக்
கற்றவனய் நல்ல கருத்துடைய பேர்வழியாய்ச்

சிந்தித்தே எந்தச் செயலும் புரிபவனுய்
சிந்தையிலே உம்பெண்ணைச் சேர்ந்திருக்கும் காதலனுய்த்
தோன்றும் மணியன் துணையானல் உம்பெண்ணும்
ஆன்ற புலவர்களும் அன்புத் தமிழும்போல்
ஊன்றி மணவாழ்வில் ஒற்றுமையாய் வாழ்ந்திடுவார்.
மான்விழியார் அன்பு மனம்வைத்த காதலரைத்
தாம்பிரிய நேரிட்டால் தன்னந் தனியாகித்
தேம்பி யழுதுலகில் தேய்ந்தெலும்புக் கூடாகி
வாழ்வில் நடைபிணமாய் வாடித் திரிவதின்றி
மீளத் திருமணத்தால் மேன்மையுறக் கண்டதில்லை.
உள்ளம் பொருந்தி ஒருவனைத் தாம் கூடிவிட்டால்
வெள்ளம்போற் செல்வம்; விதவிதமாம் இன்பங்கள்
காட்டி யழைத்தாலும் கண்திருப்ப மாட்டார்கள்;
கூட்டுக் கிளிபோலக் கொண்டடைத்துத் தாலியினை
வேருெருவன் கட்டி, விரும்பிஎதிர் நின்ருலும்
மாறுபட்ட வாழ்வை மதித்துவிட மாட்டார்கள்.
கட்டாய மாய்த்தாலி கட்டுமண வாளனிடம்
பட்டாடை கட்டிப் பகட்டிச் சிரித்தாலும்
கற்பில் வழுவாத கன்னியருஞ் சிற்சிலரே
மற்றந்த வாழ்வும் மனமகிழ்ச்சி சேர்ப்பதில்லை.
காதல் உளத்துக் கணவனைத்தாம் கைப்பிடித்த
மாதர்க்குக் கற்பே மதிப்புடைய சொத்தாகும்.
ஆதலினல் வாழ்வில் அவர்போல் களிப்பவர்கள்
மேதினியில் வேறில்லை; மேன்மை பிறிதில்லை,
உள்ளத்தில் பட்ட துரைத்தேன் பெரியவரே
தெள்ளத் தெளிந்தும் கருத்தைத் தெரிவித்தால்
காதலித்த நெஞ்சினரின் கண்ணில் மகிழ்ச்சியெனும்
சோதி பெருகிவரும் சுந்தரமாம் காட்சியினை

## எண்ணங்கள் ஒன்றின;
## இதயங்கள் வாழ்த்தின!

இப்பொழுதே கண்டுவிட எண்ணுகிறேன் சொல்லுமென்ருர்.
தப்பேது மில்லையே தங்கள் கருத்திலே

ஒப்புகின்றேன் ஒப்புகின்றேன் உண்மை நலஞ்சேர்க்கும்
இப்பொன் மொழிக்கோர் எதிர்ப்புண்டோ என்று

மலையப்பர் கூறி மனந்திறந்து விட்டார்;
தலைக்கொன்ருய் மாலை தருகவெனக் காவலர்க்கோர்

ஆணைபிறப் பித்தார் அதிகாரி! மங்கை
நாணித் தலைகுனிய நம்பி மணியனவன்

வாழைமர மின்றி வளர்க்கும் நெருப்பின்றி
மேள முழக்கின்றி வேத மொழியின்றி

நெஞ்சில் நிறைந்திருக்கும் நீங்காத காதலொன்றே
எஞ்சி யிருக்க எழுந்தம் மலர்க்கொடிக்கே

பூமாலை சூட்டிநின்ருன்; புன்முறுவல் காட்டிநின்ருன்!
தேன்மாலை யன்னேன் திருமார்பில் சூட்டிவிட்டுப்

பின்னும் தலைகுனிந்தாள் பெண்ணுள் அமுதவல்லி.
மின்னுமவள் கண்ணில் மிதந்துவரும் இன்பவொளி;

அன்பு மணியன் அரும்புமொரு புன்னகையால்
தன்பால் எழுந்த தனியின்பம் காட்டுனிலே.

கண்டு களித்திருந்தார் காவல் அதிகாரி.
வண்டு விழிமானும் வாடாத தாமரைச்செங்

கண்ணேனும் அன்னுரைக் கண்டு வணங்கிவரப்
பெண்ணேடும் மாப்பிள்ளை யோடும் மலையப்பர்

நன்றி யுரைத்து நடந்தார்; அதிகாரி
நின்றிருந்தார்; வாழ்த்துரைக்கும் நெஞ்சு!

# வாழவைத்தான்

**கண்ணப்பன்,**

**கவின் நிலவைத் தேடி**

தோன்றும் முழுநிலவைத் துள்ளும் களிப்புடனே
ஊன்றிக் கருவிழியால் உற்றுற்று நோக்குதல்போல்

கண்ணப்பன் தன்விழியால் கண்டான்அப் பெண்மயிலை
உண்ணப் படைத்த அமுதென்றே உள்ளத்தில்

எண்ணத் தலைப்பட்டான். என்ன அழகென்றே
வண்ணக் கலைப்படத்தை வைத்தகண் வாங்காமல்

கண்டு மனத்திரையில் கைவண்ணத் தைக்காட்டிக்
கொண்டு வடித்தெழுதும் ஓவியனைப் போலிருந்தான்.

வானில் மிதந்துவரும் வண்ண நிலவைப்போல்
தானும் மிதக்கின்முள் தங்கம் மனக்கடலில்

ஆளை விழுங்கும் அவளின் விழியிரண்டும்
வாளைமீன் என்முநான் வர்ணிப்பேன்! சிந்தாமல்

கோத்துவைத்த முத்துப்போல் கொள்ளைச் சிரிப்புடனே
சேர்த்துவைத்த பல்வரிசை சிந்தையிலே மின்னலிடும்!

ஊட்டமுள்ள அங்கங்கள் ஒவ்வொன்றும் செவ்வண்ணம்
தீட்டிவைத்த நற்சிலைபோல் செம்மாந்து தோற்றமிடும்!

கண்ணில் பதிந்தாள் கருத்தில் பதிந்துவிட்டாள்
எண்ணக் கருவறையில் எங்கும் நிறைந்துவிட்டாள்

என்றேனும் ஒருநாள் இவளுறவு கொள்ளாமல்
சென்ருல்என் வாழ்வு சிறக்கா தெனநினைத்தான்.

அன்றைக்கே அப்பொழுதே அந்நொடியே பாகுமொழி
ஒன்றேனும் கேட்டுவர உள்ளந் துணிந்தான்.

## அழகி முகஞ் சுளித்தாள்

இடுப்புக் குழாய்தன்னை ஏழுமுறை தட்டி
மடிப்புக் கலையாத சட்டை சரிபார்த்துப்

பையில் இருந்த பகட்டுமா தானெடுத்துக்
கைவிரலால் தன்னிரண்டு கன்னத்தும் நெற்றியிலும்

பூசித் துடைத்துவாய்ப் புன்னகையை மேற்கொண்டு
மீசையே யில்லாத மேலுதட்டின் மேற்புறத்தைக்

கையால் தடவிக் கதகதக்கும் நெஞ்சுடனே
பைய நடக்கும் பனிக்குடத்தை யொத்தாளின்

பக்கத்தே போய்நின்ருன்; பல்வரிசை தான்விரியக்
கெக்கெக்கே என்று சிரித்தான்; திரும்பினுள்.

அள்ளி விழுங்குபவன்போல் ஆவலொடு தான்பார்த்தான்
கொள்ளி சுடுவதுபோல் கோபிக்கும் பார்வையுடன்

கன்னி மயில்நடந்தாள்; கண்ணப்பன் தான்தொடர்ந்தான்
பின்னும் குழைவாகப் பேச்சில் நயங்காட்டி

இங்கென்ன தட்டெழுத்தா இல்லை சுருக்கெழுத்தா
தங்கள் படிப்புத் தயவாய் உரைக்கவென்றே

ஆங்கிலத்தில் கேட்டான்; அழகி முகஞ்சுளித்தாள்.
தேங்கும் வெறுப்பெல்லாம் சேர்த்துத் திரட்டிச்

சுருக்கென்று தைக்கச் சுருக்கெழுத்தென் ருேதிக்
கருக்கென்று தான்நடந்தாள் கட்டிக் கரும்பனையாள்!

## ஆங்கிலத்தில் அன்புமொழி

தான்பிறந்த நாட்டுத் தமிழ்மொழியில் பேசாமல்
வான்வழியே வந்து குதித்திங்கு வந்தாற்போல்

ஆண்டு கழிந்த அயல்நாட் டவன்மொழியில்
வேண்டுமென்றே பேசித்தாம் மேன்மையுள்ளார் போல்நடித்துத்

தப்புச் சுதிசேர்த்துத் தாளந் தறிகெட்டுச்
செப்பமில்லாப் பாப்பாடும் சீரற்ற பாடகன்போல்

ஒப்பனையும் பொய்நடிப்பும் உல்லாச மாய்நினைத்துக்
கற்பனையும் தீதாய்க் கழிகின்ற பேர்வழிகள்

தன்மானங் கெட்டுத்தந் தாய்நாட்டு மானமுமே
என்றும் பறிபோம் இழிநிலையைச் சேர்த்துவிட்டார்.

கூசும் படிக்கிங்கே கோதையரைத் தேடிவந்து
பேசும் மொழியும் பிறமொழிகாண் என்றுரைத்துத்

தோழிகளின் பக்கம் துணைதேடித் தான்நடந்தாள்.
கோழையவன் நெஞ்சங் குமுறிப் புறஞ்சென்றான்

இன்றுநீ என்னை இலட்சியந்தான் செய்யவில்லை
என்றோ உனையொருநாள் எய்தா திருப்பேனோ

என்றுதன் நெஞ்சுக்குள் எண்ணமிட்டுக் கண்ணப்பன்
நின்ற இடம்விட்டு நீங்கி நடந்துவிட்டான்.

## சூடேற்றும் தோழர்கள்

நாடாள வந்தோர் நடப்பறிய ஒற்றுடல்
கூடா வழக்கன்று; கோதையரைப் பின்தொடர்ந்து

மாணவர்கள் ஒற்றுடல் மன்னிக்கக் கூடியதோ!
ஆணவத்தால் கண்ணப்பன் அன்றுகண்ட பெண்ணவளை

எவ்வாறும் தன்னிச்சைக் கீடாக்கிக் கொள்வதென
ஒவ்வா நினைப்போ டொருநாள் தொடர்ந்தானே!
வீதிப் பெயரும்அவள் வீட்டின் இலக்கமுமே
ஏகித் தெரிந்துவந் தின்னொருநாள் தன்னொத்த
தோழர் குழாங்கூட்டித் தோன்று நினைப்புரைத்தான்
ஆழப் பதிந்துவிட்ட ஆசை தனையுரைத்தான்!
ஆணழகன் உன்னை அவள்மதிக்க வில்லையெனில்
கோணல் அறிவன்றோ! கொள்கை சரியில்லை!
கட்டாயம் பாடம் நடத்திநீ காட்டிடுவாய்
விட்டாயோ உன்னை வெறுங்கோழை யென்றிடுவோம்
என்றொருவன் சொல்லித்தீ யெண்ணத்தை மூட்டிவிட்டான்
இன்றே அவளைநீ எய்துதற்குத் தக்கவழி
சொல்வேன் அதனைச் சுறுசுறுப்பாய்க் கைக்கொண்டு
வெல்வாய் என ஒருவன் வேறுவழி கூறிநின்றான்.
"இன்னான் இனியன் எனவறிய வேண்டுமெனில்
அன்னான் உடன்பழகும் அன்பர்களைக் கண்டறிக"
இந்தப் புலவர்மொழி என்றென்றும் உண்மையென
அந்தத் திருக்கூட்டம் அப்படியே சான்றாகும்.

## வெறிநாய் போல்

### வீணன்

ஆசைவெறிப் பார்வையுடன் ஆடவர்கள் பார்த்தாலும்
மாசுமரு வற்ற மனங்கொண்ட பூவையர்கள்
பேசிச் சிரிப்பதில்லை; நெஞ்சம் பிடிக்காதேல்
கூசி யொதுங்கிடுவார்; கொஞ்ச இடங்கொடார்
நோக்கம் இலையென்று நோக்கும் விழிமொழியே
யார்க்கும் உரைத்துவிடும்; அத்தை யுணராமல்

பின்தொடர்ந்து பின்தொடர்ந்து பேதையரைத் துன்புறுத்தும்
வன்மனத்துப் பேயர்களால் வாடும் திருநாடே!

கண்ணில் அனல்காட்டிக் கண்டிப்பாய்ச் சென்றவளை
எண்ணித்தான் பின்தொடர்தல் ஏற்ற வழியன்றென்(று)

உன்னுமல் கண்ணப்பன் உன்ம வெறிபிடித்த
செந்நாய்போல் நாளும் தொடர்ந்து திரிந்தான்!

பயிலும் சுருக்கெழுத்துப் பள்ளிமுடிந் தோர்நாள்
மயிலாள் வெளிநடந்தாள்;மாணற்றுன் பின்தொடர்ந்தான்.

## வஞ்சகன் வழிமறித்தான்

சாலை திரும்பியொரு சந்தின் வழிநடந்தால்
கோல வடிவாள் குடியிருக்கும் வீடுவரும்.

அச்சந்தில் பாதி அவள்கடந்து சென்றதன்பின்
உச்சந் தலையாட ஓடிவந்தான் கண்ணப்பன்

நில்லென்று கூறி நிறுத்திஞன்; இப்போது
சொல்லென்று மீறித் துடிப்போடு கையைப்

பிடித்தான்; உருவிஞள்; கன்னத் தறைந்தாள்;
தடுத்தான் வழியைத் தழைக்காட்டுப் பைங்கிளியைக்

கொத்தப் பறக்கும் கொடும்பருந்தைப் போலங்கே
சித்தப் பிரமையுடன் சேயிழையைப் பற்றவந்தான்.

'ஐயையோ! பாவி அறிவில்லை போ?'வென்று
மெய்துடிக்க வாய்துடிக்க மேலும்அவள் ஓலமிட்டாள்.

ஆளில்லாச் சந்தில் அவள்மானத் தையன்றே
பாழாக்கித் தீர்த்துப் பலிகொள்வ தென்றே

வெறிகொண்டு பாய்ந்தான்; விளையாடும் மானைக்
குறிகொண்டு தாக்கும் கொடும்புலியை யொத்திருந்தான்.

பண்பில்லா மாக்கள் பயிலும் ஒருநாட்டில்
பெண்கள் துணையின்றிச் செல்லல் பிழையென்றே

அப்போது தானுணர்ந்தாள்; ஆபத்து வந்தபின்னே
தப்பை நினைத்தறிந்தால் தானுய் விலகுமோ?

இப்போது நானென்ன செய்வேன் எனக்கலங்கி
அப்பேதை தீப்புழுவாய் அங்கே துடித்திருந்தாள்.

ஏக்கத் துடன்பார்த்த என்னை அலட்சியமாய்ப்
பார்க்கத் துணிந்தவளே, பார்இப்போ தென்செயலை!

கொள்ளிக்கண் காட்டிஎனைக் கொன்றுகொன்று வந்தாயே
கள்ளிநீ இப்போதென் கைப்பிடியில் சிக்கிவிட்டாய்

தப்பமுடி யாதென்று தாவியவள் மேற்பாய்ந்தான்
அப்போது கல்லொன் றவன்தலையில் மோதியதே!

என்னவென்று பார்த்தான் எதிரில் உருண்டுவரும்
சின்ன மலைபோலே சீறிவந்தான் ஓர்மனிதன்.

"பெண்ணை வழிமறிக்கும் பேடிப் பயலேஉன்
கண்ணைப் பறிக்கின்றேன்; கையை ஒடிக்கின்றேன்;

எண்ணிப்பார் உன்னெலும்பை!" என்றுமிகக் கொக்கரித்துத்
திண்ணென்று மோதித் திடுமென்று வந்தவனும்

கண்ணப்பன் ஓடோடக் கைவரிசை காட்டிநின்றான்
உண்ணப்போம் மானம் உடன்காக்கத் தான்தொழுத

தெய்வமே அன்னவனைத் தேடி யனுப்பிற்றென்(று)
ஐயமின்றி நெஞ்சில் அதனைத் தொழுதிருந்தாள்.

என்றுங் கலையா எழிற்சித் திரமனையாள்
நன்றியுடன் வாழ்த்தி நடுச்சந்தில் நின்றிருந்தாள்.

பேயை விரட்டிவிட்டுப் பின்திரும்பி வந்தவனைத்
தூய மனத்தாள் தொழுதுநன்றி கூறிநின்றாள்.

கூட வருவேன்நான் கொஞ்சமும்நீ அஞ்சாதே
வீடுவரை வந்துன்னை விட்டுவிட்டுப் போய் வருவேன்

என்றந்த ஆடவனும் ஏந்திழையாள் அச்சத்தைக்
கொன்று நடைபோட்டான்; கோதை மகிழ்ச்சிகொண்டாள்.

## வந்தவன்

### மாமன் மகனே

வீட்டுக் கதவைத் திறந்து வெளிப்போந்த
வாட்டடங் கண்ணுளின் அன்னை மகிழ்ச்சியுடன்

"கோதை,யுன் அத்தானை எங்கிருந்து கூட்டிவந்தாய்?
ஓ" தென்று கேட்டாள் உவகையுடன் அப்பெண்ணும்

"அத்தானு நானறியேன் அம்மாஎன் மானத்தை
இத்தரையில் இந்நாளில் காத்தவரும் என்னத்தான்"

என்று நடந்ததெலாம் இன்பமுடன் கோத்துரைந்தாள்
"நன்றுநன்றென் மாமன் மகளையே நான்காத்தேன்;

மாமாவின் வீடுதனைத் தேடிவரும் போதினிலே
கோமாளி கைப்பட்ட குண்டுமல்லிப் பூமாலை

போலே யகப்பட்ட பூங்கொடியின் மானத்தை
நாலே அடிகளினுல் நான்காத்துக் கொண்டுவரத்

தக்க சமயத்தில் தான்வந்தேன் என்றுசொல்லிப்
பக்க மிருந்துதன் மாமிக்குப் பெற்ருேர்

நலங்கூறிச் செய்கழனி நாற்று நிலையும்
பலப்பலவாஞ் சிற்றூர்ப் பருவநிலை யத்தனையும்

கோத்துரைத்துச் சின்னுட்கள் கூடி விருந்துண்டு
பேர்த்துஞ்சிற் றூர்க்கே பிரிந்து புறப்பட்டான்.

பெற்றெடுத்த செல்விதன் மானம் பெயராமல்
மற்றந்த நாட்டுப் புறமகனும் காப்பாற்றி

ஒப்படைத்துச் சென்றபின்னே உட்கார்ந்து பெற்றவர்கள்
தப்பின்றித் தப்பித்த தம்மகளின் வாழ்க்கைதனைச்

சீராக்க வேண்டுமெனத் திட்டமிட்டார்; வாழ்க்கையெனும்
போராட்ட வையத்தில் பூங்கொடியர் எத்தனைதான்

கற்று மனவுறுதி காட்டிநின்ற போதினிலும்
உற்ற துணையாய் ஒருவன்தோள் சேர்ந்தால்தான்

அச்சமின்றி வாழ்ந்திடலாம் என்னும் அருங்கருத்தை
நிச்சயமாய்க் கண்டு நெடுநாட்கள் சிந்தித்தார்.

## ஆயிரங் காலத்துப் பயிர்

பள்ளி யிறுதி படித்துவிட்டாள்; தட்டெழுத்தும்
மெள்ள முடித்துவிட்டாள் மேலும் சுருக்கெழுத்தில்

தேறிவிட்டால் போதும் திருமணந்தான் செய்திடலாம்
ஊரிலுள்ள மாமன் மகனும் உயர்குணந்தான்

ஆனாலும் கல்வி அதிகமில்லை ஆதலினால்
தேனனை கோதை திருமாலை சூட்டுதற்குத்

தக்கமாப் பிள்ளை தனைத் தேடிச் செய்வதுதான்
ஒக்கும் என்றே உறுதிசெய்து கொண்டார்கள்.

எங்கெங்கோ தேடி யலைந்தார்கள் யாராரோ
அங்கென்றும் இங்கென்றும் ஆடி அலையவிட்டார்.

ஆயிரமாங் காலம் அழியாமல் ஓங்குதற்குத்
தூயதாய் ஊன்றும் குறிக்கோட் பயிரென்றே

ஆய்ந்தாய்ந்து தேடி அழகுங் கலைப்படிப்பும்
வாய்ந்தமாப் பிள்ளையினைத்தேர்ந்துறுதி செய்துகொண்டார்

சாத்திரங் கூறும் பொருத்தம் சரிப்படவும்
கோத்திரத் தோடு குலமும் பொருந்தவும்

ஏற்றமாப் பிள்ளை இவனெனத் தேர்ந்துதம்
கோற்றொடி மங்கையாள் கோதை திருமணத்தைப்

பஞ்சாங்க வேதியர் பார்த்துக் குறித்ததாம்
மஞ்சள் தடவிய பத்திரிக் கையில்

குறித்தபடியே முருகப்பெருமான்
திருவரு ளாலே நிகழும் பரிதாபி

ஆவணித் திங்கள் பதினேராம் நாளெனும்
ஞாயிறு தன்னிலே நல்லுத் திரட்டாதி

நட்சத் திரமொடு சித்தயோ கஞ்சேர்
சுபயோக மிக்க சுபதினந் தன்னில்

மதவேள் வலியும் மதியும் பொருந்தும்
உதயாதி நாழிகை மூன்று முதலாக

மூன்றரைக் குள்ளாக கன்யா இலக்கினத்தில்
ஆன்ற பெரியோர் அருளிய வண்ணம்

திருவளர் செல்வியாம் கோதை தனக்கும்
திருவளர் செல்வனும் மாதவ னுக்கும்

திருமண மென்றோர் அழைப்பு விடுத்தார்
திருமணச் செய்தி திகழும் அழைப்பினை

மாதவன் நண்பனும் கண்ணப்ப னுக்குமிக
ஆதர வோடே அனுப்பினன். கண்ணப்பன்

கோதை திருமணம் கூறும் அழைப்பினை
வேதனை யோடு விரித்துப் படித்தவுடன்

நெஞ்சிற் பொறாமை நெருப்புப் புகைந்ததுகாண்!
வஞ்சிக் கொடியாளின் வாழ்வைக் கெடுப்பதுதான்

எஞ்சி யிருக்கும் இலட்சியமென் றேநினைத்து
மஞ்சம்விட் டோடியொரு மைப்பேனு தானெடுத்துத்

தன்நெஞ்சத் துள்ளே தழைத்ததொரு வஞ்சத்தைப்
புன்னெறியாஞ் சூழ்ச்சிப் பொருளாய் வடித்தெடுத்துத்

தாளில் சிலவரிகள் தானெழுதி மன்றலுறு
நாளில் மணமகனை நாடிக் கொடுத்துவர
ஆளனுப்பி வைத்தான் அணங்கவளைக் கொட்டவொரு
தேளனுப்பி வைத்தான் திருவில்லாப் புன்மகனே!

## கெட்டிமேளம் முழங்கிற்று

மாவிலையும் தோரணமும் மன்றல் மணமென்று
கூவிப் பறைசாற்றும் கொட்டுமே ளத்தொலியும்

ஆடவர்கள் பெண்டிர் அணியணியாய்க் குழுமிவர
வீடகமும் வீதிப் புறமும் விழாச்சிறக்க

சந்தனமும் பன்னீரும் தக்க மணம்வழங்க
வந்த உறவினர்கள் நண்பர் மகிழ்ந்திருக்க
எங்குஞ் சிரிப்பொலியும் இன்பமிகு பேச்சொலியும்
பொங்கும் உளமெல்லாம் போற்றுகின்ற வாழ்த்தொலியும்

முக்கனியோ டப்பளமும் முட்டமுட்டப் பாயசமும்
ஒக்கும் விருந்தும் உபசரிப்பும் அத்தனையும்

காணுகின்ற காட்சி கவின்காட்சி இன்பவழி
பேணுகின்ற காட்சி பெருங்காட்சி நற்காட்சி.

கோதை யெழிற்கோலம் கொள்ளைகொள்ள உள்ளத்திற்
போதைகொள்ள நூறுமுறை பூரித்துப் பார்த்துவிட்டான்.

மாது குனிந்தபடி மாதவனைப் பார்த்துவிட்டே
ஏதுந் தெரியாள்போல் இன்பம் மறைத்துநின்றாள்

அவள்அவனைப் பார்ப்பாள் அவன்அவளைப் பார்ப்பான்
இவள்தன் னுடைமையன்றோ என்றும் அருகிருப்பாள்

ஏனிப் பதட்டமென எண்ணாமல் நூறுமுறை
தானுங் கவனித்துத் தன்னுள் மகிழ்ந்திருப்பான்.

இன்பத்தின் எல்லை இதுவென்று சொல்வதுபோல்
அன்புப் பெரியோர் அடிகெட்டி மேளமென—

பட்டுப் படுபடெனத் தட்டுக் கெடுகெடெனக்
கெட்டுக் கிடகிடெனக் கெட்டிமே ளம்முழங்கும்

அத்தருணத் தேயொருவன் அங்குவந்து மாப்பிள்ளை
கைத்தலத்தில் ஓர்முடங்கல் வைத்துவிட்டுப்
போய்விட்டான்.

கைமுடங்கல் தான்விரித்துக் கண்ணோடே விட்டவனும்
மெய்தளர்ந்து கீழே விழுந்துவிட்டான்; எல்லோரும்

சூழ்ந்தார்; பரிதவித்தார்; தோழன் ஒருவனங்கு
வீழ்ந்த முடங்கல் விரித்துப் படித்துநின்றான்.

**தேள்**

**கொட்டிற்று**

அன்புள்ள தோழா, அருமை உயிர்நண்பா,
என்பும் உயிருமென என்னோ டுறவுடையாள்

தன்னை மனைவியெனத் தானேற்றுக் கொள்ளுகின்ற
இந்நாள் இனியநாள் என்னன்பு வாழ்த்துக்கள்!

அன்புடையாள் என்றன் அகமுடையாள் இன்றெனினும்
துன்படையேன் தோழன் துணையாக வாய்த்ததனால்

ஆசைக் குரியஎன்றன் அன்புமலர்க் கோதையினைப்
பூசைக் குரியவளாய்ப் போற்றுகின்றேன் நெஞ்சகத்தில்

நேசம் உனக்குமவள் நிச்சயமாய்க் காட்டிடுவாள்
வேசையென்று தள்ளி விடாமல்நீ காப்பாற்று

பூத்தமலர் ஒத்தாளைப் பொன்வண்டு போற்சேர்ந்து
காத்திடுக தோழாஉன் கண்ணப்பன் வாழ்த்துகிறேன்.

சுற்றத்தார் எல்லோரும் சூழ்ந்துகொண்டு கொக்கரித்தார்
மற்றந்த மாதவனோ வாய்கசக்கப் பேசலுற்றான்;
வேண்டாம் எனக்கித் திருமணமே வேண்டாம்; நான்
தூண்டிற் புழுவன்று; சொல்லிவிட்டேன் என்றுரைத்தான்

## தெய்வ மகன்

## வந்தான்

உள்ளங் குழம்பி உறுமுகின்ற கூட்டத்தில்
தெள்ளத் தெளிந்தவொரு தெய்வமகன் வந்துநின்றான்.
தூயவளாம் கோதைதனைத் தூற்றிப் பிதற்றுதீர்
நேயத் துடன்நான் நிகழ்ந்தவற்றைக் கூறுகின்றேன்.
கண்ணப்பன் என்னும் கயவன் திருக்கோதை
வண்ணங் குலைக்க முயன்றான்; வழிமறித்துக்
காத்ததோள் என்தோள்; கடையன் புறங்காணத்
தீர்த்ததோள் என்தோள்; திருவனையாள் மானத்தைப்
புல்லன் கறைப்படுத்திப் போக்காமல் காப்பாற்ற
நல்ல தருணத்தில் நான்சென்றேன் என்று
நிகழ்ந்த துரைத்தான்; அந் நீசனுக்குத் தோழன்
அகந்தை யுடையான் அறிவு குறைந்தவனும்
மாதவனோ சற்றும் மதியாமல் ஏளனமாய்ப்
பாதக மில்லை பதியாய்நீ மாறிவிடு;
தூயவளைக் காப்பாற்று தூ! தூ! வெனப்புகன்றான்
வாய்மூடு முன்னம்அங்கே வந்துநின்றாள் கோதைப்பெண்
கண்ணில் கனலும் கருத்தில் ஒளியுமுற
வண்ண முகஞ்சிவக்க வாய்திறந்தாள் மாப்பிள்ளைக்
கோலத்து மாதவனைக் கூர்ந்து புறநோக்கி
ஆலத்தை யொத்தவிழிப் பார்வையால் வாசல்

அடையாளம் காட்டி, "அதுதான் வழிபோ!
தடையில்லை" என்றுரைத்தாள்; தன்அத்தான் காலடியில்

வீழ்ந்து பணிந்து விழியிரண்டும் நீர்சொரியத்
தாழ்ந்து வணங்கித் தலைநிமிர்ந்து நின்றெழுந்தாள்.

பொற்குணத்தான்கையிரண்டால் பூமாலையொன்றெடுத்துச்
சிற்பச் சிலையனையாள் சிவந்த திருக்கழுத்தில்

சூட்டிச் சிரித்தான்; துவளும் கொடியனையாள்
மீட்டும் ஒருமாலை வாங்கி மெய்யுடையான்

ஏற்றத் திருக்கழுத்தில் இட்டாள்; சிரித்தாள்; நற்
காற்றுத் திருப்புகின்ற நாணல்போல் சூழ்ந்திருந்தார்

சேர்ந்து புகழ்ந்துரைக்கச் சீர்பரவி மேளங்கள்
ஆர்ந்து கலகலக்க அவ்வின்பச் செய்தியிந்த

நாட்டிலெங்கும் பாய்ந்தோடி நல்லுணர்வு தான்பரப்பிப்
பாட்டிலுந்தன் சீர்மணத்தல் பார்!

# இனிய பாதி

## காத்திருந்த

## கன்னி மயில்

பேருந்து நிற்குமிடம் பெண்ணொருத்தி நிற்கின்றாள்
வாருந் தமிழமுதின் வண்ணத்தை யொத்திருந்தாள்

பாதை நடப்போரின் பார்வைக் கவளங்கே
போதை விருந்தளிப்பாள் போலிருந்தாள்; ஏனெனிலோ

கண்ணைக் கவர்கின்ற கட்டழகும் பொட்டழகும்
மண்ணில் உதித்த மதிபோல் முகத்தழகும்

தேடாமல் பெற்ற திருவழகும் தேர்ந்தெடுத்த
ஆடை யழகும் அரும்பு நகையழகும்

கண்டவர்கள் கண்ணைப் பெயர்க்காமல் கள்ளமுதம்
உண்டவர்கள் போலாம் ஒருதன்மை உண்டாக்கும்

பேரழகைப் பெற்றிருந்தாள் பெண்ணழகின் தத்துவங்கள்
சேர உருவான செய்ய திருவனையாள்!

யாராரோ அங்காந் தவழழகைப் பார்த்திருக்கச்
சீராளோ பேருந் தெதிர்நோக்கிக் காத்திருந்தாள்

பச்சைப் பயிர்மழையைப் பார்த்துத் தவமிருக்க
அச்சப் புயல்வந்தே ஆகா தடித்தாற்போல்

எண்ணித் தவமிருக்கும் எண்ணற்ற வண்டிகளே
கண்ணில் உருக்காட்டிக் காற்றாய்ப் பறந்தோடும்

உன்னுகின்ற எண்ணுள்ள உந்துகளே வந்தாலும்
தன்னை மதிப்பவரைத் தான்மதியாச் சிற்றினம்போல்
நில்லாமல் ஓடி நெடுந்தூரம் போய்ச்சிலரைத்
தள்ளாமல் தள்ளிச் சடக்கென்று தான்பறக்கும்!
ஓடிப் பறப்பதிலும் ஓட்டுப் பிடிப்பதிலும்
கூடி யிருப்பவரில் கொஞ்சம்பேர் வென்றிடுவார்.
பாழாம் வறுமை பலிகொள்ளக் கண்பிதுங்கி
வாழாத கூட்டத்தின் வாட்டங் கருதாமல்
வேலை கிடைத்தவர்கள் வீட்டுப் படியென்றும்
கூலி யுயர்வென்றும் கூட விடுப்பென்றும்
போக்கு வரத்தென்றும் போதாப் படிகேட்டும்
நாக்கு வளைத்து நடந்து முழக்கமிட்டுப்
போராடிப் போராடிப் பொற்கோ புரங்காண
வேரோ டழிந்துவரும் வேறோர் இனந்தன்னைச்
சற்றுங் கருதாமற் சாதனைகள் செய்வதுபோல்
முற்றும் வலுவோடு முன்னேறிப் பேருந்தைப்
பற்றிப் பிடித்தேறிப் பாங்காக வென்றவர்கள்
சற்றேனும் பின்னால் சபிப்பாரை எண்ணாமல்
தம்வேலை நோக்கித் தமது நலமொன்றே
இம்மா நிலத்தினிலே எண்ணிச் செயல்படுவார்.

## ஏறி விழுந்த இளைஞன்

அந்த அழகுடையாள் ஆவல் வெறுப்பாகி
நொந்து மனம்புழுங்கும் நோய்பெற்ற வேளையிலே
வந்தங்கு நின்றதொரு வண்டி தனிலேறிச்
சிந்தை நிறைவுதனைச் சேருங்கால் ஆவலுடன்

ஓடிவந்தோர் ஆடவனும் ஒற்றை யடிவைத்துக்
கூடி மகளிரெல்லாம் கொல்லென்று தாம்சிரிக்க

வண்டிக்குள் வீழ்ந்தெழுந்தான்; வண்டி நடத்துபவன்
கண்டு நிறுத்திக் கலகலெனத் தானகைத்துச்

சேலைகட்டிக் கொண்டுவந்தால் சீட்டுக் கொடுத்திடுவேன்
கோலக் குழாய்ப்பெண்ணே கொஞ்சம் இறங்கென்றான்

மீசை முகங்கிறங்க மேவும் அசட்டைப்போல்
ஆசையுடன் பாய்ந்த அழகன் இறங்கிவிட்டான்.

பாவம்! எனச்சொல்லிப் பரிதாப மாய்நோக்கி
ஆவல் அழிந்தே அவனிறங்கும் காட்சிகண்டு

சிந்தைத் துயரோடு நோக்கும் சேயிழையை
அந்த இளைஞன் அகல விழித்தபடி

பார்த்து 'மகளிர் வண்டி' பாராமல் ஏறியதால்
வேர்த்து விறுவிறுத்து வேறுவண்டி தேடிநின்றான்.

மறுநாளும் அங்கே மணிக்கொடியாள் வந்தாள்
குறுகுறுக்கும் கண்கள் குடைந்து குடைந்தவளைத்

தாக்குகின்ற காட்சி தனையவளும் பாராமல்
நோக்குகின்றாள் பேருந் தெதிர்நோக்கிக் காத்திருந்தாள்;

வந்துவந்து செல்லுகின்ற வண்ணப்பே ருந்துகளில்
சிந்தை செலுத்தித் திசைபார்த்துக் காத்திருக்கும்

அந்தப்பெண் ஏதோ அருகில் குரல்கேட்டு
விந்தை விழிகாட்டி விரைந்து முகந்திருப்பி

நோக்க முதல்நாள் நுழைந்து மகளிரெலாம்
ஆர்த்துச் சிரிக்க அசடாகி நின்றவனே

தன்னருகில் நின்று தயக்கத்தை விட்டொழித்தே
நன்றி எனக்கூறும் நயமிக்க சொற்கேட்டாள்

"நேற்றெனக் காதரவாய் நீயொருத்தி யில்லையெனில்
தோற்று மனங்குலைந்து சோர்ந்திருப்பேன்" என்றுசொல்லிப்

பேச்சுக் கொடுத்தான், பிழையின்றி அன்னவளும்
கூச்சந் தவிர்த்துக் குழைவாகப் பேசிநின்றாள்.

## வாடிக்கைப் பேச்சு

நாடோறும் பேருந்து நிற்குமிடம் நாடிவந்து
வாடிக்கை யாகஉரை யாடல் நடத்திவந்தான்.
பார்வை தொடக்கிவைத்த பாசம் உரையாடல்
நீரால் வளர்ந்து நெடும்பயிராய் முற்றி
உளங்கலக்கும் காதல் உருவெடுத்து நாளும்
வளம்பெற் றுயர்ந்து வளர்ந்து செழித்ததுவாம்!
பேருந்து நிற்குமிடம் தோன்றிப் பிறந்துபச்சை
நீருந்து வங்கக் கடற்கரையில் நீடித்துப்
பூஞ்சோலைப் பாங்கில் பொலிந்து திரைப்படத்தில்
வாஞ்சை வளர்த்துவந்த தவ்வன்பே.
நாளைக்கு மாமல்லை நாம்போவோம் என்றந்தக்
காளை உரைத்தபடி கன்னி மயில்நடந்தாள்
பேருந்துச் சந்திப்பில் பேசற் கினியானை
நேரில் உடன்சேரும் நெஞ்சக் கருத்தோடு
போய்க்கொண் டிருக்கும் பொழுதில் உடன்பயிலும்
தூய மனங்கலந்த தோழி ஒருத்திவந்தாள்.
என்ன அவசரமோ எங்கேநீ போகின்றாய்
இன்னும் பொழுதுண் டிதற்கிடையில் என்வீட்டில்
தேநீர் அருந்திப்பின் சென்றிடலாம் அன்புடையாய்
வாநீ எனவழைத்த வாஞ்சையினை மீறாது
அவள்இல்லம் சென்றங்கே அன்பாகப் பேசித்
துவளும் இடையுடையாள் சொல்லாடிக் கொண்டிருந்தாள்.

வீட்டுக் சுவரில் விருந்தளிக்கும் காட்சியென
நீட்டிக்கொண் டுள்ள நிழற்படங்கள் கண்டவளும்
வேட்கை யுடன்எழுந்து பார்த்தாள்! வியப்புற்றாள்;
ஆட்கொண்ட காதலனும் அங்குப் படவுருவாய்
வீற்றிருக்கக் கண்டாள்; விழித்தாள் திகைப்புற்றாள்.
ஆற்றல் தனைக்கூட்டி அன்புரிமைத் தோழிதனை
யாரோ இவரென் றறியாளாய்க் கேட்கத்தே
நீரோடு வந்தாள் நிழற்படத்தைப் பார்த்துவிட்டு
அக்காள் கணவர் அரசு செயலகத்தில்
தக்க பணியாற்றுந் தலைமைக் கணக்கரென்றாள்.

## காதலித்தான் குடும்பம்

தொட்டிலிலே அப்போது தூக்கங் கலைந்தெழுந்த
பட்டுடற் செல்வத்தைப் பாங்காகத் தூக்கிவந்தே
அக்காள் குழந்தை; அவரைப்போல் உள்ளதன்றோ
பொக்கைச் சிரிப்பைப்பார்! பொல்லாக் குறும்பனடி!
இந்தப் பயலுக்கோ என்னை மிகப்பிடிக்கும்
சொந்தம் இவனுக்கு நான்தான் அதிகமென்றாள்.
பூவில் உறைதிருவைப் போலிருந்த பெண்ணொருத்தி
கோவில் பழந்தேங்காய்க் கூடை யுடன்வந்தாள்
அக்காளும் வந்துவிட்டாள் ஆஆ எனக்குதித்தே
அக்கா இவளென் அருமைமிகு தோழியென்றாள்
என்ன கவலையம்மா? ஏனிப் படியுள்ளாய்?
உன்னை வருத்துவதென் னேவென்று கேட்டக்காள்
அன்போ டருகி அவள்தலையைக் கோதிவிடச்
சின்ன மயிலனையாள் சிந்தை குழம்பியதால்

கண்கள் இருளக் கனக்கும் தலையுடனே
வண்ணக் கொடிமரத்தை வன்செயலார் வெட்டிவிடப்
பட்டென்று சாய்ந்ததுபோல் பாயில் படுத்துவிட்டாள்.
குட்டொன்றும் தோன்றாத கோதையரும் ஓடிப்போய்ப்
பச்சைத்தண் ணீர்மொண்டு பாவை முகத்தடித்தார்
உச்சந் தலையருகே உட்கார்ந்து காத்திருந்தார்.
என்ன உடலுக்கோ ஏது பிணியோஇக்
கன்னிக் கெனவே கவலை மிகக்கொண்டார்
சின்னேரஞ் செல்லச் சிரித்தெழுந்தாள் சேயிழையாள்
என்னஎன்ன வென்றவர்கள் ஏங்கி வினவியதற்(கு)
ஒன்றுமில்லை யென்றே உரைத்தாள்; நகைத்தெழுந்தாள்
தன்னுளத்தே ஒருறுதி தான்செய்து கொண்டவளாய்.
ஞாலத்தில் என்ன நடக்குதென்று பாராமல்
காலத்தேர் ஓடும் கணக்காக ஒன்றன்பின்
ஒன்றாக வண்டிகளும் ஓடிவரும் நின்றிருக்கும்
சென்றுவிடும் அவ்விடத்தே சேயிழையை எண்ணித்
தவமிருந்தான் அம்மணிதன் தாவி வருவாள்,
நவமணியாள் என்றங்கே நம்பிக்கை யோடிருந்தான்.

## திட்டம்

## தவிடானது

எண்ணுவார் எண்ணம்போல் எல்லாம் நடந்துவிட்டால்
வண்ணத் தரையதுதான் வஞ்சக் களமாகிப்
பூகம்பம் வந்து பொடிப்பொடியாய் வீழாதோ
ஆகிவரும் வெள்ளத் தமிழ்ந்து மறையாதோ
சூழும் நெருப்பால் துகளாகிப் போகாதோ
பாழும் பகைமலிந்து பண்பு மிகக்குறைந்து

வீழ்ச்சி யடையாதோ வீணர் புரிகின்ற
சூழ்ச்சி பலித்தால் துயரம் மலியாதோ?
நல்ல செயல்புரிவார் நாடாளக் கேடுசெயும்
புல்லர் நினைப்பெல்லாம் போட்டதிட் டம்போலே
வெற்றி பெறுமென்றால் நீதி விழிபிதுங்கிப்
பற்றி யெரியாதோ; பாரில் அறச்செயல்கள்
முற்றும் அழியாதோ; மூடர் வெறுந்தலைபோல்
வெற்றுச் சுடுகாடே விஞ்சிக் கிடக்காதோ?
கள்ளம் கவடற்ற கன்னி மயிலாளை
உள்ளங் கவர்ந்தந்த உன்ம வெறிபிடித்தான்
மானங் கெடுப்பதற்கு மாதக் கணக்காகத்
தானிட்ட திட்டம் தடைபட்டுப் போனதனால்
நெஞ்சு குலைந்து நினைப்பு வெறுப்பாகி
வஞ்சமுடை யானாய் வழிதிரும்பும் போதினிலே
வண்ணஉந்து வண்டியொன்று வந்துநிற்கக் கண்டிருந்தான்
எண்ணித் தவமிருந்த இன்பவல்லி தானிறங்க
ஆவல் அடியெடுத்தே அத்திசையில் சென்றவனும்
பூவிழியைத் தாக்கியொளி போக்கியதோர் மின்னலென
உள்ளஞ் சிதைக்கும் ஒருநிகழ்ச்சி கண்டானே!
கன்னி யிவளுக்குக் காதலரும் ஆயிரமோ
என்னை வரச்சொன்னாள் ஏங்கி யிருக்கின்றேன்
இன்னொருவ னோடிங் கிறங்கி நடக்கின்றாள்.
என்ன துணிச்சல்! இளம்பெண்கள் இப்படியே
தன்னிச்சை யாய்நடந்தால் தாங்குமோ இவ்வுலகம்?
ஆடவர்போல் பெண்டிர்க்கும் ஆளுரிமை வேண்டுமெனப்
பாடுங் கவிஞர்களும் பாராள வந்தவரும்
வேண்டும் உரிமை வழங்கி விடுவதனால்
தூண்டும் இழிநெறியாம் துன்பம் உணராமல்

பாடுகின்ருர் பேசுகின்ருர் பாரைக் கெடுக்கின்ருர்
கேடு வளர்க்குமிந்தக் கேடிகளின் போக்கைத்

தடுக்காமல் விட்டுவிட்டால் தருமம் குலையும்
ஒடுக்காமல் விட்டுவிட்டால் உண்மை தலைகுனியும்

இப்போதே நான்தொடர்வேன்; ஏசிப் பழித்திடுவேன்
தப்பாது அவள்நெஞ்சில் தைக்கும் மொழிகளினுல்

குத்தித் துளைத்துவெட்கங் கொண்டோடச் செய்திடுவேன்
மத்துக் கடைவின்றேல் வெண்ணெயில்லை; மற்றிங்குக்

கண்டிப்பார் இன்ருகில் கற்புநெறி யின்ருகும்
தண்டிப்பார் இன்றேல் தழைத்துவிடும் குற்றமெலாம்!

வண்ண முகத்தாளும் வந்தபுத் தாடவனும்
உண்ணுங் கடையொன்றில் உள்நுழையக் கண்டு

தொடர்ந்துசென்ருன் காத்திருந்தோன் தோகை எதிரில்
இடந்தேடிப் போயமர்ந்தான், எண்ணக் குமுறலையே

சொல்லின் வெடியாக்கித் துப்பாக்கி வேட்டைப்போல்
கொல்லும் மொழியால் கொதித்துப் புலம்பிநின்ருன்.

## குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

பெண்ணென்ற தோற்றத்துப் பேயுருவே உன்னை நான்
எண்ணத்தில் தெய்வமாய் ஏற்றுப் பெருமையுடன்
போற்றி யிருந்ததெலாம் பொய்யாக்கி விட்டாயே
தூற்று மொழியேற்கத் துணிவேற்று விட்டாயே,
செந்தமிழர் நாட்டுதித்த சேயிழைக்கு மானந்தான்
சொந்தச்சொத் தாகுமெனச் சொன்ன பெரியோரின்
பொன்மொழியைக் குப்பையிலே போட்டொதுக்கி விட்டாயே

சின்னத் தனத்தின் சின்னம்நீ தானென்று

காட்டிவிட் டாயே கடல்போன்ற நம்பிக்கை
ஓட்டிவிட் டாயே உயிருக் குயிராக
நேசித்தாய் என்றிருந்த நெஞ்சைக் கரியாலே
பூசி யழித்துப் புதுவாழ்வைத் தேடிவிட்டாய்

காதல் நிலையென்று கம்பன் முதலானோர்
ஓதிமுடித்ததெல்லாம் ஊதிப் பறக்கவிட்டு
நேரத்துக் கொன்றாய் நினைப்புத் தடுமாறி
வாரத்துக் கொன்றாய் வருவாரைச் சந்தித்துக்

காதல் நடத்துகின்றாய் காதல் இதுவாமோ
மாதென்றே யுன்னை மதித்து வருவோர்க்குப்
பித்தம் பிடித்தறிவு பேதலிக்கச் செய்கின்றாய்
மொத்தத்தில் நீயோர் முழுமோசக் காரியென்றான்

ஆத்திரத்தால் கொப்புளித்தான் அத்தனையுங் கேட்டந்தப்
பூத்த முகமுடையாள் புன்சிரிப்புக் கொண்டவளாய்
'அண்ணா' எனவிளித்தாள்; அண்ணன் இடிந்துவிட்டான்
கண்ணா வெனக்கூறிக் காதல் மொழிபேசி

அத்தான்என் அத்தானென் றுயிரங்காற் கூறியவள்
பொத்தானை மாற்றுவது போலிங்கே அண்ணன்
உறவுக்கு வந்தாளென் றுள்ளம் புழுங்கிச்
சிறகு படபடக்கச் சிட்டுத் துடிப்பதுபோல்

நெஞ்சு துடித்தான்அந் நேரிழையாள் பேசுகின்றாள்
கொஞ்சம் பொறுமையுடன் கூறுவதைக் கேளுங்கள்.

## பெண்ணுரிமை பேசவந்த

## பெருந்தேவி

பேதைமட மாது பிறிதோர் ஆடவனைக்
காதலிப்ப துங்கள் கருத்தில் இழிசெயலாய்த்

தோற்ற மளிக்கின்ற தென்றால் துணையாக
ஏற்ற கணவன் இதுபோல மற்றொருத்தி
தோள் நாடிச் செல்வதனைத் தூய மனையறத்தாள்
கேள்வியுற்றால் என்னுவாள் சற்றே கிளத்துங்கள்

கள்ளக் கணக்கெழுதிக் கையூட்டுத் தான்கொடுத்து
வெள்ளம்போல் செல்வம் பெருக்கி விளையாடும்
செல்வக் கொழுப்புடையான் சிந்தையிலே தன்செயலே
வெல்லும் எனக்கொண்டு வீதியிலே வந்துநின்று

ஊரில் இருக்கும் உயர்ந்த மனிதரெலாம்
நேர்மையிலார் என்று நெடுகப் பிதற்றுதல்போல்,
கொண்ட மனைவி குழந்தை குடும்பமென
உண்டு மகிழ்ந்திங் குயர்வாழ்வு வாழாமல்

கண்டகண்ட பெண்களெல்லாம் காதலிய ராய்க்கொண்டு
வண்டு மலர்க்குமலர் தாவுதல்போல் வாழ்க்கையினைத்
தாங்கள் நடத்துவதும் தையலரைத் தூற்றுவதும்
ஈங்கித் தமிழகத்தில் எத்தனைநாள் செல்லும்?

அடங்கி ஒடுங்கி அடுப்படியில் உள்ளம்
முடங்கிக் கிடப்பாளை மூடம் எனநினைத்து
வீதியிலே போவாளை வேண்டிக் கடற்கரையில்
காதலிக்கக் கூட்டிவந்த காதகர்கள் அப்பெண்கள்

கற்புக் குரிமையுள்ளார் தாமென்று காத்திருந்தால்
அற்பத் தனமன்றோ? யாரோ அவளுடனே
சென்றால் திகைப்பதுவும் சேயிழையாள் குற்றத்தை
நின்றே தடுப்பதுபோல் நீட்டி முழக்குவதும்

முன்னேற்ற மாமோ? முதலில் திருந்துவது
தன்கடமை என்று தனிமனிதன் எண்ணமிட்டால்
இந்தச் சமுதாயம் எப்போதோ முன்னேற்றச்
சிந்து படித்திருக்கும், சிந்தை தெளிவின்றி

மாற்றூர்மேற் குற்றஞ் சுமத்தும் வழக்கத்தைப்
போற்ரு திருந்தால் புவியே திருந்திவிடும்.
உங்கள் மனைவி உயிர்போல் நினைத்திருக்க
இங்கென்னை நீங்கள் எதிர்பார்த்தல் குற்றமன்றே?
என்றும்உங்கள் வாழ்வில் இனியஒரு பாதியென
நின்று நலம்பகிர்ந்து நீண்ட துணையாக
வாழும் ஒருத்திக்கு வஞ்சம் இழைத்துவிட்டு
வாழத் துடிக்கின்ற என்னை வரவழைத்தென்
கற்பைக் கெடுப்பதற்குக் கன்னெஞ்சம் கொண்டீரே
அற்பப் புழுப்போல ஆடவர்கள் பெண்ணினத்தை
எண்ணும் நிலைபோனுல் எல்லார்க்கும் நல்வாழ்வு
நண்ணும் எனச்சொன்னுள்; நாணம் சிறிதுமிலான்
காய்ந்துவரும் புண்ணின்தோல் கையால் உரித்தெடுக்கும்
ஆய்ந்துணராப் பையன்போல் ஆருத புண்ணுக்கி
இன்று புதிதாய் இவனைநீ காதலித்தாய்;
என்னைப் புறந்தள்ள ஏதேதோ சொல்லுகின்ருய்
என்று சினங்கூட்டி அந்த இளைஞன்மேல்
சென்றுமலைந் தான்அணிந்த சேட்டுத் தலைப்பாகை
போயோர் புறம்வீழப் பொற்கொடிபோல் கூந்தலுடன்
மாய இளைஞனொரு மங்கையாய் மாற்றமுறச்
சோதித் திருவனையாள் தூய உயர்இனிய
பாதி எனவாழ்வில் பங்குகொண்ட தன்மனைவி
காதலிக்குக் காதலனுய்க் காட்சிதந்த நாடகத்தை
ஓதா துணர்ந்தவனுய் உள்ளத்தில் கூச்சமுற்றுப்
பேதை விழிப்பதுபோல் பேந்த விழிவிழித்து
வேதனையோ டேகும் விரைந்து.

# பண்பின் பரிசு

**காசியிலே,**

**கங்கைக் கரைதனிலே!**

பொங்கி நுரைததும்பிப் புன்னகைசேர் மங்கையைப்போல்
கங்கையெனும் தெய்வமகள் காசி நகர்கடந்து

செல்லும் வழிதனிலே சிற்றூர்க் கரைதனிலே
கொல்லென் சிரிப்பும் குதூகலமாம் பேச்சொலியும்

காதைத் துளைத்துக் கவிவெள்ளம் பாய்ச்சியவாம்
போதை தலைக்கேற்றிப் புத்துணர்வை யூட்டியவாம்

ஆமாம் பதின்மர் அழகு மயிலினங்கள்
பூமாது பெற்றெடுத்த புத்தழகு மொத்தமுமே

சேர வெழுந்த திருவனையார்; செவ்வாயின்
ஈரம் அழுந்தும் எழிலுதடு தாமசையும்

போதெல்லாம் இன்னிசையும் பொற்சலங்கை தன்னிசையும்
காதில் விழுந்து களிப்பில் இசைத்திடுமாம்!

தங்க உடல்நிறமும் தாமரைப்பூச் செம்முகமும்
அங்கொருகால் கண்டார் அவாக்கொண்டு பேதலிப்பார்!

மின்னும் இடையழகும் மேவும் நடையழகும்
கன்ன மலரழகும் கண்டார் விழிதிருப்பார்!

செம்பவழ வாயுதடும் சேயின் விழியழகும்
கொம்பணையும் பூங்கொடிபோல் கொண்ட உடலழகும்

கண்டால் கவிபிறக்கும் கள்ளின் வெறியூட்டும்
வண்டுவிழி மங்கையர்கள் யாரென்ருல் புண்ணியஞ்சேர்
காசித் திருநகரின் கண்வதிந்த மக்களிலே
பூசித் திடவாழ்ந்த பூசுரராம் மேற்குலத்தார்
தம்மினத்துப் பெண்மக்கள்; தங்க நிறமுடையார்
விம்மித் திரியும் பருவத்தார்; வாழ்க்கையெனும்
வையத் தடியெடுத்து வைக்காத வண்ணங்கள்;
கொய்யாக் கனிகள்; குறும்பு விளையாட்டார்
எதுதுன்பம் தொல்லை எதுகவலை தீமை
எதுவென் றறியா இயல்புடைய பெண்குலத்தார்;
தோன்றியநாள் தொட்டுத் துவளாமல் முன்னெடுத்தே
ஊன்றியதாள் பின்வாங்கா தோடியவா றுள்ளநதி
கங்கையிலே நீராடிக் காற்றில் அனலேந்தி
எங்கெங்கும் வெப்பத்தை ஏற்றும் கதிரவனின்
பொல்லாக் கொடுமைதனைப் போக்கிக் குளிர்நலத்தை
எல்லா வகையும் இனிதே அனுபவித்தார்.

## கன்னிப் பெண்களின்

## குறும்பு விளையாட்டு

பின்னுக் கிழுத்தொருத்தி சாய்த்திடுவாள்; பேதலித்தே
என்ன நடந்ததெனும் எண்ணமின்றிப் பேந்த
விழித்து முழுகியவள், மீண்டும் அவளைப்
பழித்தெழுவாள்; நீருக்குள் பாய்ந்து கயல்போலே
அங்கொருத்தி காலைக் கடிப்பாள்; அணங்கொருத்தி
பொங்கிப் புரண்டுவரும் நீரில் புறமுதுகு
தோய மிதந்திடுவாள்; தோகை யொருத்திதிரு
வாயால் மறையோதி வைதிகரைப் போல்நடிப்பாள்;

செய்த குறும்புச் செயல்கள் கணக்கெடுத்தால்
பெய்த மழையிற் பெரிதாகும்; இவ்வாறு
ஆறு கலகலக்க ஆயிழையார் நீராடிச்
சேறு கலக்கிச் சிரித்திருக்கும் போதினிலே

## சுழிநீரில் அகப்பட்டுக் கொண்டாள் ஒரு தோகை

ஐயோ எனுங்குரல்தான் அத்தனைபேர் வாய்களிலும்
உய்யென் றெழுந்ததுகாண் உற்றங்கு நோக்குங்கால்
ஓடுஞ் சுழிநீரின் ஊடே அகப்பட்டு
வாடு முகத்தோடு மீளும் வகையின்றிப்
பெண்ணொருத்தி தத்தளித்துப் பேச்சுமூச் சொன்றின்றித்
தண்ணீ ருடன்போனாள்; தையலர்கள் நெஞ்சொடிந்தே
தோழி நிலைக்குத் துடிதுடித்துக் கூச்சலிட்டு
வாழி யிறையேநீ காப்பாற்று வாயென்றே
கூவித் தொழுதிருந்தார் கூந்தல் அவிழ்ந்தோட,
ஆவி நிலைகுலைய, ஆடை குலைந்தாடப்
பொங்கிப் புரண்டோடும் பொல்லா வினைகாரி
கங்கை யுடனுருண்டு கண்விலகிப் போகின்ற
காட்சியினைக் கண்டு கதிகலங்கி நின்றிருந்தார்;
வாட்சிறுகண் ணுளுடலை வாரிக்கொண் டோடுகின்ற
ஆற்றை அவர்கள் அவநம்பிக்கை யோடங்கே
கூற்றின் உருவாகக் கொண்டு புலம்புகையில்
ஓடுநீர்ப் பாங்கில் ஒருகாட்சி கண்டார்கள்
தேடி யழைப்பாரின் தேவைக்குப் பாய்ந்துவரும்
இன்னமுத னென்றே இறையைப் பெரியோர்கள்
சொன்னசொல் உண்மையெனத் தோகையர்க்குத்
தோன்றிடவே

## உயிருக்குத் துணிந்து காத்தான் ஒருவன்

*கீழ்க்கரையில் யாரோ கிளர்ந்தோடும் ஆற்றினிலே*
*வாழ்க்கை யருமை கருதாமல் பாய்ந்ததையும்,*

*சுற்றுஞ் சுழிப்பட்ட தோகை தனைத்தொடர்ந்து*
*பற்றிக் கரைநோக்கிப் பாவை தனையிழுத்து*

*நீரை எதிர்த்தங்கே நீந்தி வருவதையும்*
*சேரக்கண் டார்கள்; சிரித்து மகிழ்ந்தார்கள்;*

*ஈரத்தை மாற்றுதற்கும் எண்ணுதப் பூங்கொடிகள்*
*ஓரக் கரைநெடுக ஓடி உவப்போடு*

*தங்கள் அருந்தோழி தன்னைக் கரையேற்றும்*
*அங்கத் துறைநோக்கி ஆவ லுடன்சென்ருர்.*

*பொன்னின் தளிரைப் புதுமனிதன் தன்தோளில்*
*சின்னமான் கன்றுபோல் சேர்த்தணைத்துத் தூக்கிவந்தான்;*

*தோளில் அணைந்து துவண்டிருந்த பூங்கொடியைக்*
*கீழே தரையில் கிடத்திஞன்; அக்கணத்தே*

*ஓடிவந்த தோழியரும் உற்றவ் விடஞ்சேர்ந்தார்*
*கூடிவந்த அன்னவர்பால் கோதையினை ஒப்படைத்து*

*நீருண்ட தாலே நிலவு மயக்கமிது;*
*நேரஞ் சிறிதில் நினைவு திரும்பிவிடும்;*
*உங்கள் கவலை ஒழிகவெனக் கூறிவிட்டுத்*
*தங்க மனங்கொண்டான் தன்வழியே யேகிடவும்*

*கோமதியைக் காப்பாற்றிக் கொண்டுவந்த அம்மனிதன்*
*மாமனிதன் என்ருெருத்தி மற்றவனைத் தான்புகழ்ந்தாள்.*

*ஆமாம் புலையன் அவன்தொட்ட தாலிங்கே*
*கோமதிதீட் டாகிவிட்டாள் என்ருெருத்தி கூறிநின்ருள்.*

## மூடப்பெண்கள் ஓடிவிட்டார்கள்

தீட்டான கோமதியைத் தீண்டுவது பாவமென்று
நீட்டிஞள் அங்கொருத்தி; நேயமுள்ள தோழியரோ

மூடத் தனத்தின் முழுமுண்டச் சண்டிகளாய்
ஓடத் தலைப்பட்டார் ஊர்ப்புறத்தை நோக்கியே

சற்றும் நினைவின்றிச் சாய்ந்து கிடக்கின்ற
ஒற்றைக் கொடியாளுக் கொன்றும் உதவியின்றிக்

கூடப் பழகியவக் கோதையர்கள் சட்டென்றே
ஓடத் தலைப்பட்ட ஓசைகேட் டம்மனிதன்

மீளத் திரும்பிவந்து மின்ஞள் மயக்கநிலை
போகப் பணிபுரிந்தான்; பொன்னுடலிற் சூடேறப்

பூவின் விழிதிறந்து பூவுலகைப் பார்த்தமகள்
சாவின் பிடிமீண்டு தண்ணீர்ச் சுழியில்

நிகழ்ந்த துரைத்தவனும் நீங்கிஞன்; பெண்கள்
இகழ்ந்தபடி சென்ற இழிநிலையைச் சிந்தித்தாள்

தன்குலத்தார் என்னென்ன தண்டம் புரிவாரோ
என்னே தலைவிதியென் றெண்ணிப் புலம்பிநின்ருள்.

## ஆற்றில் விழ முடிவு செய்தாள் அணங்கு

போக அடிவைப்பாள்; போஞல்என் ஞமென்று
நோகத் திரும்பி நுடமாவாள்; போர்க்களத்தில்

சென்ருல் உயிர்க்கச்சம் செல்லா விடில்தலைவர்
கொன்ருலும் அச்சமெனக் கோழை நடுங்குதல்போல்,

வந்த புலிக்கஞ்சி ஓடும் வழிப்போக்கன்
சிந்தை கலங்கமலைப் பாம்பெதிரே சேருதல்போல்,

ஆற்றுக்குத் தப்பிப் பிழைத்தெழுந்தாள் சாதியெனும்
மாற்றானுக் கஞ்சி மனங்கலங்கித் தத்தளித்தாள்.

சேரிப் புலையனெனைத் தீண்டிவிட்ட காரணத்தால்
ஊரில் ஒதுக்கிவைப்பார் ஒட்டவிட மாட்டார்கள்;

அன்னை துடித்தழுவாள்; ஆனால் விதியென்றே
என்னை விரட்ட இசைந்திடுவாள்; தீப்புலையன்

தொட்ட இழுக்கென்று சொல்லியெனை ஆடவர்கள்
கெட்ட அழுக்கென்று கீழ்ப்படுத்திப் பேசிடுவார்;

ஓடும் புனலுக் குயிர்தப்பிப் பிழைத்திங்கே
கூடும் பயனென்னைக் கொல்லும் வதையன்றி

வேறில்லை யாதலினால் மீண்டும் புனற்கங்கை
யாறே கதியென் றவள் முடிவு செய்துவிட்டாள்.

நன்றியொன்றும் சொல்லாத நங்கை தனைநினைத்துச்
சென்ற மலையன் திரும்பி விழியோட்டக்

கங்கையிலே வீழும் கருத்துடனே அவ்வழகு
மங்கை திரும்பி நடந்துகரை நண்ணுவதைக்

கண்டான்;புரிந்துகொண்டான்; காற்றாய்ப்பறந்துவந்தான்;
வண்டு விழிமாதைப் பற்றி யிழுத்துவந்தான்.

## சாவைத் தடுத்தான்

### புலையன்

கூற்றுக்குத் தத்தம் கொடுத்திடவா உன்னைநான்
ஆற்றுக்குக் காத்திங்கு அழைத்துவந்தேன்? சாற்றக்கேள்

ஊராருக் கஞ்சி உயிர்விட்டுச் சாவதினும்
சேரிக்கு வாநீ சிறப்பாக வாழ்ந்திடலாம்.

நீசக் குலமென்று நிந்தித் தொதுக்காதே,
மாசில்லை எங்கள் மனத்தில் அறிவாய்நீ

இந்திரனும் சந்திரனும் இட்டலிங்க மூர்த்திகளும்
மந்திரமும் வந்தனையும் மாமறையும் சாத்திரமும்

கண்டதில்லை யானாலும் நாங்கள் கடவுளருள்
கொண்ட குழந்தைகளே, கூசாமல் வந்திடுவாய்

என்று சொல்லிக் கையை இறுகப் பிடித்தபடி
குன்றனைய தோளான் கொடியை யிழுத்துவந்தான்.

அத்தருணம் ஊரார் அனைவரும் சேர்ந்தங்கே
கொத்த வரும்பருந்துக் கூட்டமென வந்தார்கள்.

## புலையன்மேல் குற்ற விசாரணை

யாரடா தீப்புலையன்? ஆணவமா உன்றனுக்கே
கூறடா நீஎம் குலக்கொடிகை பற்றுவதா?

நில்லென் றுறுமினார் நீலகண்ட சாத்திரியார்;
கொல்லென்று கொக்கரித்தார் கோதண்ட சாத்திரியார்;

காட்டு விலங்கெல்லாம் அஞ்சிக் கலைந்தோடக்
கூட்டு சபையொன்று கூப்பாடு போட்டார்கள்.

சிற்றூர்ப் பெருந்தலைவர் சேஷகிரி சாத்திரியார்
குற்ற விசாரணைக் கூட்டம் நடத்தினார்.

கோமதியாம் அந்தக் குளிர்நிலவை ஓர்புறமும்
தாமதியா தாற்றில் குதித்துஅவளைக் காத்த

புலைமகனை ஓர்புறமும் பொல்லாமேற் சாதித்
தலைவர் விசாரிக்கச் சார்ந்தோர் இடையிடையே

குத்தென்றும் வெட்டென்றும்கொல்லென்றும் கிள்ளென்றும்
பத்து விதமாகப் பாய்ந்து குதித்தார்கள்.

கங்கைக் கிரையானால் கைலாச வாசமுறத்
தங்கைக்குப் புண்ணியமே சாரும்; புலையனிவன்

நீசத் தனமாக நீரில் குதித்தோடித்
தோசத்தைச் செய்தான் துரோகிஎன் றொருவன்.
மேற்குலத்தைச் சேர்ந்தவளின் மேனி தொடுவதுதான்
காற்பிறப்பாம் சூத்திரனுக் காகாதென் றேயிருக்கக்
கோமதியைத் தொட்டான் குறுமதியன் ஆதலினால்
நாமிவனைத் தண்டித்தல் நன்றாமென் றொருவன்.
செப்புச் சிலைபோன்ற சின்ன மலர்க்கொடியாள்
தப்பிவந் தாளென்று தாமகிழ்வார் அங்கில்லை
தொட்டதால் தீட்டென்றும் தோசமென்றும் பாவமென்றும்
குட்டை குழப்பிடுவார் கூச்சலே ஓங்கிற்றாம்!
நால்வருண பேதமெனும் நாசமுறு குட்டையிலே
காலுந் தலைமுடியும் கட்டோடே ஊறியதால்
சாத்திரமே பார்க்கும் சழக்கர்கள்; பீடற்ற
ஆத்திரமே கொண்ட அறிவற்ற மூர்க்கர்கள்
ஆர்ப்பரித்தார்; சேஷகிரி சாத்திரியார் ஆம்பெரிய
ஊர்த்தலைவர் வேத உரைவிளக்கும் மூடர்களின்
கூட்டத் தலைவர்; குறையறிவே பற்றியவர்
வாட்ட மடைந்தாரின் வாதை யகற்றாமல்
காட்ட முடையாரின் கட்சி நிலைநாட்டும்
கோட்ட நெறியன்றிக் கூறும் வழக்கைப்
பகுத்தாயும் நீதி பதியாகார்; வையம்
வகுத்தானின் உண்மை வழிக்குப் பழிசேர்த்தார்.
சீறும் குலத்தின் சிறுமைத் தலைவரங்கே
ஏறிநின்ற பீடம் இறைநெறியைத் தூள்தூளாய்க்
கொந்தும் பலிபீடம்; கூடும் அறத்தையெலாம்
சிந்திக் கறைப்படுத்தும் சேதப் படுமேடை!
அன்பு நெறியென்றும் ஆன்ற வழியென்றும்
முன்பு பெரியோர் மொழிந்த கருத்தெல்லாம்

மண்மூட வைத்து மதம்பிடித்த பேர்வழிகள்
கண்மூடிச் செய்யும் கழிசெயல்கள் அத்தனையும்
செல்வாக்குப் பெற்றுச் சிறப்படைந்த காலம்அவர்
சொல்வாக்கே வேதம்; பொய்ச் சூழ்ச்சிகளே நீதிநெறி
இந்நிலையில் அந்த எளிய புலைமகனுக்கு
எந்நீதி தந்திருப்பார் என்றுரைக்க வேண்டுவதோ!

## கையை வெட்டிக் காக்கைக்குப் போடத் தீர்ப்பு

சேஷகிரி சாத்திரியார் செப்பிவிட்டால் அவ்வூரில்,
மேஷம் ரிஷபமென்றால் மெய்யென்றே ஒப்பிடுவார்
செல்வாக் குயர்ந்தவராம் சேஷகிரி சாத்திரியார்
புல்வாய் அநீதி பொருந்த வழங்கலுற்றார்.
சீராக வையமெனும் தேரோட வேண்டுமென்றே
நாரா யணனிங்கு நால்வருணங் கள்படைத்தான்
மூர்த்தி யவனின் முறைவழியை மாற்றுதற்கே
ஊர்ச்சேரி வாழும் ஒருபுலையன் தான்துணிந்தால்
தேச மழியாதோ? தெய்வ மழியாதோ?
நாச மடையோமோ நாமும் நமதினமும்?
பேசா திருந்தால் பெரிய பிழையாகும்
கூசாமல் தண்டம் கொடுக்க விலையென்றால்
நாளை மதிக்காது நம்மைப் புலைக்கூட்டம்!
வேளை தவறின் வினையாகிப் போய்முடியும்!
கோமதிக்குச் சாவுவரக் கூட்டும் விதியென்றால்
பாமரனும் இந்தப் பறையன் தடுப்பானோ?
எல்லாம் விதியென் றெழுதி யிருக்கையிலே
பொல்லாப் புலையனோ போயதனை மாற்றிடுவான்?

தொட்டணைத்த கையிரண்டும் துண்டாக்கிக் கூறிட்டு
வெட்டிஊர்க் காக்கை விருந்துண்ணப் போட்டிடுவீர்!
தீப்புலையன் தொட்டுவிட்ட தீட்டாலே வாட்டமுறும்
காப்பிழந்த கோமதியைக் காட்டுப் புறநிறுத்தி
வெட்ட வெளியில் வெயிலடிக்கும் வேளையிலே
கொட்டிநறு நெய்யால் குளிப்பாட்டித் தீட்டகற்றி
வீட்டுக் கழைத்திடலாம் வேத முறைப்படியே
போட்டேன்என் ஆணையிது போவீர்என் றோதியந்தச்
சேஷகிரி சாத்திரியார் சென்றார்; உடன்பெரிய
கோஷமிட்டுக் கூட்டத்தார் சூழ்ந்து புலைமகனை
வெட்டத் துடித்தவராய் வீறுமிகக் கொண்டவராய்க்
கட்டின்றி யார்த்துக் கழுகுகளைப் போற்பாயச்
சேரிப் புலையனவன் சிந்தித் தொருவழியைத்
தேர்ந்து நடைமுறையில் செய்யத் தொடங்கிவிட்டான்.

## புலையன் எல்லோரையும் தீட்டாக்கிவிட்டான்

சேஷகிரி சாத்திரியைத் தேடிப் பிடித்தவனும்
பாசமுள்ள அண்ணனைப்போல் பாய்ந்து தழுவினான்.
கோதண்ட சாத்திரியைக் கூட்டத்தில் போய்ப்பிடித்து
மாதைத் தழுவுதல்போல் மற்றங்குத் தொட்டணைத்தான்.
நீலகண்ட சாத்திரியை நேரில் பிடித்தவனும்
காலகண்டன் வந்தக்கால் கட்டிமார்க் கண்டேயன்
ஓடிச் சிவலிங்கம் ஒன்றித் தழுவினாற்போல்
கூடித் தழுவினான்; கூட்டத் தெதிர்ப்பட்டார்
யாவரையும் மார்பில் அணைத்துத் தழுவியவன்
கூவி யலைக்கழிந்த கோதையரை விட்டானா?

ஓடோடிச் சென்றங்கே ஒவ்வொருத்தி தோளினையும்
பாடிப் பிடித்தபடி பாய்ந்தோடிக் கொண்டிருந்தான்.

கூட்டத் திருந்த குழவிகுஞ் சத்தனையும்
தீட்டாகச் செய்து திரும்பி நகைத்தபடி

சாத்திரங்கள் பேசிச் சதிசெய்தெம் கூட்டத்தைச்
சூத்திரராய்த் தாழ்த்திவைத்த சூதெல்லாம் தூளாகிப்

போகும் ஒருநாளில்! பொல்லாத தீக்கொடுமை
வேகும்! எரிதழலில் வெந்தொழியும்! அந்நாள்

வரும்விரைவில்! காத்திருப்போம்! வந்துவிட்டால் உங்கள்
பெரும்வயிறு தொங்கிவிடும்! பேதை விழித்தெழுவான்!

இன்றைக்கோ கூடியுள்ள எல்லோரும் தீட்டாகி
மன்றத்தில் கீழ்ச்சாதி மக்கள் நிகரானார்

ஆதலினால் உம்முடைய ஆணவத்தை விட்டொழிப்பீர்
வேதம் விளக்குவது பேதமெனச் சொல்வோரே,

சீத நிலவு தெளிக்கும் ஒளிவெள்ளம்,
மோதிவரும் தென்றல், முகிலின் துளிவெள்ளம்

யாருக்குச் சொந்தம் அறிவீரோ? கங்கைநதி
நீருக்கும் கோடை நிழலுக்கும் வையத்தில்

ஈசன் எவர்சொந்தம் என்று வழங்கிவைத்தான்?
மீசை முகத்தில் பிறந்துவிட்ட மேலோர்க்கும்

காலின் அடியில் கருவான சாதிக்கும்
பாலூட்டும் தாயாம் பரமனுக்கு யாவருமே

மக்களென்றால் பேதம் மதித்தல் பொருளாமோ?
இக்கணமே நீவிர் திருந்திடுவீர்! இல்லையெனில்

பிற்காலம் எல்லாம் பெருந்தீங்காய் வந்துமது
நற்காலம் போக்கடிக்கும் என்று நவின்றானே!

## சேரிக்குந் தீ வைத்துவிட்டான் ஒரு தீயன்

சேரிப் பறையா திரும்பிநீ பாரென்றே
கூறினன் வேதகிரிக் குள்ளன்; அவன் கையில்
தீயெரியும் பந்தம் திகழ்வதனைக் கண்டவனும்
பாயும் விழியிரண்டும் பாய்ச்சினன்; தன்சேரி
ஓலைக் குடிசையெலாம் ஓங்கு நெருப்பெரிய
ஓலமிட்டு மக்களெலாம் ஓடிவரக் கண்டானே!
ஆத்திரத்தால் நெஞ்சம் அதிர்ந்தான்; எழுந்தந்த
மாத்திரத்தே பொல்லா மனிதர்களைக் கொன்றுவிடப்
போராட எண்ணிப் புயந்துடிக்கச் சீறியவன்
நீராடி வந்த நெடுஞ்சோதி ஒன்று கண்டான்!

## செஞ்சோதிப் பெம்மான் வந்தார்

அன்பை வழங்குக! அன்பை வழங்குக!
துன்பப் பகைக்கும்நீ அன்பே வழங்குக!
நெஞ்சை யடக்குக! நெஞ்சை யடக்குக!
பஞ்ச உணர்வும்நீ பைய அடக்குக!
உள்ள விலங்குணர்வை ஓட்டி மனிதர்களின்
உள்ளந் திருத்துகின்ற உச்சக் குரலெழுப்பிப்
பார்வைக் கனிவோடும் பாச மொழியோடும்
நேர்மைத் துணிவோடும் நெஞ்சப் பரிவோடும்
கையில் திருவோடும் காவி யுடையோடும்
மெய்யின் வடிவாக மேலைத் திசைநோக்கி
ஐயன் வருகின்றான் அன்பின் அடியார்கள்
பையத் தொடர்கின்றார் பத்தா யிரம்பேர்கள்.

மேற்குலத்தார் அங்கே மிரண்டுபோய் நின்றிருக்க
ஆர்ப்பரித்துப் போராடி ஆத்திரத்தைக் கொண்டிருந்த

சாதிப் புலையனவன் சாந்தி தரும்ஒளியை
சோதித் திருவிளக்கைத் தொல்லுலகைச் சீர்திருத்த

எண்ணிப் பிறப்பெடுத்த இன்ப வடிவழகை
மண்ணிலுள மக்களெலாம் மன்னுபே ரின்பத்தைச்

சற்றுங் குறையாமல் சார்ந்துதத்தம் வாழ்க்கையிலே
முற்றும் அனுபவிக்க மோனத் தவவாழ்வால்

கண்டறிந்த பேரறிவை காந்தப் பிழம்பதனை
வண்டுகவர் தேன்மலர்போல் வந்த எழில்முகத்தை

புத்தரெனும் பொன்மேனிப் பூமானைத் தன்னடியார்
அத்தனைபே ரோடும் அழகுப் படைபோலே

கண்ட புலையன் கனத்திருந்த தன்நெஞ்சில்
கொண்டதொரு மென்மைக் குணத்தாலே ஆத்திரமாம்

வஞ்ச நினைப்பகற்றி வையந் தளிர்க்கவந்த
செஞ்சோதிப் பெம்மான் திருவடியில் போய்வீழ்ந்தான்!

மெல்லக் குனிந்துதோள் தொட்டவனை மேல்தூக்கி
வெல்ல மொழியால் விரும்பி நலங்கூறிப்

பொன்மேனி யோடு பொருந்த அணைத்தவனைத்
தன்னோ டிணைத்தார் தகை.

# பம்பாய்ப் பஞ்சாங்கம்

### அறியாத துன்பம்;
### தெரியாத தீமை

தூக்கம் வராமல் துவண்டு புரண்டங்கே
ஏக்கம் பெருமூச்சாய் எண்ணம் கொதிகலனய்

வேக, வியர்வை வெளிவந்து பாய்நனேக்கச்
சோகக்கண் ணீரருவி ஓடித் தலேயணையை

ஈரப் படுத்த, இதயக் கனத்தோடு
வீரம் படுத்துவிட்ட வேந்தன்போல் சாய்ந்தங்கே

கூவி யழுதற்குக் கூச்சமுற்றுப் பேச்சற்றுச்
சாவை யணேதற்கும் சற்றேனும் தெம்பின்றிக்

கேவித் துடிக்கும் புழுப்போலக் கிள்ளேயெனும்
பாவி மகளங்கே பாயில் கிடையிருந்தாள்

பத்துநா ளாகப் படுந்துயரைத் தான்நிறுத்தால்
மொத்தக் களிப்புங்கோல் முள்ளேப் புறந்தள்ளும்!

வையப் பிறப்பெடுத்து வந்தநாள் தொட்டவளும்
மெய்யாகத் துன்ப மிதிப்பட் டறியாளே.

### செல்லக் குழந்தை அவள்
### வெல்லக் கட்டிதான்

மாடிவீ டேதுமில்லே; மந்தைப் பெருக்கமில்லே;
நாடி யுழுதபயன் நல்கு நிலங்களில்லே;

கொண்டுவிற்றே ஆதாயம் கூட்டும் தொழிலில்லை;
கண்டுமுதல் கொடுத்து வட்டி கணக்கிட்டே

உள்ள பொருள்வளர்க்கும் ஓங்கு தொழிலில்லை;
கள்ள வணிகத்தால், கைக்கூலித் தீவழியால்

சேர்த்த பொருளில்லை; செம்மை நலங்காத்து
கூர்த்த மதியாலும் கோடாத நெஞ்சாலும்

நாடி வருவார்க்கு நல்லறிவுப் பேரொளியைப்
பாடிப் பெருக்குகின்ற பைந்தமிழின் ஆசிரியர்

ஆகத் தொழில்செய்யும் அன்பு நெறியாளர்
மேக மழைபோன்ற மேதக்க தொண்டுடையார்

பெற்றெடுத்த செந்திருவாம்; பேசுந் திருவிளக்காம்
கற்றுத் திருத்தமுற்ற கட்டிவெல்லம் போன்றவளாம்

கிள்ளைதன் தோழியரைக் கிள்ளி விளையாடி
உள்ளஞ் சிலிர்த்ததல்லால் உற்றதொரு துன்பமில்லை.

கண்கட்டி ஆட்டத்தில் கைநீட்டித் தொட்டுவிட
எண்ணி நடக்குங்கால் எதிர்பட்ட தூண்மோதி

வீக்கந் தலைகாண விக்கித்த தல்லாமல்
ஏக்கத் துயரொன்றும் எய்தி யறியாளே.

மாங்கொட்டை யாடுகையில் மற்றங்குக் கால்சறுக்கிப்
பாங்கில் விழுந்து பலர்சிரிக்கத் தானழுத

சின்னஞ் சிறுதுன்பஞ் சேர்ந்தவளே யல்லாமல்
இன்னல் பிறிதொன்றும் எய்தி யறியாளே.

பச்சைக் குதிரையாய்ப் பாய்ந்தேறித் தாவுங்கால்
குச்சியொன்று காலில் குத்தி யழுததல்லால்

ஏங்கி யழுதறியாள்; இன்னல் அடைந்தறியாள்;
மாங்குயிலைப்போல மகிழ்ந்திருந்தாள். இப்பொழுதோ

பத்துநா ளாகப் படுந்துயரம் மோர்கடையும்
மத்தும்அறி யாதுசெக்கு மாடும் அறியாதே.

## ஏக்கத்தில் விரிந்த எண்ணப்படம்

ஏக்கப் பெருமூச்சோ எண்ணப் படம்விரிக்க
நோக்கப் பழங்காட்சி தோன்றியதே ஒவ்வொன்றாய்

சென்னைக் கடற்கரையில் சிற்றலையும் பேரலையும்
ஒன்றன்பின் ஒன்றாக ஓடித் தொடர்ந்துவந்து

மோதிக் கரைமணலை முத்திப் பணிந்தங்கே
வேதன் அடியார்போல் வீழ்ந்து மறைந்தனவே!

வந்த அலைமறைய வாரி நுரையெழுப்பிப்
பிந்தி வருமலையும் பின்னும் மறைந்தொழியும்!

ஒன்றொழிய மற்றொன்றே ஓங்கி யுயர்ந்துவரும்
வென்றெழுமுன் னாலே விழுந்து கரைந்துவிடும்,

பாலாய் நுரையெழுப்பிப் பாய்ந்து பளபளப்பாய்
மேலோங் கலைகண்டு மெய்மறந்து கிள்ளையவள்

நின்றிருந்தாள்; அன்னாள் நினைப்பில் கழுத்தினிலே
சின்ன மஞ்சள் தாலித் திருப்பூட்டி நின்றவனும்

கண்ணன் அருமைக் கணவன் திருவுருவே
வண்ணப் படம்போல வந்து தெரிந்ததுவாம்.

கல்லூரிக் கேகும் வழியில் கலகலவெனச்
சொல்லாடிச் சொல்லாடிச் சொக்கவைத்த கண்ணனவன்

மாலை வருமுன்னே வாயிற் படியருகே
பாலைத் தெளித்ததுபோல் பண்பாய்ச் சிரித்தபடி

காவலிட்டுக் காத்திருந்து காதல் மயக்குடனே
வாவென் றழைத்து வழியெல்லாம் பேச்சாடிச்

சோலைக் கொருநாளும்; தூக்கு சிலம்புடையாள்
கோலச் சிலையிருந்து கூடுவார்க் கின்பளிக்கக்

காற்றள்ளி வீசும் கடற்கரைக்கோர் நாளுமெனப்
போற்றி யழைத்துப் புதிது புதிதாக

விந்தைக் கருத்துகளும் வேடிக்கைப் பேச்சுகளும்
சிந்தைக் கினியனவாய்த் தித்திக்கத் தித்திக்கக்
கொண்டூட்டித் தன்உள்ளம் கொள்ளைகொண்ட
கண்ணனவன்
வண்டாய் மலர்க்குமலர் தாவாமல் தன்னொருத்தி
கூட்டே பெரிதாகக் கொண்டு மணங்கூடி
நாட்டியதோர் இல்லறமும் நன்றாய் நடத்திவந்த
எல்லாம் நினைத்தந்த ஏந்திழையாள் கிள்ளையெனும்
நல்லாள் பெருமூச்சில் நாளும் நலிந்திருந்தாள்.

## காரணங்காட்டாமல்

## கைவிட்டுப் போனான்

செத்தான் அவனல்லன் சேயிழையைத் தான்பிரிந்தான்
பத்துநா ளாகப் பலபலவாய் நெஞ்சேங்கித்
தூண்டிற் புழுப்போலத் துன்ப வலையத்தே
ஆண்டு வதையுண் டகப்பட் டவளாக
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் தவிக்கின்றாள்
கண்ணாக வாழ்ந்த கனவு மறைந்தாற்போல்!
ஏதும் பிழைசெய் தறியாத ஏந்திழையாள்
சூதாய்க் கணவன் தனைப்பிரிந்த துன்பத்தைத்
தாங்க வியலாமல் தத்தளித்தாள்; தன்னாலாம்
தீங்கென்ன வென்றும் தெரிவிக்கா தேகிவிட்டான்;
சென்றான் ஒருமுடங்கல் தீட்டி யிருந்தாலும்
குன்றாத உள்ளத்தைக் கொண்டிருக்கக் கூடுவதாம்
ஒட்டும் உறவாக ஒன்றாக வாழ்ந்தவனைக்
கெட்டுக் கிடவென்று கீழ்ப்படுத்திச் சென்றுவிட்டான்
குற்றமென்ன செய்தேன் குறையென்ன வைத்தேனோ
பற்றற் றிருந்தேனோ பாய்ந்தெதிர் பேசிச்

சினத்தை வளர்த்தேனே செய்தகுறை என்ன
மனத்தில் வரவில்லை என்று மயங்கிநின்றாள்.

## கோதை காட்டிய பாதை

ஓய்வுநே ரப்பேச்சுக் குட்காரும் கோதையாள்
தாய்போன்ற அன்பும் தயையு முடையவளாம்

வந்தாள் இனிய வழியொன்று சொல்லிவைத்தாள்
நொந்த உளத்தோடு நூறுநாள் ஆனாலும்

செய்யும் முயற்சியின்றேல் சிந்திக்கா தெச்செயலும்
பைய எழுந்து பயணம் புறப்படுவாய்

மாமியார் நல்ல மனமுடையார் என்றாயே
பூமலர் உள்ளம் புகையாமற் காப்பாரே

என்று வழியுரைத்தாள் ஏற்ற படியுரைத்தாள்
நன்றென்று கிள்ளை நடந்தாள் தொடர்வண்டி

ஏறினாள் மாமி யிருக்கும்ஊர் போயடைந்தாள்.
காறினாள் துப்பினாள் கண்டவுடன் அம்மாமி.

## ஏசிய மாமி பேசிய பேச்சுகள்

காதலோ காதலென்று கண்ணன் உளங்கெடுத்த
மூதேவி யுன்றன் முகத்தையிங்குக் காட்டாதே

பாழான உன்முகத்தைப் பார்த்தாலும் கண்ணனுக்குக்
கீழான புத்திவரும் கெட்ட நிலைதொடரும்

நெஞ்சங் கலந்ததென்றும் நேசம் மிகுந்ததென்றும்
பஞ்சாங்கம் பாராமல் பண்ணுந் திருமணத்தால்

என்னென்ன கேடுவரும் என்றுணரா தையையோ
முன்பின்னை எண்ணாமல் மோகக் கிறக்கத்தால்

தாலிகட்டி விட்டானெம் தங்கமகன் ஒப்பிவிட்டோம்.
போலித் தனமாகப் போயினவே அத்தனையும்!

பம்பாய்க்குச் சென்றமகன் பார்த்துவந்த சோதிடனும்
உம்பா லிருக்கும் ஒருபீடை பெண்ணுருவில்

அந்தத் தொடர்பிருக்கும் அத்தனைநாள் அத்தனையும்
சொந்தமாம் வாழ்வெல்லாம் துன்பமே சூழ்ந்திருக்கும்

கட்டிவைத்த பெண்ணவளின் கண்ணில் விழிக்காமல்
எட்டி யிருந்தால்தான் ஏற்றம் பிறக்குமெனச்

சொல்லி விழிக்கவைத்தான் தூதூநீ போய்விடெனக்
கொல்லும் மொழியாலே கூறுகின்ற மாமியினைக்

கிள்ளையெனும் பூவடிவாள் கீழ்மேலும் பார்த்துநின்றாள்
உள்ளபடி மாமிக் கொருகிறுக்கும் இல்லையே

ஏனோ உளறுகின்றாள் என்று நினைத்திருந்தாள்
வானோ தலைமீது வந்திடித்தாற் போலுணர்ந்தாள்

புத்துணர்வும் வாழ்விற் புதுநோக்கும் பாரெங்கும்
சித்திக்கும் நேரத்தே தீய மடமையினைப்

பேசுகின் றாரே பெரிதும் வியப்பெனவே
ஏசுவதற் காற்றாமல் ஏழை திரும்பிவந்தாள்.

கோதைக்குச் செய்தியினைக் கூறியபோ தன்னவளும்
பேதைப் பெண் ணேநீ பெருந்தவறு செய்கின்றாய்

உன்னை ஒதுக்கி உறவில்ஒரு பெண்தேடிச்
சின்ன மகனின் திருமணத்தைச் செய்வதற்குத்

திட்டமிடு கின்றார் தெரிந்துகொள் என்றுரைத்தாள்.
குட்டை மனத்தார் கொடிய நினைப்பகற்ற

நெஞ்சுறுதி வேண்டுமடி நெஞ்சுறுதி வேண்டுமென்றாள்
அஞ்சாதே மீண்டும்நீ அங்கேசெல் என்றுரைத்தாள்

## காதல் ஒரு
## நாடகமா?

வெள்ளை மனக்கிள்ளை வியப்படைந்தாள்; உள்ளத்தைக்
கொள்ளைகொண் டின்பமுற்றுக் கூடிக் குடித்தனத்தை

அன்பாய் நடத்தியவர் ஆசை பிறிதொருத்தி
தன்பால் திரும்பிடுமோ? தன்னை வெறுத்திடுமோ

ஓடித் தொடர்ந்துவந்தே உள்ளங் கலந்திங்கே
கூடி மணவாழ்க்கை கொண்டதெல்லாம் நாடகமா?

கொஞ்சி மொழிபேசிக் கொண்டிருந்த வாழ்க்கை யெலாம்
வஞ்ச மனம்புரிந்த வன்மைச் சதிச்செயலா?

ஏங்கு மனத்தோடு எங்கெங்கோ காத்திருந்து
பாங்கில் அணைந்ததெலாம் பாசாங்குச் செய்கைகளா?

நம்பமுடி யாமல் நடுங்கி மனந்தளர்ந்து
கொம்பற்ற பூங்கொடிபோல் கோதையெதிர்
வீழ்ந்துவிட்டாள்

சிந்தை மயங்கிக் கிடந்த திருவனையாள்
நொந்த உளத்தில் நுவலறிய வீரத்தைக்

கொண்டூட்டத் திட்டமிட்டுக் கோதை வழிசெய்தாள்.
வண்டுபோல் இங்கே மயங்கிக் கிடக்காதே.

வாழ்விற்பூச் செண்டுபோல் வைத்திருக்க வேண்டுமுன்னைப்
பாழாக்கத் திட்டமிட்டார் பாவச் செயல்தடுக்க

வீராங் கனைபோல வேங்கைப் புலிபோலப்
போராடச் சித்தங்கொள்! போபோநீ வெற்றியுண்டு!

மற்றும் ஒருபெண்ணை மனத்தால் நினைத்திடவும்
சற்றும்இட மில்லையெனச் சாற்றிவிடு; எத்தனைதான்

பேசிப் பழித்தாலும் பேராத கல்லாக
கூசா துட்கார்ந்து கொண்டிருப்பாய் அஞ்சாதே

வீட்டுக் குடையவள்நீ உன்னை வெளியேற்றி
ஓட்டுதற்கு யார்க்கும் உரிமையில்லை என்றுரைத்தாள்.

## துணிந்தவர்க்குந்
## துன்பமில்லை

கிள்ளை துணிந்தாள்; கிளம்பிவிட்டாள்; தன்வாழ்வைக்
கிள்ளி எறிவாரின் கீழாம் செயல்மறுக்க.
காதல் திருமணத்தைக் கைவிட்டுப் பஞ்சாங்க
வேதத் திருமணமாய் வேறொன்று செய்தற்குத்
திட்டமிட்ட கண்ணன் செயல்தடுத்துத் தன்னுரிமைப்
பட்டயத்தை நாட்டப் பயணம் புறப்பட்டாள்.
இந்த முறைதிரும்பி இங்குவர மாட்டேன்என்
சொந்தம் நிலைநாட்டிச் சூது தவிர்த்திடுவேன்
என்று திடங்கொண்டாள் ஏகித் திருவீட்டில
சென்று புகுந்தாள்; திருவனையாள தன்னை
விரட்டவந்த மாமி வியப்புத் திகைப்பாய்
உருட்டுகின்ற வாயும் ஒடுங்கித் திடங்குலைந்து
செய்வதறி யாதே திகைத்தாள்; திருமணமும்
உய்வ தறியா தொளிந்து புறந்திரியப்
பம்பாய்ப்பஞ் சாங்கம் பயந்தெளிந்த கிள்ளையர்முன்
வம்பாய் முடியும் வகையுணர்ந்து கண்ணன்
திரும்பிவந்தான் வீட்டுக்குச் செய்ய திருவாள்
விரும்பிவைத் தாளே விருந்து.

# ஒளி மின்னல்

**வள்ளி,**

**உயிர்த் தோழி!**

வானங் கருத்து வரக்கண்ட ஏருழவன்
தானேபோல் உள்ளத் தளர்ச்சி யகன்றொழிய

வள்ளி சிரித்து வரவேற்றாள் மங்கையெனும்
புள்ளி மயிலனைய பொற்கொடியை; பக்கத்து

வீட்டாள்; பொழுது விரையத் துணையாகும்
கூட்டாக நாடோறும் கூடத்தில் வந்தமர்ந்து

செய்தி பலபேசிச் செல்லும் திருவனையாள்
உய்யும் வழிகாட்டும் ஓரினியாள்; இன்பங்கள்
வந்தாலும் கூட மகிழ்ந்திடுவாள்; துன்பத்தில்
நொந்தாலும் ஆற்றித் தணிக்க முயன்றிடுவாள்;

தோழி யிலக்கணத்தின் தோற்றம்; அவளைப்போல்
ஏழு கடல்சூழ்ந்த இப்புவியில் வேறொருத்தி

வாய்ப்ப தரிதாகும்; வந்தாளைக் கூடத்தே
ஓய்வா யிருக்க உரைத்துத்தன் வேலை

முடித்துவந் துட்கார்ந்தாள்; வள்ளி முகத்தே
துடிக்கும் உணர்ச்சிதனைத் தோழி யறிந்துகொண்டாள்.

மங்கையா என்றும் மலர்ந்த முகங்கண்டேன்
இங்கமர்ந்த பின்னே எழிலாம் முகங்கருத்தல்

கண்டேனே வள்ளி கலங்கியதேன் சொல்லென்றாள்
உண்டசோற் றுண்டையது தொண்டைக் குழியளவே

தங்கிவிட்டால் உண்டாம் தடுமாற்றம் போல்நீள
வங்கத்துக் கப்பல் வளிப்பட்ட வாறேபோல்

உள்ளத் துதித்த உரைவந்து தொண்டையிலே
உள்ளும் புறமும் ஒருவழியும் போகாமல்

திக்கித் திணறச் சிறுவிழிநீர் கன்னத்தே
தொக்கித் துளித்துளியாய்த் தோளை நனைத்துவிழ

வள்ளி யழுதநிலை வந்திருந்த மங்கைக்கும்
உள்ளத் துயராய் உறுத்தத் தொடங்கியதாம்.

பூவொன்றின் மேல்மற்றோர் பூவந்து சாய்ந்ததுபோல்
தாவி யருகமர்ந்து தங்கத் திருக்கையால்

வாடி யழுகின்ற வள்ளி முகக்கண்ணீர்
ஓடிப் பெருகாமல் ஒற்றித் துடைத்துவிட்டாள்.

## வேதனையில்

## வெந்த நெஞ்சம்

என்னென்று சொல்லேடி ஏனிப் படியழுதாய்
மின்னு சுடர்க்கொடியே மேவு துயரென்ன?

தோழிக் குரைக்காமல் துன்பத்தை நீமட்டும்
கோழி கிளறுசிறு குப்பைமேட் டைப்போலே

ஆக்காதே; யானை மிதித்த அப்பளம்போல்
வாய்க்குஞ் சிறுநெஞ்சை வாடி நொறுங்க

இடங்கொடா தேஎன்றன் இன்னுயிரே ஆவல்
அடங்குமுன் சொல்லேடி யாது நடந்ததென்றாள்.

விம்மித் தணிந்தநெஞ் சத்தாள்தன் வேதனை
கம்மத் திருவாய் கழல மொழிகூட்டி

மங்கைக் குரைத்தாள் மணவாளன் செய்துவரும்
வெங்கொடுமை வாழ்வை விழலாக்கும் தீக்கொடுமை
தாங்கா தெரிகின்ற தன்னெஞ்சக் கொப்பரையை
தீங்கான தீக்குழியைத் தீரத் திறந்துவிட்டாள்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலைதானே வந்தெய்தும் என்றுசொல்லி
யாரோ எழுதிவைத்த அக்கவிதை என்மட்டில்
நீரில் எழுத்தாக நீர்த்துப்போய் விட்டதடி!

வந்தநாள் தொட்டு வறுமைக் காற்ருமல்
நொந்தநாள் தானிங்கே நூறுமேல் நூருகும்
தொட்டுத் திருத்தாலி சூட்டி யணைந்தநாள்
தொட்டு நடந்துவரும் கூத்தைப் பிறர்க்குரைக்க
நாவும் எழவில்லை; நஞ்சத்தைத் தொண்டையிலே
தேவன் அடக்கியது போலடக்கும் தெம்புமில்லை;
கொண்டநாள் பெற்ருேர் கொடுத்தசீர் அத்தனையும்
வண்டியின் மேலடுக்கி வந்ததுநீ கண்டிருப்பாய்;
அத்தனையும் வட்டிக் கடகாகிப் போச்சுதடி
மொத்தப் பணமாக மூவா யிரத்தை
வரதட் சணையாய் வழங்கியதோ இன்று
பரதேசத் தானின் பரிசாகப் போச்சுதடி!

## வரும்படி யற்றவனின்
## பெரும்படிச் செலவுகள்

கட்டி யழைத்துவந்த காலமுதல் இன்றுவரை
வெட்டிப் பொழுதாக வீணுக்கிக் கொண்டுள்ளார்
வேலை கிடைக்கவில்லை வேறென்ன செய்வேனென்
ருேலமிட் டென்னை உருக்குலையத் தானடிப்பார்.

கையிருப்பை யெல்லாம் கழற்றிக் கொடுசென்றே
ஓய்யின் பிராந்தியென ஓயாக் குடியாகி,
வீட்டுக்கு வந்து விரட்டி யடித்திடுவார்;
சீட்டு, குதிரைச் செலவுகளும் சேர்ந்துவிட்டால்

எங்கள் குடும்பந்தான் எத்தனைநாள் தாங்குமடி
தங்கப் பவுனான சங்கிலியும் பூச்சாச்சு;

வைர மிழைத்துவைத்த மோதிரமும் கல்லாச்சு;
கைவளையல் அத்தனையும் கண்ணாடி யாச்சு;

கடன்காரன் வீட்டுக்குக் கட்டிலொடு மெத்தை
உடன்போகப் பாய்தான் உறங்கும் விரிப்பாச்சு

முந்நூறு ரூபாய் முழுதாகச் சம்பளமாம்
ஐநூறு ரூபாய் அதன்மேல் வரும்படியாம்

என்று தரகர் இயம்பியபொய் கேட்டப்பா
நின்று மயங்கினார்; நேரில் உயர்தோளும்

கண்ணழகும் மார்பழகும் கண்டு மயங்கிநான்
எண்ணம் இசைந்தேன்; எழில்வாழ்வுக் கற்பனைகள்

ஆயிரமாய்க் கட்டி அழகழகாய்ச் சோடித்து
பாயிரமும் நூலுமாய்ப் பாடிக் களித்திருந்தேன்;

பார்த்திபனைப் போலிவரும் பாராளா விட்டாலும்
நேர்த்தியற்ற பெண்தொடர்பில் நிச்சயமாய்
அர்ச்சுனர்தான்

நீதித் தருமனுக்கு நேரில்லை யென்றாலும்
சூதில் அவனேதான்; தோற்பதிலும் அப்படியே!

போக்கிரிகள் கூட்டால் பொறுப்பற் றிருந்தாராம்;
காற்கட்டை போட்டுவிட்டால் கண்ணியரா வாரென்றே

எண்ணித் திருமணத்திற் கேற்பாடு செய்தனராம்;
கண்ணுங் கருத்தாய்க் கவனிக்க வில்லையென்று

மாமியார் சொல்லி வருந்திக் கடிந்தாராம்;
சாமியா நானிங்குச் சாதனைகள் செய்வதற்கு

தீவலம் வந்த திருவாட்டி கண்ணகியும்
கோவலர்க்கு முன்னே கொடுத்துக் கொடுத்தேதான்

வாழ்விழந்த காதை வழிவழியாய் நாமறிவோம்;
பாழும் வழிச்சென்று பண்பற்ற பாதையிலே

ஆடவர்கள் சென்றால் அதைத்தடுக்கும் வன்மையினைக்
கூடப் படைத்துள்ள கோதையரும் இங்குண்டோ?

தென்றலாய் வீசும் சிறுகாற்றும் வந்தசைக்க
நின்றாடும் பூங்கொடிபோல் நெஞ்சுடைய மெல்லியலார்

சூறா வளிக்காற்றுத் தொடர்ந்தடித்தாற் றாங்குவரோ
கூறாய் என்று குழந்தைபோல் விம்மிவிம்மி

வள்ளி யழுதிருந்தாள்; வஞ்சிக் கொடிமங்கை
அள்ளி யணைத்தபடி ஆதரவாய்ப் பேசியவள்

உள்ளக் குமுறல் ஒழிக்கப் பலசொல்லி
தெள்ளத் தெளிந்த சிலகருத்துத் தான்மொழிந்தாள்.

## காலம் வரும்;
## காத்திருப்பாய்!

கண்ணுக் கினிய கணவரை நீ பெற்றிருந்தும்
புண்ணான வாழ்க்கை பொருந்த நடத்திவரும்

பொல்லாக் கொடுமையெண்ணப் பொங்குதடி என்னுள்ளம்
நல்லார் துணையின்றேல் நாடும் மணவாழ்வு

கூட்டுவது துன்பியலே; கொஞ்சுங் கொடியனையார்
மீட்டுகின்ற வீணையிலே மென்னரம்பு போன்றவரே;

மெல்லச் சிறுவிரலால் மீட்டா நரம்பிங்கே
கல்லென் றறுதல் கருதாரோ ஆடவர்கள்!

வள்ளி, கலங்காதே வாழும் ஒருகாலம்
உள்ளி யுனேயடையும்; உற்று வரும்வரைக்கும்
சற்றே விலகித் தனித்திருப்பாய் தாய்வீட்டில்
உற்றே சிலநாள் ஒதுங்கி யிருந்துவிடு.
தன்னுணர்வு பெற்றுக் கணவன் வரும்வரைக்கும்
புன்செயல்கள் நீங்கிப் பொருந்த வரும்வரைக்கும்
தாய்வீட்டில் சென்று தனித்திருப்பாய் தீவழியில்
போயலுத்து மீண்டும் புதுவாழ்வு நாடிவரும்
காலம் வரும்வரைக்கும் கண்ணீர் அடக்கியிரு
காலம்கை கூட்டும் கவலே யொழியென்ருள்.

## குடிவெறியில்
## குத்துவிட்டான்!

சந்தனத்துச் செங்கழுத்துத் தங்கத்துச் சங்கிலியை
மந்தியைப்போல் வந்திழுத்து மார்வாடி கைக்கொடுத்து
மூன்றுமா தங்கள் முடியவில்லே! பொன்போலே
தோன்ற முலாமிட்டுத் தொங்கி யழகுசெய்யும்
சங்கிலியைக் காலேயிலே தான்கழற்றிக் கொண்டுசென்ருன்
அங்கதையும் வைத்தான் அடகாய் ஒருரூபாய்
பெற்றுச் செலவழித்தான் பின்னென்ன வைத்திருப்பான்
முற்றும் பறித்திடவே வேண்டும் முடிவோடு,
போதைத் தலேயோடும் பொல்லா நினேப்போடும்
வீதிக் கதவின்மேல் விட்டான் உதையொன்றே!
ஆவென் றலறிக் கதவு வழிதிறக்கப்
பாவை படுத்திருக்கும் மூலேக்குப் பாய்ந்துசென்ருன்
பாயங் கிருந்ததுவாம் பாவைதான் அங்கில்லே
வாய்நாறுங் கள்ளோடு வுள்ளீ எனவழைத்தான்

அஞ்சிப் பதிலுரைக்கும் அஞ்சுகத்தின் பேச்சில்லை
கெஞ்சிப் பலனின்றிக் கேட்ட பொருள்கொடுக்கும்
மாதங்கில் லாமை மடையன் அறியவில்லை
போதைத் துடிப்போடு பொங்குஞ் சினத்தோடு
கூவி யழைத்தேன் குரல்கேட்க வில்லையோ
வாவிப் படியென்று வன்கை மடித்தபடி
குத்தொன்று விட்டான் குமுறித் தரைமீது
மொத்தி வலியெடுக்க முட்டாள் சினத்தோடு
தள்ளிப் படுத்தால்நீ தப்பி விடுவாயோ
கள்ளீ எனக்கூறிக் கைவலிக்க மீண்டொருகால்
ஓங்கிக் கொடுத்தான் ஒருகுத்துப் போதையெலாம்
நீங்கிற்றுக் கண்ணின் நிறைவான பார்வையிலே
ஆங்கொருத்தி யின்மை அறிந்தவனும் பொங்குசினம்
தேங்க அறைமுற்றும் தேடி விழிசெலுத்தி
உள்ளதெலாம் ஈந்தே உதைவாங்கும் பத்தினியாள்
வள்ளியினைக் காணுமல் வாடி மனஞ்சோர்ந்தான்.

## ஆத்திரத்தோடு

## அலைந்தான் குடிவெறியன்!

எங்குபோ ளுளென்றே எண்ணத்தில் தோன்றவில்லை
இங்கு வரட்டும்நான் என்னசெய் வேனென்றே
எண்ணிப் படுத்தான்; இரவு நடந்ததுவாம்
கண்ணில் உறக்கம் கவியத் தனைமறந்தான்.
காலை மலர்ந்துந்தன் கண்விழியா தன்னவனும்
மாலைமணி மூன்றுக்குத் தானெழுந்தான் கைகால்
முகங்கழுவி வந்தங்கே முற்றத்தில் நின்ருன்;
பகபகெனத் தன்வயிற்றில் பாழும் பசிதோன்ற

வள்ளீ எனவழைத்தான் வந்தங்கு நிற்பதற்கோ
உள்ளந் துடிக்க உதைவாங் குதற்கோ
அவளில்லா மையுணர்ந்தான்; அந்தப் பசியோ
அவளில்லை யென்றால் அடங்கிக் கிடந்திடுமா!
வெம்மைச் சினம்பொங்க வீட்டின் வெளிப்போந்தான்
அம்மயத் தங்கே அவள்வந்து நின்றிருந்தால்
செம்மைக் கடித்துடலில் செங்குருதி பீறிவரக்
கும்மிப் புடைத்துக் கொலைசெய்தும் விட்டிருப்பான்.
ஆத்திரந்தான் அத்தனையாம் ஆற்றுநீர்ப் பாய்ச்சலது
பேர்த்துவரும் காட்டுமரம் போலங்கே பேயுணர்வு
பொங்கித் ததும்பிவரப் போக்கை யுணராஞய்
எங்கெங்கோ சுற்றிவந்தான்; யாராரோ கண்டுவந்தான்
நாளும் பொழுதும் கடன்வாங்கித் தான்கழித்து
மீளும் நினைப்பின்றி மேன்மேலும் தீவழியில்
வீழ்ந்தழிந்து கொண்டிருந்தான்; வீடு தனைமறந்தான்
ஆழ்ந்த மனப்பற்றும் அச்சமும்கொண் டாடிவந்த
வள்ளி விலகியதும் தான்மறந்தான்; வாழ்வுத்தேர்
துள்ளிப் பறந்திருண்டு தூக்க உலகத்தை
நாடி விரைகின்ற நாட்டத்தை எண்ணுமல்
கூடிப் பழிச்செயல்கள் கொண்டாடும் நண்பருடன்
வேடிக்கை யாய்ப்பொழுது வீணுய்க் கழிப்பதுவே
வாடிக்கை யாய்க்கொண்டு வாழ்வு நடத்திவந்தான்.

## ஏமாந்தார் சொத்தை
## ஏப்பமிடும் கூட்டத்தான்!

ஏனேடிப் போனுளோ எங்கோடிப் போனுளோ
தானுகப் போனுளோ தாயாரைச் சேர்ந்தாளோ

என்ற கவலைகள் ஏதுமின்றி வாடிக்கைபோல்
சென்ற வளைமறந்து சேயார்போல் தானிருந்தான்.
பற்றே குடும்பத்திற் பாசமோ இல்லாமல்
முற்றுந் துறவிபோல் வாழுகின்ற மூர்க்கனாய்,
சந்தனத்துச் செங்கழுத்தைத் தாலிக்கு நீட்டியதால்
நொந்த பலியாடு போலே நுகர்வின்றி
நோய்க்குப் பலியான நூறுட்டு மந்தையெனத்
தாய்கொடுத்த சீதனமும் தந்தையுழைப் பீட்டியமும்
வாரி வழங்கித்தன் வாழ்வின் நலமிழந்த
காரிகையாம் வள்ளிக் கனியைத் துணையாகத்
தேடு நினைப்போபின் தேடி யழைத்துவந்து
கூடுங் கருத்தோ குறியாத பாவியவன்
உண்டாட்ட மாடி உடனலையும் தோழருடன்
கொண்டாட்ட மாடிக் குதூகலமாய் வாழ்ந்திருந்தான்.
வேலை கிடைக்காமல் வேதனையால் வாடியுளம்
மாலடைந்து போன மனிதர் பலரிருக்க,
ஏனிந்த வேலையென்றே ஏளனமாய்த் தாக்குகின்ற
ஞானிகளின் கூட்டத்தான் நம்வள்ளி நாயகனும்,
பையில் கவனமின்றிப் பாதை வழிநடப்போர்
கையில் கடிகாரம் கட்டி மறந்திருப்போர்
சாளரத்தின் ஓரத்தே சாமான்கள் வைத்திருப்போர்
தாளிட்டு மூடாக் கதவுடைய வீட்டோர்கள்
தக்க துணையின்றிச் சாலை வழிநடப்போர்
மிக்கபொருள் கொண்டு மிதமா யிருப்பவர்கள்
முன்றானை யாற்கழுத்தை மூடாமற் செல்லுகின்ற
மின்னற் கொடியனையார்; மேலும் பலபேர்கள்
ஏமாந்த போதெல்லாம் ஏற்ற படிநடந்து
தாமாப் பெரும்பொருளைத் தங்கள் உடைமையெனச்

செய்துகொள்ளும் வேலையிலே தேர்ந்துவிட்டான்;
சேர்த்தபொருள்
அவ்வந் நொடியே அழித்து, நெறிநின்றோர்
ஒவ்வாச் செயல்புரிந்தும் ஓடி ஒளிந்திருந்தும்
வாழ்க்கை நடத்தி வருங்கும்ப லோடிருந்தான்.

## திருடி வந்த அழகுமயில்!

வேர்க்க விறுவிறுக்க வேறுவே றூர்களுக்கே
ஓடுவதும் தேடுவார்க் கஞ்சி யொதுங்குவதும்
கூடுவதும் நாள்பார்த்துக் கொள்ளை யடிப்பதுமாய்ப்
பேயாய் அலைந்து பிறரைத் துயர்படுத்தி
நாயாக வாழ்க்கை நடத்திவந்த நாயகனும்
ஓரிரவில் தோழர் உதவ ஒருவீட்டில்
ஏறிக் குதித்திறங்கி ஏதேதோ கொள்ளையிட்டான்
ஊரின் புறத்தே ஒருகாட்டில் நண்பரெலாம்
சேரத் திருடிவந்த செல்வத்தைப் பங்கிடுங்கால்
அங்கொருவன் வந்தே அழகு மயிலொன்றை
இங்குநான் கொள்ளையிட்டு வந்தேன் எவரதனைச்
சேர்வதென்று தீர்மானம் செய்திடுவீர் என்றுரைத்தான்.
நானென்றும் நீயென்றும் நண்பர்க்குள் ஓர்சண்டை
தானெழுந்த தங்கே தடியன் அவனுரைப்பான்
கொண்டுவந்த பெண்மயிலோ கொள்ளையழ குள்ளவளாம்
கண்டுவந்த நானே களித்திருக்க எண்ணிடினும்
பங்கிட்டுக் கொள்ளும் பழக்கத்தை மீறாமல்
இங்கிட்டுக் கொண்டுவந்தேன் ஏற்ற முடிவெடுப்பீர்

## கொள்ளைப் பொருளில் அவள் ஒருபங்கு!

ஏழுபேர் நம்மில் எவருரிமை கொண்டாலும்
ஏழில் ஒருபங் கிழந்துவிட வேண்டிவரும்

பொன்னுரிமை கொண்டார்க்குப் பூவை யுரிமையில்லை
மின்னுமவள் வேண்டிற்பொன் மேலாசை விட்டிடுவீர்

அன்னான் விதிகேட் டயர்ந்தவப் புல்லரெலாம்
தின்னுங் கனியொத்த சேயிழையை எம்முன்னே

கொண்டு நிறுத்திடுவாய் கூர்ந்தவளைக் கண்ணாலே
கண்டு முடிவுரைப்போம் காட்டென்று கூறினரே!

மூடித் திரையிட்டு மொய்குழலைக் கொண்டுவந்தான்
ஓடித் திரைவிலக்கி னானொருவன் அப்பொழுதே

மின்னல் ஒளிர்ந்ததோ மேல்வான் இடியிடித்துப்
பின்னும் முழங்கிற்றோ என்னப் பெரிதாக

வள்ளி மணவாளன் வாய்கிழியக் கூச்சலிட்டுத்
துள்ளிக் குதித்தான் தொடாதே ஒருபயலும்

தொட்டால் பிணமாவாய் தூரப்போ வென்றுரைத்துக்
கட்டாரி தூக்கிநின்றான் கள்வர் அயர்ந்துவிட்டார்!

தேனொத்த சேயிழையைத் தீண்டப் படாதென்றே
ஏனிந்தப் பாவி தடுத்தான் எனவியந்து

கூட்டாளி யானோர் குமுறிநின்ற போதினிலே
வாட்ட மடைந்தங்கு வந்துநின்ற வள்ளியவள்

அத்தானென் றோடி அவன்மார்பிற் சாய்ந்துகொண்டாள்
சித்தந் தெளிந்தச் சிறுதொழிலோர் நீங்கிவிட்டார்

பொன்னே தவறுவழி போனேனை யுந்நிலைமை
இன்னே திருந்திவிட்ட தேடி யெழுந்திருப்பாய்

புத்தம் புதுவாழ்வு போற்றிடுவோம் என்றுரைத்தான்
**கைத்தலத்தைப் பற்றிக் கனிந்து!**

# வங்கங் கடந்த மங்கை

## உன்னைப் பிரிய

## உள்ளங் கலங்குதே!

போகத்தான் வேண்டுமா? பொல்லாக் கடற்பயணம்
ஏகத்தான் வேண்டுமா? என்னுயிரே என்னைவிட்டுப்
போகத்தான் வேண்டுமா? புத்தம் புதுவாழ்வில்
ஆகத்தாற் கூடி அணைந்து கலந்தஉயிர்
வேறுவே றாகிநெஞ்ச வேதனையைத் தாங்காமல்
கூறுகூ றாயிருக்கக் கூடுவதோ சொல்லுங்கள்!

ஆளுயரம் தாவி அகப்பட்ட கப்பல்தனை
மீள இறக்கி மிகச்சாய்த்து மேலெழும்பத்
தூக்கி அலையொன்று துள்ளுகின்ற வேளையிலே
தாக்கி அலையொன்று தண்ணீரை உள்ளடிக்கும்!
ஒன்றன்பின் ஒன்றாய் உருண்டு மரக்கலத்தை
நின்று நிலைக்காமல் நீரில் சதிராட்டிச்
சாய்த்தும் நிமிர்த்துமிகச் சஞ்சலத்தை உண்டாக்கிப்
பேய்த்தனமாய் நீரலைகள் பீறி உயர்ந்தெழுந்து
கூத்தாட்டம் ஆடுங் கொடுங்கடலில் அக்கரைக்குப்
பேர்த்தான் உருளும் பொருள் சேர்க்க வேண்டுமா?
எக்காலம் போய்ச்சேர்வோம் என்று கரைகாண்போம்
சொக்கேசா நீதான் துணையிருக்க வேண்டுமெனச்

சீறுங் கடலலைக்குச் சிக்கா துயிர்தப்ப
ஆறு முகத்தானே ஆதரவு வேண்டுமெனச்
சாய்ந்தும் நிமிர்ந்தும் தடுமாறிப் போம்கலத்தைத்
தாய்மாரி காத்துத் தயைபுரிய வேண்டுமென

எண்ணிக் கலங்கி இயற்றும் உயிர்ப்போரில்
வண்ணக் கடல்மீண்டு வாழ்வுக் கரையேறி

வந்தால் உயிருண்டு வாரா விடில்மங்கை
நொந்தழுத கண்ணீரில் நுரையற்ற உப்புநீர்

தோன்றிச் சுரந்து துவளப் புரிதலுண்டே
ஊன்றுகோ லாய்நம்பி உள்ள தலைவருயிர்

ஊசல் மணியானால் உள்ளம் பொறுப்பதுண்டோ?
காசும் பொருளும் கரைதாண்டிப் போனால்தான்

சேருமா? ஆற்றல் சிறந்தவர்க்குத் தாய்நாடே
சோறுபோ டாதா? தொழிலொன்றைச் செய்வதற்கு

வேற்றுநாட் டைவிட்டால் வேறு கதியிலையா?
ஆற்றும் வணிகம் அயல்நாட்டில் தான்செலுமா?

## சுரண்டுவதாய்ச்
## சொல்லுவார்!

ஆளுயரம் சீறும் அலையோடும் உள்நடுங்கக்
கோளுயரம் வீசும் கொடுஞ்சூறைக் காற்றோடும்
போட்டியிட்டுப் போராடிக் கப்பல் பொருள்காத்துக்
கூட்டிவிற்றுப் பொன்சேர்த்துக் கொண்டுவந்தால் அந்நாட்டான்

எங்கிருந்தோ வந்தான்; எதையெதையோ தந்தெங்கள்
தங்கஞ் சுரண்டிப்போய்த் தாய்நாட்டில் சேர்க்கின்றான்

என்று பழிதூற்றும் இத்தொழிலை விட்டுவிட்டு
நின்றுதாய் நாட்டில் நிகழ்த்துமொரு வாணிகத்தால்

மட்டாகச் சேரும் வரும்படியும் வாழ்வுதரும்
விட்டுவிட வேண்டுகின்றேன் வேறு தொழில்செயலாம்

என்று படபடத்தே எண்ணம் வெலவெலத்துக்
குன்றுத்தோள் நாயகனைக் கோதை அழகம்மை

வெப்பநீர் ஊறி விழியின் வழியொழுக
ஒப்புமா றேதேதோ உள்ளங் கரைக்கின்ற

நேரத்தே அங்கோர் நிழலுருவம் ஆடியதாம்!
ஈரத்தைக் காற்றுக் கிரவல் கொடுத்துளத்தைப்

பாலை வனத்துப் படுபாறை போலாக்கி
நீலக் கடலோடி நீண்ட நெடுநாளாய்க்

கப்பல் துறைமுகங்கள் காற்றுக் கடல்அலைகள்
ஒப்புக்கொண் டுள்ள உயிர்நண்ப ராய்த்திகழும்

செல்வப் பெருவணிகர் சீராளர் தன்மகனை
மெல்ல அருகழைத்து மீசை துடிதுடிக்க

இங்கேநீ பேச்சில் இருந்துவிட்டால் மாலுமிகள்
சங்கூதிக் கப்பல் தனைச்செலுத்திப் போய்விடுவார்

காற்றுக்குப் பாய்கட்டிக் கப்பல் புறப்படுமுன்
ஏற்றிடுவாய் போய்ச்சரக்கை; இந்நேரம் அங்கிருப்பாய்

என்று நினைந்திருந்தேன்; இங்கே யிருக்கின்றாய்;
நின்று கதைபேசின் நேரம் கடந்துவிடும்

எண்ணி முதன்முதலாய் ஏகும் பயணத்தை
வண்ண முறநடத்த வாய்க்காமல் போய்விட்டால்

செய்ய திருவாள் திருவருளை எய்தற்குப்
பெய்தமழை நீரைப் பிரித்துவாய்க் காற்கோட்டைச்

சோர்ந்த உழவன் துயருழந்தாற் போலுமென்றே
ஆர்ந்த பெரியோர்கள் அன்றே உரைத்துள்ளார்,

## சேர்க்கின்ற காலத்தே சேர்த்துவிடு!

காலத்தே சேர்த்துவந்து கட்டி வைத்துக் கொண்டால்தான்
ஞாலத்தே என்றென்றும் நம்மை மதிப்பார்கள்;
தேடிப் படைக்கின்ற செல்வம் திரண்டால்தான்
கூடி யிருந்துண்ணக் கூடும்; இளம்வயதில்
ஓடிப் பொருள்சேர்த்தால் ஓய்ந்துவரும் காலத்தே
வாடிக் கிடக்காமல் வாழ்வு சிறப்பாகும்
இன்று பிரிகின்ற ஏக்கத்தை எண்ணிவிட்டால்
நின்று நிலைக்கின்ற தன்மை நெகிழ்ந்துவிடும்.
கூடிப் பிரிவதுவும் கொண்டார் இணைந்திடலும்
நீடித்த வாழ்வில் நிகழ்தல் இயல்பேயாம்
அடுப்பங் கரைக்காரி ஆசைக்குட் பட்டால்
இடுப்பில் வளரும் இளையவரை ஆளாக்க
வேண்டாமோ தம்பி, விரைந்து புறப்படுநீ
நீண்ட பொழுதைநீ நின்று கழிக்காதே!
கண்ணீரைக் கண்டு கலக்க மடையாதே
தண்ணீர் தெளித்துவிட்டால் தானே தெளியும்
பொழுது கழியேல் புறப்படுவாய் என்றே
அழுதாள் செவியில் அறைந்ததுபோற் கூறி
அகன்றார்; மகனும் அவர்பின் நடந்தான்
பகுந்து வெடித்துலகு பாதியாய்ப் போனதுபோல்
ஒன்றாய்க் கலந்த உயிர்பிரிந்து சென்றதுபோல்
பின்னிப் படர்ந்தமரம் பேர்ந்து நடந்ததுபோல்
உள்ளப் பசைநீங்கி ஒட்டுவிட்டுப் போனாற்போல்
கள்ளமிலா மங்கை கவலைத் தணலிலே
வெந்து புழுங்கிமனம் வெம்பித் தவிதவித்துச்
சிந்தைதடு மாறித் திடுமென்று கீழ்ச்சாய்ந்தாள்!

## அன்று காதல்;
## இன்று பிரிவு!

தோழியர்கள் ஓடிவந்து தோகையினைச் சூழ்ந்துகொண்டார்
வாழியரோ வாழியெனத் தண்ணீர் வரவழைத்துக்

கோதை முகத்தடித்தார், கொஞ்சுங் குரல்குழைத்து
வேதனையைப் போக்க விளம்பிநின்றார் நன்மொழிகள்

சார்ந்த மயக்கத்தைத் தண்ணீர் விலக்கிடலாம்
சோர்ந்திருக்கும் உள்ளத்தைத் தூக்கி நிறுத்திடுமோ?

ஆதரவாய்ப் பேசுமவர் அன்பு மொழியெல்லாம்
காதலனின் அன்புமொழி காட்டுநலம் கூட்டிடுமோ?

ஆறுதிங்கள் தானிருக்கும் அன்புடையான் கைப்பிடித்துத்
தேறுதலைக் கேட்டவளோ தேம்பி அழுதிருந்தாள்!

ஒத்துப் பழகி உயிர்கலந்து முத்தமிட்டுத்
தித்திக்குஞ் செய்தி சிரித்திருக்கப் பேசிநின்று

இவ்வுலக இன்பம் இதுவென்று காட்டுதற்குச்
செவ்வை மொழிபேசிச் சிந்தனையில் வந்தமர்ந்து

பூவாங்கி வந்து புறத்தே நகைத்துநின்று
நாவல் நிறக்குழலில் நான்தான் செருகிடுவேன்

என்னைத் தடுக்காதே என்றுதன் கைமறித்து
மின்னலைப்போல் வந்து மிகநெருங்கித் தன்னோடு

சேர்த்தணைத்துக் கொண்டான்; சிறிதும் தயங்காமல்
போர்ப்புலியைப் போலப் புதுநாட்டுக் கேகிவிட்டான்

முத்துப்பல் வாய்திறந்து மூட ஒளிமறையும்
அத்தைப் பொறுப்பேனோ யானென்று கூறியவள்

மூக்குக்கு முத்தாலே மூக்குத்தி செய்திட்டான்
யார்க்குன் அழகுவரும் அன்பே எனமொழிந்தான்.

ஏழுவை ரத்தால் எழில்குறைந்த தென்றுசொல்லி
பேழைதிறந் தொன்பதுகல் தோடு பெறவைத்தான்

ஒன்பான் வகைக்கல்லும் ஓரிடத்தில் பார்ப்பதற்கே
உன்பால் சிறுகழுத்தே ஒக்குமெனக் கண்டசரம்
பண்ணிவந்தான்;நெற்றிக்குப் பச்சையிலே சிட்டிவைத்தான்
கண்ணைத் தவிர்த்திங்கே கால்முதலாய் உச்சிவரை
மெட்டி சிலம்பென்றும் மேகலைமுத் தாரமென்றும்
கட்டு மணிமாலை கைவளைவி காப்பென்றும்

அத்தனையும் பூட்டி அழகுபார்த் தென்னுயிரே
எத்தனைதான் போட்டாலும் எல்லா நகையுமிங்கே

உன்றன் மதிமுகத்துக் கொப்பாக வில்லையடி
என்றன் சுவைக்கரும்பே என்றுபல பாராட்டி

நாளும் விளையாடி நாமிருப்போம் என்றுரைத்தான்
ஆழுங் கடல்மேலே ஆடப்போய் விட்டானே.

நானுனக்கு நீயெனக்கு நாளும் இணைபிரியோம்
வானிருக்கு மாமதிக்கு வாழுமிடம் வேறுண்டோ

கூறேடி என்றுன் கொடும்பிரிவில் மூன்றுண்டு
தீரேடி என்று திரைகடலி லோடுகின்றுன்

என்று பலவெண்ணி ஏங்கிப் பொழுதெல்லாம்
நின்றுநின்று குன்றுக நிற்பதுபோல் தோற்றமிட

மேனி பசந்தழகு மேலுடலின் தோல்கரைந்து
தீனி யிழந்த சிறுபசுவைப் போல்மெலிந்து
பச்சை நரம்போடு பார்க்கத் தெரிகின்ற
குச்சி எலும்பு குறித்தெண்ணத் தக்கதுவாய்த்

தோற்றமுறக் காலத்தால் தோற்கடிக்கப் பட்டாள்போல்
காற்றுக் கசைகின்ற நாணலைப்போல் காட்சிதந்தாள்.

**அணு அணுவாய்க்**

**காலம் அசைகின்றதே!**

நேரில் உரையாடி நிற்பதுபோல் தாளெழுதி
வாரத்திற் கொன்று வழக்கம்போல் போக்கிடுவான்

தன்னலத்தைச் சொல்லித் தளிர்க்கொடியின் இன்பநலம்
என்னென்று கேட்டே எழுதி யிருப்பதற்கு

நானும் நலமென்றே நங்கை எழுதிடினும்
கானல் வெளிநீரே கண்ட நலமெல்லாம்!

உண்ணப் பிடிக்கா துறங்கப் பிடிக்காமல்
எண்ணக் கடலில் இயங்கு மரக்கலமாய்

நாளெண்ணி வாரம் நடக்கவைத்துத் திங்கள்தொறும்
கூளைக் கருப்பனூர் கோயிலிலே பொங்கல்வைத்து

மூன்முச்சு பொங்கலினி முப்பத்து மூன்முனல்
தோன்றுவான் என்னத்தான் தோளை யடைவனென்று

கற்பனையில் மூழ்கிக் கடவுளரை வேண்டிநின்று
அற்ப மகிழ்ச்சிகளில் ஆழ்ந்து கனவுகண்டு

நெஞ்சு பொறுத்து நினைவுலகில் தன்வாழ்வை
கொஞ்சஞ் சிறிதென்று கூடும் பொறுமையினல்

தள்ளி வரும்பழக்கத்துக் காளாகி நாடோறும்
வெள்ளிக் கதிரோன் விரைந்து கடன்புரிதல்

போலே பொறியாகிப் பொய்வாழ்க்கை வாழ்வாளின்
மேலே கருணையின்றி மெல்லப் பொழுதழியும்!

ஊர்ந்தூர்ந் தோராண் டொழிய ஒருநாளில்
சீராளர்; மாமனூர் தெண்ணீர்க் கடல்கடந்து

அன்பு மகனுக்கங் காதரவாய்ச் சார்ந்திருக்க
உன்னிப் புறப்பட்டார் ஊரெல்லாம் வாழ்த்துரைக்க.

எண்ணி இரண்டாண்டில் இங்கு வருவாரென்
கண்ணுக் கினிய கணவரெனக் காத்திருந்தாள்!

## யாரோ சொன்னர்;
## அழகம்மை மெய்துடித்தாள்!

அந்த இரண்டும் அகன்ருெழியச் சின்னளில்
வந்திடுவான் வந்திடுவான் என்று மகிழ்ச்சியிலே

பூரித்துக் கொண்டிருக்கும் போதில் ஒருநாளே
வாரித் துடித்தலற வந்த தொருசெய்தி!

தந்தையொடு மைந்தன் தகராறு செய்துகொண்டு
அந்தப் பதிவிட் டகன்றுபோய் விட்டானும்!

சண்டையின் காரணத்தைச் சாற்றக்கேட் டக்கணந்தான்
மண்டை யிடிந்ததுபோல் மங்கை துடிதுடித்தாள்.

ஈட்டிப் பொருள்சேர்க்க எண்ணிக் கடல்கடந்தோர்
நாட்டில் இறங்கியவர் நாடும் தொழில்செய்து

வீடு திரும்பிவந்தால் வேண்டும் பயன்நுகர்ந்து
கூடி மனைமக்கள் கொண்டநலம் பாராட்டி

எண்ணிக் களிப்போடு இனிய சுவைவாழ்வில்
கண்டிருக்கக் கூடுவதாம் காணற் கினிமையாம்

தாய்நாட்டில் கொண்ட தளிர்க்கொடியை எண்ணுமல்
சேய்நாட்டில் கண்ட சிறுமங்கை தோள்சேர்ந்தால்

யாருக் குவப்பாகும் அன்புடைய சீராளர்
நேருக்கு நேர்மகனை நிந்தித்துக் கண்டித்துப்

பற்பலவாய்ப் பேசிப் பழித்துரைத்த காரணத்தால்
நேச மகனும் நிலைதவறிப் பேசிவிட்டு

புத்தம் புதுத்தொடர்பைப் போற்றியவள் பின்சென்று
சித்தம் மயங்கித் திரிகின்ற செய்திதனை

யாரோ உரைக்க அழகம்மை மெய்துடித்து
தீராத வேதனையில் சிக்கிச் சிலந்திவலைப்

புக்கசிறு பூச்சியெனப் பொன்னின் எழில்மிக்காள்
மிக்க மனங்கலங்கி மேற்கொண்டு தன்னிலைமை

என்னென் றறியாமல் ஏக்கப் பெருமூச்சால்
சின்னமுறு நெஞ்சம் சிதறிக் கலங்கிநின்றாள்

பூத்தமலர் பேய்க்காற்றில் பொன்னிதழைப் போக்கடித்து
மீத்துநிற்கும் காம்பேபோல் மெய்குலைந்த தோற்றமுடன்

மெல்ல நடைபிணமாய் மேற்பரப்பில் ஆடிநிற்கும்
புல்லிதழைப் போலே பொருமி நிலைகுலைந்தாள்.

## வங்கங் கடந்தாள்

### மங்கை

என்றும் துணையின்றி ஏங்கித் தவித்திருக்க
ஒன்றுமிவ் வாழ்க்கை உதவாத வாழ்க்கையென

நெஞ்சு நடுங்குகின்ற நேரிழையாள் கொண்டிருந்த
பிஞ்சு மனமதுதான் பேதைமையால் தற்கொலையை

நாடும் ஒருபோது நன்றல்ல என்றெதுக்கித்
தேடும் ஒருவழியைத் தீராத துன்பத்தைப்

போக்கும் முயற்சி புதுவழியை ஆய்ந்தாய்ந்து
பார்த்திடும்போ தங்கே பளிச்சிட்ட தோரெண்ணம்.

ஆளன் பிரிந்திருக்க யானிங் கிருப்பேனேல்
மீளும் வழியில்லை மேதினியில் நான்வாழ

வேண்டுமென்றால் சீதையவள் வில்லழகன் பின்தொடர்ந்த
நீண்ட பயணம் நிகழ்த்தாது விட்டதென்றன்

குற்றம் எனநினைத்தாள்! கூடிக் களித்திருக்க
இன்றைக்கே கப்பலிலே ஏறி யவன்பதியைப்

போயடைய வேண்டுமென்று பொங்கும் உளத்தோடு
தூயாள் உணர்ந்தாள்; தொடங்கிவிட்டாள் தன்பயணம்!

நங்கையர்கள் கப்பலிலே நாயகனைப் பின்தொடர்தல்
பங்கமென்று சொன்ன பழமை பழித்தெழுந்தாள்
கப்பற் றுறைபோனுள் கட்டணத்தைத் தான்கொடுத்தாள்
எப்படியும் வாழ்வில் இணைந்திடுவேன் என்றுறுதி

கொண்ட வளைத்தடுக்கக் கூடுவதோ? மாலுமிகள்
கண்டு மனமிரங்கிக் கன்னல் மயிலுக்குத்

தக்க உதவிசெய்யத் தாமாக முன்வந்தார்
அக்கரையிற் சேர்க்க அவளுக் குறுதிசொன்னுர்.

ஆடுங் கலத்தில் அடிவயிறு தான்கலங்கக்
கூடும் மயக்கமது கோதைக் குறவில்லை
சீறும் அலைக்குச் சிறிதும் கலங்காமல்
சூரைப் புயலுக்கும் தோகை நடுங்காமல்

பத்துநாள் அப்பெரிய பாய்மரத்துக் கப்பலிலே
குத்துக்கல் போலே குலையாத நெஞ்சோடு

சென்றுள் கரைசேர்ந்தாள் சேய்நாட்டு மண்மிதித்தாள்
நன்ருகப் பார்த்தாள் நடந்தாள் வழிநோக்கி

நீச்சற் குளத்திலன்றி நீந்தத் தெரியாதான்
கூச்சற் கடலில் குதித்துக் கடத்தல்போல்

பேச்சுப் புரியாப் பிறநாட்டில் பேதைமகள்
மூச்சுத் துணிவோடு முன்னேறித் தான்நடந்தாள்!

**ஊரும் முகவரியும்**

**கூறிஞல் போதும்**

வையத் திருக்கும் வணிகக் கடல்கடந்து
மெய்யான செல்வம் மிகச்சேர்த்துச் சீர்பெற்ற

சீராளர் மாமனுர் செல்வக் கடைநோக்கி
தேராளுந் தெய்வத் திருவடிவாள் தான்நடந்தாள்

வானுலகு சென்ற வடிவழகன் மெய்நாட்டத்
தானடந்த கண்ணகிபோல் தாளாத நெஞ்சோடு
தன்னை மறந்தொருத்தி தாள்நத்திச் சேர்ந்திருக்கும்
மன்னைத் திருத்தவந்த மாதரசி தான்நடந்தாள்
தீராத கற்புத் திருவாள் அழகம்மை
சீராளர் வாணிகஞ் செய்யும் கடைநோக்கி
வாழ்வுக்குப் போராடும் வன்மை மனத்தோடு
தாழ்வுக் கடிகொடுக்கும் தன்மை யுடையாளாய்
மாமன் திருமுன் மருகி எதிர்நின்றாள்.
ஆமாம் அவள்தான் அவளேதான் என்றிசைத்துத்
தெய்வத் திருமகளைத் தீரா வியப்புடனே
உய்யப் பிறந்தவளை உற்று விழித்தபடி
அன்புத் திருமகளே யாரோடு நீவந்தாய்
என்ன துணிவென் றெதிர்ந்து வரவேற்றார்
அத்தானைக் காணுகின்ற ஆவலுடன் வந்தமகட்
கெத்தால் நிலையுரைப்பேன் என்று மனங்கலங்கிச்
சீராளர் சோர்ந்திருக்கத் தெய்வமகள் பேசுகின்றாள்
ஊரார் உரைத்துவிட்டார் உண்மை யறிவேன்நான்
மாமா அவரிருக்கும் மாளிகையைக் காட்டுங்கள்
ஆமாம் அவரை அழைத்திங்கு வந்திடுவேன்
என்றுரைத்த பூங்கொடியை எல்லை யிலாவியப்பில்
நின்று விழிசெலுத்தி நீண்டதொரு மூச்சுவிட்டு
நில்லம்மா சற்றே நினக்குத் துணைவருவேன்
செல்லலாம் என்றந்தச் சீராளர் சொல்லிநின்றார்!
அன்புள்ள மாமா அதுவேண்டாம் நான்தனியே
சென்று வருகின்றேன் செல்ல மகனுறையும்

இல்லம் இதுவென் றெடுத்துரைத்தாற் போதுமென்று
வெல்லுங் கருத்தாள் விளம்பி விடைகேட்டாள்.

ஊரும் முகவரியும் ஒன்ருய் எழுதியதாள்
காருடைய கூந்தலாள் கையில் கொடுத்தவர்தான்
பெற்ற மகனைப் பிரித்தழைத்து வந்தவன்நான்
குற்றக் கறைநீக்கிக் கொள்ள வழிசெய்வாய்
என்றே எதிர்பார்த்தேன்: ஏனோ தடுக்கின்ருய்
சென்றுநீ வெற்றியுடன் இங்குத் திரும்பிவர
வாழ்த்துகின்றேன் என்மகளே வாழ்த்துகின்றேன் போய்வருக
தாழ்த்தாமல் வெற்றி தனைக்கொணர்க என்றுரைத்தார்.

உள்ளங் கரவா உயர்ந்தோர்கள் வாழ்த்துமொழி
கொள்ளும் பெரும்பேறே கூட்டாதோ வெற்றிதனை
என்றும் மனமார ஏற்றமுற்ருேர் வாழ்த்துமொழி
நின்றுகொண ராதோ நிலைத்திருக்கும் வெற்றிதனை
அன்பு மனம்படைத்த ஆன்ருேர்கள் வாழ்த்துமொழி
இன்பநிலை வெற்றி இசையப் புரியாதோ

## புதுமனைவியும் பொற்கொடியும்

சீராளர் வாழ்த்துத் திருமொழியின் ஊக்கத்தால்
நேராகத் தன்கணவன் நேயம் எதிர்நோக்கிப்
போனுள் அவனின் புதுவீட் டிருகதவும்
தானே திறந்தாள் தளிர்க்கையால்; உள்ளே
நடந்தாள்; எழிலுருவ நங்கை யொருத்தி
திடந்தளரா மங்கை திருமுன்னர் வந்துநின்று
வேண்டியென்ன வந்தீர் விருப்ப முரைத்தால்நான்
ஈண்டுதவி செய்ய இருக்கின்றேன் என்றுரைத்தாள்.

பாண்டிமங்கை அந்தப் பதில்கேட்டுத் தானகைத்தே
ஈண்டுள்ள என்கணவர் தம்மை எனக்களித்தால்
போதுமென்று சொன்னாள்; புதுமங்கை சொல்லுபொருள்
ஏதென் றறியா திருந்தாள்; உயிரான
என்கணவ ரன்றி எவருமிங் கில்லையம்மா
நின்கணவர் யாரோ நிகழ்த்துகென்று கேட்டாள்.
அழகம்மை அப்போதே அந்தப் புதியாள்
எழிலுள்ளந் தன்னை எளிதாய்ப் புரிந்துகொண்டாள்.
தன்கதையை முற்றுந் தடதடவென் றொப்பித்தாள்
என்வாழ்வை உன்கையில் இன்றுநான் ஒப்படைத்தேன்
உன்கருத்தைச் சொல்வாய் ஒரு நொடியும் என்னாலே
துன்ப முனக்கில்லை தோழீ என்றழைத்தாள்.
இரண்டுமன மொன்றி இருக்கின்ற வாழ்வைத்
திரண்டூர் எதிர்த்தாலும் சின்னமுற மாட்டாதாம்.
ஒன்றி யிருந்தவர்கள் ஒத்திருக்க மாட்டாமல்
சென்றுவிட்டால் வேறோர் திருத்தோளை நாடித்தம்
வாழ்விற் புதிய வளஞ்சேர்த்துக் கொண்டிடலாம்
தோழமைக்கு வேறோர் துணைதேடிக் கொள்ளென்று
பாடம் உரைத்தாள்அப் பண்பில் வளர்ந்தஅவள்
மாடப் புறுவனைய மங்கை அழகம்மை
எங்கள் தமிழ்நாட்டில் இவ்வழக்கம் இல்லையம்மா
தங்கத் திருத்தாலி தன்னை யளித்தார்க்கே
என்றும்உரி யாராய் இருந்து நலங்காத்து
நின்று புகழ்நிறுத்தி நேயத் துடனிருந்து
வாழ்ந்திடலே எங்கள் வழக்கம்; பிரிந்துவிட்டால்
மாய்ந்தாலும் மாய்வோமே அல்லாமல் மற்றொருவர்
தோளின் துணைநாடித் தோகையர்கள் வாழ்வதில்லை
நீளவரு மிந்த நிலையான பண்பாட்டை

மீறித் தமிழ்நாட்டு மின்கொடியார் செல்வதில்லை
ஊறிநறுந் தேன்குடத்தில் உள்ளிருக்கும் இஞ்சியென
வாழ்ந்த திருவாழ்வை மாற்றி யொருவாழ்வு
தேர்ந்துகொள்ளும் பான்மை சிறிதும் எமக்கில்லை.

## கொண்டவரைப் போற்றும் குலம்

ஆசைக்கு வாசமலர் அன்றன்று சூடிடலாம்
பூசைக் குரியதிருத் தெய்வம் புதுக்குவதா?
என்றாள் அழகம்மை ஏந்திழையாள் கேட்கின்றாள்
உன்றன் நடவடிக்கை ஒன்றிவர வில்லையென்றே
கைவிட்டுச் சென்றவரைக் கட்டுப் படுத்திடநீ
வெய்தாய் முயல்கின்றாய்; வேண்டார் உடன்வாழ
எண்ணுமுன் போக்கே எனக்கு வியப்பாகும்
மண்ணில் உயிர்க்குயிராய் வாழ்தல் இயலாதேல்
கூடி யிருப்பதினும் கொள்கைக் குரியவரைத்
தேடிநலந் துய்த்தல் சிறப்பாகும்; இன்றென்னை
நாடி யணைந்தவரை நானும் விரும்புகின்றேன்
பாடி மகிழ்கின்றோம்! பண்பு சரியின்றேல்
நெஞ்சு கருதுகின்ற நேரிழையாள் வேறொருத்தி
துஞ்சப் பிரிந்திடுவார் தூய கருத்துடனே
என்னை விரும்புகின்ற இன்னொருவ ரைத்தேடிப்
பின்னு மணவாழ்வு பெற்றிருப்பேன் இவ்வுலகில்
வாழும் வழியிதுவே; பண்டை வழக்கென்றும்
சூழும் பழியென்றும் சொல்லு மொழியெல்லாம்
வாழ்வை வீழலாக்கும் வார்த்தைகளே நீயறிக
தோழியே செல்க! துணைவர் வரும்நேரம்

ஆயிற்றென் ருளவ் அழகு மயிலனையாள்
தாயிற் சிறந்த தயையுடையாய் உன்வீட்டு
வாயில் மிதித்தவளை வாட விரட்டாதே
கோயில் இறைவனினும் கொண்டவரைப் போற்றும்
குலத்தில் பிறந்தாள்நான் கொஞ்சுமவர் நெஞ்சு
கலங்க நடந்திருப்பேன் என்று கருதுகின்றாய்
என்கணவர் உன்கணவர் என்றான பின்னேநான்
என்னுரிமை பேசின் எரிச்சல் உனக்குவரும்
ஒன்றுநான் கேட்பேன் உனைநீ மறுக்காதே
இன்றுமுதல் உன்வீட்டில் என்னைப் பணியாளாய்
ஏற்றிடநான் வேண்டுகின்றேன் இந்த உதவிசெய்வாய்
தூற்றியனுப் பாதே தொழுது வணங்குகின்றேன்
நாயகர்க்கு மட்டுமல்ல; நன்றவர்தாம் போற்றுகின்ற
நாயகியாள் உன்விருப்பும் நானறிந்து தொண்டுசெய்வேன்

## மேல்வானம் விட்டு வந்த

## மின்னல்

கண்கலங்க நெஞ்சிளகக் காதலியாள் கட்டுரைத்த
பண்பு மொழிகேட்டால் பாம்பும் மனமிரங்கும்!
குன்றிக் குளறுமொழிக் கூற்றுக்குச் சாத்தானும்
நின்று மனமிரங்கும்! நேயத்தில் மிக்கவளாம்
அந்தப் புதுமங்கை அன்பு மனமிரங்கி
சிந்தித்தா ளென்றால் சிறிதும் வியப்பில்லை.
வந்து மனம்நொந்து நிற்கின்ற பாவைக்கு
எந்த வழிசொல்லி எவ்வா றுதவிடவென்று
அந்த எழிலரசி ஆராய்ந்து நின்றிருக்க
வந்து நுழைந்தான் வரலாற்று நாயகனே.

என்ன அதிர்ச்சி! எதிர்பாராப் பேரதிர்ச்சி!
மின்னல் வழிதவறி மேல்வானம் விட்டிறங்கித்
தன்வீட்டுக் கூடத்தைத் தஞ்ச மடைந்ததோ!
பின்னும் அதுதன்னைப் பேதலிக்கச் செய்ததோ!
முன்னுந் தெரியாமல் மூண்டிருக்கும் சூழ்நிலையாம்
இந்நிலையில் என்செய்வ தென்றறியா தாகிச்
சிந்தை குழம்பித் திகைத்திருக்கும் போதினிலே
அந்தப் புதுமனைவி ஆவேசங் கொண்டவள்போல்
ஊரில் ஒருமனைவி உள்ளாள் எனுஞ்செய்தி
நீரேன் மறைத்தீர்? நிகழ்த்திடுவீர் இப்போதே!
எம்மில் உமக்கினிமேல் யார்வேண்டும் என்றுரைப்பீர்
இம்மங்கை யும்மை எதிர்பார்த்துக் காத்திருந்தும்
புன்செயலைக் கேள்வியுற்றுப் போராட வந்துவிட்டாள்
முன்னுரிமை கொண்ட முறைப்படியே அன்னவளைச்
சேர்ந்துவிட்டால் இந்தச் சிறியாள் கதியென்ன
தேர்ந்து முடிவெடுப்பீர் தேவை எவளென்பீர்
இந்நேரத் தொல்லை இதுஒழிந்தாற் போதுமென்றே
ஒன்று யிருப்பீரென் றேத நினையாதீர்!
உண்மையுள்ள காதலிலே உள்ளங்கள் ஒன்றிலொன்று
வண்ணமுற ஒட்டுவதே வாழ்விற் சிறப்பாகும்
ஒன்றுக் கிரண்டென்றால் ஒட்டுறவு விட்டொழிய
நின்று நிலைப்பதெலாம் நேரில் பிணக்குகளே!
எம்மில் ஒருவரைநீர் ஏற்றிடுக; மற்றொருவர்
கும்முங் கடலுக்கோ கூவும் நெருப்புக்கோ
தொங்குங் கயிற்றுக்கோ தொட்டணைக்கும் மின்னுக்கோ
பங்காளி யாகின்றோம் பார்த்து முடிவுரைப்பீர்!

## பொய்யருடன் வாழ்வதா?

*பட்டுப் படபடெனப் பட்டாசு விட்டதுபோல்*
*கொட்டி யலந்தாளக் கோதைக்கு மாற்றுரைக்கத்*

*தோன்ருமல் அங்கே துணுக்குற்று நின்றிருந்தான்*
*ஊன்ருத கோலைப் பிடித்த கிழவன்போல்*

*தாய்க்குத் தெரியாமல் தாஞய் அடுக்களையில்*
*போய்க்கையைச் சுட்டுப் பொசுக்கிக்கொண் டான்போலப்*

*பேந்த விழிவிழித்துப் பேசும் வலிவின்றி*
*சேர்ந்த மனைவியர்க்குத் தீர்ப்புரைக்கும் தெம்பின்றி*

*உட்கார்ந் திருந்தானின் உள்ளத் துடிப்புணர்ந்து*
*பட்டு மனம்படைத்த பாவை அழகம்மை*

*அந்தப் புதுப்பெண்பால் "அக்கா, இருவருமே*
*இந்த மனைவிளங்க ஒன்ருய் இருந்திடுவோம்"*

*என்ருள்; அதுகேட்ட ஏந்திழையாள் சொல்கின்ருள்*
*நன்றென்று நீநினைத்தால் நாஞெப்ப வேண்டாமா?*

*ஒன்றி மனங்கலந்த உள்ளத்தில் மற்ருெருத்தி*
*சென்று புகுந்தாலும் தீதாகும் வாழ்க்கையிலே*

*எவ்வா றிருவர் இணைந்திருக்கக் கூடுவதாம்?*
*ஒவ்வாப் பழக்கத்தை ஓதாதே விட்டுவிடு!*

*முன்னைத் தொடர்பை முழுதும் உணர்த்தாமல்*
*என்னைத்தன் காதலியாய் ஏற்றுவிட்ட பொய்யருடன்*

*வாழ மனமில்லை; வையத்து மீண்டுமொரு*
*தோழமையும் நாடத் துணியேன்; எனக்குரிமை*

*உண்டெனி னும்வேண்டேன்; உலகுக்குத் தொண்டுசெயக்*
*கண்டேன் ஒருவழியைக் கண்டுகொண்டேன் நானென்று*

*புத்தமடம் ஒன்றுக்குப் போய்ச்சேர்ந்தாள் பிக்குணியாய்*
*அத்தனையும் பார்த்தே அசையாமல் வீற்றிருந்த*

சீராளர் பெற்றெடுத்த செல்வன் அழகம்மை
கூரான கண்விழியைக் கொஞ்சம் நிமிர்ந்துருவ
வங்கக் கடல்கடந்து வந்த இலட்சியத்தை
அங்கடைந்த அன்புத் திருவுருவாள் அப்போதே
ஓடி யணைந்தாள் உவப்பத் தலைக்கூடிப்
பாடி மகிழ்ந்தான் பதி!

# இருளகன்றிட ஒளிபெருகிட

## இன்பத்தை
## ஏந்திவரும் நாள்!

திங்கள் பிறந்தைந்து நாட்களும் தீர்ந்தனவே
தங்க மனமுள்ளார் அத்தான் தகதகக்கும்

தாமரைப்பூப் போல் மலர்ந்து சம்பளத்தை எண்ணிவந்து
கோமகளே என்றென்னைக் கூவி அழைத்துக்

கொடுப்பார்; இருகையும் கூடி நிறையத்
தடுப்பாரில் லாமல் தனத்தை வரவேற்கும்

வாடிக்கை யான நிகழ்ச்சி இதனோடு
வேடிக்கைப் பேச்சும் விருந்தும் கலகலக்க

வீடு மணக்கும்! விரையும் கடன்காரர்
பாடுஞ் சிறப்படையும்! பல்பொருளும் வந்தேறும்!

வேலை புகுவாரின் வீட்டில்இந்தச் சம்பளநாள்
கோலப் படுத்தும் குதூகலத்தை நாடாளும்

மன்னர்களும் கண்டிருக்க மாட்டார்; குடித்தனத்தில்
இன்னலெலாம் போயொழிய இன்பத்தை ஏந்திவரும்

கன்னலன்றோ இந்நாள்! கணவன் மனைவியென
மன்னும் இருவர் மணவாழ்வில் புத்துணர்வு

சேர்க்கும் திருநாள்! சிரிப்பும் விளையாட்டும்
ஆர்க்கும் புதுநாள்! அணிமணிகள் கொண்டுவரும்

வீட்டு விழாநாள்! விழைகின்ற திட்டமெலாம்!
தீட்டிச் சுவைபார்க்கும் செல்வப் பெருநாளாம்!

## இன்பத் திருநாளில்
## ஒரு கவலைத் தோற்றம்

இந்நாளில் அன்புடையாள் இன்பவல்லி தன்கொழுநன்
பொன்னனை நெஞ்சுடையான் பொன்னப்பன் நல்வரவை

வாசற் படியருகில் வந்துநின் றுசையுடன்
நேசங்கொண்டானை நினைத்து வழிபார்த்து

நின்றிருந்தாள்; அந்தி நிலைகாட்டிச் செங்கதிரும்
சென்றதுவே மேலைத் திசையின் அடிப்புறத்தே!

கையில் முழப்பூவும், கண்ணில் ஒளிப்பூவும்,
பையில் பழச்சீப்பும், பட்டுத் துணிக்கட்டும்

கொண்டு குடித்தனத்தின் கோவேந்தன் போலவந்து
வண்டுவிழி இன்பவல்லி வாயில் நகைமலரத்

தான்மலரும் பொன்னப்பன் தன்கை வெறுங்கையாய்த்
தோன்றித் தளர்ந்து தொலைவில் நடந்துவரும்

காட்சிகண்டாள்! புத்தம் புதிதாய்க் கவலைப்பேய்
ஆட்சிகொளும் தோற்றம் அவள்கண்டு நெஞ்சதிர்ந்தாள்!

பேச்சில்லை; அங்கே பெருகும் சிரிப்பில்லை;
மூச்சில்லை; வாயில் முறுவல் நகையில்லை.

அந்தி யகல இருள்நுழையும்; அஃதேபோல்
வந்து நுழைந்த மணவாளன் தன்பின்னே

ஊமை யுடன்போகும் ஊமை எனத்தொடர்ந்து
தீமை எதுவென் றறியாத் திருவனையாள்

வீட்டினுட் சென்றாள்; விரைந்துதண் ணீர்மொண்டாள்;
ஆட்கொண்டான் கையில் அதுகொடுத்தாள்;
காலமுகத்தைத்

தூய்தாக்கிக் கூடத்தே தொப்பென்று குந்தியவன்
வாய்பார்த்துப் பேதை வணங்கிக் கலங்கிநின்றாள்!

## சங்கம் முழக்கினோம்; தங்கமே கலங்காதே!

இன்று தொழிற்சாலை வேலை நிறுத்தமடி
ஒன்றுங் கலங்காதே, உட்கார் எனப்பணித்தான்.

என்னவோ ஏதோ இடர்ப்பா டெனக்கலங்கிப்
பின்னிச்சிக் குண்டிருந்த பேதை மனந்திருந்தி

வேலை நிறுத்தமா என்ன விவரமென்று
கோலமுறு நெஞ்சு குறுகுறுக்கக் கேள்வியிட்டாள்.

சம்பளத்தைக் கூட்டென்று தான்கேட்டோம்; நாள்நாளும்
வம்பை வளர்க்கும் பொறுப்புடையார் தாமறுத்தார்;

எங்கள்கோ ரிக்கைதனை ஏற்குமட்டும் போரென்றே
சங்கம் முழக்கிவிட்டுத் தான்வந்தோம் என்றுரைத்தான்.

எத்தனைநாள் போராட்டம் என்று மனைவிளக்காள்
அத்தானும் பொன்னப்பன் ஆண்மைத் திருமுகத்தைப்

பார்த்து வினவினாள்; பச்சைக் குழந்தைநீ
போர்க்கொடியைத் தூக்கிவிட்டோம்; அந்தப்
பொறுப்புடையார்

கோரிக்கை தன்னைக் குறையாமல் ஏற்குமட்டும்
போருக்கு நிற்போம்; பொறுத்திருந்து பாரென்றான்.

சம்பளநாள் சென்று சமர்தொடுத்தால் தீதின்றே;
வம்பும் நடைபெறலாம்; வாழ்வும் நடக்குமென

உள்ளத்தின் எண்ணம் உரைக்காமல் ஆளனையே
கள்ளமற்றாள் நோக்கிக் கணநேரம் நின்றிருந்தாள்!

பார்த்தபடி நின்றால் பசிதீரு மாவென்றே
ஆர்த்திருக்கும் நெஞ்சத்தின் ஆணைக்குக் கட்டுண்டே

ஓடினாள் ஓடி உணவுகொண்டு வந்தெதிரே
வாடிக்கை போலே வாழை யிலைவிரித்தாள்.

ஆளன் பசிதீர ஆறு சுவையுணவும்
கோளம் பொறியல்ஒரு கூட்டோ டவியலென
எண்ணும் பொழுதேநா எச்சில் சுரந்தூரப்
பண்ணிவைத்த காய்கறிகள் ஆவி பறக்கின்ற
சூட்டோடும் நல்ல சுவையோடும் ஊறவைத்த
காட்ட முறும்ஊறு காயும் எடுத்துவைத்தாள்.
உண்பான் மனங்களிக்க ஊட்டுகின்ற வள்ளியெனக்
கண்ணுங் கருத்தாய்க் கவன முடன்படைத்து
நெஞ்சில் உவப்பேற நின்றிருந்த இன்பவல்லி
மஞ்சள் முகமும் மகிழ்ச்சி யொளிபெருக்கும்!

★

## தலைவர்கள் பிடிவாதம்;
## குடும்பங்களில் தவிப்பு!

வேலை நிறுத்தத்தால் வீட்டில் பொருள் குறைந்து
சேலை தவலையெலாம் சேட்டுக் கடைநாடிச்
சென்றுமீட் பாரின்றித் திங்கள் இரண்டாகக்
குன்று கரைந்ததுபோல் கூட்டல் கழிந்ததென
இல்லத்தில் இல்லாமை என்னும் ஒருநிலைமை
வெல்லங் கரைத்து விளையாடி நின்றதம்மா!
கோரிக்கை வைத்தார் குடும்ப நிலைதன்னை
நேரில் பொறுப்புடையார் நீள்விழிகள் காணுமெனில்
திங்கள் இரண்டுக்குத் தீங்கு தொடர்ந்திடுமோ?
வங்கக் கடல்போல வாடிக்கை யாய்ப்பொங்கும்
சிங்கத் தொழிலாளர் சேனைத் தலைவர்களும்
தங்கள் பிடிவாதம் தன்னைத் தொடர்வாரோ?

## தோலான மனைவி கண்டு துவண்ட நெஞ்சம்

இன்பவல்லி மேனி எழில்குறைந்து தோலாகித்
துன்ப வடிவாகித் தோன்றும் நிலைகண்டு
பொன்னப்பன் உள்ளம் பொருமினான்; போதுமினி
என்னால் பொறுக்க இயலா தெனக்கருதிச்
சம்மே ளனத்துள்ள தன்னொத்த தோழருடன்
அண்மிக் கலந்துரை யாடித் தலைவரிடம்
எல்லோரும் சென்றார்; இனிப்பொறுக்க ஆற்றோம்யாம்
வல்லாரே வேலை நிறுத்தம் நிறுத்திடுவீர்!
இன்றே தொழிற்சாலை தன்னைத் திறப்பித்தால்
நன்றாகும் என்றுரைத்தார்; நம்கோரிக் கைதன்னை
விட்டுக் கொடுத்தல் அவமானம்; வெற்றிவரும்
மட்டும் பொறுமையுடன் காத்திருக்க மாட்டீரோ?
என்று தலைவர் இயம்பினார்; பொன்னப்பன்
குன்று நிமிர்ந்ததுபோல் கூற்றம் அதிர்ந்ததுபோல்
உள்ளங் குமுறி உரைக்கத் தொடங்குகின்றான்:
கள்ளன் திருட்டைக் கடிவதுபோல் மானத்தைப்
பேசுந் தலைவரே, பேதைப்பெண் போலேவாய்
கூசித் தொழிலாளர் கூட்டமெலாம் இன்றுவரை
பேசா திருந்ததனால் பேயாட்டம் ஆடிவிட்டீர்
கூசாமல் கைநீட்டிக் கொள்ளைப் பணம்வாங்கிக்
கொண்டதனால் அன்றோஎம் கோரிக்கை தூங்கிற்று?
பண்டங் கரைந்து, பணங்கரைந்து, வாழ்வதற்குக்
கொண்ட மனையாள் குழந்தை களுங்கரைந்து
தொண்டை கரைந்து துடிப்புங் கரைந்திங்கு
வந்துநிற்கின் றோம்நீரோ, மானம் அவமானம்
இந்த விதமென் றெடுத்துரைக்க வந்துவிட்டீர்!

## தொழிலாளர் தலைவர்;

### கைக் கூலித் தரகர்

*கோரிக்கை யொன்று கொடுத்திரண்டு திங்கள்செல*
*யாருக்கு நட்டமென அஞ்சா திருக்கின்றீர்.*
*பேசி முடித்ததென்ன? பெற்ற நலமென்ன?*
*ஏசிக்கொண் டேயிருந்தால் இங்கு நிலையென்ன?*
*திட்டம் பிசுபிசுக்கச் செய்வதற்குக் கைக்கூலி*
*மட்டும் செலவழித்து மற்றச் செலவின்றி*
*ஆதாயம் பார்க்கின்ற ஆசைமுத லாளிக்குத்*
*தோதாகச் சூழல் உருவாக்கித் தந்துவிட்டீர்!*

## அறிஞர்வழி

### முன்னேற்றச் சங்கம்!

*நம்பிக்கை யற்றுவிட்டோம் நாங்கள் தொழிலாளர்*
*வெம்பிக் கிறுகிறுக்க வாழ்வில் விளையாடும்*
*வெற்றுத் தலைமையிங்கு வேண்டாம்; உமைவிலக்கி*
*முற்றுந் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை*
*ஏற்படுத்து கின்றோம்யாம் எங்கள் நலங்காக்க*
*ஆற்றல் மறவர் அணிகண்டோம் என்றுரைத்து*
*மீண்டான்தன் தோழருடன்! மேலும் செயலாற்றி*
*வேண்டாத் தலைமை விலக்கி அறிஞர்வழி*
*சாரும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை*
*ஊரில் உருவாக்கி உண்மைக்குப் பாடுபட்டு*
*நேர்மை நிலைநிறுத்தி நேயத் தொழிலாளர்*
*சீர்மை நலங்கூட்டி செய்யுந் தொழில்வளர்த்து*
*வெற்றிகண்ட கையோடு வீடு திரும்பிவந்தான்*
**வெற்றுக்கை யல்லஇது வெற்றிக்கை மானே**

94

கடமை புரிவோம்நற் கண்ணியத்தைக் காப்போம்
உடமை குறையாமல் ஊறு விளையாமல்
கட்டுப்பா டாகநலம் காக்கின்ற திட்டங்கள்
ஆற்றும் வழிகண்டோம்; அஞ்சாதே நீயென்று
தேற்றினன் இன்பவல்லித் தேனுள் திருவிளக்கை
ஏற்றினள் வீட்டில் இருள்போய் ஒளிபெருக
மாற்றினன் ஆற்றல் மதித்து!

# பொன்னும் வெள்ளியும்

சிலைவணக்கம் செய்வாரின் தலையறுத்துச்
சிந்துகின்ற குருதிவெள்ளம் கண்டு நெஞ்சில்
அலைபாயும் பெருமகிழ்ச்சி காண்ப தென்றன்
அருங் கொள்கை என்றிடுவான் கஜினி மன்னன்
கலைவளர்க்கத் தன்னாட்டை வளப்படுத்தக்
காசுபொருள் சேர்ப்பதற்குக் கருதி நல்ல
நிலைபெற்றுத் திகழ்ந்திருந்த இந்துஸ்தானில்
நினைப்புவைத்தான்; படையெடுத்தான்; கொள்ளை
யிட்டான்!

இந்துக்கள் தேசங்கள் ஐம்பத் தாறே
என்றாலும் வேற்றுமையோ எண்ண லாகா!
சொந்தமகள் தனைமணந்த கணவன் பேரைச்
சொல்லியொரு புகழ்மாலை சூட்டி விட்டால்
நொந்திடுவான் ஓரரசன்; அண்ணன் வெற்றி
நோயாகும் தம்பிக்குத் தந்தை போனால்
எந்தவிதம் பிரித்திடுவோம் நாட்டை என்றே
எண்ணமிடும் இளவரசர் இந்துஸ் தானில்!

நல்லநல்ல ஊர்களுக்குத் தீயை வைத்தான்
நடுங்கிவரும் மக்கள்பொருள் பறித்துக் கொண்டான்
வல்லவராய்ப் படைதிரட்டி எதிர்த்த மன்னர்
வருவதெல்லாம் தோற்பதற்கே என்று காட்டிச்

சொல்லரிய கொடுமை யெல்லாம் செய்து கொள்ளைச்
சொத்தனைத்தும் தன்னாட்டிற் கொண்டு சேர்த்தான்
கல்லடுக்கிக் கட்டிவைத்த கோயி லுள்ள
கடவுளையும் விடவில்லை கஜினி மன்னன்!

உயிர்பறிக்க வந்திருந்தான் எருமை மாட்டில்
உட்காரும் யமதருமன்! மார்க்கண் டேயன்
அயரவில்லை சிவன்சிலையை அணைத்துக் கொண்டான்
அக்கணமே சிவன்வந்தார்; உதையும் விட்டார்!
பயந்தோடி மறைந்துகொண்டான் தருமன்; என்றும்
பதினாறாய் வரம்பெற்றான் மார்க்கண் டேயன்!
நயமுள்ள இக்கதையோ கடவுள் சக்தி
நனிபெரிதாம் என்பதற்குச் சான்று கண்டீர்!

நாட்டு மக்கள் துன்பமுறக் கொள்ளை யிட்டு
நட்டகல்லைத் தட்டிவிட்டுக் கோயில் சூழ்ந்த
கோட்டைதன்னை இடித்துமட்டம் ஆக்கி விட்டுக்
கொள்ளையிட்டான் அங்கிருந்த பொருளை யெல்லாம்!
வாட்டமுற்ற பக்தரெல்லாம் அழுதிருந்தார்
வரவில்லை சிவபெருமான் கஜினி மன்னன்
போட்டிருந்த திட்டமது வெற்றி காணப்
புறப்பட்டான் பொன்னோடும் பொருளி னோடும்!

பொருள்வேண்டும் போதெல்லாம் இந்தி யாவில்
புகுந்துகொள்ளை யடிப்பதுவே தொழிலாய்க் கொண்டு
வருவானும் கஜினியினை அடக்கு தற்கு
வல்லமையாய் உள்ளவர்கள் இந்து நாட்டில்
ஒருவரில்லை முப்பத்து முக்கோ டிப்பேர்
உண்டான கடவுளரில் உதவி செய்ய
ஒருவருமே வருவதில்லை என்றி ருந்தால்
உள்ளபொருள் போவதற்குத் தடையு முண்டோ?

பற்றுடையான் உயிர்காக்க எருமை மாட்டின்
பருத்தவுடல் ஏறிவரும் தருமன் தன்னை
எற்றியுதைத் திட்டசிவன் தன்சிலையை
இருதுண்டாய் விழவடித்த கஜினி தன்னை
நெற்றிக்கண் திறந்துறுத்துப் பார்த்த தாலே
நீருனன் என்னுமொரு கதையு மில்லை!
சுற்றிக்கொண் டோடிவிட்டான் கஜினி நாட்டான்
சுடர்வீசும் நவமணிகள் என்று சொல்வார்!

பிறநாட்டார் நெஞ்செரியக் கொள்ளை யிட்டுப்
பெருமையுடன் தன்னுட்டை வளப்படுத்தும்
திறனுடையான் கஜினி மன்னன்; கலை வளர்க்கும்
தெம்புடையான்; கல்வியினைப் பரப்புகின்ற
முறையறிந்தான்; பாவலரை ஆதரிக்கும்
மொழிப்பற்று மிக்குடையான்; கவிதை யின்பம்
நிறைந்திருக்கும் நெஞ்சுடையான்; நற்குணங்கள்
நிறைகுடமாய்த் திகழ்ந்திருந்தான்என்றும் சொல்வார்.

அரசவையில் கூடுகின்ற புலவர் தம்மின்
அருந்தலைவன் பர்தோசி—கவிதைச் சிங்கம்!
முரசறைந்து போர்கூட்டும் கஜினி மன்னன்
மொழித்திறத்தால் சபைகூட்டும் கவிதை வேந்தை
வரவேற்றுச் சிரித்தபடி கூறு கின்றான்
வளமான சொல்லடுக்கிச் செய்யுள் கட்டித்
தருகின்ற பெரும்புலவ கேட்கு மொன்றைத்
தருவாயோ மலர்வாயே திருவாய் என்றான்

வில்லெடுத்துப் போரிட்டு வீரங் காட்டி
விளங்குமொரு புகழ்சேர்த்த கஜினி மன்னு!
சொல்லெடுத்துக் கவிபாடிப் புலமை நாட்டித்
தொல்புவியில் நிலைத்தபுகழ் சேர்க்கு மென்பால்

மெல்லவந்து நீகேட்கும் பொருள்தான் என்ன?
 மேதினியில் அப்பொருளின் மதிப்பு மென்ன?
சொல்லிவிட்டுக் கேளென்ருன் மன்னன் நெஞ்சில்
 தோன்றியதாம் கருத்தறிய நினைத்த செம்மல்!

எண்ணரிய போர்செய்தேன் பொருள்கள் பெற்றேன்
 என்னைவந்து வணங்குகின்ற மன்னர் பல்லோர்
வண்ணமுடி தாழ்ந்ததுவும் கண்டேன்; என்றன்
 வாள்நுனியின் உயர்வும்நான் கண்டு விட்டேன்!
உண்ணவரும் பேரலைகள் கண்டும் அங்கே
 உறுதியுடன் உயர்ந்திருக்கும் கரையைப் போலே
மண்ணுலகில் நிலைத்திருக்கும் புகழைக் காண
 மனங்கொண்டேன் உதவிடுவாய் கவிதை மன்னு!

என்றென்றும் அழியாமல் இருக்கும் செய்யுள்
 எழுத்தினிலே என்புகழைப் பதித்து விட்டால்
நன்றென்பேன்; நீ மறுத்தல் நன்றன் றென்பேன்;
 நலமிக்க புலமையினை யுடைய வுன்சொல்
குன்றினிலே எனையேற்றி நிற்க வைத்தால்
 கொடுத்திடுவேன் அறுபதிஞு யிரம்பொன் னென்ருன்!
சென்றிடுக காவியத்தை எழுதி வந்து
 சேர்த்திடுக வேண்டுகின்றேன் என்று ரைத்தான்.

வாள்பாய்ந்த புண்வழியே வடியும் ரத்தம்
 வாதையுடன் துடிக்கின்ற உயிர்கள் கண்டும்
நீள்கரத்தால் திரட்டிவந்த நிதியை யெல்லாம்
 நின்னெதிரே வைக்கின்ருன் மன்னர் மன்னன்!
தோள்வலியால் சேர்த்துவந்த பொருட்கு வைதான்
 தொகுத்தெழுதும் காவியத்தின் விலைஎன் கின்ருன்!
நாள் முழுதும் உழைத்தாலும் கிடைத்த லாமோ,
 நல்லதொகை ஒப்புக்கொள் என்னு முள்ளம்!

அறுபதினா யிரம் பொன்னும் கஜினி மன்னன்
அன்புடைய வேண்டுதலும் கவிஞன் நெஞ்சில்
சுறுசுறுப்பை யுண்டாக்கிக் கவிதை ஊற்றைத்
தோற்றுவித்த தென்றிடலாம்! காவி யத்தின்
பெறுமதியை எண்ணியந்தக் கவிஞன் உள்ள
பெருந்திறமை யத்தனையும் கூட்டி வைத்து
விறுவிறுப்பாய் எழுதிவிட்டான்; கொண்டு வந்தான்;
வேந்தனுமக் காவியத்தைப் படிக்க லானான்!

இருந்தபல நற்குணத்திற் குவமை காட்டி
இல்லாத சிலவற்றைப் புனைந்து கூட்டிப்
பெருமையெல்லாம் அவன் பெயரே என்று நாட்டிப்
பேசுமொரு காவியத்தைப் படிக்க லானான்!
வரியெல்லாம் கஜினியவன் புகழ் மணக்கும்
வகையெழுதி வைத்திருந்த கவிதை மாலை
விரிகடலின் நடுநிலைத்த உலகம் போலே
விளங்குமந்தக் காவியத்தில் தன்னைக் கண்டான்!

சொல்லெல்லாம் இனித்திருக்கும்; சொல்லினுள்ளே
தொக்கிநின்ற பொருளெல்லாம் புகழ் மணக்கும்;
வெல்லம் போல் பாடல்களில் தன்னைக் காட்டி
விளையாட்டு நடத்துகின்ற திறமை கண்டான்!
நல்லொளியை வீசுகின்ற இரத் தினத்தால்
நாடாளும் கஜினிபெயர் எழுதினாற்போல்
வல்லமையாய்க் காவியத்தில் எழுதி விட்டான்
மண்ணுலகில் கஜினிபெயர் நிலைக்கு மாறே!

காவியத்தைப் படித்த மன்னன் உள்ள மெல்லாம்
களிகொள்ள எதிர்நின்ற கவியை நோக்கிப்
பார்வியக்கக் கவிபாடிப் புகழைச் சேர்த்த
பர்தோசிக் கவிமன்னா நன்றி! நன்றி!

நானுனக்குச் சொன்னபடி பொற்குவையை
நல்குதற்குப் பொருளில்லை ஆகையாலே
தேனிகர்த்த கவிதைக்கு வெள்ளிக் காசே
ஏற்றிடுக அறுபதினு யிரமே என்றான்.

பொன்கொடுப்ப தாய்ச்சொல்லி வெள்ளிக் காசைப்
புகழ்கவிக்குத் தரநினைக்கும் புன்மை மிக்க
மன்னவனே, உன்னெதிரில் நிற்பதுந்தான்
மடமையுனைப் புகழ்ந்துபெருங்காவி யத்தைப்
பன்னியதும் பெரும்பாவம்! என்று சொல்லிப்
பர்தோசிக் கவிஞனவன் வெளி நடந்தான்!
சொன்னசொல்லைக் காவாத மன்ன னுந்தான்!
சுகப்படுவா னோவென்று சபித்து விட்டான்!

பகலென்றும் இரவென்றும் பாரா தங்கே
பண்ணோடும் சொற்களிலே உயிரைத் தேக்கி
நிகரற்ற கவியாக்கி இனிமை சேர்த்து
நீசனைப்போய்க் காவியத்தில் புகழ்ந்து விட்டேன்!
தகவில்லா ஆசையினால் புல்ல னானேன்;
தடிபிடித்த கொள்ளையனை மன்ன னென்று
மிகைப்படுத்திப் பாடிவிட்டேன்; தவறுசெய்தேன்
மேற்கொண்டு செய்வதென்ன என்றி ருந்தான்!

பொன்னென்றால் மயங்கிடுவார், பொய்யு ரைப்பார்!
புலவரென்று பெயர்கொண்டார் என்று மக்கள்
என்னையொத்த கவிவாணர் தம்மை யெல்லாம்
இகழ்ந்துரைக்கத் தக்கசெயல் செய்து விட்டேன்.
இன்னமும்நான் உயிர்வாழத் தகுதி யில்லை
என்றேங்கி நின்றபெரும் புலவன் அங்கே
தன்னுளத்தை யழுத்துகின்ற துன்பந் தன்னைத்
தாங்குதற்குச் சக்தியின்றி யுயிரை விட்டான்!

கவிவாணன் நெஞ்சினிலே துன்ப மேற்றிக்
காய்சினத்தால் அவனிருக்கும் வேளை பார்த்துக்
குவிபொன்னை யனுப்பிவைத்து வியப்பி லாழ்த்திக்
கொள்ளையின்பம் சேர்ப்பதற்கே எண்ணி யந்தப்
புவிமன்னன் வண்டிகளில் அனுப்பி வைத்த
பொன்னெல்லாம் ஒருவாசல் வழியே செல்லக்
கவிவீட்டின் மறுவாசல் வழியே வந்த
சவப்பெட்டி கண்டார்கள் நாட்டி லுள்ளோர்!

புத்தமுதச் சொல்கூட்டிப் புகழை நாட்டும்
புலவனவன் முடிவுதனைக் கேட்ட போது,
சொத்தெல்லாம் பறிபோகப் பார்த்தி ருந்தும்,
தூய்தான கடவுள்சிலை உடைந்த போதும்,
குத்துயிராய் மக்கள்வதை யுற்ற போதும்,
கொடியனையார் கற்பழிக்கப் பட்ட போதும்,
இத்தேச மக்கள்கொண்ட துயர மெல்லாம்
எழுந்தொன்றாய்ச் சேர்ந்ததுவே கஜினி நெஞ்சை!

# கொய்யாக் காதல்

## எழில்புரி அரசவீதியில் இளைஞன்

புத்தன் உருவம், பொருந்துகலை ஞானங்கள்
இத்தனையும் கொண்ட இளைஞன், எழில்புரியின்

கீழரச வீதிவழிச் சென்றான்; கிளைத்தோங்கும்
வாழ்த்துகின்ற பக்தி வழிந்தொழுகும் கூட்டத்தார்

தூக்கிவரும் பல்லக்கில் செய்ய சுடரொளியோ!
நல்வயிரப் பேரொளியோ! நல்லோன் திருமுகம்

வில்லன்ன கண்ணிரண்டும் வீசும் ஒளி! என்ன
எண்ணும் படியழகு வாய்ந்தான் இருந்தபக்தர்

பண்ணெழுகப் பாடத் தலையசைக்கும் பாங்கொன்றே
பொன்னாயிரங் கொடுக்கப் போதுமெனில். வந்திருந்த

அன்னோன் மொழிகேட் டசையாத் தலைகளுண்டோ?
கொண்ட கருத்தைக் குறிப்புகளைக் கொள்கவெனக்

கண்டமக் கட்கெல்லாம் காசினியிற் சொல்லிவைத்தான்!
வந்தார் அவனைவிட்டுப் போகச்சிறிதேனும்

சிந்தையின்றிச் சூழ்ந்திருக்கச் சீனிகண்ட சிற்றெறும்பின்
கூட்டம் குழுமுதல்போல் மக்கள் தொடர்கின்றார்.

ஆட்டம்கொடுத்திருக்கும் பல்லக்கின் உள்ளே, தான்
வீற்றிருந்த வாறே விளக்கிச் சமயநெறி

சாற்றும் அழகினிலே மக்களெலாம் சார்ந்துவிட்டார்
என்னென்போம் சொன்னயத்தை என்று.

## இளைஞன் அழகில்

## விலைமகள் ஈடுபாடு

கண்ட மக்கள் தொடர்ந்துவரக்
காணு மக்கள் ஓடிவரக்
கொண்ட கொள்கை யுரைத்திட்டான்
குறிப்பால் புத்தகம் உயர்வென்முன்
பண்டம் அற்ற பாழுடம்பில்
பாவம் ஆசை கொளலென்முன்
கண்டபோதில் அவனழகில்
காதல் தோன்றும் உண்மையிலே!

பல்லக் கேறி எழில்புரியின்
பார்வைக் கழகாம் கீழரச
நல்ல வீதி வழிவந்தான்
நங்கையர் வாயிற் படிநின்முர்
மெல்லிய லாரிற் சிலபேர்கள்
மேலுற நாணம் பொங்கியதால்
பல்கணிப் பின்னின் றவனழகைப்
பார்த்துப் பருகிக் கொண்டிருந்தார்.

அந்த வீதிக் கடைசியிலே
அங்கோர் மாட மீதினிலே
சிந்தை மானம் விட்டவளாம்
சிரித்துக் குலுங்கும் விலைமகளாம்
அந்த நகரத் திளைஞர்களை
ஆசை காட்டிப் பொருள்பறித்தாள்
சுந்தரி என்னும் பெயருடையாள்
தோழிய ரோடும் நின்றிருந்தாள்.

இளைஞன் அழகு மிக்குடையான்
இவனைச் சேர்தல் எங்ஙனமே?
விழைவு, பொருளாய் இதுவரையில்
வீணே கழித்தேன் நாளெல்லாம்
அழகின் தேவன் ஐயனிவன்
ஆசைப் படுமோர் விதங்கண்டு
பழகிக் காதல் பெறுவேனேல்
பயன்இப் பிறவி என்றுரைத்தாள்.

புத்த சமயம் சேர்ந்தவர்கள்
பொன்ஞே பெண்ஞே வேண்டார்கள்
சித்தங் கல்லாய்ச் செய்தவரே
சேர்தற் கேலும் சமயத்தில்,
உத்தம னென்று பேர்பெற்ருல்
ஊர்கள் சுற்றிக் கொள்கையினைப்
புத்தம் பரவப் பரப்பிவரப்
போக்குவ ரென்ருள் ஒருதோழி.

சுந்தரி கேட்டுச் சோர்வெய்தித்
துடித்தெ ழுந்தே பின்சொல்வாள்
என்றன் தோழி மறுக்காதே!
இளைஞன் சென்று தங்குனிழல்
எந்த இடமென் றறிந்துவந்தே
எனக்குச் சொல்வாய்! இரவின்முன்
அந்தர மாகச் சென்றவனை
யானுங் காண வேண்டுமென்ருள்.

இன்பம் ஒன்றே இத்தனை நாள்
எய்தி யிருந்த நீ இனிமேல்
துன்பம் கொள்ளச் செய்வதற்கே
துணையாய் அழகைக் கொண்டுள்ளான்

அன்னம் அன்ன நடையுடையாய்!
யான்நின் ஆணை ஏற்கின்றேன்
சொன்னேன் அன்னோன் நின்னழகில்
சொக்கான் என்றாள் அத்தோழி.

அழகிற் சொக்க மாட்டானோ?
அன்பிற் சொக்க வைக்கின்றேன்
மழலை போலப் பேசியவன்
மனத்தைக் கவர முயல்கின்றேன்
பொழுது கழிய நிற்காதே.
போவாய்! விரைந்தவன் தங்குமர
நிழலைப் பார்த்து வருவாய். என்
நினைப்பைக் கெடுக்கத் துணியாதே!

என்றனள் சென்றாள் அத்தோழி.
ஏனைய தோழியர் எல்லோரும்
கன்னியைக் கண்டு காமுற்ற
காளையர் தம்மைக் கண்டுள்ளோம்
கன்னி கண்டு காமுறவே
காளை ஒருவன் உள்ளதனை
இன்று கண்டோம் விந்தையிதே
என்று பேசிச் சென்றார்கள்.

தோழி வரவை எதிர்நோக்கித்
துடிக்கும் உள்ளம் உடையாளாய்
வாழி இளைஞன் அழகென்று
வாழ்த்தி வாழ்த்திப் பித்தேறி
பாமென் றுலகை மதித்தாயோ
பழக ஒரு பெண் இல்லாமல்?
நாளை நாமே மணம்புரிவோம்
நல்வாழ் வறிவாய் என்றாளே!

## மன்னன்மகள் வஞ்சியின்பால் வெஞ்சினம்

நகர்தள்ளிக் காதத்தில் விழுது விட்டு
நல்லநிழல் தருமால மரத்தின் கீழே
சகந்துறந்த புத்தர் பலர் சார்ந்திருக்கத்
தனிமேடை தனிலிருந்தான். தோழிவந்து
பகர்கின்றாள். தலைசாய்த்துச் செவிமடுத்தான்.
பண்ணொழுகச் சொல்கின்றாள்: என் தலைவி
நகரழகி சுந்தரியாள் தங்கள் பேரில்
நாட்டமுற்றாள். தனித்தும்மைக் காண வேண்டும்,

எதுநல்ல சமயமென்றாள். இளைஞன் சொன்னான்:
இச்சமயம் நற்சமயம் புத்தத் திற்கே
எதிர்ச்சமயம் தீச்சமயம் என்றே இல்லை
எச்சமயம் ஆயினுமென் வரச்சொல் என்றான்
அதற்கல்ல தனித்தும்மைக் காணவேண்டும்
அதற்குத்தான் கேட்கின்றேன். என்றுரைத்தாள்,
அதற்கென்ன வரச்சொல் யான் தனித்துத் தானே
அவனிவந்த நாள்முதலாய் இறுதி மட்டும்.

இருக்கின்றேன்; இருப்பேனென் றுரைத்தான். போனாள்.
என்னடி நீ பழங்கொண்டு வந்தா யாவென்(று)
உருமாறிப் போனசுந் தரியாள் கேட்டாள்.
உடனேபோ தங்கிப்போ எவ்வா றேனும்
உருக்கண்டு வரலாகும் உள்ளங் கல்லாய்
உடையவனாய் இருக்கின்றான்; வெறுத்து விட்டேன்;
உரைக்கின்றான் தனிதானும் எந்தப் போதும்
உன் காதல் வீணென்றாள் சினத்தினாலே!

"வரலாகும்" எனக்கேட்ட சுந்த ரிக்கு
மனமகிழும்! செவிகுளிரும்! உதடு கொஞ்சம்
விரியும்! எழிற் பல்மின்னும்! வாயில் நோக்கி
விரையும்கால்! பின்வந்து தோழி தன்னை
உரையடி நீ அவரெங்கே உள்ளா ரென்றே
உளத்தினிலே நாணமுறக் கேட்டுப் பின்னர்
"ஒரு காதம்—ஆலமரம் விரிக்கும் நீழல்"
உளத்திலிந்தச் சொற்படியப் பறந்தாள் தேரில்!

உலகிற்கோர் நன்மையினை எண்ணி எண்ணி
உட்கார்ந்த புத்தர்நிலை தன்னை எய்தி
தலையாக இந்நகரிற் செய்தற் கேற்ற
தனித்தொண்டு யாதிந்த மக்க ளெல்லாம்
நிலையான மகிழ்வெய்தப் புத்தர் பெம்மான்
நிகழ்த்தியசொற் கோவையினைச் சொல்லி விட்டால்
விலையேறு மா?விளக்க வேண்டு மாவென்(று)
எண்ணுகின்றான் இளைஞனவன் கண்ணை மூடி!

வந்தாளச் சுந்தரியாள் வாழ்த்து ரைகள்
வாய்நிறைய! வண்ணமலர் கைநி றைய!
செந்தாம ரைபோலுஞ் சேவ டிக்கீழ்ச்
சென்றமர்ந்து பாதத்தில் நீர்தெ ளித்துச்
செந்தேனூர் மலரிட்டுக் கைகள் கூப்பித்
"தேவேஉம் அடியாள்உம் திருமுகத்தை
வந்தேய டைந்தே" னென் றுரைத்து நின்றாள்.
வடிவழகன் நினைவுலகி னின்றும் மீண்டான்!

சின்னமலர்க் கண்திறந்தான் சேவ டிக்கீழ்ச்
சிதறியபூப் பலகண்டான்! சினத்தினாலே
"என்னம்மா செய்தீர்கள்? இயற்கை யன்னை
என்மீது சினங்கொள்வாள். இப்படித்தான்

அன்னைமுகங் கிள்ளிவந்து சின்னப் பையன்
அடிகளிலே போட்டுசினங் கிளப்ப லாமா?
என்முகத்தைக் காணவந்தால் பாதந் தன்னில்
எழில்மலரைப் போடுவதோ சொல்வீர்'' என்றான்.

திகைத்துநின்ற சுந்தரியாள் செப்பு கின்றாள்
''தேவேஉம் மேற்காதல் கொண்டு விட்டேன்!
பகைபோலப் பேசுகின்றீர் பதற வேண்டாம்.
பாவையிடம் அன்புக்கண் திறப்பீ ராயின்
வகைப்பட்ட காமவிளை யாட்டுக் கண்டு
'வாழ்க்கைபாழ்' என்னுமதச் சொல்லை மாற்றி
மிகையான மகிழ்ச்சியிலே இரண்டு பேரும்
மிதந்திடலாம்'' என்றாள்;தன் செவிம றைத்தான்!

''அன்னாய்நீ சொல்லியதிற் பொருளே யில்லை
ஆசையினாற் கெட்டதிந்த உலக மென்று
சொன்னானெம் புத்தர்பிரான் உணர்ந்த றிந்து:
சொல்லியநின் பேச்சனைத்தும் நஞ்சே யன்றோ?
இன்னாக்கள் தரும்நினைவை இனிய கற்றி
இனியபுத்தர் வழியொழுகி இருப்பை யாயின்
உன்னாற்பல் மாதருக்கும் நன்மை யுண்டாம்
உடன்விடுவாய் தீஎண்ணம்'' என்று ரைத்தான்.

''இளமையிலே நின்னைவந் தேமாற் றித்தான்
இழுத்துப்போய்ப் புத்தமதம் தன்னில் விட்டார்
வளமார்ந்த வாழ்வுதனைப் பாழென் றேதான்
வரைந்துவிட்டார் கற்பனைகள் உன்னுள் ளத்தில்!
வளமாரக் காதலித்த மாதொருத்தி
யுடன்சேரும் இன்பத்தை இளமை நல்கும்!
விழலாக இளமையினை வீழ்த்து கின்றாய்!
இழந்தாற்பின் வாராதே யுணர்க'' என்றாள்.

காமமதுக் குடித்துவந்து நிற்கும் இந்தக்
கன்னியினை யகற்றுதற்கு வழியொன் றுய்ந்தே
"ஆமாம்! நல் லரண்மனையின் மாடி நின்று
அடிக்கும்கண் துடிக்குமிரு புருவத் தோடே
ஓர்மாது நின்றிருக்கக் கண்டேன் அன்னாள்
உளக்காதல் மிகப்பெரிதே! அன்னை யேநீர்
தாமாஅம் மாதென்னச் சாற்ற லாமா?
நானறிய ஆசைமிகக் கொண்டே"னென்றான்.

"அரசன்மகள் மேலாசை கொண்டு விட்டாய்
அதனால்தான் என்னைவெறுக் கின்றாய் போலும்
சரிசரிநான் இதற்குவழி செய்ய வேண்டும்
சாகுமுனம் பழிவாங்கிச் சாக வேண்டும்
உருவந்தாள் புத்தனெனக் கொண்டா யோநீ
உளத்தினிலே தீயெண்ணம் படைத்துக் கொண்டாய்
வருகின்றேன் உன்னைநான் கழுவி லேற்றி
வனிதையினைத் துடிக்கவைப்பேன்"என்று போனாள்.

நெஞ்செரியப் பாழ்செய்யும் நினைப்பி ருக்க
நெடுவீதி தனில்தேரைச் செலுத்திப் போனாள்.
வஞ்சிஎனும் மன்னன்மகள் எதிரில் வந்தாள்
வரும்படைகள் தன்பகைஎன் றெண்ணி யந்த
வஞ்சம்நிறை நெஞ்சகத்தாள் சுந்த ரிப்பெண்
வலமொதுங்கித் தேர்விட்டுப் போனாள். இல்லில்
மிஞ்சும்எரி கக்கும்விழி யாளாய்த் 'தோழி!
நிழலைப்போல் மன்னன்மகள் பின்செல்" என்றாள்.

"சொல்லேடி ஒன்றேனும் மறையா தந்தச்
சூழ்ச்சிசெயும் வஞ்சியெனும் மன்னன் செல்வி
வில்லனைய புருவத்தை வளைத்துப் புத்தன்
விதியொழுகும் இளைஞனைத்தன் வயப் படுத்தச்

சொல்லில்மதுத் தோய்த்தனளோ?'' எனச்சி னத்தால்
துடிக்குமுளத் துடன்கேட்டாள் திரும்பி வந்து
வில்லைப்போல் வணங்கியபின் அமர்ந்து பின்னல்
விளைவதென்ன என்றுணராத் தோழி தன்னை.

## வஞ்சியும் இளைஞனும் சந்தித்த வகை

''வாழி! தலைவி வாழி!'' என்னத்
தோழி துவங்கினள். துன்பப் பட்ட
சுந்தரி யாவல் தூண்டும் உளத்தளாய்
வந்திடும் ஒவ்வோர் வாய்ச்சொல் தானும்
நெஞ்சிற் பதித்தனள்? ''வஞ்சிச் செல்விதான்
விஞ்சும் அன்பால் தேர்விட் டிறங்கி
ஆலின் நீழல் அடைந்தப் புத்தன்
காலிற் பணிந்து, 'காப்பாய் தேவா!
மன்னன் மகள்யான் இந்நாட் காலை
உன்னை வீதியில் உலாவரக் கண்டேன்.
கண்டுநின் வாழ்த்தை யடைதற் குள்ளம்
கொண்டிங்கு வந்தேன் கோமான் எந்தை
நின்னைத் தன்மனை நீழலிற் காண
உன்னினன் வருதற் குளமுண் டாயின்
அழைத்து வருகென மொழிந்தன ஞல்உன்
உளத்து விருப்பம் உரைப்பாய்' என்ருள்.

'இயற்கையந் தேவி எங்களுக் கென்று
வியத்தகு வண்ணம் சமைத்தவிந் நிழலில்
இருப்போம். எங்கட் கிதுவே போதும்
விருப்பம் இல்லை வருதற் கங்கே'

என்றவன் சட்டென இசைத்தனன். கவலை
சென்றங்கு வஞ்சியின் திருமுகம் சேர்ந்தது!

கொழுங்கனற் பட்ட புழுவெனத் துடித்தே
எழுந்தனள். நடந்துசென் றேறினுள் தேரில்.
பறந்தது குதிரை! நானும்
பறந்திங்கு வந்தேன் பார்ப்பதற் குனையே!

## புத்தத்தைக் கருவழிக்கச் சுந்தரி சித்தங் கொண்டாள்

வஞ்சியாள் புத்தனைக் கொண்டுவந்த—அந்த
வகையினைக் கேட்டுப்பின் சுந்தரியாள்
நெஞ்சினில் தோன்றும் சினம்வருத்தம்—அந்த
நேரிழை யாளிடம் சொல்லிவந்தாள்.

கல்லினிற் சிற்பம் செதுக்கினுற்போல்—அந்தக்
கசடன் உருவம் இருப்ப தேனே
கல்லினில் நெஞ்சைப் படைத்தவளும்—அந்தக்
கல்லுளி மங்கனைப் பெற்றவளோ?

வஞ்சியின் பாலவன் காதலில்லை—எனில்
ஐயப் படும்படி சொல்லினனே
வஞ்சகன் என்னை யகற்றிவிடச்—செய்த
வஞ்சகச் சூழ்ச்சி திறமுடைத்தே!

மாதரைச் சற்றும் மதிப்ப தில்லை—என்றன்
மதத்தை யழித்திட வேண்டுமடி
சாதக மானஓர் சூழ்ச்சி சொல்வாய்—என்றன்
சார்பில் உழைக்கும்நற் றேழி! என்றுள்.

மாதொரு பாகன் தலைவனாக—இங்கு
மன்னும் மதத்தை மறந்தனையோ?
ஏதம்மா கோயிலிற் பூசாரி—தன்னை
இங்கே யழைத்துவந் தின்பத்திலே,

திளைக்கும் வகையினைச் செய்வாயேல் —உன்
திட்டம் முடிய வழிகளுண்டே
களைத்திட மாட்டான் எதிர்ச்சமயம்—அவனைக்
கவிழ்க்கும் எனச்சொல்லி வைத்துவிட்டால்

என்றந்தத் தோழி இசைத்திடவும்—அடி
இன்பத்திற் சேர்த்தனை வாழி எனச்
சென்றொரு மாணிக்க மாலைகொண்டு—தோழி
செங்கைப் பதித்தனள் சென்றுவந்தாள்!

## புத்தர்களைக் கழுவேற்றப் பூசாரியின் துணை

சூழ்ச்சியில் ஆர்வம் மிக்காள்
தோழியை மீட்ட ழைத்து
வாழ்த்திப்பின், "ஏடி! யந்த
மாதொரு பாகன் பேரால்
வாழும்பூ சாரி தன்னை
வரச்செய்யும் வகைசொல்" லென்னத்
தாழ்ந்ததன் தலைநி மிர்த்தித்
தருக்குடன் தோழி சொல்வாள்:

"வாவென்றால் ஓடி வந்துன்
வண்ணமலர்ப் பதம்பி டிக்க
ஆவென்று காத்திருப்பான்
அசைகின்ற கையி னால்நீ

ஏவும்போ தெல்லாம் உன்றன்
இச்சையை முடிப்பான். நற்பூங்
காவுண்டே, அங்கே யந்தக்
களிமயில் நடன மாடும்,

போய்ப்பார்க்க வேண்டு'' மென்றாள்
பொறுமையே யின்றி நின்றாள்.
தோய்சினம் மிக்கா ளாகிச்
சுந்தரி தோன்றி னாலும்
காய்க்கின்ற சூழ்ச்சி தன்னைக்
கனிசெய்யும் எண்ணத் தாலே
ஆய்ந்தசொல் அடுக்கெ டுத்தே
'அடி போநீ'' என்று ரைத்தாள்.

மீட்டொரு தோழி தன்னை
மென்குரல் கொண்ட ழைத்துக்
''கேட்டிடு தோழி! யந்தக்
கிழவனார், சிவன்கோ விற்கண்
நீட்டிய காசிற் கொவ்வோர்
நெடுந்தொடர் சொல்லு வாரை
வேட்டேயான் காணற் கென்று
விரைவிலே யழைத்து வாராய்!''

எனப்போக்கிக் காத்தி ருந்தாள்
இருள்வந்து சூழ்ந்த தந்தச்
சினக்காரி நெஞ்சிற் சூழ்ச்சி
செறிந்ததைப் போல! காமம்
மனத்தோடு துளும்பி நிற்க
மகிழ்ச்சியாம் வடமி ழுக்கத்
தனத்தோடு வந்து சேர்ந்தான்
தள்ளாடிக் கிழக் குருக்கள்!

ஓடிப்போய்க் கையைப் பற்றி
உள்ளழைத்து வந்து மெத்தை
நாடிப்போய் அமர வைத்து
"நாதா! உம் கூட லுக்கு
வாடிப்போய்க் கிடந்தேன். இன்று
வளர்காதல் பெருகிற் ருகத்
தேடிப்போய் வாடி என்றேன்
சிவபக்தர் என்ரு லுந்தான்!

மாதொடு கூட இந்த
வையத்தில் மறுப்பா ருண்டோ?
மாதொரு பாக ஞரும்
மானிலத் தார்க்கு ரைக்கத்
காதலால் மாது பற்றிக்
கனிவிஞல் உடல்ப கிர்ந்து
பாதியை யளித்த செய்தி
படித்தீரே புராணத்" தென்ருள்.

"ஆமடி! கோவை போன்ற
அதரத்தின் முத்த மன்ரு
காமமே துவங்கிற் றென்று
காட்டுமென்" றவளைக், "கிட்ட
வா! மடி மீதி ருந்து
வளரடி இன்ப" மென்ருன்
தேன்மது வார்த்தாள். கோயில்
திருட்டெலி குடித்த தன்றே!

மதுவினைக் குடித்து விட்டு
மயங்கிப்போய்க் கிழவ ஞரும்
எதுவுயிர்ப் பொருள்,கல் லென்ற
எதுவுமே தெரியா ராகி

எதிருள சித்தி ரத்தில்
இருக்குமோர் பெண்ணி டம்போய்
மதுவூற்றக் கைக ளேந்தி
மற்றவள் எழில்வி யப்பார்.

அருகுள பெண்சி லைக்கே
அன்பொடு முத்த மிட்டுப்
"பெருகிடும் அன்பை வையம்
பெண்ணினல் பெற்ற தன்றே
வருதிநீ காதல் தேனை
வார்த்திட" என்று ரைத்து
மருங்கினிற் செல்லும் போதே
மயங்கிக்கீழ் வீழ்வா ரந்தோ!

வீழ்ந்தவர் தெளிந்தெ ழுந்து
"வேண்டாமென் றென்னைத் தள்ளிச்
சூழ்ந்தநின் தோழி யோடு
சோலைக்கோ செல்லு கின்றய்!
ஆழ்ந்தஎன் அன்பைப் பாராய்!
அடி! காதல் அன்றே இன்பம்
வாழ்ந்திடச் செய்யும்! இங்கே
வருவைநீ அவள்போ கட்டும்"

எனப்பல சொல்வா ராகி
இருக்கின்ற போதில் அந்தக்
கனக்குழை மங்கை தானும்
காதலைப் பொழிவா ளாகித்
தனக்குள குறையைத் தீர்க்கத்
தக்கபோ தீதென் றெண்ணி
"உனக்கொரு செய்தி சொல்வேன்
உற்றுக் கேள்" என்று ரைத்தாள்.

“சொல்லடி இன்பச் செய்தி
சோர்வின் றிக் கேட்பல்” என்றான்.
“வெல்லமாம் மங்கை சொற்கள்
விரைவினிற் சொல்க” வென்றான்.
“வெல்லமன் றுமக்குச் சொல்வேன்
விளைத்திடும் கசப்”பென் றாட்குச்
சொல்லடி வேப்பங் காயும்
துணைசெயும் உயிருக்” கென்றான்.

“எழில்புரியில் புத்த மென்னும்
எதிர்ச்சமயம் தன்னை மக்கள்
தழுவிவரல் காணீரோ? நீர்
சிவபக்தர் தாமோ? சைவம்
தழைக்கும்வழி ஈதோ? சற்றுச்
சாற்று”மெனக் கேட்டா ளுக்குப்
“பிழைக்கும்வழி சமயஞ் செய்யும்!
பேச்சுவிடு பொழிவாய் இன்பம்!”

என்றானை மீண்டுங் கேட்டாள்
“எப்படிநீர் பிழைப்பீரோ? முன்
நின்றேஅச் சமயங் காக்க
முனையாதி ருப்பீர் ஆயின்
சென்றேம றையும் பின்னர்ச்
சிலநாளும் வாழல் ஏலா(து)
என்றேநீர் அறியீ ரோ? சற்
றெனக்குச்சொல் வீரே” என்றாள்!

“ஊர்சுற்றிப் பரப்பு கின்றான்
உடல்தளர்ந்து விட்டே னிங்கே
யார்வந்து சமயம் காக்கும்
ஆர்வத்தைக் காட்டு கின்றார்?

தார்சூடும் மன்ன னுந்தான்
தன்மகளை யங்க னுப்பி
வாரீரோ என்ற ழைத்தான்
வளமில்லை சைவத்'' தென்றான்.

''போம் ஐயா! புத்தி யற்றுப்
போயிற்றோ? மன்னர்க் கேநீர்
தாமையா சென்று ரைத்துச்
சைவத்தி னாலே தான்இச்
சாம்வையம் தனைமீட் டற்குத்
தக்கவழி யுண்டென் றோதிப்
போய்மெய்யாய் மன்ன னுக்குப்
புத்துணர்வு நல்க வேண்டும்.

சைவத்தின் புகழை எல்லாம்
சாற்றிடுவீர் மன்ன னுக்கே
மைவைத்த மணிமி டற்றார்
மாபுகழைச் சொல்லிப் பக்தர்
கைவைத்த இடத்தி லெல்லாம்
கனிந்தூறும் பாலா றென்றே
உய்விப்பீர் சைவந் தன்னை
உடன்போவீர்'' என்று ரைத்தாள்.

''புத்தர்களைக் கழுவி லேற்றிப்
போய்மடியச் செய்து வந்தால்
உத்தமமாம் சைவந் தன்னை
உய்வித்த தாகும் ஐயா!
சித்தத்தில் உறுதி கொண்டு
செய்வீரேல் வெற்றி யுண்டு;
நித்தம்உமக் கின்பங் காட்டி
நெடுநாட்கள் இருப்பேன்'' என்றாள்.

"சரிமானே! போய்ச்செய் கின்றேன்
சைவமது தழைக்கத் தானே.
பெரும்ஆல், நேர்விழுதை எல்லாம்
பெருங்கொடிகள் சுற்றி றைற்போல்
இருமால்நேர் கோமா னே!என்
றெனையணைத்துக் கட்டி முத்தம்
தருவாயென்" றணைந்து போனான்.
தனியேசுந் தரிக ளித்தாள்.

## புத்தர்களைப் பிரிந்து

### இளைஞன்

புத்தமதம் பரப்பவந்த இளைஞன் அந்தப்
புத்தர்களை அருகழைத்துப் புகன்றான். "என்றன்
சித்தமது மிக்கசினத் தாலே யின்று
சிதறியது! சற்றேனும் அமைதி யில்லை.
இத்தருணம் குருநாதர் எம்பி ரானை
எய்திஎன்றன் குற்றமெலாம் சொல்லி, நெஞ்சைச்
சுத்தமுறச் செய்தும்மை அடைவ" லென்று
சொல்லியிடம் விட்டெழுந்தான் போவ தற்கே!

முதுகிழவர் ஒருபெரியார் அங்கெழுந்து
மொழிகின்றார், "குற்றத்தைத் தானு ணர்ந்தே
அதற்குமிக வருந்தியபோ தகலும் பாவம்
ஆர்ந்தகலை ஞானமுடை யாய்! இதற்கே
இதுசமயம் வடநாடு போவ தென்றால்
எத்தனைநாள் ஆகுமென எண்ணிப் பார்ப்பாய்
உதவாத கருத்திதனை ஒட்டி விட்டே
உட்கார்வாய்!" எனவுரைத்து நின்றா ரங்கே!

"அன்புடையீர் மனத்திலெனக் கமைதி யில்லை
ஆகையினுல் நானிருப்ப தாலே யிந்த
நன்மதத்தில் மாசுவந்து நேரு மென்று
நான்கருது கின்றேனுற் போகின் றேன். நீர்
என்னிடத்தில் காட்டுகின்ற அன்புக் கெல்லாம்
என்னுளத்தில் இடமுண்டு மறவே" னென்று
சொன்னவன்தான் நடந்துவிட்டான். கதிர்ம றையச்
சூழ்ந்தநிழல் போலமைதி சூழ்ந்த தங்கே.

## பூசாரி மன்னனைக்
## காணப் போதல்

குதிரைக் கழுத்துப் பிடரியைப் போல் அந்தக்
குருக்கள் குடுமி அசைந்திருக்க
எதிரிச் சமயம் கழுவி லேறக்—காணும்
எண்ணத்துடனே நடந்து சென்றார்.

கம்பதை ஊன்றி அடியெடுத்து—அவர்
கால்கள் தடுமாறும் போதினிலே
வம்பதே வாழ்க்கையில் இன்பமெனக்—கொண்ட
வஞ்சக மில்லாச் சிறுவரெல்லாம்,

"மூன்றுகால் பூச்சியைப் பாருங்கடா!—அது
முக்கி நடந்துமுன் னேறுமடா!
ஊன்றிய கம்பைப் பிடுங்கிவிட்டால்—அது
உடனே விழுந்துயிர் போக்குமடா!"

என்று சொல்லிப்பின் தொடர்ந்து வந்தார்—குரு
"ஏ! போய் விடுங்கடா" என்றுரைத்தார்
நின்றுதம் பற்களைக் காட்டி விட்டே—அங்கு
நிற்காமல் ஓடிப்பின் மீண்டுவந்தே,

"தாத்தா தமக்குச் சினம் வருமேல்—தேங்காய்
தரமாட்டா"ரென்று கூறிவிட்டு,
"ஏய்த்தா பிழைக்கிறீர் ஊர்ச்சனத்தை"—என்று
இளித்த படியவர் நின்றிருந்தார்.

நாட்டில் அமைதி நிலைநிறுத்த—மன்னன்
நாட்டில் அமர்த்திய சிப்பாய்கள்
போட்ட சத்தத்திற் சிறுவரெல்லாம்—உடன்
போயொளிந் தார்தம் வீட்டினுள்ளே!

ஆட்ட நடைநடந்து பூசாரி—மன்னன்
அரண்மனை வாயிலில் வந்து, சிப்பாய்
கேட்டு மிரட்டிய கேள்விக்கெல்லாம்—மிக்க
தருக்குட னேபதிற் சொல்லிவிட்டு,

நடந்த நடையிலே கம்பீரம்—தானே
நச்சி யடைந்தது வோவென்ன
அடைந்தார் அரசன் அவைமுகத்தில்—"என்ன
அலங்காரம்!" என்று வியப்படைந்தார்.

எழுந்தந்த மன்னன் வரவேற்றுன்—"ஐயா!
ஏனிங்கு வந்தீர்" எனக் கேட்டான்
"விழுந்திட்ட சைவ சமயமதை—உயர்த்தும்
விதத்தினைக் கண்டிட வந்தே"னென்றுர்.

## குருக்கள், அரசனுக்குக் கோபம் மூட்டினுர்

தார்வேந்தன் தனைநோக்கிக் குருக்கள் சொல்வான்
தழைத்துவந்த சைவமதம் சிலநா ளாகச்
சீர்குன்றி வருவதனை எண்ணும் போது,
சிந்தைபொறுத் திருக்கவென்னுல் இயல வில்லை.

பாரேனும் சிவபெருமான் கோவில் வந்தே
அரனுரை வழிபடுதல் இல்லை. நீயும்
பாராமல் இருந்துவிட்டால் பாரின் மீது
பயனின்றிச் சைவந்தான் மடிந்து போகும்!

இறைவனைப்போய்த் தலையாரக் கும்பிட் டுப்பின்
இசைபாடி மகிழுதற்கே யன்றோ முன்னர்
முறைதவறு தாண்டுமனு நீதி காத்த
முப்பாட்ட ஞரிந்தக் கோவில் கட்டி
முறையுறத்தன் வழிவருவோர் யாரும் இந்த
முதுநகரில் இறைவழிபா டியற்றி நாளும்
முறைதவறு தாண்டுமக்கள் நலத்தைக் காக்க
மொழிந்துசிலா சாசனமும் செய்து வைத்தார்.

இன்றிங்கு சைவத்தின் வளர்ச்சிக் குத்தான்
இடையூறுய்ப் புதுச்சமயம் ஒன்று தோன்றிச்
சென்றூர்கள் தோறும்தம் சிறுமதத்தைச்
செழிக்கவைக்கும் ஆர்வத்தால் எழில் புரிக்கும்
ஒன்றுஞ்சீர் அழகுடைய இளைஞ ரோடே
ஒருகூட்டம் அனுப்பித்தம் புதும தத்தை
நின்றுநிலைக் கும்வண்ணம் செய்து சைவம்
நிலைகுலைய வழிதேடி விட்டார் அன்றே?

நின்மகளை நீயனுப்பி அந்தப் பையன்
நின்மனைக்கு வரவேண்டும் எனஉரைக்க
அன்பிலாது பதிற்சொல்லி யான்வா ரேனென்(று)
அவன்புகன்ற தோடுமன்னன் அரண்ம னைக்கே
என்றும்வரல் செய்யோம் யாம் என்று னுமே
என்னமதம்! கொழுப்புத்தான் என்னே! என்னே!
நின்னுளமும் பொறுத்ததுவோ! ஆமாம் உன்றன்
நீதியுளம் பொறுத்திருக்கும்! பொறுத்திருக்கும்!

கண்போல மங்கையரைக் கருதும் நாட்டில்
காமத்தின் வட்டிலென்றே சொல்லிப் பின்னர்
பெண்களினுல் உலகமெலாம் கெட்ட தென்று
பேசினனும் சற்றேனும் புத்தி யின்றி!
மண்ணுளும் அரசனையே கடவு ளென்று
மதிக்கவென்று கூறுமனு நீதி தன்னை
மண்ணென்று கருதினனு? நின்ன மைப்பை
மதியாதான் தனைப்பொறுத்தாய் என்ன விந்தை!

இந்நாட்டில் இராதபடி ஓட்ட வேண்டும்
இல்லைஎனில் மன்னனுக்கும் நாட்டி னுக்கும்
எந்நாளுந் தழைத்திருந்த சைவத் திற்கும்
இருக்குமனு நீதிக்கும் மாத ருக்கும்
எந்நாளும் தீதன்றி நன்மை யில்லை
இப்பொழுதே ஓட்டிடுவாய். இல்லை! இல்லை!
பின்நாளில் துயர்செய்ய எண்ணக் கூடும்
பெருங்கழுவில் ஏற்றத்தான் வேண்டும்! வேண்டும்!

சைவத்திற் கெதிரான சாபக் கேட்டைச்
சரித்தழிக்க வேண்டுமிருங் கழும ரத்தில்
மைவைத்த கண்ணினரை மன்னன் தன்னை
மதியாத சமயத்தைக் கழுவி லேற்றச்
செய்வித்த பேரரசன் பேரைச் சொல்லிச்
சிற்றூர்கள் தோறுமக்கள் விழாக்கொண் டாடி
உய்வித்தான் சைவத்தை உரிமை தன்னை
உண்மைதனை என்றுரைத்துப் பாட வேண்டும்."

பூசாரி இவ்வாறு நீட்டிக் கொண்டு
போகின்ற போதிலந்த உயிர்க் கொலைக்குக்
கூசாத மன்னனவன் "நன்று! நன்று
கூறினீர்நீர் யானறிந்தேன்" என்று வானை

வீசாது பக்கத்தே வீற்றி ருந்த
வெம்படையின் தலைவனுக்கங் காணை யிட்டான்.
"மாசாபக் கேட்டினை, அப் புத்தர் தம்மை
மடியும்வகை கழுவேற்றப் பிடித்து வாரீர்!"

உடனெழுந்தார் படைத்தலைவர் குருக்க ளாரும்
உளமகிழ்ந்தார் தன்பகையை ஒழித்தோ மென்றே!
அடமன்னன் மனமகிழ்ந்தான் மதியா தானை
அழிப்பதுடன் பலநாட்கள் பொழுதுபோக்க
நடைபெறுமோர் விளையாட்டை நகைச் சுவையை
நாட்டிவிட்டே னென்றேதான்! ஆனல் அந்தப்
படைத்தலைவர்க் கொருவருத்தம் என்ன வென்ருல்,
படைத்திறனைக் காட்டும்போர் கழுவில் இல்லை!

## இளைஞன்

### துறவு களைதல்

வடநாட்டில் குருநாதர் தம்மைக் காண
வந்திருக்கும் இளைஞனவன் கிருஷ்ணு என்னும்
படைகளைப் போல் அலையடித்துப் போகும் ஆற்றின்
பக்கலொரு காட்டுவழிப் போகுங் காலை
நடைக்களைப்பால் சோர்ந்தங்கோர் மரத்தின் நீழல்
நண்ணித்தன் மலர்க்கண்கள் மூடிவிட்டான்.
கடைக் கண்கள் திறக்குங்கால் தன்னைச்சுற்றிக்
கருணைமிகும் புத்தர்களைக் கண்டு வந்தான்.

என்ன விந்தை! குருநாதர் தானு மங்கே
இருக்கின்ருர் இளைஞனவன் அவர்முன் ஞகச்
சென்றுதலை தாழ்த்தியொரு வணக்க மிட்டுச்
செப்புகின்ருன். "குருநாதா! சித்தங் கெட்டேன்!

கன்னியொருத் தியின்பால்நான் காதல் கொண்டேன் !
கருத்தழிந்தேன் ! புறப்பட்டேன் தம்மைக் காண
என்ன செய்ய" என்றுரைத்தான். வாய்ம லர்ந்தார்!
என்ன இது! வெல்லமழை பொழிகின் ருரே!

"கேளப்பா சீடனே ! நீ புத்தந் தன்னைக்
கெடுபிடிகள் மிகுஞ்சமயம் என்றே எண்ணி
மீளத்தான் வேண்டுமென ஓடா தே! சீர்
மிகவுடைய புத்தமிது மக்கள் உள்ளம்
ஆளத்தான் வேண்டுமெனக் கண்டோ மாதல்
அதற்குரிய புதுக்கொள்கை வகுத்து விட்டோம்
ஆளத்தான் செய்யுமன்னர் துணையை வேண்டி
அவர்க்குந்தான் சில இடங்கள் உண்டென் றேமே.

இல்லறத்தான் தானுமிங்குப் புத்தன் என்ன
இருத்தலுமாம் உயிர்வதையை நீக்கி விட்டு
செல்லரித்த குப்பைகளை வேத மென்று
செப்பிவரும் ஆரியத்தின் யாகச் சூழ்ச்சி
மல்லுவந்த மன்னர்தமை மடக்கி வைத்து
மடியும்வகை உயிர்வதைகள் செய்யும் சூழ்ச்சி
எல்லாமும் நீக்கிடவே இச்சை கொண்டோம்
இதற்குத்தான் வேந்தர்துணை நாடு கின்றேம்!

வேந்தர்களால் புத்தமதம் ஆன தப்பா!
வேந்தர்களைப் புத்தமதம் ஆண்ட தப்பா !
சாந்துணையும் மரத்தடியே இடமென் றுய்ந்து
சகம்வாழ வழிவகுத்த புத்தர் பெம்மான்
வேந்தரன்றே? அசோகர்முதல் கனிஷ்க ரெல்லாம்
விளையாடிக் கத்தியிலே புரண்டெ ழுந்த
வேந்தரன்றே? இந்நாளும் புத்தந் தன்னை
வேந்தர்கையில் விட்டுவிட்டால் விளையு மன்றே?

திருவிடத்தில் பார்ப்பனியம் சைவத் துள்ளே
திருட்டுவழிப் புகுந்துகொண்டு மக்கள் தம்மை
உருவழிக்கும் கொடுமைதனை ஒழிக்க வேண்டும்
ஓங்குமெனில் புத்தத்திற் குச்சாக் காடே!
கருத்தினிலே பதித்திடுக இவற்றை எல்லாம்
கடுந்தொண்டு நின்னிடத்தில் எதிர்பார்க் கின்றேன்
கிருஷ்ணாவின் மன்னவனே!" என்றுரைத்தார்
இளைஞனுக்குப் புரியவில்லை என்ன வென்றே!

"நீயிந்த நாட்டுக்கு மன்ன னப்பா
நின்னையிளம் ஆண்டினிலே தந்தை தந்து,
சேயிவனை நீரேற்பீர் புத்தத் திற்குச்
செய்வனிவன் பெருந்தொண்டே எனவுரைத்துப்
பாயுமன்பால் தந்தான்நான் ஏற்று விட்டேன்
பையனுன்றன் இளமையினைக் கெடுக்கு மெண்ணம்
வாய்ந்ததில்லை உள்ளமதில் என்று ழுந்தான்
வரவேற்றான் மதத்திலன்பு மிகுந்த தாலே!

புத்தத்தில் நின்தொண்டு பொருந்த வேண்டும்
போய்த்தந்தை தனைக்கண்டு நீகொண் டுள்ள
சித்தநினைப் பத்தனையும் செப்பிக் காதல்
சேர்ந்த இளவஞ்சியுடன் கூடி வாழ்வாய்
இத்தினம்நான் சொன்னவெலாம் மனத்தில் வைப்பாய்
இன்னொன்று சொல்கின்றேன் துறவு வேண்டின்
புத்தத்தில் மணந்தார்பின் வெறுத்து வந்து
புகுந்துறவு பொய்த்துறவிற் கிடமே யில்லை.

இல்லறத்தில் துன்பங்கள் இடை இடையே
ஏற்படுத லாலேதான் இன்பந் தன்னை
வெல்லம்போல் மக்களெலாம் விழுங்கல் இல்லை
வீசுபுகழ்த் துறவறத்தில் எம்மைப் போல

இல்லறத்தைப் பற்றியொரு கனவுங் காணு
இயல்புடையார்க் குத்துன்பம் என்றும் இல்லை
நல்லறத்தைச் செய்து, புத்தம் நாளும் வாழ
நல்வாழ்வைத் துறந்தவரை நாளுங் காப்பாய்!

வாழ்வுநலம் சுவைப்பவர்கட் கில்ல றந்தான்
வழியாகும் அந்நலத்தைத் துறப்போ ரெல்லாம்
யாழ்தழுவிக் கைவலிக்க அருகில் உள்ளோர்க்(கு)
அஞ்சுவைத்தீம் பாடலினை ஈவோன் போல்வர்!
வாழ்வுநலம் துறந்தவர்கள் மக்கள் வாழ
வழிவகுத்துக் கொடுத்திடநல் வசதி யுண்டு
வாழ்வுநலம் சுவைப்பவர்கள் செய்யும் நன்மை
மற்றவர்க்குச் சூழ்ச்சிஎனத் தோன்ற லுண்டே!

கன்னிதனை நீகாணு திருந்தி ருந்தால்
கடுகளவும் காதல்நினை வற்றி ருந்தால்
இன்னும்பத் தாண்டுதுற விருந்தி ருந்தால்
எவரையுமே காதலிக்க மாட்டாய். இந்தச்
சின்னஇளம் வயதினிலே கண்ட தாலே
சேயிழையை நீபெரிதும் நச்சி விட்டாய்
என்னையுன்றன் குருவாகக் கொண்ட தாலே
இன்பமுற வாழ்கவென வாழ்த்து கின்றேன்."

இப்படியோர் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு
"இனிநீபோய் மன்னவனைப் பார்த்து மக்கள்
எப்படித்தம் உடையணிவார் என்ற றிந்தே
இசையுநல்ல வகைத்துணியில் உடுத்திக் கொண்டு
அப்படியே கன்னிதனைத் தேடிச் சேர்ந்தே
அன்புடனே இல்லறத்தைத் தொடங்காய்" என்று
செப்பிடவும் மற்றுமொரு முறைவ ணங்கிச்
சென்றான் அந் நாட்டரசன் தன்னைக் காண!

மன்னனிடம் இளைஞனவன் குருமொழிந்த
வரலாற்றைச் சொன்னவுடன் அன்பினாலே
கன்றினைப்போல் துள்ளிவந்து கைப்பிடித்துக்
களிப்புமிகப் பெற்றவனாய்ச் சொல்லுகின்றான்
"முன்னருளைத் தத்தமெனப் புத்தத் திற்கு
முனிவனிடம் நான்கொடுத்த துண்மை. ஆனால்
பின்னெனக்குப் பிள்ளைகளே பிறவாமையால்
பெருந்துன்புற் றேன்இன்று பேரின்பம் தான்!

கிழப்பருவம் எய்திவிட்ட இந்தப் போதில்
கீழ்வீழ்ந்தென் உடல்சரியப் போகும் நேரம்
பழமான ஆட்சிதனைப் பகைவர் கையில்
படவைத்தோ சாவதென எண்ணும் போதில்
குழந்தாய்நீ வந்தெனக்கிங் குவப்பளித்தாய்!
குளிவாவென் றன்புடனுட் கொண்டு சென்று
"குழந்தையடி! பார்" என்றான். அரசி தானும்
கொள்ளையழ குள்ளவனைக் கண்டு கொண்டாள்!

பேரின்பம் தன்னில்சில நாளிருந்து
பின்தந்தை தன்னை விடை கேட்டுப் பெற்றுத்
தேரின்மேல் ஏறிமிக விரைவினோடு
செல்லுகின்றான் வஞ்சிநிலை காண வேண்டி.
ஆரின்மேல் காதல்கொண் டவள்ம ணந்தே
அங்கிருப்பா ளோஇல்லை எனைத்தான் எண்ணிப்
பாரின்மேல் மணவாதுள் ளாளோ என்று
பலநினைத்துத் தேர்விட்டான் பாராள் வோனே!

## சுந்தரியின் வஞ்சம்

### வஞ்சியின்பால்

சுந்தரி யந்தத் தோழிதனைச்
சூழ்ச்சிக் குடந்தை யானவளை
வந்திட வழைத்துச் "சற்றேனும்
வயிற்றின் எரிச்சல் தீரவில்லை

அந்த இளைஞன் அகன்றானும்
அன்று கழுவில் ஏறவில்லை
இந்தச் செய்தி யுண்மையதோ?
எனக்குச் சொல்வாய்'' என்றாள்பின்,

''வஞ்சி துணையால் மீண்டானோ?
வருமோர் துயரை யறிதற்கே
நெஞ்சில் சுடர்தான் கொண்டானோ?
நிகழ்த்தாய்'' என்றாட் குரைக்கின்றாள்
''வஞ்சியின் தோழி ஒருத்தியொடு
வார்த்தைக ளாடி நேற்றிருந்தேன்
வஞ்சி வருத்தப் பட்டாளாம்
வஞ்சக் கழுவின் செய்தியினால்.

''காதல் கொண்டே வஞ்சியின்பால்
கயவன் அகன்று போயிருப்பான்
சாதல் தவிர்த்துக் கொண்டானே
தக்க வழியைக் காண்கின்றேன்
காதல் உற்றே வஞ்சியுந்தான்
காளை இறந்தான் என்றவளுக்
கோதத் துன்பம் மிக்கவளாய்
உரைத்து நின்றாள் ஆகையினால்

வஞ்சி தன்னைக் கொன்றுவிட்டால்
வஞ்சகன் ஏமாற் றங்கொள்வான்
நெஞ்சிற் கொண்ட துக்கத்தால்
நேரே சாவைக் காண்பானால்
வஞ்சந் தீர்க்க வழிசொல்வாய்
வாழி! தோழி!'' என்றாட்கு
நெஞ்சில் அச்சம் மிக்காள்அந்
நேரிழை யாளும் சொல்கின்றாள்.

"அம்மா நூறு புத்தர்களை
அழித்த பாவம் போதாதோ
சும்மா ஊரை விட்டவரைத்
துரத்தச் செய்வாய் என்றெண்ணி
இம்மா சூழ்ச்சிக் கிசைந்தேனின்
றேதோ சொல்லிக் கேட்கின்றாய்!
சும்மா முடியும் செயலல்ல
சொன்னேன் விட்டு விடுவாயே!"

என்றாள் நோக்கிச் சுந்தரியாள்
"ஏ!ஏ! என்றன் பொருள்களிலே
நன்றே பாதிப் பங்கெடுத்து
நானே உனக்குத் தருகின்றேன்
சென்றே முடித்து வருவாய் என்
சிந்தை மகிழச் செய்வாயே"
என்றே வேண்டத் தோழிதான்
"என்னால் முடியா" தென்றாளே!

**வேறு**

தோழியை யுற்றுப் பார்த்துச்
சுந்தரி சொல்லு கின்றாள்;
"பாழிலென் சோற்றைத் தின்று
பயனின்றி நிற்கின் றாயே!
தோழிஎன் றெதற்கு வந்தாய்
துணைசெய்யத் தானே! ஏடி
வாளிதோ! போவாய்! அந்த
வஞ்சியைக் கொன்று வாராய்!"

"முடியாது முடியா" தென்று
மொழிந்தாளின் மீது வாளை
நெடிந்தோங்கி வீசி விட்டாள்
நேரிழை மடிந்து வீழ்ந்தாள்.

"அடி! உன்றன் நன்றிக் கேட்டை
அகற்றினேன் நரகஞ் சென்று
வடியேடி! கண்ணீர்" என்றுள்
வானிடி எனச் சிரித்தாள்!

"தீர்ந்தது பகைஒன் றின்று
தீராத பகைஇ ரண்டும்
மீந்தன ஒன்ற ழித்தால்
மேதினி மீது மற்று
மீந்துள ஒன்றும் சாகும்
வெறியெலாம் தீரும்" என்றே
ஏந்திய வாளி னோடும்
ஏறினள் குதிரை ஒன்றில்!

நண்பகல் நேர மாதல்,
நகருள மக்க ளெல்லாம்
கண்களை மூடிச் சற்றுக்
களைப்பினை நீக்க லாமென்
றெண்ணியே தூங்கி னரால்
ஏந்திய வாளி னோடு
கண்கனல் சிந்தச் செல்லும்
கன்னிக்குத் தடைகள் இல்லை.

அங்கையின் வாளை ஏந்தி
அம்புபோல் குதிரை செல்ல
வெங்கனல் விழிகள் கக்க
விரைவுபோ தாதென் றுன்னி
அங்கத்தில் வாளி னாலே
அடித்துக்கு திரைசெ லுத்தும்
மங்கையின் வெறிக்கு நல்ல
மதுவெறி தோற்றுப் போகும்!

வாளினுற் பகையை வீழ்த்த
வரும் நாளை எண்ணும் வீரர்க்(கு)
ஏளனம் செய்ப கைமேல்
எழும்வெறி தோற்றுப் போகும்!
ஏழைகள் வறுமைத் துன்பம்
ஏலாமற் புரட்சி செய்யும்
நாளினில் சிந்தை சேர்ந்த
நல்வெறி தானும் தோற்கும்!

## இளைஞன் வஞ்சியைக்

## காணவந்தான்.

நண்பகலில் குளிரிருக்கும் சோலை தன்னில்
நான்சென்றே யுவப்பேனென் றெண்ணி வஞ்சி
கண்ணனைய தோழியர்க்கும் சொல்லா மற்பூங்
காவினுள்ளே மயிலைப்போல் ஆடிச் சென்று
தண்ணெனவே நிழல்படுத்துக் கொண்டி ருக்கும்
தனிமேடை தனில்தானும் போய்ப்ப டுத்தாள்
கண்ணயர்ந்தாள், தேர்வருமோர் ஓசை கேட்டுக்
கண் துடைத்துத் தெளிவடைந்தப் பக்கம் பார்த்தாள்.

மெல்லநடை நடந்துவரும் இளைஞன் தன்னை
மேற்புருவம் வளைத்தையம் தோன்றக் காட்டி
"நில்லுமைய நீர்யாரோ? இங்கேன் வந்தீர்?
நிகழ்த்து" மெனக் கேட்டாளை நோக்கி, "இவ்வூர்
எல்லையிலே ஆலமர நீழல் தன்னில்
இருந்தபுத்தன் நின்னிடத்தில் காதல் கொண்டு
வல்லைசென் றுசானின் வாழ்த்துப் பெற்று
வந்தான் நின் உளங்காண நேர்நிற் கின்ருன்."

இந்தமொழி கேட்டுசெவி குளிர் அடைய
இன்பத்தால் உதடுகுவித் தொருநல் முத்தம்
தந்தவனின் உளங்குளிரச் செய்யும் நோக்கால்
தாவப்போம் நிலையினிலே 'அடிநில்' லென்று
வந்தமொழி கேட்டந்தப் பக்கந் தன்னில்
வனிதையுடன் காதலனும் திரும்பிப் பார்க்க
வந்தாள்அச் சுந்தரியாள் வாள்பி டித்து
வந்தவள்கீழ் இறங்கித்தன் குதிரைமேலே,

சாய்ந்தபடி நின்றுளை வஞ்சி கேட்டாள்:
"சாகும்வகை குதிரையினை அடித்த டித்துத்
தோய்குருதி வாள்பிடித்துச் சோலைவந்த
தோகாய்நீ யாரிங்கு வந்த தேனோ?
வாய்திறவாய்!" "வாய்மட்டும் அல்ல, ஏடி
வானகத்தை நீயடையும் வழியும் நானே
பாய்வாளால் திறப்பே" னென் றுரைத்துப் பின்னும்
பகர்கின்றுள், "வஞ்சகனைப் புத்தன் தன்னை

மயக்கியதும் நீயன்றே? மடிவாய்!" என்று
மனவலியை ஒன்றுக்கி, வாளை ஓங்கி
உயர்த்தடித்த வீச்சிலந்த வஞ்சி வீழ,
ஓடிவந்த களைப்பாலும், குருதி வெள்ளம்
பயந்தமயக் கத்தாலும் பாய்மா சாய்ந்து
பாதகிஅச் சுந்தரியின் மேலே வீழக்
கயமைமகள் கீழ்வீழ்ந்தாள்; கையிற் கத்தி
கடிந்தேகி அவள் மார்பைத் துளைத்த தன்றே!

பாய்வாளைப் பார்த்தான்பின் பாவை வீழப்
பார்த்தான்பின் பாய்மாமேல் வந்து ரத்தம்
தோய்வாளைப் பிடித்தசுந் தரியாள் வீழ்ந்து
துடித்திறந்த நிலையினையும் பார்த்தான் ரத்தம்

தோய்தாளைப் பார்த்தான்கீழ்த் தரையைப் பார்த்தான்
துள்ளிவரும் காதலினால் முத்தம் ஈயப்
பாய்ந்தாளின் தண்ணுடலைப் பனிமு கத்தைப்
பார்த்தான்பின் உள்ளமிகப் பதைத்துச் சொல்வான்.

"ஏடி! நான் பல்லக்கில் ஏறிப் போங்கால்
இளவஞ்சி நின்முகத்தில் காதல் தோற்றம்
ஆடிநேர் வரக்கண்டேன்! காதல் தன்னை
அன்றறியா திருந்துவிட்டேன்; பின்நாள் என்னைத்
தேடிநீ வந்திருந்தாய், மதியா துன்னைத்
திருப்பிவிட்டேன்; நீசிறிதும் வருந்த வில்லை.
நாடினேன் நற்றுறவைக் களைந்து வந்தேன்.
நங்காய்! இத் துயரெல்லாம் இதற்குத்தானா?

சினத்தாலே தீதொன்றும் இல்லை என்ற
செய்யமுதி யவர்மொழியை மதியா தேகி,
வனத்துவழிச் சென்றுகுரு தன்னைக் கண்டு
வந்தேன்நின் சீர்முத்தம் கிடைக்கு மென்று
மனத்தாலே காதலினைப் பெருக்கி என்னை
மகிழ்விக்க வந்தாய்நான் ஏற்கச் சித்தம்
எனத்தான்இ ருந்தேனே ஏமாற் றத்தை
எய்திவிட்டேன் அடி! எல்லாம் இதற்குத் தானா?

வாள்பிடித்த மங்கைஎனை வந்து பார்த்து
வாருமின்ப முறவென்றாள் மறுத்துச் சொன்னேன்
ஆள்வோனின் மகளேநீ அடக்கத் தோடே
அடிபணிந்தாய் உனக்குந்தான் மறுத்துச் சொன்னேன்
பாழ்செய்தென் உயிர்போக்கக் காத் திருந்த
பாவையளின் கோபத்தைத் தப்பி வந்தேன்
வாளாலே குத்திவிட்டாள் என்றன் வாழ்வை,
வஞ்சிதனைப் பிரித்துவிட்டாள்! தனிவிட் டாளே!

இன்பமுற வாழ்கவெனக் குருசொன் ஞரே!
என் தந்தை மகிழ்வுடனே அனுப்பி ஞரே!
மன்பதையில் துறவுகளைந் தேவந் தேனே!
வஞ்சியுங்கா தலித்தாளென் றின்புற் றேனே!
அன்புடைய புத்தர்களை ஆலின் நீழல்
அமர்ந்திருக்க விட்டுவிட்டு யான்வந் தேனே!
என்பயன் இங் குற்றுவிட்டேன்? இங்கு வந்தேன்
எதற்குவந்தேன்? ஏன்வந்தேன்? ஏன்வந் தேனே!

இனிநான்போய்க் குருமுகத்தை எவ்வா றென்றன்
இருவிழியாற் காண்பேன்? ஓ! மணந்த பின்னர்
தனியிருப்போர் துறவடைதல் புத்தந் தன்னில்
தகாதடா என்றுரே மான மற்றேன்
இனித்தந்தை முகங்காணல் பாவம். அந்த
ஏந்திழைக்கு நாளொருநாள் இசைத்தே னன்றோ?
தனியடிநான் என்றென்றும் தனிதான் என்று
தனிமையினைத் தரத்தானே குதிரைமீது,

தாவிவந்தாள்? ஒருயிராய்க் கலக்க நிற்கும்
தண்மதியின் முகமுடையாள் வஞ்சி யாளின்
ஆவிதனை வாளாலே அகற்றி விட்டாள்!
அன்புடனே முத்தமிட வந்த காதல்
தேவிதனை நில்லென்றாள்! தீண்டா வண்ணம்
செய்தெனையே மலைக்கவைத்துக் குத்திச்செத்துப்
போய்விழுந்தாள்! தனிமைதனைக் காத்துத் தந்தாள்?
போகின்றேன் தனியேநான்'' என்றான். போனான்!

# இளவரசி முல்லை

''புகைகூடத் தட்டத்தில் ஏந்தி வந்தால்
புத்தழகுத் தூபமெனப் பொலிவ துண்டு
நகையணிந்தும், சலசலக்கும் உடைய ணிந்தும்
நடக்கின்ற காலிரண்டில் சிலம்ப ணிந்தும்
வகைவகையாய்க் கொண்டையிலே மலர ணிந்தும்
வருகின்ற மங்கையரின் அழகு முற்றும்
தொகை தொகையாய் வாங்கியதோர் கடனை யொக்கும்
துன்பத்தின் பிறப்பிடமே யாகு மப்பா!

''சிரிக்கின்ற மங்கையரின் அழகிற் சொக்கித்
திளைப்பவர்கள் பிள்ளைகளைப் பெற்றுத் தம்மை
அரிக்கின்ற கவலைகளிற் சிக்கிக் கொண்டே
அவதியுறும் காட்சிகளே மிகுதி! பெண்கள்
விரிக்கின்ற காதலெனும் வலைக் கொ துங்கி
விடுபட்டு வாழாதான் வாழ்க்கை முற்றும்
எரிக்கின்ற விறகு தன்னைத் தானே தீயில்
இட்டுக்கொண் டவலமுறும் கதையை யொக்கும்!

''அணிகளிலும் துணிகளிலும் ஆசை வைத்தே
அலைகின்ற மங்கையரைத் தேடிச் சென்று
பணிகின்ற அடியார்போல், போற்றி பாடும்
பாவலர்போல், கடைக்கண்ணின் பார்வைக்கேங்கித்

துணிகின்ற செயலாற்றும் பருவத் தைப்பெண்
தொண்டுக்குப் பயன்படுத்தும் இளைஞ ரெல்லாம்
பிணியென்பேன்; குறிக்கோளை மேற்கொள் ளாத
பித்தர்களின் கூட்டமென்றே பழித்து ரைப்பேன்!

"நாட்டுக்குப் பணிசெய்யத் தக்க ஆண்டை
நங்கையரைக் காதலிக்கச் செலவ ழிக்கும்
கோட்டமுறு கொள்கையிலே செல்ல மாட்டேன்
கோதையரை நெஞ்சினிலே ஏற்க மாட்டேன்
வாட்டமுறும் பலபேரைப் பார்த்தி ருந்தும்
வழுச்சேற்றில் நடப்பவன்போல் இல்ல றத்தை
வேட்டடைய முனைவேனே நண்பா என்றன்
விளக்கத்தைக் கூறிவிட்டேன் அறிவாய் நன்றே!"

முத்தப்பன் இவ்வாறு சொல்லக் கேட்டு
முறுவலுடன் பொன்னப்பன் கூறு கின்றான்
"இத்தரையில் பெண்களிடம் கொள்ளும் காதல்
இழிவென்று கூறிடுவார் கூற்றை நோக்கின்
தத்துவத்தை உணராதான் இறைவ ணக்கம்
தவறென்று பேசுவதாம்! கடலின் காற்றைச்
சொத்தென்னும் மருத்துவரின் உரைம றுத்துச்
சுகமிழக்கும் பேதைமையாம் பிள்ளைப் பேச்சாம்!

'காந்தக்கண் பார்வையிலே வீழ மட்டும்
காளையர்கள் பேசுகின்ற பேச்சைத் தான் நீ
வேந்தனைப் போல் வீறுடனே பேசு கின்றாய்;
வேளைவரும் முத்தப்பா; பொறுத்தி ருப்பேன்.
கூந்தலிலே பூச்சூட்டும் குலத்தை என்றும்
குறைவாகப் பேசுவதால் பயனே இல்லை;
சாந்தமுடன் காத்திருப்பாய்; ஒருநாள் நீயும்
சம்பந்த புரம் நோக்கிப் போவா யப்பா!

"தாமரையைப் போலொருத்தி நெஞ்சில் நெஞ்சைத்
தளைப்படுத்திக் கிடப்பதுவே இன்ப மாகும்!
கோமகனாய்ப் பிறந்தாலும் காதல் நெஞ்சில்
குடியிருக்கும் பேறின்றேல் துன்ப மாகும்!
தேமதுர வாய்மொழியும் அன்பு பாய்ச்சும்
திருவிழியும் துணையிருந்தால் சுவைக்கும் வாழ்வு!
பூமலரை நாடாத வண்டு தேனின்
புதுச்சுவையைப் பழிப்பதிலே பொருளுமுண்டோ?

எவ்வுயிரும் இன்பமுற வாழ்க வென்றே
இவ்வுலகைப் படைத்தவனும் ஆணும் பெண்ணும்
செவ்வியராய் வாழ்கவெனக் காதல் என்னும்
சிறப்புடைய பாகத்தை இடையில் வைத்தான்!
அவ்வை திரு வள்ளுவர்போல் அறிஞ ரெல்லாம்
அருமையுடன் காதலையே பாடி யுள்ளார்
இவ்வையத் தின்பத்தைக் காதல் என்னும்
இன்னமுதை வெறுப்பவர்கள் அறியா தாரே!

சிரிக்கின்ற மங்கையவள் தொட்டால் இன்பம்
சிரித்தபடி பார்த்தாலும் அதுவே இன்பம்
அரிக்கின்ற உலகத்துக் கவலை யெல்லாம்
அவள் மடியில் தலைவைத்தால் அகன்று போகும்
விரிக்கின்ற இதழாலே வண்ட ழைத்து
விரும்புமட்டும் தேனுண்ணச் செய்யும் பூப்போல்
சுரிக்கின்ற கருங்கூந்தல் துணையி னாலே
சுகமுண்டு பயனுண்டு மனிதர்க் கெல்லாம்!

அழகுமகள் தாமரையைக் காத லிக்கும்
அன்புடையான் பொன்னப்பன் கூற்றைக் கேட்டுப்
பழகுமுயர் முத்தப்பன் மறுத்து ரைப்பான்
பாசமுள்ள நண்பர்களும் ஏசிக் கொள்வார்,

கழகத்துப் புலவர்களின் சண்டை யெல்லாம்
கருத்தளவே நிற்பதுபோல் நண்பர்க் குள்ளே
எழுகின்ற வாய்ப்போரும் நின்று போகும்!
என்றும் போல் அன்புடனே ஒன்றி வாழ்வார்.

முத்தப்பன் பொன்னப்பன் வீட்டை நோக்கி
முகந்தொங்கப் போட்டபடி ஒருநாள் சென்றான்
எத்தை நீ நினைத்தபடி வருந்து கின்றாய்!
எனக் கேட்டான் பொன்னப்பன், குரலி றங்க
"சித்தத்தைத் தேற்றிக் கொள் நண்பா, நானும்
செல்லுகின்றேன் தஞ்சைக்கு, மீண்டும் உன்னை
எத்தினத்தில் காண்பேனோ தெரியா தப்பா
இனிமேல் நான் அங்கேதான் இருப்பேன்" என்றான்.

"இங்கென்ன குறைச்சல் நீ தஞ்சைக் கேகும்
எண்ணத்தைக் கைவிடுவாய்; என்னைக் காணா
திங்கிருக்க முடியாது; நண்பா உன்னை
எப்படி நீ பிரிந்திருக்கத் துணிந்தாய்?" என்றே
அங்கந்தப் பொன்னப்பன் துயர நெஞ்சை
அகலத்தான் திறந்து வைத்தான்; அதனைக் கேட்டுத்
தங்கத்தை யொத்தகுண முத்தப் பன்தன்
தடுமாற்றம் மறைத்தங்கே கூறு கின்றான்!

"தாமரையைத் துணையாகப்பெற்றி ருந்தும்
தவிக்கின்றாய் வியக்கின்றேன் உன்றன் நட்பை!
மாமனுக்குத் தஞ்சை நகர் மன்னர் நண்பர்;
மன்னருக்கு மெய்த்துணைவன் ஒருவன் வேண்டும்;
தாமதங்கள் செய்யாமல் வருக வென்று
தந்தைக்கு வந்ததொரு செய்தி; இன்றே
கோமகனின் தஞ்சைக்குப் புறப்ப டென்று
குதிக்கின்றார் விதிக்கின்றார் கட்ட ளைகள்!

"மன்னருக்குப் பணியாளாய்ப் போவ தாலே
 மதிப்புயரும்; வாணிபத்தில் வளர்ச்சி தோன்றும்
என்னருமைத் தந்தை மனக் கருத்துக் கொப்ப
 எதிர்பேசா தேகுவதே என்றன் தொண்டாம்!
வன்னமயில் தாமரைக்கென் வாழ்த்தைக் கூறு;
 வரைந்தோலை யனுப்பிடுவேன் பதிலைப் போடு;
பொன்னகரம் போனாலும் உன்னைத் தேடும்
 பொதுநட்பை எந்நாளும் மறவேன்" என்றான்

முத்தப்பன் தஞ்சைக்குப் போன பின்னே
 முழுப்பொழுதும் நகராமல் தேங்கித் தேங்கிச்
சத்தற்று நடக்கின்ற நிலைமை கண்டு
 தனியிருந்த பொன்னப்பன் பித்த னானான்
முத்துப்பல் தாமரையின் உருவை நெஞ்சில்
 முன்னிறுத்தி ஒருகாதல் பாவ ரைந்தே
உத்தமியாம் பணிப்பாவை யொருத்தி கையில்
 ஒப்படைத்தான் பதில்கருதிக் காத்தி ருந்தான்.

அன்புடையான் கொடுத்தமடல் வாங்கிப் பார்த்தாள்
 அகமலர்ந்து பரிசுபல தருவா ளென்றே
தன்பங்கில் எண்ணிநின்றாள். வேலைக் காரி
 "தடிப்பயல்கள் கொடுப்பதெல்லாம் வாங்கி வந்தா
என்னிடத்தில் தருகின்றாய்?" என்று கூறி
 எடுத்துவந்த கடிதத்தைக் கிழிந்தெ றிந்தாள்.
"துன்பமிது துன்பமிந்த வேலை" யென்று
 சொல்லியந்தப் பணிப்பாவை போய கன்றாள்.

பணிப்பாவை தலை மறைந்த கணமே கையால்
 பத்துமுறை கிழித்தெறிந்த துண்டை யெல்லாம்
இணைத்தெடுத்துப் படித்தாள்தன் காதல் நெஞ்சில்
 இருப்பவனின் இதயத்தை எழுத்திற் கண்டாள்.

அணைத்தபடி, 'பூஞ்சோலைப் புதரின் பின்னே
அளிக்கின்ற முத்தத்தைப் பெறுக' வென்றே
இணைத்திருந்த துண்டெல்லாம் எடுத்தெ டுத்தே
இச்சிட்டாள் அச்சிட்டாள் நகைத்திட் டாளே!

"நாடோறும் காணாத கார ணத்தால்
நானிங்குப் பித்தேறி வாழு கின்றேன்
வீடோமுட் காடாகி நெஞ்சைக் குத்தும்.
வேதனையைத் தாங்குகிலேன் அன்பே சோலைக்
கோடோடி வருவாய் இம் மாலைப் போதில்
உனக்காகக் காத்திருப்பேன் என்றன் காதல்
சூடோடப் பனி முத்தம் நல்க வாராய்
சுடர்க்கொடியே" என்றுரைத்த தம்மு டங்கல்!

"சந்திக்கச் சந்திக்கக் காதல் ஊறும்
சத்தான முத்தங்கள் இதழ்கள் மாறும்
சிந்திக்க சிந்திக்க அன்பு மீறும்
சிறு குழந்தைத் தனமாகப் பின்பு மாறும்
விந்தைக்குள் விந்தையெனச் சுவைகள் சேரும்
வேடிக்கைப் பேச்சுக்கள் வளர நேரும்
அந்திக்கு வருவேன் என் அன்பே பாரும்
யாருக்கும் தெரியாமல் சோலை வாரும்!"

என்றேதன் நெஞ்சத்தில் எழுந்த தெல்லாம்
எழுதியபெண் தாமரையாள் வேலைக் காரி
முன்னே சென் றவள்கையில் முடங்கல் வைத்து
முகங்கடுத்த பாவனையாய்ச் சொல்லு கின்றாள்
உன்னிடத்தில் இக்கடிதம் கொடுத்த வன்பால்
உடன்சென்று கொடுத்திடுவாய் முடங்கல் ஒன்றை
இன்னொருகால் எழுதுதற்கும் எண்ண வேண்டாம்
என்றவனை எச்சரித்து வருவாய் என்றாள்!

"என்னெதிரில் அவள் கடிதம் கிழித்துப் போட்டாள்;
இப்பொழுதோ அதைமறந்து திருப்பு தல் போல்
தன்னெழுத்தை என்னிடத்தில் தந்து போக்கும்
தந்திரத்தை அறியேனென் றெண்ணி யிந்த
அன்னமயில் நடக்கின்ருள்; பருவம் செய்யும்
ஆட்சியிலே இயங்குகின்ற பாவை; பேதை
இன்னமுத வாழ்வடைய உதவு வே" னென்
றெண்ணமிட்டுப் பணிமங்கை ஏந்திச் சென்ருள்.

பொன்னப்பன் இம்முடங்கல் பெற்ற டைந்த
பூரிப்பை இன்னதென்று விளக்கப் போமோ
அன்னப்பெண் தாமரையின் எழுத்தொவ் வொன்றும்
ஆயிரம்தேன் குடத்திற்கு நிகராம் என்றே
உன்னிப்பல் வாருக உவக்கும் போதில்
உள்நுழைந்த தந்தையதைக் கண்டு விட்டார்
"என்னப்பா முடங்கலிது குதிக்கின் ருயே
யாரெழுதி யனுப்பியதோ?" என்று கேட்டார்.

உள்ளமுவப் பாகுமொரு காதல் நங்கை
உயிர்மொழியில் எழுதியதாம் முடங்கல் என்றே
கள்ளமின்றித் தந்தையிடம் சொல்லப் போமோ
காதலெனில் தீதென்றும் ஒழுக்கங் கெட்ட
பள்ளென்றும் கருதுகின்ற பான்மை கொண்டார்;
பற்பலவாய்ச் சினந்திடுவார்" ஆதலாலே
சுள்ளென்று 'முத்தப்பன் ஓலை' யென்றே
சுவையாகப் பொய் கூறித் தப்பித் தானே!

"முத்தப்பன் பொன்னுனை பிள்ளை! அங்கே
முழுநலத்தோ டுள்ளாளு? வேறு செய்தி
சத்தாக என்னென்ன எழுதி யுள்ளான்?
சாற்"றென்று கேட்டங்கே அமர்ந்து கொண்டார்

"மொத்தத்தில் நலந்தானும் தஞ்சை மன்னர்
முழுஅன்பும் இவன்பேரில் தானும் வாழ்க்கை
மெத்த சுவை என்றாலும் நானில் லாமல்
மிகக்குறையாய் உள்ளதுவாம்" என்று சொன்னான்.

தாமரைக்குப் பக்கத்தில் தானில் லாமல்
தளிர்க்கொடியாள் குறைப்படுமோர் செய்தி தன்னை
மேல் மறைத்து முத்தப்பன் பெயரைக் கூறி
மிகத்திறமாய்ப் பொய் சொன்னான் வணிகர் மைந்தன்
"ஆமவனுக் குனைவிட்டால் பொழுது போக
அயலூரில் உயிர்நண்பர் யார்கி டைப்பார்?
போய் மனத்துக் குவந்தவனோ டிருந்து சின்னாள்
பொழுதுகழித் திடுவாய் நீ" புறப்ப டென்றார்.

"உள்ளூருக் குள்ளேயே வாழ்வை ஓட்டி
உட்கார்ந்து கொண்டிருந்தால் உலக ஞானம்
தெள்ளியதாய் வளராதென் றறிஞர் சொல்வார்
திருநாடு முழுவதுமே சுற்றி வந்தால்
வள்ளுவரைப் போலறிஞர் ஆக லாகும்
வளஞ்சேர்க்கும் வாணிபத்தின் திறமை சேரும்
உள்ளந்தான் விரிவாகும் ஆத லாலே
உடனேநீ புறப்படுவாய்!! என்று ரைத்தார்.

நினைத்ததொரு செயல்நடக்க வேண்டு மென்று
நெஞ்சாரப் பொய்சொல்லும் மனித ரெல்லாம்
தினைத்துணையும் பயன் நல்காப் பொய்யை நாளும்
திறமாகப் பயின்றுவரல் காணும் போதில்
பனைக்கழுத்தில் ஊறிவரும் சாற்றுக் கள்ளைப்
பாலென்று குடிப்பதனை ஒக்கு மென்றே
அனைத்துமொழி நல்லோர்கள் கூறி யுள்ள
அமுதமொழி மறந்தவனும் அல்ல லுற்றான்!

ஒத்தவய துள்ளவர்கள் கண்ணுல் பேசி
உள்ளத்தால் மெய்யுறவு கொண்ட பின்னே
இத்தரையில் துணைவர்களாய் இல்ல றத்தை
ஏற்கஎண்ணி முயலுவதே தூய காதல்!
அத்தகைய காதலிலே சிக்கிக் கொண்டால்
அன்புடைய பெற்ருேர்கள் விருப்பத் திற்கே
ஒத்துவர முடியாமல் வீட்டை விட்டும்
உயிரிருக்கும் கூட்டைவிட்டும் ஓட லுண்டாம்!

மாலையிலே சந்திக்க வருக வென்று
மலர்க் கொடியாள் தாமரையாள் அழைத்த வண்ணம்
சோலையிலே பொன்னப்பன் காத்தி ருந்தான்
சொன்னபடி புன்னகையோ டவளும் வந்தாள்!
காலையிலே அவள்கடிதம் பெற்ற வாறும்
கணக்காகத் தந்தையிடம் சொன்ன பொய்யும்
ஓலையினுல் தஞ்சைக்குச் செல்லத் தந்தை
உடனிட்ட கட்டளையும் கூறி நின்ருன்.

எப்போதும் இதயத்தில் வீற்றி ருக்கும்
இடையழகி தாமரையைப் பிரிந்து போய்நான்
எப்படி நான் நாட்கழிப்பேன் என்று நெஞ்சில்
ஏதேதோ பொன்னப்பன் நினைத்தி ருந்தான்
கப்பென்று சூழ்ந்த இருள் போலே அந்தக்
காரிகையின் மனத்தினிலே துன்பம் ஏற
"எப்பொழுது திரும்பிடுவீர்?" என்று கேட்டாள்
ஏகுவதைத் தடுக்கமுடி யாமை யாலே!

தஞ்சைக்குச் சென்றங்கே நண்ப ரோடு
தங்குவதால் எனைமறந்து போகக் கூடும்;
நெஞ்சுக்குப் புதுநினைவு தோன்றத் தோன்ற
நேற்றெண்ணிக் கொண்டதெலாம் மறந்து போகும்;

வஞ்சிக்கு மனம்புகுந்த தலைவ னன்றி
மற்றொருவர் பாலெண்ணம் போவ தில்லை;
அஞ்சிக்கொள் நிலையிதுவோ என்றால் இல்லை
அவள்பண்பே தமிழ்ப்பெண்ணுக் கியற்கை யாகும்

"அன்பாலே கலப்புற்றோம் ஒன்று பட்டோம்
அதுபோதும் நம்வாழ்வு நடப்ப தற்கே
தென்பாலும் வடபாலும் அதற்கப் பாலும்
திசைதோறும் போய்மீண்டு வந்த போதும்
என்பாலே அன்புடையாள் மதுரை யூரில்
இருக்கின்றாள்எனும்நினைப்பைக் கொண்டால்போதும்
மின்பாயும் ஒளிபாயும் இயங்கும் வாழ்வே
மேன்மேலும் நானிதனை விரித்தல் வேண்டா!

"எனைப் பிரிந்து தஞ்சையிலே இருக்கு நாளில்
எவ்விடத்தே யாரோடு தங்கி னாலும்
நினைப்பிருக்கத் தக்கதொரு பரிசில் என்றே
நீட்டி நின்றாள் தாமரைதன் மோதி ரத்தை
உனைப்பிரிந்து நானிருக்கும் நாட்கள் முற்றும்
உன்நினைப்பை ஏற்றிருப்பேன்; அதுபோல் நீயும்
எனைத்தினமும் நினைத்திருக்க இந்தா வென்றே
எடுத்தளித்தான் தன்விரலின் மோதி ரத்தை!

கடவுளுக்குச் சிலைவைத்து வணங்குதல் போல்
காதலுக்கு மோதிரத்தைச் சின்ன மாக்கி
திடமான நம்பிக்கை யுடையோ ராகிச்
சிந்தையினை அடக்கினராய்ப் பிரிந்து சென்றார்
அடர்புரிவோன் தனைத்திருத்தச் சிலையா லாமா?
அன்பிழந்தோன் மோதிரத்தை மதிப்ப துண்டோ?
மடமையினால் காதலுக்குச் சின்னம் வைத்து
மகிழ்ந்தவளைப் பொன்னப்பன் பிரிந்து சென்றான்!

பொன்னப்பன் தாமரையின் விடையைப் பெற்றுப்
புறப்பட்டான் அன்றைக்கே தஞ்சை நோக்கி
தின்னப்பல் பண்ணியமும் செய்து வைத்துத்
தேவைக்குத் தக்க உடை கட்டி வைத்து
என்னப்பன் வழிச்செலவை இனிய தாக்க
எழுந்தருள்க கணபதியே எனவ ணங்கி
அன்னைப் பெண் மங்கையரும் வாழ்த்துக் கூற
அவன் வணிகர் கூட்டத்தோ டொருங்கு சென்ருன்.

வழிச்செல்லும் ஊரெல்லாம் தங்கித் தங்கி
வாணிபங்கள் புரிந்தபடி சென்றி ருந்தார்
எழில் முகத்துத் தாமரையை எண்ணி நெஞ்சம்
இருந்துவந்த திசைநோக்கும்; தஞ்சை வாழும்
உழுவலன்பன் தனைவிரைவில் காண எண்ணம்
ஓடி நிற்கும்; வழிப்பயணம் தேங்கும் போதில்,
பழித்திருக்கும் வணிகர்களை; இவ்வா றுகப்
பலநாட்கள் சென்றதன்பின் தஞ்சை சேர்ந்தான்!

தஞ்சைக்கு வந்துள்ளான் நண்பன் என்ற
தகவலறிந் தக்கணமே விரைந்து வந்து
நெஞ்சாரத் தழுவிவர வேற்றுச் சென்றே
நெடுநேரம் நலங்கேட்டுப் பேசிப் பின்னர்
தஞ்சையர சாளுகின்ற மன்ன ருக்கும்
தளபதிகள் அமைச்சர்அதி காரி கட்கும்
செஞ்சொலால் அறிமுகங்கள் செய்து வைத்துச்
சிறப்பாக முத்தப்பன் விருந்து வைத்தான்!

"அப்பாவும் அம்மாவும் நலமா? உன்றன்
அகத்திருக்கும் தாமரையாள் நலமா? காதல்
இப்போதைக் கெவ்வளவில் வளர்ந்த தென்றே
இயம்பிடுவாய், என் நண்பா, திரும ணத்தை

—10—

எப்போது வைத்துள்ளாய் சொல்க'' என்றே
ஏதேதோ முத்தப்பன் கேட்டி ருந்தான்
''ஒப்புக்கேன் கேட்கின்முய்? காதல் என்முல்
உனக்குத்தான் வேப்பங்காய் ஆச்சே'' என்முன்.

''தேனிருக்கும் பொற்குடந்தான் காதல் என்று
தெரிந்து கொண்டு விட்டேன் நான் அக்கு டத்தைப்
பானிலவு வீசுகின்ற இரவு தோறும்
பருகுகின்றேன் தவமுமல் நண்பா'' என்முன்.
''வான்கதிரின் அனல் மாற்றிக் குளிர வைத்த
வடிவழகி யார்?'' என்று பொன்னன் கேட்கத்
''தேன்மொழியாள் முல்லையென்பாள் தஞ்சை மன்னர்
திருக்குமரி'' என்றுரைந்தான் முத்தப் பன்னே.

''கரையாத உன்மனத்தைக் கரைத்த முல்லை
கட்டழகி யாகத்தான் இருத்தல் வேண்டும்
முறையாக அவளோடு பேசி ஞயா?
முகமலர அவளுன்னை ஏற்கின் முளா?
தெரியாமல் நீ மட்டும் காத லித்துச்
சிறுபிள்ளை போலமணல் வீடு கட்டிப்
பெரிதாகக் கற்பனைகள் புரிகின் முயா?
பேதைமையா? உண்மையிலே காதல் தாஞ?''

''ஏனிந்த ஐயங்கள் கொள்ளு கின்முய்
என்பேச்சில், பொன்னப்பா காத லென்முல்
தாஞகக் கற்பனைகள் புரிந்து கொண்டு
தையலரை மனத்துள்ளோ நாடுங் கூற்மு?
மீன்விழியாள் முல்லையென்மேல் விருப்ப மின்றி
இருந்திடுவாள் எனநீயேன் நினைக்க வேண்டும்?
தேஞன முல்லைஎனை இரவு தோறும்
தேடிவந்து சந்தித்துப் பேசு கின்முள்.''

இவ்வாறு முத்தப்பன் சொல்ல நண்பன்
"இதுமன்னர் அறிவாரோ?" என்று கேட்டான்
"எவ்வாறு மன்னர்க்குச் சொல்வ தென்றே
எனக்கொன்றும் தெரியவில்லை, ஏனென் றாலோ
செவ்வாழைத் தண்டாளை உறவுக் காரன்
சிற்றரசன் புயங்கனுக்குக் கொடுப்ப தென்ற
ஒவ்வாத முடிவுடனே இருப்பதாலே
உறவெல்லாம் மறைவாய்த்தான் நடக்கு" தென்றான்.

"முல்லைக்குப் புயங்கன் மேல் அன் பிருந்தால்
முடிமன்னன் திருமணத்தை முடிப்பா னன்றோ?
தொல்லைக்குக் காதலிக்கப் போனா யேவீண்
துன்பத்தை விலைக்கன்றோ வாங்கு கின்றாய்?
நல்லெண்ணத் தோடேநான் கேட்கின் றேன்நீ
நடத்துகின்ற காதலினால் துன்ப முண்டாம்;
செல்லாத இடந்தேடிச் செல்ல வேண்டாம்
தேடாதே வீண்பழியை" என்றான் பொன்னன்.

"பூப்போன்ற தாமரையைக் காத லிக்கும்
பொன்னப்பன் தானாநீ? உன்றன் பேச்சு
பாப்போன்ற சுவைநல்கும் என்றி ருந்தேன்
பயமுறுத்தும் கருத்தாக விளைந்த தென்னே?
தீப்போன்ற புயங்கனையே வெறுத்து நிற்கும்
திருப்போன்ற முல்லைநல்லாள் என்னை யேதன்
காப்பாக நினைக்கின்றாள் காத லாலே
கருத்தொன்றி நிற்கின்றோம்; தடையை வெல்வோம்!

"என்மேலே கொண்டுள்ள நல்லெண் ணத்தால்
இளியவளாம் தன் மகளைத் தருவ தற்கும்
பொன்போன்ற மனமுடைய மன்னர் ஓர் நாள்
பொருந்திவரக் கூடுமென நம்பு கின்றோம்;

தன் மகளின் விருப்பத்தை மறுப்ப தற்குத்
 தந்தையரோ துணிந்திடுவார்? முல்லை யாளும்
என்னைப்போல் உறுதியுடன் இருப்ப தாலே
 எளிதாக நிறைவேறும் எங்கள் காதல்!

"ஒருவேளை மன்னர்பிரான் தடைசெய் வாரேல்
 ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப் போவோம்
இருதோளும் நல்லறிவும் அன்பு நெஞ்சும்
 இருக்குமட்டும் வாழ்வுக்குப் பயமே யில்லை;
கருதாமல் எம்முடிவும் செய்ய வில்லை;
 கன்னிமனம் தெரியாமல் காதல் இல்லை;
புரியாமல் அச்சுறுத்திப் பேசாதே நீ
 பொன்னப்பா" என்றுரைத்தான் முத்தப் பன்னே!

மன்னர்மகள் முல்லையெழில் பற்றி இந்த
 மாநிலத்தின் இளைஞரெல்லாம் உயர்த்திப் பேசப்
பொன்னப்பன் கேட்டிருந்தான் ஆகை யாலே
 புகழ்ச்செல்வி காதலினைப் பெற்ற நண்பன்
தன்னெதிரி எனநினைத்தான் பொறாமை கொண்டான்
 தளிர்க்கொடியை முத்தப்பன் அடையா வாறே
என்னென்ன செய்வதெனச் சிந்தை கொண்டான்
 ஏதேதோ திட்டமிட்டான்: தீய னுனன்.

இளவட்டக் கனவுகளின் தெய்வ கன்னி
 எழிலான மலர்க்கொடியாள் முல்லை யென்பாள்
உளவட்டம் தனைவட்டம் இடுமா என்றே
 ஒருசிறிதும் எண்ணுமல், உயிராய் நீரின்
அளவெட்டும் வரை நீண்டு குறையும் போதில்
 அதனேடு தாழ்கின்ற கொடியைப் போலே
உளமட்டம் கொண்டிருந்த நண்பன் தன்னை
 உதறிவிட நினைத்துவிட்டான் பொன்னப் பன்னே!

மன்னரைப் போய்த் தனியாக ஒருநாள் பார்த்தான்
"மாபாவி முத்தப்பன்!" என்று சொன்னான்
"என்ன வென்ன?" என்றுமனந் திடுக்கிட் டாராய்
எதிர்பார்த்துக் கேட்டிருந்தார் தஞ்சை மன்னர்
"மன்னவரின் மகளையவன் காதலித்து
மணந்தால்நான் அவளைத்தான் மணப்பேன் என்று
தன்னதுதான் முடிவென்று கூறிக் கொண்டு
தகாததாம் ஆசையினை வளர்த்துக் கொண்டான்.

"எங்கெங்கும் அவர் புகழைப் பேசுகின்றார்
எவ்விடத்தும் அவர்சிறப்பைப் போற்றுகின்றார்
இங்குநீ உயிர்க்காவல் துணையாய் வந்தாய்;
ஏளனத்தை மன்னருக்குச் சேர்த்தி டாதே
மங்கையவள் கைப்பிடிக்க ஆசை கொண்டு
மன்னர்குலப் பிறப்புடையோர் காத்தி ருப்பார்
எங்கெந்த மன்னவரின் அரசி யாக
இருப்பாளோ திருமகளாள் மறப்பாய்" என்றேன்.

"போடாநீ போவென்று புகலுகி ன்றான்
புரிந்தால்நான் அவளைமணம் புரிவேன் என்று
சூடாகப் பேசுகின்றான்; தையல் தோளைச்
சுவையாக வருணித்துச் சொல்லு கின்றான்;
கூடாத நட்பைத்தே டிப்பி டித்துக்
கொண்டதுபோல் இளவரசி பின்னே சுற்றப்
பாடாகப் படுகின்ற காதல் பற்றிப்
பலர்ஊரில் அலர்தூற்று கின்றா" ரென்றான்.

"நல்லவன் போல் நடித்தானே அவ்வி ளைஞன்
நம்வீட்டுப் பெண்கையைப் பிடிக்கத் தானா!
தொல்லைதரும் செயல்செய்தான் காத லித்துத்
துன்புறுத்த என்மகளா கிடைத்தாள்! அந்தோ!

வல்லவராய் மறவர்களாய் உள்ளோர் மாதை
 மணம்புரிய மறுத்துவிட்டால் என்ன செய்வேன்
பல்லுடைத்தே அனுப்புகின்றேன் பொன்னப் பாநீ
 பா'' ரென்று சீறிநின்றார் தஞ்சை மன்னர்.

''பொறுத்தருள வேண்டுகின்றேன் மன்னர் பெம்மான்
 பொல்லாத செயலிதனை என்றன் நண்பன்
வருத்துகின்ற நினைப்பாலே செய்ய வில்லை
 வாலிபத்து முறுக்காலே செய்துவிட்டான்
திருத்துகின்ற மொழியாலே சொன்னால் போதும்
 திருந்திடுவான் பிறவியிலே தீய னல்லன்
கருத்தினிலே உதித்தசினம் மாற்றிக் கொண்டு
 கனிவுடனே மன்னரிதை நினைக்க வேண்டும்.''

எனநட்பைக் காப்பான்போல் திறமை யாக
 எடுத்துரைத்தான் பொன்னப்பன் மன்ன வர்பால்
இனப் பகையைக் கிளப்பிவிட்டால் அதைத் தடுக்க
 எளிதாக இயலாத வாறு போல
தனவணிகன் முத்தப்பன் மன்னர் சாதி
 தனிற்கீழாம் எனவெண்ணிக் கொள்ளு மாறு
மனதாரப் பகைமூட்டி விட்ட பொன்னன்
 மறுபடியும் கெஞ்சுவது போலச் சொன்னான்.

''பருவத்துப் பெண்ணான முல்லை தன்னைப்
 பசப்பாலே முத்தப்பன் கெடுத்து விட்டான்
கருவத்தை மிக்குடைய இளைஞன் தன்னைக்
 கண்டித்துத் தண்டித்தல் வேண்டு''மென்றே
உருமித்தன் சினமெல்லாம் வெளிப் படுத்தி
 ஓங்காரக் கூச்சலிட்டுத் தஞ்சை மன்னன்,
''உருவத்தை என் முன்னே காட்டவேண்டாம்
 ஊர்விட்டுத் துரத்திடுவீர்'' எனப்ப ணித்தான்,

காவலர்கள் முத்தப்பன் இடத்தைத் தேடிக்
கண்டுரைத்தார் நடந்தவற்றை, அன்று மாலை
சாய்வதற்குள் ஊர்விட்டுச் செல்லு மாறு
தஞ்சையர சாணையிட்ட செய்தி கூறி,
''போவதற்குச் சுணங்காதே; அரசர் ஆணை
பொல்லாத தெனக் கூறி எச்சரித்தார்
ஆவலுடை முல்லையிடம் சொல்லு தற்கும்
அகத்தினிலே தெம்பின்றிப் புறப்பட் டானே.

உயிர்நண்பன் முத்தப்பன் தன்னைப் பார்க்க
ஓடோடிப் பொன்னப்பன் தஞ்சை வந்தான்
துயர்மிக்க செயல்செய்து மன்னர் நெஞ்சம்
துடிக்க வைத்துக் கோள்மூட்டித் துரத்த வைத்தான்
கயல்விழியாள் தாமரையை மறந்து விட்டுக்
கட்டழகி முல்லைக்குத் திட்ட மிட்டான்
பயில்கின்ற நட்பெல்லாம் இவ்வாறானால்
பார்மீதில் அறம்வென்று பிழைப்ப தெந்நாள்?

அரசர்க்குக் கோள்மூட்டும் தொழிலே செய்தான்
அவர்நட்பை மிகவிரைவில் வென்று கொண்டான்
சரசரென அரண்மனையின் ஏவல் முற்றும்
தன்னேவல் எனும்நிலையை எய்தி விட்டான்
பரசுவதும் மன்னருக்குப் பக்கம் நின்று
பலர்நட்பைப் பிரிப்பதுவும் தொழிலாய்க் கொண்டு
விரசமுறப் பொன்னப்பன் வளர்ச்சி கண்டான்
விந்தைஉல கிந்தவிதம் இருப்ப தென்னே!

திரைச்சீலை தொங்குமந்தப் புரத்தும் சென்று
திறமையுடன் தாதிகளை ஏவி நிற்பான்
கரைச்சீலை மரக்கிளையில் கொண்டொ ளித்த
கண்ணன்போல் எவ்விடத்தும் காட்சி யாவான்

வெறிச்சென்று தன்வாழ்வு போன தாக
வெந்துமனம் புழுங்குகின்ற முல்லை தன்னைக்
குறிச்சுவையாய்ப் பொன்னப்பன் கொண்டு நின்று
குறுக்கிட்டுச் சென்றுபல பேச லானான்!

ஆசையுடன் பொன்னப்பன் பேச எண்ணி
அருகுவரும் போதெல்லாம் வெறுப்புக் காட்டி
கூசிடவும் நாணிடவும் ஏசிக்காட்டிக்
குறுமதியைப் பழித்திடுவாள் முல்லை மங்கை
வாசமுள்ள பூக்கொண்டு போய்க்கொ டுப்பான்
வாங்கியதைத் தரைமீது வீசிப் போட்டு
மீசையுள்ள ஆண்பிள்ளை தானா என்று
மேற்கேள்வி கேட்டவனைக் குனிய வைப்பாள்.

"வைதாலும் பழித்தாலும் என்னை நீதான்
வாழவைக்க வேண்டு"மெனச் சிரித்து நிற்பான்
மெய்தானும் விதிர்விதிர்க்க முல்லை சொல்வாள்
"மேலான என்வாழ்வைக் குலைத்து விட்டாய்
பொய்தானும் புவிமீது நிலைக்கு மானால்
புல்லர்களின் வல்லாட்சி தானே யோங்கும்
வெய்தாக விடப்பட்ட நிலப்பரப்பில்
விளைவதெலாம் கோரைகளாய்த் தானிருக்கும்!"

பொன்னப்பன் முல்லைதனைச் சுற்றிக் கொண்டு
பொழுதெல்லாம் அலைந்திருக்க மதுரை தன்னில்
சின்னக்கல் மோதிரத்தைப் பார்த்துக் கொண்டு
தினந்தினமும் கனவுபல கண்டிருந்த
பொன்னனங்கு தாமரையாள் பசலை நோயால்
பூமேனி மெலிந்தவளாய் மீண்டும் என்று
தன்னன்பன் வருவானோ என்று காதல்
தணல்மீது வெந்தபடி காத்திருந்தாள்.

காத்திருந்த கண்ணிரண்டும் பூத்துப் போச்சாம்!
காதலன்மேல் நம்பிக்கை தோற்றுப் போச்சாம்?
பூத்திருந்த சோலையெலாம் இருண்டு போச்சாம்
பொழுதடையும் மாலையெலாம் வெறுத்துப்போச்சாம்!
ஆத்திரத்தில் தனைமறந்தான் தனைப் பழிக்க
ஆவலுடன் துடிக்கின்ற நாவ டக்கிச்
சாத்திரத்தில் நம்பிக்கை வைத்துத் தெய்வம்
சந்திக்க வைக்குமெனத்தேற்றிக் கொள்வாள்!

காமாட்சி என்னுமொரு தோழி வந்து,
''கட்டாயம் வேண்டியதை மதுரைத் தெய்வம்
மீனாட்சி யருள்புரிவாள்'' என்று கூற
மெல்லியலாள் கோயிலுக்குச் சென்று வந்தாள்
ஆராய்ச்சி செய்கின்ற மாண வன்போல்
அத்தெய்வ மித்தெய்வ மெல்லாம் வேண்டிக்
கோலோச்சும் மனக்குரங்கை அடக்காளாகிக்
குறையொழியப் பயணத்தில் நாட்டம் வைத்தாள்.

பெற்றோர்க்குத் தெரியாமல் இரவுப்போதில்
பின்கட்டு வழியாக வெளியில் போந்து
வற்றாத வளங் கொழிக்கும் தஞ்சை நோக்கி
வடிவான பூவடிகள் தரையில் ஊன்றிப்
பற்றாதான் பற்றைப்போய்ப் பற்று தற்குப்
பாய்கின்ற மனக்குரங்கைப் பற்றிக் கொண்டே
உற்றாரும் ஊராரும் பழித்துப் பேச
ஊர்விட்டுத் தாமரையாள் புறப்பட்டாளே!

பெண்ணாகத் தனிவழியில் நடந்து சென்றால்
பேய்போன்ற ஆடவர்கள் தொடர்ந்து வந்து
புண்ணாகச் செய்வார்கள் என்று ணர்ந்து
பொற்செல்வி தாமரையாள் ஆணைப் போல

எண்ணியவா ளொருவேடம் போட்டுக் கொண்டு
இரும்பாக நெஞ்சத்தை யாக்கிக் கொண்டு
கண்ணுனை பெற்ரூேரை விட்டு விட்டுக்
காட்டுவழிப் பாதையிலே நடக்கலாஞள்.

காதலெனும் மதுக்குளத்தில் மூழ்கிவிட்டால்
கண்தெரியா தெனவான்ருேர் சொன்ன வாறு
பேதைமகள் தாமரையாள் காட்டுப் பாதை
பெற்ரூேரைக் கலங்கவிட்டு நடக்கலாஞள்
மாதொருத்தி அழகாக இருந்து விட்டால்
மயங்குகின்ற ஆடவரின் காதல் பேச்சைச்
சூதென்று தெரியாமல் நம்பு கின்ற
தோகையர்க்குத் துயர்க்காடே பாதை யாமோ!

வீட்டினிலே பளிங்குக்கல் தரையின் மீதும்
வெளிச்சென்ருல் சோலைப்புல் தரையின் மீதும்
பாட்டினிலே இடம்பெற்ற பஞ்சுப் பாதம்
பதியநடை யிட்டிருந்த தாம ரைப்பெண்
காட்டினிலே குறுங்கற்கள் அழுத்தும் போதும்
கண்கலங்க முட்குத்தி வலிக்கும் போதும்
நாட்டமுள்ள காதலிஞல் தாங்கிக் கொண்டு
நடையிட்டாள் உறுதியிலே குலைவு ருதே!

எப்போதும் சிள்வண்டின் ஒலியிருக்கும்
இடையிடையே காய்சருகு சலசலக்கும்
கொப்போடு கிளை முறியும் ஓசைகேட்டும்
குமுறிவரும் காட்டாற்றின் சீற்றம் கேட்கும்
எப்போதோ புலியுறுமும் சத்தம் கேட்கும்
இடையிடையே யானைகளோ பிளிறியோடும்
குப்பென்றே உடல்வேர்க்கச் செய்யும் காட்டில்
குலையாத உறுதியுடன் நடையிட் டாளே!

மலைப் பாம்பின் வாயிடுக்கில் சிக்கிக்கொண்டு
மாடொன்று தத்தளிக்கும் காட்சி கண்டும்
சிலைவேடன் குறிவைத்தோர் மானைத் தாக்கச்
சீறிவந்த புலியவனைக் கொல்லக் கண்டும்
குலைநடுங்கக் குரங்கொன்றை மிதித்துக்கொண்டு
குறியற்றோர் மதவேழம் ஓடக் கண்டும்
அலையாத உறுதியுடன் நெஞ்சக் காதல்
ஆர்வத்தால் கான்கடந்து நடையிட் டாளே!

சிங்கத்தின் முழக்கொன்றில் அதிர்ந்து போன
சிறுமுயல்கள் புதர்களிலே போயொ டுங்க
அங்கத்தை யசைக்காமல் காட்டில் உள்ள
அத்தனைவி லங்குகளும் மறைந்தி ருக்க
தொங்கத்தம் கிளைக்கையைக் காற்றில் ஆட்டித்
தொடுக்கின்ற ஒலியன்றி வேறில் லாத
மங்குற்ற இருட்காட்டில் உறுதி மிக்க
மனங்கொண்டாள் காதலினால் நடையிட் டாளே!

நாகங்கள் ஐந்தாறு பட மெடுக்க
நட்டுவத் தேள் கொடுக்குயர்த்தி பரபரக்கக்
காகங்கள் பயந்தலறிக் காகா வென்ன
கருங்குரங்கு நடுநடுங்கிக் கிளைக்குத் தாவ
மேகங்கள் எனவேழம் சிதறி யோட
மிதிபட்ட பழச்சாறு பீறிப் பாயச்
சோகங்கள் மலிகின்ற காட்டில் காதல்
தொடுகின்ற உறுதியுடன் நடையிட் டாளே!

மரக்கிளைகள் மேற் சூழ்ந்து மறைப்ப தாலே
வானத்துக் கதிரொளியைக் காணா தங்கே
தரைப்புல்லும் வெளுத்திருக்க மண்பர ப்பும்
தண்ணென்று சில்லிட்டுக் குளிரெ ழுப்பு

பகற்பொழுதும் இருட்டாகிப் பயமு றுத்தும்
பச்சைமரக் காட்டிடையே தாம ரையாள்
மனக்காதல் வழிநடத்த உறுதி கொண்டு
மலையாமல் குலையாமல் நடையிட் டாளே!

நெடுந்தூரம் இருட்காட்டில் நடந்த பின்னே
நிலப்பரப்பில் ஒளிபரப்பும் கதிரைக் கண்டாள்
தொடுவானம் தெரியுமட்டும் மரங்குறைந்து
தொடர்ந்திருக்கும் புதர்ப்பரப்பைக் கண்டு மேலும்
கடிதாக நடந்தால்தான் தஞ்சை நாட்டைக்
கண்டிடலாம் விரைவாக என்று தோன்ற
அடியெட்ட வைத்துநடை போட்ட போதில்
அழகுமகள் உடற்சோர்வு கொள்ள லானாள்.

நடந்து நடந் துடல்களைத்தும் அடிகள் நொந்தும்
நங்கையவள் சென்றவழிப் பாதை தன்னில்
கிடந்தவொரு பாறையின்மேல் அமர்ந்த போதில்
கிள்ளியெழு பசிதன்னை அடக்கா ளாகி
வடிந்துவிட்ட முகத்தோடும் உண்ணு தற்கு
வழியறியா மனத்தோடும் சாய்ந்த போது
மடந்தையவள் கண்ணெதிரில் மரக்கிளையில்
மாம்பழங்கள் தங்கமெனத் தொங்கக் கண்டாள்!

மாம்பழத்தைப் பறித்துண்ண வாவும் உள்ளம்;
மயங்கிச்சோர்ந் துள்ளவுடல் எழத் தயங்கும்;
கூம்பசியோ சோர்வுதனைப் புறத்தே தள்ளும்;
குறுகுறுக்கும் கைநீளும் கிளையை நோக்கி !
காம்பொடியப் பழமொன்று தவறி வீழக்
கனிப்புறத்தை தரைமண்ணும் ஒட்டிக் கொள்ள
தேமொழியோ மண்நீக்கிக் கனியைத் தின்று
சிறிதுபசி தணித்துக்கொண் டோய்ந் திருந்தாள்.

ஓய்ந்திருக்கும் போதெல்லாம் பொன்னப் பன்தன்
உருவமவள் கண்முன்னே தோற்றங் காட்டும்
சாய்ந்திருக்கும் நேரத்தே நடந்து சென்றால்
சற்றேனும் முன்னாகச் சந்திப்போமே
போய்ச்சேர வேண்டுமென உள்ளந் தள்ளப்
புறப்படுவாள்; அடிநோவச் சற்ற மர்வாள்;
காய்ந்திடுவாள் மலரடியை மீண்டெ ழுந்து
கடகடென அடிவைப்பாள் நடந்து செல்வாள்.

நடக்கின்ற போதெல்லாம் கால் வலிக்கும்
நடவாமல் இருக்குங்கால் மனந் துடிக்கும்
கிடக்கின்ற இடைவெளியைக் குறைத்து நெஞ்சைக்
கிள்ளிவரும் துயரத்தை யொழிப்ப தற்கு
நடக்கின்ற செயலன்றி மருந்து வேறு
நானிலத்தில் இல்லையென எண்ணிக் கொண்டு
கடக்கின்றாள் பெருங்காட்டைக் காதல் கொண்டார்
கடக்கரிய துன்பெல்லாங் கடப்பா ரன்றோ!

பொட்டல்வெளிக் காட்டோரம் சிற்றூர் ஒன்றில்
புகுந்தவளோ அவ்வூரைக் கடக்கும் போதில்
எட்டிநடைபோட்டு முனம் செல்லு கின்ற
ஏருழவன் அருகினிலே நெருங்கித் தஞ்சைப்
பட்டணத்திற் கெளியவழி எதுவென் றாளைப்
பார்த்தவனும் வியப்புடனே சொன்னான். "காதில்
பட்டகுரல் பெண்ணுடைத்தென் றேமாந் தேனே
பையாநீ பெண்போல்தான் உள்ளாய்" என்றான்

"சேலையொன்று கட்டிவிட்டால் போதும் உன்னைச்
சிற்றிளம் பெண் ணாகத்தான் நோக்கத் தோன்றும்
பாலையொத்த பாவையரின் குரலைக் கொண்டாய்!
பணிவிலும் நீ பெண்ணேதான் வடக்கு நோக்கிக்

காலையிலே புறப்பட்டுப் போவா யானல்
கடும்பகலில் தஞ்சைநகர் சேர லாகும்
சாலைவழி நிழல்மரங்கள் வரிசை யுண்டு
சற்றேனும் களைப்பின்றி நடக்க லாகும்''

என்றந்த ஏருழவன் சொல்லிச் சென்முன்
இளநங்கை தப்பித்தோம் எனநினைத்தாள்
வன்றிறத்தின் ஆடவர்போல் குரலை மாற்றி
வழிப்படுத்திக் கொண்டால்தான் பிழைக்கலாகும்
இன்று முதல் சற்றேனும் ஏமா ருமல்
இருந்திடுவேன் எனவுறுதி செய்து கொண்டாள்
தொன்று முதல் பெருமையுடன் திகழும் தஞ்சைச்
சுடர் புரியை நோக்கியவள் நடக்க லானுள்.

வஞ்சியவள் நடுப்பகலில் தஞ்சை வந்தாள்
வழிப்போக்கர் தங்குமொரு விடுதி கண்டு
தஞ்சமென உட்சென்முள். உணவு கொண்டாள்
தனியாக அறையொன்று பிடித்துக் கொண்டாள்
மஞ்சத்தில் கண்ணயர்ந்தே ஓய்வு கொண்டு
மாலையிலே வெளிச்செல்லக் கிளம்பும் போது
கொஞ்சவய துள்ளவர்கள் ஆட்சி பற்றிக்
கூடிநின்று பேசுவன செவிம டுத்தாள்.

முல்லை யெனும் மன்னர்மகள் தன்னைக் கண்டு
முத்தப்பன் காதலுற்ற கதையும், மன்னர்
கொல்லாமல் அருளுளத்தால் நாட்டின் எல்லைக்
கோட்டுக்குக் கடத்திவிட்ட கதையும், மிக்க
வல்லாளும் பொன்னப்பன் மீது மன்னர்
வைத்திருக்கும் நம்பிக்கை யும்பு யங்கள்
மல்லாடும் திறனுமதன் பரிசாய் முல்லை
மலர்க்கொடியாள் வளர்கின்ற கதையும் கேட்டாள்.

கோயிலுக்குச் சென்றுவந்தாள் அன்ப ஞேடு
கூட்டிவைக்க வரங்கேட்டாள் அரண்மனேயின்
வாயிலுக்குக் காவலுள்ள வீரரோடு
வாய்ப்பேச்சுப் பேசிநிலே யறிந்து வந்தாள்
நேயமுள்ள பொன்னப்பன் வீட்டைத் தேடி
நினேத்தபடி காணுமல் திரும்பி வந்தாள்
தூயவராம் மன்னருடன் இருப்ப தேதன்
தொழிலாகக் கொண்டுள்ளான் என்ற றிந்தாள்.

நினேத்தபடிகாதலனே எளிதில் காணும்
நிலேயில் அவன் இல்லாமை கண்டாள்; நெஞ்சம்
தினேத்துணேயும் சலியாமல் மறுநாள் காணத்
திட்டங்கள் வகுத்தபடி விடுதி வந்தாள்
தனித்திருக்கும் அறைக்குள்ளே கட்டில் மீது
மனக் குதிரை கடிவாள மின்றி விண்ணில்
தனேத்தூக்கிச் செல்லுகின்ற நிலேக்கு விட்டுத்
தன்னிலேயை மறந்தங்கே படுத்தி ருந்தாள்.

தாமரையாம் தன்னேயெதிர் கண்ட போதே
தாவிப்பாய்ந் தோடிவரும் அன்ப ஞேடு
மாமரத்து நீழலிலே போய மர்ந்து
மணிக் கணக்காய்ப் பேசிக் கொண் டிருக்கும் போது
பூமழையாய்ப் பொழிந்திருக்க, மாம்ப ழங்கள்
பொற்கொத்தாய்த் தொங்கலிட ஒன்றைப் பற்றிக்
காம மிகு பொன்னப்பன் நீட்டத் தோகை
கடித்தவிடம் கடித்தவனும் தின்னக் கண்டாள்.

காவிரியில் ஓடத்தில் இன்ப மாகக்
கடக்குங்கால் துடுப்பெறியும் துளிகள் பட்டுப்
பூவிழிகள் கசங்கியதால் பார்வை குன்றிப்
பொற்கொடியாள் ஒருபுறத்தில் சாயக் கண்டு

தாவிப்போய் இழுத்தவளைத் தன்மார் போடு
தழுவியணைத் தவனிருக்க நாணங் கொண்ட
பாவனையாய் அவளொதுங்க மீண்டும் பற்றிப்
பக்கத்தே இழுத்தணைத்துக் கொள்ளக் கண்டாள்.

ஊருணியில் நீர் மொள்ளப் போகும் போதில்
ஒரு தெருவின் வழியாகப் பரியி வர்ந்து
போருடையில் வருகின்றான் காதல் கொண்ட
பொன்னப்பன்; அவள்நிமிர்ந்து நோக்கு கின்றாள்.
வாருடைய பரிக்காலின் புழுதி மூட்டம்
வந்தவளின் கண்மறைக்கக் கல்லில் மோதிச்
சீருடையாள் விழுமுன்னே குதித்து வந்து
திண்டோளில் தாங்கிக்கொண் டிருக்கக் கண்டாள்.

ஊர்ப்புறத்தில் மஞ்சுவிரட் டாமே போவோம்
உடனேவா என்றவனும் அழைத்துச் சென்றான்
காரியொன்றைப் பிடிக்காமல் இளைஞ ரெல்லாம்
கதிகலங்கிப் பயந்தொதுங்கப் பொன்ன னோடி
நேரெதிர்த்துக் கொம்புபற்றிப் பரிச விழ்த்து
நின்றநிலை கண்டுபெரு மக்கள் சூட்டு
தாரெடுத்து வந்தவளின் கழுத்தில் இட்டுத்
தான்கொண்ட பரிசினையும் தரக்கண் டாளே!

கற்பனையோ அற்புதமோ கண்ட தெல்லாம்
கனவுகொலோ நனவுகொலென் லறியா ளாகிப்
பற்பலவாய் நினைத்தபடி யுறங்கிப் போனாள்
பகலவனார் தோன்றுமுனம் எழுந்து விட்டாள்!
ஒப்பனைகள் செய்தபடி ஆணு டையில்
ஒருவணிக னய்த்தன்னை ஆக்கிக் கொண்டு
மெய்ப்புலவர் பாட்டுக்குப் பரிசு நீட்டும்
மேலான மன்னரரண் மனைக்குச் சென்றாள்!

வாய்பிளந்த வாறிருக்கும் இருசிங் கங்கள்
    வாலுயர்த்திக் காவலுக்கு வந்தாற் போலே
வாயிலிரு புறத்துமிரு சிற்ப மாக
    வாளுயர்த்தி நின்றபடி வீரர் காக்க
ஓயாமல் கடலலைபோல் மக்கள் பல்லோர்
    உள்நுழைந்தும் வெளிப்பட்டும் செல்லும் கோட்டை
வாயிலுக்குத் தாமரையாள் வந்து சேர்ந்தாள்
    வணிகவுருக் கொண்டவளாய் வந்து சேர்ந்தாள்.

மதுரைநகர் வணிகன்யான்; தொன்று தொட்டு
    மணப் பொருள்கள் விற்பதனைத் தொழிலாய்க்
புதிதான கத்தூரி சவ்வா துண்டு [கொண்டேன்
    புனுகுண்டு அத்தர்வகை தானு முண்டு
மதிமன்னர் தம்மிடத்தே வணிகம் செய்ய
    வந்துள்ளேன் என்றவளும் சொல்லக் கேட்டே
அதிவிரைவில் உன்பொருள்கள் விற்கு மப்பா
    அரசர்க்குப் பிடித்தபொருள் கொணர்ந்தாய் அப்பா.

எனச்சொல்லிக் காவலர்கள் உள்ளே விட்டார்
    எழில்மிகுந்த இளைஞனிவன். மன்னர் கண்டால்
தனக்கென்றும் அன்புமிகு மகளுக் கென்றும்
    தடையின்றி வாங்கிடுவார் என்று பேச
மனக்கருத்தில் பொன்னப்பன் தன்னைக் காணும்
    மட்டற்ற ஆவலுடன் சென்ற பெண்ணாள்
தனக்கெதிரில் வருமவனைக் கண்டு நின்றாள்
    தனைநோக்கும் அவனைஅவள் நோக்கி நின்றாள்.

அன்பேஎன் றோடியணைந் திடத்தான் உள்ளம்
    ஆவலுடன் பறந்திடவே நின்ற மங்கை
முன்பேஓர் வேடத்தில் வந்த தெண்ணி
    முடக்கித்தன் வேகத்தை யடக்கிக் கொண்டாள்

பொன் போலும் முகம்படைத்த இளைஞனைத்தான்
புதிதாகப் பார்த்தாலும் எங்கோ என்றே
முன்பேபார்த் திருப்பதுபோல் எண்ணிக் கொண்டு
முறுவலுடன் பொன்னப்பன் 'யார்நீ!' என்றான்.

என்னூரும் தென்மதுரை முருகன் என்றல்
என்பெயராம். மணப்பொருள்கள் விற்ப தென்றன்
முன்னோரின் தொழிலாகும்; அதையே நானும்
முறையாகப் பின்பற்றிச் செய்ய லானேன்!
தன்னேரில் லாதஇந்தத் தஞ்சை மன்னர்
சவ்வாது கத்தூரிக் கன்பர் என்றே
என்னூரில் சொலக்கேட்டே இங்கு வந்தேன்
எனைமன்னர் இடஞ்சேர்க்க வேண்டு கின்றேன்.

உங்களுக்கும் ஏற்றபொருள் உண்டிங் கையா
ஒருமுறைநான் தொடர்புகொண்டால் விடுவதில்லை;
சங்கொலித்து வென்றிகொள்ளும் மன்னர் பாலென்
சரக்கனைத்தும் விற்றுவிட ஒத்து ழைப்பீர்.
மங்கை நல்லாள் இவ்வாறு சொல்லும் போதே
மனத்துக்குள் பொன்னப்பன் எண்ணு கின்றான்;
"இங்கிவனின் கத்தூரி முல்லைக் கீந்தால்
என்னையவள் விரும்பிடநல் வாய்ப்பாம்" என்றே!

மணவணிகம் செயவந்த முருகா உன்பால்
வைத்திருக்கும் பொருள்களிலே விலையு யர்ந்த
குணமிகுந்த பொருள்ஒன்றைத் தருவா யானால்
குறைவின்றிப் பொருள்தருவேன்; மன்ன ருக்கும்
கணக்கின்றி விற்பதற்கு வழிகள் செய்வேன்
கடிதில்எடு சிறந்தபொருள் என்று கேட்டான்
சுணக்கின்றித் தாமரையாள் சிமிழெ டுத்துச்
'சுகவாசக் கத்தூரி' எனக்கொ டுத்தாள்.

பொன்னப்பன் கத்தூரிச் சிமிழை வாங்கிப்
புறப்பட்டான் விரைவாக; அவள்தொ டர்ந்தாள்.
என்னப்பா முருகப்பா மகளிர் வாழும்
இப்புறத்தே ஆடவர்கள் புகுதல் தப்பாம்
என்னத்தான் புகன்றவளைத் தடுத்து விட்டே
எல்லைகடந் தவன்சென்றான்; முல்லை என்னும்
பொன்னைத்தான் போய்க்கண்டான்; சிமிழை நீட்டிப்
புகழ்மணக்கும் கத்தூரி இந்தா என்றான்.

சற்றேனும் சுணங்காமல் தாம ரைப்பெண்
சடசடென அவன்காணு வணம்தொ டர்ந்தாள்.
பற்றேதும் இல்லாத முல்லை முன்னே
பல்லிளித்துப் பொன்னப்பன் பலசொற் பேசக்
குற்றேவல் மங்கையர்தாம் சூழ்ந்தி ருக்கக்
கோடியழ குள்ளமுகம் படைத்த செல்வி
பற்றியதோர் நெருப்பெனவே மனம்பு ழுங்கிப்
படபடென வெடிப்பேச்சுப் பேசி நின்றாள்.

எடுத்தெறிந்த சிமிழ்மூடி திறந்த தாலே
இருக்கும்கத் தூரிமணம் பரப்பி நிற்கத்
துடித்தமனங் கொண்டஇள வரசி யேசச்
சுவர்போலே பொன்னப்பன் நின்றான். அன்னாள்
முடித்தவுடன் காதல்மொழி தொடங்கி நின்றான்;
முல்லைக்குப் பாரியின்தேர் போலே நிற்பேன்
வடித்தெடுத்த சிற்பமென நிற்கும் அன்பே,
வாழ்வுக்குத் துணையாக என்னை ஏற்பாய்!

காணுமுன்னே நானுன்னைக் காத லித்தேன்
கண்டவுடன் அக்காதல் பெருக லாச்சே;
ஊணுறக்கம் இன்றிஉன்னை எண்ணி யெண்ணி
உள்ளந்தான் சுற்றுதம்மா! என்னைக் கண்டால்,

வாணுதலே சீறுவதேன்? ஊடுறென் செய்தேன்?
　　வந்தநாள் முதலாக உன்னைக் காத்துப்
பேணுதலே வாழ்வாகக் கொண்டு விட்டேன்
　　பிழையில்லாக் காதலுற்றேன்; என்னை ஏற்பாய்!

மாமன்னர் என்துணையை ஏற்றுக் கொண்டார்
　　மாதரசி நீயுமெனை ஏற்றுக் கொண்டால்,
பூமிதனில் நான்பிறந்த பயன் கிடைக்கும்;
　　பொங்கிவரும் பேரின்பம் நமது வாழ்வில்!
ஆமெனவே ஒருமொழியை உரைப்பா யேல்நான்
　　அடைந்திடுமவ் வின்பத்திற் களவே இல்லை.
பூமனமே கொண்டவளே, சீற்றம் விட்டுப்
　　பொறுமையுடன் சிந்தித்துப் பதிலு ரைப்பாய்!

உன்துணையாய் என்னைநீ ஏற்று விட்டால்
　　ஒருதுயரும் அணுகாமல் காவல் செய்வேன்;
நின்றடியால் இட்டசெயல் தலையாற் செய்வேன்;
　　நிலப்பரப்புப் பலவென்றுன் அடியிற் சேர்ப்பேன்;
தொன்றுதொட்டுத் தஞ்சைக்குச் சேர்ந்தி ருக்கும்
　　தூயபுகழ் மேலும்வளர்ந் தோங்கச் செய்வேன்;
இன்றுனது நன்முடிவை எனக்குச் சொல்வாய்;
　　இனியவளே என்வாழ்விற் சுவையைச் சேர்ப்பாய்!

நாள்தோறும் ஊதுகின்ற சங்கை நல்ல
　　நடிப்புடனே அன்றுமவன் ஊதி நின்றான்.
ஓடோடு பொன்னப்பா எனக்குச் செய்த
　　ஊறெல்லாம் போதுமினி நில்லா தேநீ
பீடோடு வாழ்ந்திருந்த நண்ப னுக்குப்
　　பிழைசெய்தாய்; கூற்றுவனாய் வந்தாய் என்காற்
சோடோடு விளையாட நினைக்கா தேநீ
　　சொல்லிவிட்டேன்; இப்போதே தொலைவிற்போவாய்.

மன்னருக்கு வேண்டியவன் என்ப தாலே
 மங்கையர்கள் வாழுமிடம் நுழைய லாமா?
பொன்னிருக்கும் இடந்தனிலே களவு செய்வோன்
 புகுந்துவிட்டால் பார்த்துக்கொண் டிருக்கப் போமா?
பின்னருக்கும் சேர்த்தின்றே சொல்லு கின்றேன்
 பிழைச்செயலைத் தொடராதே அகன்று போவாய்!
பின்னிருக்கும் காவலரைக் கூவி ஆணை
 பிறப்பிக்கும் முன்னர்நீ ஓடிப் போவாய்!

பூவையரைச் சிற்றினமாய் மதித்து விட்டாய்;
 பொறுமைதனைப் பேதைமையாய்க் கருதி விட்டாய்;
தேவையின்றி மகளிர்புறம் புழங்கு கின்றாய்;
 சிற்றறிவால் ஏதேதோ பேசு கின்றாய்;
நாவையடக் காதேதோ பிதற்று கின்றாய்;
 நன்றிகெட்ட நாயைப்போல் உலவு கின்றாய்;
காவையழித் திடவந்த காவல் போலே
 கண்ணிழந்தான் போல்தடுக்கி வீழ்வாய் போபோ!

சடசடெனப் பொரிந்தமுல்லை பேச்சைக் கேட்டுச்
 சற்றேனும் ஆடாமல் அதிரா தங்கே
மடமடெனப் பழையபடி காதல் பேச்சை
 வாய்திறந்து பொன்னப்பன் பொழிய லுற்றான்!
புடமிட்ட தங்கமெனப் பொலியும் பெண்ணே
 பூத்தமலர் போன்றவளே! நெஞ்ச ரங்கில்
நடமிட்டுக் கொண்டிருக்கும் நல்ல ணங்கே
 நானுன்னை மறப்பதினி நடக்கும் பேச்சா?

எத்தனையோ பெண்களைநான் எங்கெங்கேயோ
 எதிர்ப்படக்கண் டிருக்கின்றேன்; ஆனால் உன்றன்
புத்தெழிலே என்னுளத்தில் வேட்கை கூட்டிப்
 புத்துணர்ச்சி பாய்ச்சியது பொய்மை யில்லை!

பத்தியுடன் தெய்வமென வணங்கு கின்றேன்;
பரிந்தருள்வாய் இரவலன்போல் வேண்டு கின்றேன்
இத்தனைநாள் என்மேல்நீ கொண்ட சீற்றம்
இனிவேண்டாம்; கனிவாகப் பேசு கென்றான்.

முல்லைக்குச் சினம்பொங்கி வழிந்த தங்கே;
முகமெல்லாம் அனலாகிச் சிவந்த தங்கே!
எல்லைக்கு மேல்மீறி விட்டா யென்றே
எடுத்தெறிந்து கடுமொழிகள் பேச லுற்றாள்!
தொல்லைக்கு வந்தவனைத் தோழிப் பெண்கள்
துரத்துதற்கு நெருங்கிவந்தார்; குறிப்பு ணர்ந்தே
சல்லிக்குச் சிறுத்தவனும் அகன்று போனான்
"சனியனிது பெருந்தொல்லை" என்றாள் முல்லை.

அம்மம்மா மன்னரிடம் சொல்லி இந்த
அற்பனைநாம் விரட்டிடுவோம் என்றொருத்தி
விம்முகின்ற முல்லையிடம் சொன்னாள். இன்று
வேண்டாம்நாம் பின்னொருநாள் பார்த்துக் [கொள்வோம்
செம்மைமிகு முத்தப்பர் தம்மை இந்தச்
சிறுநரியான் பிரித்ததைநாம் உணர்வோம்; மேலும்
வெம்மைமிகு தீங்கிழைக்கக் கூடும்; அத்தை
விலக்கத்தான் பொறுத்துள்ளோம் என்றாள் முல்லை.

நடந்ததெலாம் பார்த்திருந்த தாம ரைக்கு
நடுங்கியது பூநெஞ்சம். தன்மேற் காதல்
கிடந்ததெலாம் பொன்னப்பன் நடிப்புத் தானா
கீழ்த்தரமாய் நண்பர்க்கும் தீங்கு செய்தான்.
உடைந்திருக்கும் உள்ளத்தாள் முல்லைக் கிங்கே
ஓயாத தொல்லையென வாழு கின்றான்.
அடைந்திருக்கும் அதிகார வாய்ப்பால் மிக்க
அவலத்தை வளர்க்கின்றான் என்ற றிந்தே!

முத்தப்பன் மீதுண்மைக் காதல் கொண்ட
முல்லைக்காய் அவளுள்ளம் இரங்கிற் றாகச்
சித்தத்தில் பொன்னப்பன் வெறுப்புத் தோன்றச்
சேயிழையாள் ஒருமுடிவு செய்து கொண்டாள்.
எத்தனிவன் திட்டங்கள் பொடியாய்ப் போக
இப்போதே முல்லைக்குத் துணையாய் நின்று
சத்தான வாழ்வளிக்க வேண்டும்; வாழ்வுச்
சாதனையாய் இதைக்கொள்ள வேண்டும் என்றே!

பின்தொடர்ந்து வந்தவனை மறந்தா னாகிப்
பித்தன்போல் பொன்னப்பன் அகன்ற பின்பு
தன்னிலையை எண்ணியங்கு மலைத்த வாறு
தனியாகத் தாமரையாள் நின்றி ருக்கப்
பொன்னிலங்கு பூங்கொடியாம் முல்லைப் பெண்ணாள்
புறம்வந்த போதங்கே கண்டு விட்டாள்.
என்னடியிவ் வரண்மனையில் மகளிர் பக்கம்
இருந்தகட்டுக் குறைந்ததுவோ என்ற திர்ந்தாள்!

புன்மைமிகு பொன்னப்பன் மகளிர் பக்கம்
புகுந்துவரல் தடுக்காமை யாலே யன்றோ
தன்மையிழந் தாடவர்கள் பிறரும் இங்கே
தலைநீட்டத் தொடங்கிவிட்டார் காவ லின்றி
என்னடிநீர் செய்கின்றீர் தோழி மாரே
இங்கோடி வாருங்கள்! கட்டு மீறிச்
சின்னமுற வந்தவனைப் பிடிப்பீர்! என்றாள்
சேடியர்கள் தாமரையை வளைத்துக் கொண்டார்!

கத்தூரி சவ்வாது புனுகு கொண்ட
கைப்பெட்டி யோடவளைப் பிடித்து வந்து
முத்துப்பல் முல்லைஎதிர் நிறுத்தி னார்கள்
முகங்கடுக்கச் சினக்குரலில் அதட்ட லோடே

அத்தறுத்துப் பெண்கள்புறம் நுழைந்த நீயார்?
அப்படியேன் திரைப்புறத்தில் மறைந்திருந்தாய்?
எத்துக்கு நீயுளவு காண வந்தாய்?
இப்போதே உண்மையுரைத் திடுவாய் என்றாள்.

மன்னவர்பால் மணப்பொருள்கள் விற்க வந்தேன்
மற்றிங்கோர் அதிகாரி தன்னைக் கண்டேன்
அன்னவர்க்குக் கத்தூரி தந்தேன்; பெற்ற
அவர்விலையைக் கொடுக்காமல் விரைந்து வந்தார்
பின்தொடர்ந்தேன்; இதுபெண்கள் பக்கம்; போதல்
பிழையென்று வாயிலிலே நின்று விட்டேன்;
வன்பிழையைச் செய்வதெனில் உட்புறத்தே
வந்திருப்பேன்; புறத்தேநின் றிருக்க மாட்டேன்.

தாமரையாள் சொன்னபதில் கேட்டு முல்லை
தவறில்லை இவள்பேச்சில் விடுக வென்றே
பூமனத்துச் சினம்விடுத்தோர் ஆணை யிட்டாள்!
பூங்கொடியர் கட்டவிழ்த்து விட்டுவிட்டார்!
போம் வழியைத் தேடாமல் தன்னைப் பார்த்துப்
பூத்த விழி கண்டஇள வரசி சொன்னாள்.
ஆமிவனை மன்னவர்பால் அழைத்துச் சென்மின்
யாதேனும் பொருள்விற்றுச் செல்ல வென்றாள்.

இளங்கொடியீர் அன்புக்கு நன்றி என்றே
இசைத்தபடி தாமரையாள் நின்று கொண்டே,
வளங்கொண்ட மனங்கொண்டீர், ஒரு விண்ணப்பம்;
வாஞ்சையுடன் சிலசொற்கள் தனித்துப் பேச
உளங் கொண்டேன்; அருள்புரிய வேண்டுகின்றேன்;
உண்மைசில உணர்த்துகின்ற விருப்புக்கொண்டேன்;
களங்கமின்றி என்சொல்லைக் கேட்பீர் என்றே
கனிவோடு பணிவோடு கேட்டுக் கொண்டாள்!

பண்புடைய சொற்களினால் அவள்விண் ணப்பம்
பகர்ந்ததனை இளவரசி கேட்டுத் தோழிப்
பெண்களை அப் புறம்போவீர் என்று ரைத்தாள்
பிறரகலத் தனியறைக்குக் கூட்டிச் சென்றாள்.
வண்ணமயில் தாமரையாள் அவ்வ றைக்குள்
வந்தவுடன் மேலுடையைக் களைந்து வைத்தாள்
உண்மையில்நீ பெண்தானா இந்த வேடம்
உற்றவகை என்னவென முல்லை கேட்டாள்.

உளங்கவர்ந்த காதலனைத் தேடி வந்தேன்;
உங்கள்திருத் தஞ்சைக்கென் றுரைத்த பெண்ணை
இளங்காதற் காளையெவன் சந்தித்தாயா?
என்னிடஞ்சொல் தேடிவரப் பணிக்கின் றேன்.உன்
உளம்போலே வாழ்ந்திடலாம் என்றாள் முல்லை
உடன் துடித்துத் தாமரையாள் சொல்லு கின்றாள்.
இளவரசி வெறுக்கின்ற ஒருவ னைத்தான்
ஏமாந்து காதலித்துப் பேதை யானேன்.

மலர்க்குமலர் தாவுகின்ற வண்டைப் போலே
மற்றவனும் இருப்பானென் றறியா மல்நான்
குலக்குன்றாய் எணிப்பழகி விட்டே னம்மா
கொடியவனாய் இருப்பானென் றுணரவில்லை
வலக்கையும் இடக்கையும் போலே வாழ்ந்த
வளமுள்ள நண்பர்க்கும் வஞ்சம் செய்தான்
கலக்கமின்றிக் காட்டுவழி கடந்த நெஞ்சு
கலங்குகின்ற திவன்செயலைக் கண்ட பின்னே!

எத்தனைநாள் அன்போடு பழகி வந்தான்
என்னுயிரைத் தன்னுயிராய் மாற்றிக்கொண்டான்
அத்தனையும் பாசாங்கென் றாக்கி விட்டான்
அன்புடைய நண்பர்க்கும் தீங்கு செய்தான்

கொத்துமலர் சிதைக்கின்ற குரங்கு போலே
கூறுபடப் பலர்வாழ்வைக் கெடுக்கும் இந்தப்
பித்தனுடை வெறிச் செயலைக் கண்ட பின்னே
பேதைமனம் வாதையுடன் கொதிக்கு தம்மா!

பிழைத்திட்டம் இவன்போட்டான்; நிறைவே றாமல்
பீறுவதே இலட்சியமாய்க் கொண்டேன்; தீயன்
இழைத்திட்ட சூழ்ச்சியினால் பிரிந்து சென்ற
ஏற்றமிகு முத்தப்பர் தம்மைக் கண்டே
அழைத்திட்டு வந்திங்கு சேர்ப்பே னம்மா!
அன்புடைய நெஞ்சங்கள் தமைப்பி ரித்துக்
கொழுத்திட்ட வஞ்சகனைத் தோற்க டித்தல்
குறியாகச் செயல்படுவேன் காணு யம்மா!

நெஞ்சாரக் காதலித்த தாலே காட்டு
நெடுவழியைக் கடக்கின்ற போதிலெல்லாம்
அஞ்சாத நெஞ்சத்தேன் அஞ்சு கின்றேன்;
அற்பனிவன் கொடுஞ்சூழ்ச்சி கண்ட பின்னே!
பஞ்சாகப் பறக்கட்டும்; கெட்ட ழிந்து
பாழாகப் போகட்டும்; பிறரின் வாழ்வை
நஞ்சாகச் செய்கின்ற வஞ்ச நெஞ்சன்
நலங்கெட்டுச் சிதையட்டும்; ஒழியட்டும்மே!

கொதிக்கின்ற நெஞ்சுடனே தாம ரைப்பெண்
கூறியன இளவரசி முல்லை கேட்டாள்.
சதிக்கினறு தோண்டியவன்; தனது காதல்
தனைச்சிதைத்த பொன்னப்பன் தன்னைத் தேடி
மதிக்குநிக ரானமுக மடந்தை காட்டு
வழிகடந்து வந்ததையும், மனங்கு லைந்து
குதிக்கின்ற மலையருவி தெறித்தல் போலே
கொட்டுகின்ற பேச்சினையும் சிந்தித் தாளே!

காதலித்துப் பேசியொரு பெண்ணின் வாழ்வில்
கடைகொண்ட நம்பிக்கை சீர்குலைத்தான்;
ஆதரவுத் துணையான நண்பன் வாழ்வை
அவலமுறச் செய்துவிட்டான்; மேலும் தன்னை
வேதனைக்குள் ளாக்குகின்ற செயல்மேற் கொண்டான்;
வெறுப்புக்கே உரியவனாய் விளங்குகின்றான்;
பாதகனின் போக்குக்கு முடிவின் றாகில்
பலருக்குத் துன்பியற்றிக் கொண்டிருப்பான்!

இதுநிறுத்த வேண்டுமென முடிவு செய்தாள்
எதிர்நின்ற தாமரைப்பெண் தன்னைப் பார்த்து
மதுநிகர்த்த எழிலுடைய பெண்ணே உன்னை
மனதாரக் காதலித்த பின்னே வேறு
புதுமோகம் மேற்கொண்டு சூழ்ச்சி செய்த
புல்லனிவன் இனியென்றும் நல்ல னாகான்;
எதுவரினும் இவன்கருத்து நிறைவே றாமல்
இயற்றுவதே கடமையெனக் கொள்ளல்வேண்டும்.

மன்னவர்க்கு நல்லவன்போல் நடித்துக்கொண்டு
மமதையுடன் செயல்புரியும் கேடன் சூழ்ச்சி
இன்னதுயர் விளைக்குமெனச் சொல்லப் போமோ?
எத்தனைநாள் இவன்தொல்லை பொறுத்திருப்பேன்
மின்னலென வந்தவளே, ஆணின் தோற்றம்
மேற்கொண்டு நானுமுன்னைத் தொடருகின்றேன்
என்னருமை முத்தப்பர் தம்மைத் தேடி
எய்திடநீ உதவிடுவாய் என்று சொன்னாள்.

இளவரசி, அதுவேண்டாம்; உங்கள் காதல்
ஏற்றவுயர் முத்தப்பர் தம்மைத் தேடி
உளந்தளர்ந்த தங்கள்நிலை கூறி இங்கே
உடன்கூட்டி வருகின்றேன்; மன்னர் நெஞ்சில்

வளர்ந்திருக்கும் பகையெண்ணம் மாற்று கின்ற
    வழியாய்ந்து செயல்புரிக! விரைவில் இன்பக்
களமாகும் நல்வாழ்வு வந்து சேரும்;
    கவலைமறைந் தொழியும்இதில் ஐயம் வேண்டாம்.

வஞ்சகனும் பொன்னப்பன் நெய்யும் சூழ்ச்சி
    வலையறுந்து விழவேண்டும்; தங்கள் அன்பு
நெஞ்சத்தில் நல்லின்பம் நிலைக்க வேண்டும்;
    நிகரில்லாப் பண்புடையார் முத்தப் பர்தம்
சஞ்சலம்நீங் கிடல்வேண்டும்; இந்தத் தொண்டே
    சாதித்து முடிப்பதென உறுதி கொண்டேன்;
பஞ்சனைய அடிநோக அலைய வேண்டாம்;
    பணிபுரிய நானுள்ளேன்; கவலை வேண்டாம்!

இப்போதே பயணத்தை மேற்கொள் கின்றேன்;
    எவ்விடத்தும் முத்தப்பர் தம்மைத் தேடித்
தப்பாமல் அழைத்திங்குச் சேர்ப்பேன்; என்று
    தலைப்பாகை சரிப்படுத்தி அணிந்தெ ழுந்தாள்!
ஒப்பாரும் மிக்காரும் இல்லை பெண்ணே
    உன்மனத்துச் சஞ்சலத்தை உதறி விட்டே
இப்பாரில் பிறர்க்குதவ எழுச்சி கொண்டாய்;
    என்னென்றுன் தொண்டுள்ளம் போற்று வேனே!

முல்லைசொல்லி வாய்மூடு முன்னே அங்கே
    முருகனெனும் ஆடவனோர் உடைவா ளோடே
வில்லம்பு போல்விரைந்து புறப்பட் டானாய்
    வெளிப் போந்தான்; அரண்மனையை விட்டுச் சென்றான்.
நல்லநல்ல மணப்பொருள்கள் கொண்டு வந்தான்;
    நாடாளும் மன்னரிடம் விற்க வந்தான்;
வல்லமைசேர் மன்னவரைச் சந்திக் காதே
    வாயில்கடந் தோடுகின்றான் ஏனோ ஏனோ?

சேடியர்கள் இவ்வாறு பேசிக் கொள்ளச்
செவ்விமிகு தாமரையாள் புரவி யேறிக்
காடுகரை மேடுமடுக் கடந்து சென்ருள்!
கட்டழகி முல்லைக்காய்த் தூது சென்ருள்!
நாடுநகர் என்றுபல ஊர்க டந்து
நல்லவனும் முத்தப்பன் தன்னைத் தேடி
ஓடுகின்ருள்; பறக்கின்ருள் சூழ்ச்சிக் காரன்
உன்மத்த வெறித்திட்டம் தடுப்ப தற்கே!

வெறுப்புற்ற மன்னவரால் விரட்டப் பட்டு
வெளிப்போந்த முத்தப்பன் மதுரை சென்று
பொறுப்புற்று வாணிபத்தைப் புரியும் காலை
பொன்னப்பன் காதலியின் நினைப்புத் தோன்றக்
குறிப்புற்றுத் தனக்கின்னு செய்த நண்பன்
கோதையிடம் கொண்டிருந்த காதற் கேனும்
நெறிப்புற்று நடந்தானே என்று காண
நினைத்தவளின் இல்லத்தை நோக்கிச் சென்ருன்.

சொல்லாமல் தாமரையாள் ஓடிச் சென்ற
துயரத்தில் உழல்கின்ற பெற்ருேர் கண்டு
நில்லாமல் அப்போதே அவளைத் தேடும்
நினைப்போடு புறப்பட்டான்; மதுரை விட்டான்;
பொல்லானும் பொன்னப்பன் தன்னைத் தேடிப்
புறப்பட்டுப் போயிருப்பாள் என்றே எண்ணிச்
செல்லாத தஞ்சைக்குச் செல்ல வென்றே
சேயிழையைத் தேடியவன் புறப்பட் டானே!

கருதாமல் சின்னவர்கள் பிரிந்து போவார்
கண்ணீரை விட்டிருக்கும் பெற்ருேர்க் கன்ருே
உருவான அன்பளவு தெரிந்தி ருக்கும்
உருக்கத்தில் பொலிந்திருக்கும் என்றுணர்ந்தே

பெருங்காதல் வலிவாலே சென்று விட்ட
 பெண்ணழகி தாமரையைத் தேடிக் கண்டு
சருகாகக் கிடக்கின்ற பெற்றோர் முன்னே
 சடுதியிலே கொண்டுவரப் புறப்பட் டானே!

நட்புடையான் என்றிருந்த பொன்னப் பன்தான்
 நயவஞ்சகத் தால்தன்னைக் கெடுத்தான் என்ற
நுட்பத்தை உணர்ந்திருந்த கார ணத்தால்
 நோய்மனத்தான் தாமரைக்குக் கேடு செய்தால்
புட்பத்தை யொத்தவளால் தாங்கப் போமோ
 போய்க்காக்க வேண்டுமென முத்தப் பன்தான்
புட்பறந்த வாறுவிரை வாகச் சென்றான்
 புழுதிபறக் கின்றநெடும் பாதை மீதே!

அழகரசி இளவரசி முல்லை கொண்ட
 அன்புமிகு காதல்தனை நிறைவு செய்யப்
பழகுதமிழ் அன்னையமகள் தாம ரையாள்
 பாய்ந்தோடி வருகின்றாள் ஒருபு றத்தே!
பழமனைய பெற்றோர்க்கு மகளைத் தேடிப்
 பக்குவமாய் ஒப்படைக்க முத்தப் பன்தான்
நிழல்வழங்கு பெருங்காட்டு வழியில் சற்றும்
 நில்லாமல் விரைகின்றான் ஒருபு றத்தே!

எதிரெதிரே பாய்ந்துவரும் பரிஇரண்டும்
 இடைக்காட்டில் ஓரிடத்தில் நின்ற தம்மா!
மதிமுகத்தைத் தலைப்பாகை மறைத்த தாலே
 மட்டுப்ப டாதாரோ எனநி னைத்தே
எதிர்நின்ற முத்தப்பன் தனைய ழைக்கும்
 இனியகுரல் கேட்டங்கே நிமிர்ந்து பார்க்க
அதிசயந்தான் உங்களைத்தான் தேடி வந்தேன்
 அண்ணாவென் றுரைத்தகுரல் தன்னைக் கேட்டான்.

இன்குரலில் பேசுகின்ற தம்பி நீயார்?
எனைத்தேடி ஏன்வந்தாய்? வீணை யொத்த
உன்குரலில் ஆர்வத்தைக் காணு கின்றேன்
உண்மைதனை விரைந்துரைப்பாய் எனத்துடிக்க,
மன்குடியில் பிறந்தபூங் கொடியாள் முல்லை
வரச்சொல்லிப் புறப்பட்டேன்; வழியில் கண்டேன்;
என்கடமை உடனழைத்துச் செல்வ தென்றே
இளைஞனுருத் தாமரையாள் பதிலு ரைத்தாள்.

உன்கடமை எளிதாக முடியா தப்பா
உள்ளதொரு கடமையெனக் கதுந டந்த
பின்னர்த்தான் மற்றவற்றை நினைக்க வேண்டும்
விலகிடுவாய் நான்போக வேண்டும் என்றே
தன்னுடைய புரவிதனைத் தட்டி விட்டான்;
தளிர்க்கொடியாள் விரைந்தவனைப் பின்தொடர்ந்தாள்
என்னஇது தொல்லையெனத் திரும்பிப் பார்த்தான்
ஏந்திழையாள் தலைப்பாகை வீழக் கண்டான்!

பெண்ணென்று கண்டவுடன் வார்இழுத்துப்
பின்னோக்கித் திரும்பிவந்தான்; தன்னை நோக்கி
அண்ணாவென் றழைத்தவளே தேடிச் செல்லும்
அழகுமகள் தாமரையென் றறிந்து கொண்டான்.
கண்ணெனவே உனைவளர்த்தோர் வாடு கின்றார்;
கடிவாளக் குதிரையில்நீ ஓடு கின்றாய்;
பெண்ணேஉன் பெற்றோர்பால் செல்ல லாம்வா!
பிழைசெய்தாய் உடன்திருந்தி வாவா வென்றான்.

பொன்னப்பன் முல்லைக்குத் தொல்லை யானான்;
புயங்கனுக்கு விரைந்துமண முடிப்பதற்கே
மன்னர்க்குள் நோக்கமது முற்றிப் போச்சு;
மற்றிவற்றைத் தவிர்க்கும்வகை அறியா ளாகித்

தன்னளவில் துடிக்குமிள வரசி என்னைத்
தங்களிடம் தூதாக அனுப்பி வைத்தாள்;
மின்னலென விரைந்துசெய லாற்று விட்டால்
வேதனைதான் விஞ்சுமென விளம்பி நின்றாள்.

துணிந்துசெய லாற்றுகின்ற உன்னை நோக்கத்
தோகைமயில் அனையவளே தாழ்ந்து விட்டேன்;
பணிந்துசெய லாற்றுகின்ற பண்பே விஞ்சிப்
பயனின்றி இத்தனைநாள் கழித்து விட்டேன்;
அணியணியாய்த் துயர்வரினும் எதிர்த்து நிற்கும்
ஆற்றலுனைக் கண்டதனால் அடைந்து விட்டேன்
மணியனைய இளவரசி துயரைப் போக்க
மற்றிந்த நொடியேநான் விரைந்து செல்வேன்!

பெற்றோர்பால் சென்றிடுவாய்; உன்னைப் போன்ற
பேதையர்கள் தனியாகப் பயணம் செய்தல்
சற்றேனும் சரியல்ல உணர்ந்தி ருப்பாய்;
தவிப்போடு வாழ்வார்க்கு மகிழ்ச்சி சேர்ப்பாய்
பொற்றொடியே எனச்சொல்லி முத்தப் பன்தன்
புரவிதனைத் தட்டிவிட்டான் தஞ்சை நோக்கி!
வெற்றிமகள் தாமரையும் பின்தொ டர்ந்தாள்;
வேண்டாமென் றவன்தடுத்தும் கேட்க வில்லை.

காதலிலே தோற்றவர்கள் மனமு டைந்து
கதியின்றி முடிவுதனைத் தேடிக் கொள்ளும்
வேதனையே மிஞ்சியுள்ள உலகந் தன்னில்
வீரமகள் தாமரையோ, இன்னொ ருத்தி
காதலினை நிறைவேற்றும் கடமை பூண்டு
கருத்தோடு குறிக்கோளில் ஊன்றிநின்று
தூதுவந்தாள்; வெற்றிபெற்றாள்; மேலும் மேலும்
தொடர்வெற்றி சேர்ப்பதற்குத் தொடர்ந்து சென்றாள்

குதிகொண்டு பாய்கின்ற வழிகள் முற்றும்
　　கும்மென்று புழுதியெழப் பரியிரண்டும்
மதியொன்று கதிரொன்று முன்னும் பின்னும்
　　வான்முகிலின் கூட்டத்தைக் கடத்தல் போலே
அதிவேக மாய்ச்செல்லும் காட்சி கண்டே
　　அங்கங்கே ஊர்வழியில் நின்ற மக்கள்
இதியாரோ எனவியந்து பார்த்தி ருந்தார்
　　இளஞ்சிங்கக் குட்டிகள்போல் பாய்ந்து சென்ருர்.

தாமரையும் முத்தப்பன் தானும் அங்கே
　　தஞ்சைக்குக் கான்வழியில் விரையும் போது
காமருவும் அப்பதியின் வடபு றத்தே
　　கடுகிவரும் போர்முரசின் ஓசை கேட்டே
பாமரர்கள் ஓடிவந்தார்; சிற்றூர் மக்கள்
　　பசுக்கூட்டம் பகைகொள்ளப் பதைத்து நின்ருர்;
சீர்மருவு மன்னர்பிரான் செய்தி கேட்டுத்
　　தினவெடுத்த படைதிரட்ட ஆணை யிட்டார்.

அண்டைஅயல் உள்ளசிற் றரசர்க் கெல்லாம்
　　அணிவகுத்துப் படைதிரட்டி வாரீர் என்றே
கொண்டபோர்ச் செய்தியினைத் தாங்கி தாவும்
　　குதிரைகளில் தூதுவர்கள் விரைய லானுர்.
சண்டைவந்த தெனக்குருதி துடிது டிக்கச்
　　சாதுரியங் காட்டவொரு தருண மென்ன
முண்டாவைத் தட்டிக்கொண் டிளைஞ ரெல்லாம்
　　முன்னேற்றச் சிந்திசைத்துக் குமுற லானுர்.

வடநாட்டான் ஆணவத்தால் தஞ்சைக் குள்ளே
　　வருகின்ருன்; முதுகெலும்பை ஒடித்துப் போட்டு
விடமாட்டோம் தூங்குகின்ருேம் எனும்நி னைப்பா
　　வெறுங்கோழைக் கூட்டமென்றே எண்ணி ஞை

உடனெழுவீர் எனமுரசு முழக்கிக் கொண்டே
ஊர்ப்புறத்தும் நகர்ப்புறத்தும் உள்ளா ரெல்லாம்
வெடவெடெனப் புலிகளெனப் பாய்ந்து வந்தார்
வெற்றிமகள் அவர்தோளில் நடன மிட்டாள்!

வேற்படையும் வாட்படையும் முன்னே செல்ல
விற்படையும் மற்படையும் தொடர்ந்து செல்லக்
காற்றெனவே பரிப்படையும் யானை தேரும்
கடகடென விரைந்தோட வடக்கு நோக்கிக்
கூற்றத்துக் கிரைபோடும் ஆற்ற லார்போல்
கொடிபிடித்து முரசடித்து முழக்க மிட்டு
மேற்செல்லும் பெரும்படைக்குத் தலைவ னாக
வீரமிகு புயங்கன்தான் விளங்கி னானே!

போர்க்களத்தே வடபுறத்தார் காத்தி ருக்கும்
புலிகளைப்போல் நின்றிருந்தார்; புயங்கன் வீரர்
ஆர்ப்பரித்துப் பாய்ந்தார்சிங் கங்கள் போலே!
அடடாபோர் தொடங்கிற்று முழக்கத் தோடே!
யார்விழுந்தார் யாரெழுந்தார் பார்க்கு முன்னே
அடுத்துவந்தோர் மேல்விழுந்தார்; மலைந்து நின்றார்;
கூர்வாள்கள் மின்னலெனப் பளிச்சிட் டாடக்
கொடுங்குருதிச் செம்புனலே மழையாய்ப் பெய்யும்!

மற்புயத்தில் அம்புபட்டுக் குருதி பாய
மலைந்திருக்கும் பகைமார்பில் வாளைப் பாய்ச்ச
அற்புதமாய்ப் பீறிட்ட குருதி வந்தே
அத்துடனே கலந்திழியக் கண்ட காட்சி
குற்றாலத் தருவியிலே மழைபொ ழிந்து
குருதிநிறம் பெற்றோடல் போலி ருக்கும்!
பொற்றாரான் திருப்புயங்கன் செய்த போரோ
புதுமைதரும் வீரத்தின் விளக்க மாகும்!

கார்மேகம் போலவரும் யானைக் கூட்டம்
கண்பிதுங்க நாப்பிதுங்க மிதித்துப் போட்டு
நேர்நின்று வாள்சுழற்றி நிற்போர் தம்மை
நிலையிழந்து கலைந்தோடச் செய்து, வெற்றிப்
போர்முரசின் ஒலிக்கேற்பக் குதித்த காட்சி
புலிமலைகள் பலகூடிக் களத்தில் நின்று
தார்சூடி நடனமிடல் போலி ருக்கும்
தளபதிநற் புயங்கனுறு களத்துப் போரில்!

கொல்லென்றும் குத்தென்றும் கூவிச் சென்று
குதிரைகளில் பாய்ந்துவரும் வீரர் கூட்டம்
நில்லென்று தடைசெய்வார் யாரும் இன்றி
நீண்டுவரும் வேற்கூட்டம் வாளின் கூட்டம்
வில்லம்பின் டங்கார ஆர வாரம்
வெற்றிமகள் விளையாட்டின் வீர நாதம்
எல்லையிலே தஞ்சைப் போர்க் களமிதித்த
எதிர்வடவர் குருதியின்மேல் எழுந்த தம்மா!

மணிதோறும் களத்தூதர் வந்து சொன்ன
மகிழ்வெற்றிச் செய்திகளைக் கேட்டுக் கேட்டுப்
பணிதோறும் பணிதோறும் முத்து மாலை
பரிசளித்துக் கொண்டிருந்தார் தஞ்சை மன்னர்.
தணியாத ஆர்வத்தால் வெற்றி கூட்டும்
தளபதியாம் புயங்கனுக்கு முல்லைப் பெண்ணாள்
மணமாலை சூட்டுவதே பரிசாம் என்று
மனந்திறந்து களிப்போடு சொல்லி நின்றார்!

வடபுறத்துப் படையெல்லாம் போர்க் களத்தில்
மாய்ந்தொழியப் பெரும்புயங்கன் வெற்றி கொண்ட
திடமனத்துப் படையோடு திரும்பு கின்றான்
சென்றழைத்து வாபொன்னப் பாவென் றோதித்

கடமையிலே வென்றமகன் நகருக் குள்ளே
கால் வைத்த அப்பொழுதே மகள்தி ருக்கை
இடவேண்டும் மணமாலை என்று சொல்லி
ஏற்பாடு செய்திருந்தார் தஞ்சை மன்னர்.

ஏவியநல் மன்னர்பிரான் கருத்துப் போலே
எதிர்கொண்டு வரவேற்கச் செல்வான் போலே
மேவியதோர் சூழ்ச்சிமிகு கருத்தி னோடு
விரைவாகப் பொன்னப்பன் புறப்பட் டானே.
காவியம் போல் அழகுடையாள் முல்லைப் பெண்ணாள்
கைநழுவிப் போகாமல் பற்றிக் கொள்ள
வாவியதாம் உள்ளத்தோர் திட்ட மிட்டே
வடபுறத்துக் கவன்உடனே புறப்பட் டானே!

ஆர்ப்பரிப்பும் களிப்பாட்டும் முடித்து வீரர்
அவரவர்தம் கூடாரம் பிரித்துப் போட்டும்
போர்ப் பொருள்கள் சேகரித்தும் ஊர்தி ரும்பும்
புறப்பாட்டிற் கேற்பாடு செய்தி ருந்தார்.
ஓர் பெரிய கூடாரம் தன்னில் சற்றே
ஓய்வெடுத்துக் கொண்டிடலாம் எனப்பு யங்கன்
நார்க்கட்டில் ஒன்றின்மேல் படுத்தி ருந்தான்
நனவுலகம் மறந்தே கண் அயர்ந்து விட்டான்!

தான்வந்த புரவிதனைத் தொலைநி றுத்தித்
தனியாகப் பொன்னப்பன் இறங்கிச் சென்றான்
ஏனென்று கேட்பதற்கோர் ஆளும் இன்றி
எல்லாரும் வேலையிலே கருத்தாய் நிற்கப்
பேயொன்று கூந்தலுக்குள் நுழைந்தாற் போலே
பின்புறமாய்க் கூடாரத் துட்பு குந்தான்.
வாளென்று புகழ்பெற்ற புயங்கன் மார்பில்
வாள்பாய்ச்சிக் கொலைசெய்து திரும்ப லானான்!

கொண்டதொரு சூழ்ச்சிதனை முடித்து விட்டுக்
குபுக்கென்று வெளிப்பாய முயன்ற போது
கண்டனொரு போர்வீரன் புகுதல்; அன்னே
கைவாளால் அவன்மார்பில் தாக்கி விட்டுச்
சுண்டெலிபோல் பின்புறமாய் நழுவிச் சென்று
தொலை நிற்கும் புரவியின்மேல் ஏறி யாரும்
கண்டறியு முன்பறந்தான் தஞ்சை நோக்கிக்
கவலைதரு முகத்தோடு மன்முன் நின்முன்!

தயங்காமல் போரிட்டு வெற்றி நாட்டித்
தஞ்சைநகர் மன்னர்பிரான் புகழு யர்த்தி
வயங்கியதோர் மாவீரன்; மாற்றார் நெஞ்சில்
வடுப்பாய்ச்சும் அருஞ்செயலான்; வீரர் போற்றும்
புயங்களைப் பகையாளோ கொன்று விட்டான்
புல்லனிழி செயலாலே வெற்றிப் பாடல்
இயங்குமுனம் துன்பஒலி கிளம்பிற் றையா
என் நாவோ எடுத்துரைக்கத் தயங்கிற் றையா!

உறங்குங்கால் இறந்தாலும் மார்பி லேதான்
உயிர்பிரிக்கும் வாள்பா யும் பேறு பெற்முன்;
மறங்குலையா மாண்புடனே துறக்கம் சேர்ந்தான்;
மன்னரவைத் தளபதியான்!பெருமை யேனும்
அறங்குலையா மற்போரில் வீரங் காட்ட
யாரினிமேல் அவன்போலே பிறப்பார்? வெற்றி
நிறங்குலையா திருக்கையிலே துக்கம் வந்து
நெஞ்சடைத்துக் கொண்டிங்கே தவிக்கு தையா!

உடன்பிறந்தான் இறந்ததற்கு வருந்து வான்போல்
ஓலமிட்டுப் பொன்னப்பன் நடித்த தெல்லாம்
திடங்குலையா மன்னரவர் கண்டு நெக்குத்
திகழ்கின்ற தன்னைப்போல் எண்ணிக் கொண்டார்.

அடலேறு போல்நின்ற புயங்கன் தன்னை
அடைந்தால்தன் மகள்வாழ்வு சிறக்கு மென்றே
தொடராகக் கொண்டிருந்த எண்ணத் தாலே
தூயவனின் இழப்பவர்க்கோர் அதிர்ச்சி யாச்சே!

நெடுநாளாய்த் தம்நெஞ்சில் முல்லைக் கேற்ற
நேயத்தான் புயங்கனெனக் கருதி வந்தார்;
அடுபோரில் அவன் வெற்றி பெறுவா னென்றே
அசையாத உறுதியுடன் இருந்து வந்தார்;
படுபாவி எவனோசெய் பாத கத்தால்
படைவென்றும் புகழ்கொண்டும் திரும்பு முன்னே
கொடிதாகக் கொலையுண்ட செய்தி கேட்டுக்
குமுறலொடு பதைப்புண்டு சோர்ந்து போனார்!

சோர்வுற்ற அந்நிலையில் அவர்க்கோர் எண்ணம்
சுழன்றுவரத் தம்நினைப்பை மறைத்தி டாமல்
தேர்வுற்ற சூழ்ச்சியினால் வாழ்வுப் பாதை
திருப்பிவரும் பொன்னப்பன் தன்னி டத்தே
கூருற்ற கத்தியிடம் கையை நீட்டும்
குழந்தையெனச் சொல்லிவிட்டார்! நெஞ்சுக் குள்ளே
பிறிட்ட மகிழ்ச்சிதனை மறைத்துக் கொண்டு,
'பெருந்தயவுக் காட்டப்பட்டேன்' என்று ரைத்தான்!

அருமைமகள் முல்லையைநான் புயங்க னுக்கே
அளிப்பதென ஒருமுடிவு செய்தி ருந்தேன்;
பெருமைபெறு வீரனவர் மடிந்த தாலே
பிறர்வீட்டுக் கனுப்புதற்குப் பிடிக்க வில்லை;
உரிமையுடன் கேட்கின்றேன் பொன்னப் பாநீ
ஒப்புக்கொள் வாயென்றே நம்பு கின்றேன்;
பிரியமனம் ஒப்புகிலேன் ஆகை யாலே
பேதைமகள் தனைமணந்திங் கிருக்க வேண்டும்!

தயங்காமல் புயங்கனைப்போய்க் கொன்ற தாலே
　　தளிர்க்கொடியாள் எளிதாகக் கிடைத்து விட்டாள்;
மயங்காமல் பிழைசெய்து முடிப்ப வர்க்கே
　　மனக்கருத்து நிறைவேறும் எனக்க ருத்தில்
பயங்கொள்ளா வீரன்போல் எண்ணிக் கொண்டு
　　பசப்புமொழி பலபேசி ஆணை மீறத்
தயங்கியவன் போற்காட்டி ஒப்புக் கொண்டான்
　　தனைவெறுத்து மறுத்தாளை நினைக்க வில்லை!

போர்முடிந்து படையெல்லாம் வந்த பின்னே
　　புயங்கனுக்கு நினைவுக்கல் நட்ட பின்னே
சீர்மிகுந்த அரண்மனையில் மணக்கால் நாட்டித்
　　திருவிருந்து பொலிந்ததென வாயில் தோறும்
தோரணங்கள் தொங்கலிடவீதி தோறும்
　　தோகையர்கள் கோலமிட வாழை கட்டிப்
பேரரசர் சிற்றரசர் யாவ ருக்கும்
　　பெருமையுடன் அழைப்பனுப்பி வரவேற் றுரே!

இத்தனையும் பார்த்துக்கொண் டிருந்தாள் முல்லை
　　ஏதோஓர் துணிச்சலுடன் பொறுத்தி ருந்தாள்!
புத்தியின்றி மன்னவரும் மேலும் மேலும்
　　பொன்னப்பன் வயப்பட்ட சூழல் எண்ணிச்
சித்தத்தில் துயர்கொண்டாள்; காலம் எண்ணிச்
　　சிறிதேனும் கலங்காமல் காத்தி ருந்தாள்.
குத்தவல்ல கத்தியொன்றை இடையில் வைத்துக்
　　கொண்டிருந்தாள் அஞ்சாத குலத்துப் பெண்ணுள்!

பொன்னப்பன் பேசவரும் போதி லெல்லாம்
　　பொற்கொடியாள் வலக்கையோ இடுப்புக் கோடும்
மன்னர்க்கு வேண்டியனுய் இருந்து விட்டால்
　　மகளைத்தான் அடைந்திடலாம்; அவள்வி ருப்பம்

என்னென்று தெரிந்தாலும் என்னும் போக்கில்
இருக்கின்ற தீயவனின் நிழலைக் கூட
மின்னலையை முல்லைப்பெண் வெறுத்தி ருந்தாள்!
மீறிவரும் காலம்வரை பொறுத்தி ருந்தாள்!

மாமல்லன் புயங்கனையே முல்லைப் பெண்ணாள்
மனம்சிறிதும் விரும்பாத போதும், மன்னர்
தாமெண்ணி இருந்தபடி முடிப்ப தற்கே
தளராமல் நாடோறும் பேசி வந்தார்.
கோமகளோ முத்தப்பன் மீது காதல்
கொண்டிருந்தாள்; மனமாறும் தந்தைக் கென்றே
பாமரர்போல் நம்பிக்கை கொண்டி ருந்தாள்
பாதகனும் பொன்னப்பன் இடைப்பு குந்தான்!

நாளைக்குத் திருமணமாம்! காலைப் போதில்
நடக்குமென எல்லாரும் களித்தி ருந்தார்;
வேளைக்கு வேளையெழில் கூடும் வண்ணம்
விழாக்கோலம் நகர்முற்றும் பெருக்கி நின்றார்!
பாளைக்கு நிகரான சிரிப்புக் காரி
படபடக்கும் நெஞ்சுடனே காத்தி ருந்தாள்!
நாளைக்கு வருவேன்நான் என்று சொல்லி
ஞாயிறுபோய் மலைப்பின்னே ஒளிந்து கொண்டான்!

இருட்டிவரும் நேரத்தில் இரண்டு பெண்கள்
எழிலான பூக்கூடை தூக்கி வந்தார்
விரட்டுகின்ற காவலர்கள் தடுக்க வில்லை;
விரைவாகப் போய்வாரீர் எனப்ப ணித்தார்!
விருட்டென்று பாய்கின்ற வேகத் தோடே
வேல்விழியாள் முல்லையறை தேடிச் சென்றார்;
குருட்டுப்பெண் போலேகண் மூடிக் கொண்டு
குந்திக்கொண் டிருந்தாள்ஓர் கட்டி லின்மேல்!

என்னென்ன சிந்தனையோ நெஞ்சரங்கில்
எத்தனையோ திட்டங்கள் தப்பிச் செல்ல
மின்னல்பல தொடர்ந்ததெனத் தோன்றித் தோன்றி
விடியுமுனம் தன்வாழ்வு விடிவை நோக்கி
இன்னலுடன் இருந்தவளின் செவியில் சற்றும்
எட்டவில்லை எதிர்நின்றே அழைக்கும் ஓசை
அன்னமயில் தாமரையாள் அருகில் சென்றே
அவள்தோளைத் தட்டி, "இளவரசி" என்றாள்.

"வந்திருப்பார் யாரென்று பாரீர்" என்ன
வடிவழகி கண்திறந்தாள்; கூடைப் பூவும்
முந்தானைச் சேலையுமாய் எதிரில் நின்று
முறுவலிக்கும் பெண்முகத்தில் அரும்பு மீசை
வந்திருக்கும் காரணத்தை எண்ணு முன்னே
"வந்துவிட்டீர் களா?" என்று பாய்ந்து தாவிச்
சுந்தரத்தோள் தனைத்தழுவி நின்றாள்! கொண்ட
துன்பமெலாம் பறந்திடப்பே ரின்பம் கொண்டாள்.

பூக்கூடை தூக்கிவந்த தாமரைக்குப்
புறத்தொதுங்கி நடந்துவந்த மற்றொருத்தி
மாக்கோல மிடுகின்ற மங்கையல்லள்
மணக்கோலந் தரவந்த காதலன்பன்
ஏக்கோடு வீற்றிருந்த முல்லைப் பெண்ணின்
இதயத்தில் மகிழ்வேற்றும் அன்பு முத்தன்
நோக்காலே கலந்துயிரில் பின்னி விட்ட
நூன்முடிச்சு; பிரிக்கொண்ணா அன்புச் சிக்கல்!

உடனேநாம் புறப்படுதல் வேண்டுமென்றாள்
உடனிருந்த தாமரையாள்; உலகுணர்ந்தார்;
படபடக்கும் நெஞ்சுடனே உடைதிருத்திப்
பண்புமிகும் இளவரசி முல்லைப் பெண்ணாள்

உடனடியாய் மனத்துக்குள் திட்டம் ஒன்றை
உருவாக்கிக் கொண்டவளாய் அறைப்புறத்தில்
நடந்துசெல்லும் ஒருபெண்ணை அழைத்துக் "கோயில்
நான்போக ஒருவண்டி கொணர்க" என்றாள்.

வண்டிவந்து விட்டதென்ற செய்தி கேட்டு
வண்ணமயில் முல்லையுடன் தாமரையும்
ஒண்டிவந்த பூக்காரப் பெண்ணும் சென்றே
உட்கார்ந்த வுடன்வண்டி கோயில் நோக்கித்
தொண்டர்மனம் ஆண்டவனை நாடு மாப்போல்
தோகைமனம் காதலனைத் தேடு மாப்போல்
வண்டுமலர் நாடுதல்போல் விரைந்த தம்மா!
வாழ்வுநலம் தேடிடுவார் தம்மோ டங்கே!

அப்போதோர் படைவீரன் உள்நு ழைந்தான்;
அரசர்தமைச் சந்திக்கும் விருப்பம் சொன்னான்
தப்பாதே உள்ளழைத்து வருக வென்றார்
தஞ்சைநகர் ஆளுகின்ற செஞ்சொல் வேந்தர்
இப்போது நான்தனியாய்ப் பேச வேண்டும்
என்றவன்தான் உரைத்திடவே உடனி ருந்தார்
கப்பென்று வெளிச்சென்றார்; பொன்னப் பன்தான்
கல்போலே அசையாமல் அங்கி ருந்தான்!

"எல்லாரும் போய்விட்டார்; நீ சொல்" லென்றே
இயம்புகின்ற அரசர்முகம் நோக்கி வீரன்
செல்லாமல் இருக்கின்ற பொன்னப் பன்தன்
திசைநோக்கி வாய்திறவா நிலையைக் கண்டே,
"சொல்லவந்த கருத்தைநீ சொல்லப் பாஎன்
சுடர்க்கொடிக்கு மாப்பிள்ளை இவன்தா னப்பா
நல்லதற்கும் தீயதற்கும் துணையி ருக்கும்
நம்பிக்கைக் குரியவன்தான் சொல்லாய்" என்றார்.

"மன்னவரே தங்களிடம் சொல்ல வந்த
மறைபொருளைத் தனியாய்த்தான் சொல்ல வேண்டும்;
என்னருகில் யுள்ளவரும் உடனிருந்தால்
யான்பேச இயலாது மன்னி யுங்கள்"
தன்னிலையைப் பெரிதாகக் கருதிக் கொண்டு
தளராமல் பொன்னப்பன் இருந்த போதில்
"என்னஇவன் பெரிதாகச் சொல்ல வுள்ளான்
எழுந்துநீ வெளிச்செல்வாய்" என்றார் மன்னர்.

குறிப்பறிந்து நடக்காத கொள்கைக் காரன்
கோபங்கொண் டவனாக வெளியில் சென்றான்
பொறுப்புடனே வந்தபடை வீரன், "வேந்தே,
புயங்கனுடன் தாக்குண்ட சிங்கன் என்பான்
நெறிப்பட்ட மருத்துவத்தால் மீளா னாகி
நீங்குகின்ற நிலையினிலே உள்ளான் ஏதோ
குறிப்பிட்ட செய்தியொன்றைச் சொலத்து டித்துக்
குற்றுயிராய்க் கிடக்கின்றான்" என்று சொன்னான்.

"பொன்னப்பன் உடனிருக்கும் போதில் ஏதும்
புகலாதே எனத்தடுத்தான் அந்தச் சிங்கன்;
மன்னரென்னைக் காணவரும் செய்தி கூட
மாப்பிள்ளை அறியாமல் நடக்க வேண்டும்;
இன்னபடி மன்னரிடம் கூறாய் என்றே
இயம்பியுள்ளான்" என்றுரைத்தான் வீரன், மன்னர்
தன்னிகரில் புயங்கனுயிர்த் தோழன் சிங்கன்
தன்னையுடன் பார்ப்பதற்கு விரைய லானார்.

உடன்செல்லப் பொன்னப்பன் ஓடி வந்தான்
ஒருபொழுதில் திரும்பிடுவேன் இருப்பாய் என்றே
தடைவிதித்து வந்தவனைத் தொடர்ந்து சென்றார்
தகையுடையான் சிங்கனுள்ள மனையைத் தேடி!

நிந்திக்கும் பேச்சுகளும், குசுகு சுப்பும்
நீக்கமற எவ்விடத்தும் பரவி நிற்க
விந்தைக்கு மேல்விந்தை கால மாற்றம்!
விடிவதற்குள் என்னுமோ? என்ருர் பல்லோர்.

முல்லைதனை அழைத்துவரச் சென்ருர் கோயில்
முன்வாசற் புறத்திருக்கும் வண்டி கண்டார்.
வல்லையினும் காத்துள்ளேன் என்று சொல்லி
வண்டிசெலுத் துபவன்கொட் டாவி விட்டான்
தொல்லையிது தொல் லையெனச் சொல்லிக் கொண்டே
கோயிலுக்குள் தேடிவெளி வந்தார்; என்ன
சொல்லுவது மன்னவருக் கெனம லைத்துத்
துயரத்தோ டவர்முன்னே சென்று நின்ருர்.

இல்லையெனச் சொல்லுவதற்கா இங்கு வந்தீர்?
எங்கிருந்தா லுந்தேடிக் கொண்டு வாரீர்!
செல்லமகள் காதல்நிலை யுணரார் ஆகிச்
சீற்றத்தோ டிருந்தமன்னர் ஆணை யிட்டார்!
நல்லவன்போல் பொன்னப்பன் நடித்த போது
நம்பித்தான் செய்ததெலாம் எண்ண எண்ண
வல்லமையும் வீரமுங்கூர் மதியி ருந்தும்
வகையற்ருேன் போலான நிலையைக் கண்டார்!

தஞ்சைமன்னர் முகம்போலச் சிவந்தி ருக்கும்
தன் முகத்தைக் கீழ்த்திசையில் காட்டிக் கொண்டு
நஞ்சை நிலப் பயிர்க்குமுலாம் பூசித் தங்க
ஞாயிறுமன் புறப்பட்டான்; மணவி ருந்தும்
செஞ்சொற்பாக் கூத்தனைத்தும் சுவைக்க வென்றே
திரண்டுவந்த மக்களெலாம் ஏமாற் றத்தோ
டஞ்சுகுரல் கொண்டவராய்ச் செய்தி பேசி
அவரவர்தம் ஊர்களுக்குத் திரும்ப லாஞர்!

"மாப்பிள்ளை சிறைப்பட்டான்; காண வில்லை
மணமகளை" என்று மொரு செய்தி தன்னைக்
கூப்பிட்டுப் பேசிடுவார் வீட்டுக் குள்ளே
கூட்டமிட்டுத் தெருக்களிலும் பேசி நின்றார்
தோப்புகளில் சிற்றூர்கள் உழும்வ யல்கள்
துரப்புகளில் கிணற்றடியில் குளக்க ரையில்
காப்புடைய சிறைக்கூடத் தன்னில் கூடக்
காணுகின்ற பேரெல்லாம் பேசி நின்றார்!

காவிரிப்பூம் பட்டினத்தில் பாய்வி ரித்துக்
கடல்காற்றுத் தள்ளுகின்ற கப்பல் ஒன்றில்
பூவிரியும் முகத்தாளாம் முல்லைப் பெண்ணும்
புதுக்கருத்துக் கொண்டவனும் முத்தப் பன்னும்
தாவியெழும் அலைக்கூட்டம் சிரித்துப் பொங்கித்
தவழ்ந்திருக்கும் அழகுதனைப் பார்த்துக்கொண்டே
காவியமும் ஓவியமும் கைகோத் தாற்போல்
கடாரத்துக் கேகினார் காத லார்ந்தே!

சிங்காத னம்பொலிய வீற்றி ருந்து
செங்கோலை நடத்துகின்ற ஆற்றல் மிக்கார்
மங்காத புகழ்வாய்ந்த தஞ்சை மன்னர்
மகள்முல்லை மலர்நெஞ்சை யுணரா ராகிப்
பொங்கோல மிட்டிருக்கும் கடலைப் போலே
பொருமிக்கொண் டிருக்கின்றார்; மொட்டு விட்ட
தங்காதல் பூவிரியக் கடாரம் நோக்கித்
தளராத அன்புடையார் ஒருங்கு சென்றார்!

சூதாடி வென்றவரும் சூழ்ச்சியிலே வென்றவரும்
வாதாடி வென்றவரும் வாழ்ந்து சிறந்ததில்லை;
நல்ல மனமுடையார்; நல்ல செயலுடையார்
வெல்லுவதே வைய விதி.

# ஈரோட்டுத் தாத்தா

## வாழ்வளிக்க வந்தார்

*உலகெலாம் இன்பம் ஊற்றிடத் தமிழகத்து*
*இலகுநா கரிகம் எங்கணும் பரப்பி*

*வாழ்ந்தநாள் யாவும் வீழ்ந்தன! தமிழகம்*
*தாழ்ந்தது, துயரே தழைத்தது! எங்கணும்*

*குறுகிய மார்பும் குனிந்த தலையும்*
*சிறுமனப் பான்மையும் நிறைந்து விளங்கத்*

*தமிழர்கள் யாரும் தளைப்பட் டாராய்*
*அமைதியில் லாத அடிமை மாக்களாய்*

*இலங்கினர்! அறிவில் ஏற்றம் இன்றிக்*
*கலங்கினர்! ஏறக் கருதிய துறைஎலாம்*

*பிறவிப் பகைவர்கள் பெருமையோ டிருந்து*
*முறைசெயும் அரசியல், மொழி,மதம், கல்வி*

*எனுமித் துறைகள் எவற்றினும் மேலாய்த்*
*தனியர சோச்சித் தமிழர் முன்னேற்றம்*

*எளிதடை யாமல் இயன்றவா றெல்லாம்*
*வழியடைத் திருந்தார்! வஞ்சனை பெருகவும்*

*தமிழரில் சாதி வகுப்புகள் நாட்டித்*
*தலையுயர்ந் தோராய் அமைத்துக் கொண்டார்!*

ஒருவரை யொருவர் தாழ்த்திப் பேசியும்
பொருதும், வாயாற் பொல்லாங் குரைத்தும்

ஆரிய நாடுவிட் டழகுறு தமிழகத்
தேறிய பார்ப்பனர் எதிர்வரக் கண்டால்

'சாமீ' எனத்தலை தாழ்த்தி வணங்கியும்,
ஊமைகள் போல ஒதுங்கி நடந்தும்,

தன் மதிப் பிழந்தும் புன்மதி கொண்டும்
நன்னிலை குன்றி நாய்போல் உழன்றும்,

வாடும்நாள், வாழும் வகையினை அறிஞர்
தேடும்நாள் அறிஞரைத் தேற்றுதற் கென்று,

தமிழறம் பேணும் தகைமை யாளர்!
அமைதியாய்ச் சிந்தித் தறியும் மாண்பினர்!

வள்ளுவர் நெறியை வாழ்க்கையிற் காட்டும்
தெள்ளிய உள்ளச் செவ்வி யுடையார்!

உளம்சொல் உடலால் உவப்புறும் பணியை

இளமைப் பொழுதிலும் வளர்தமிழ் நாட்டுக்கு
அளித்த வள்ளல்! அஞ்சாச் சிங்கம்!
உழைப்பின் பயனை விழையாச் செல்வன்!
சிந்தனைச் சிற்பி! திராவிடத் தந்தை!
வந்தனைக் குரிய வடிவிற் பிறந்தார்!
ஈரோட்டுத் தாத்தா! தமிழர்
பாராட்டும் பெரியார் இராம சாமியே!

**செயற்கரிய செயல்கள்**

தன்வீட்டார் பிறர்வீட்டில் உண்ணுமல்
பார்ப்பனர்போல் இருக்கச் சொல்லும்
புன்மைதனை வெறுத்துத்தம் புத்திவழி
போனதனுல் பொறுமை மீறிந்

தென்னாட்டில் யானைகட்குக் கால்விலங்கு
    போட்டடக்கல் போலே யந்நாள்
தென்னாட்டுப் பெரியாருக் கன்னார்தம்
    பெற்றோர்தாம் தளையிட் டாரே!

பார்ப்பனரும் பண்டிதரும் தம் வீட்டில்
    கதைபேசிப் பணம்ப றிக்கப்
பார்க்குங்கால் அவர்கதையில் பலகுற்றம்
    இழிவுபல இருத்தல் கண்டே
ஆர்ப்பரித்து நகையாடிக் கேள்விபல
    கேட்குங்கால் அவர்கள் நாணி
வேர்த்துப்போய்த் தக்கபடி விடைகூறத்
    தெரியாமல் விழித்து நிற்பார்!

ஈரோட்டில் கடைவைத்தோன் தலைவிதியின்
    வலிவுதனை எடுத்துப் பேசும்
பார்ப்பனனின் கடைத்தட்டி தனைத்தள்ளித்
    தலைவிதிதான் படுத்திற் றென்றே
ஈரோட்டுத் தாத்தாதன் இளம்பருவம்
    தனில்செய்த குறும்பை யெல்லாம்
யாரேனும் நினைத்ததில்லை! அறிவியக்கக்
    கொள்கையது வாகும் என்றே!

தன்மனைவி தனைத்தொட்டால் தீட்டென்று
    தலைமுழுகிப் பிள்ளைப் பேற்றிற்கு
என்றுவெள்ளிக் கிழமைதொறும் நோன்பிருக்கும்
    நிலைபோக்க எண்ணி ஆய்ந்து
சின்னஓர் எலும்பெடுத்துச் சோற்றுக்குள்
    புதைத்திடுவார்! சென்றவ் வம்மை
தன்னுணவை உண்ணுங்கால் தலைநீட்டும்
    எலும்புகண்டு நோன்பி ழப்பார்!

தாலிஎனும் சங்கிலிதான் பெண்ணினத்தைப்
பிணித்திருக்கும் தளைஎன் றெண்ணித்
தாலியினைக் கழற்றென்னத் தன்மனைவி
மறுத்துரைக்க, நானி ருக்கத்
தாலிகட்டிக் கொள்ளுவதன் பொருளென்ன
எனக்கேட்டு வாங்கிக் கொண்டார்!
'தாலிஎங்கே?' எனக்கேலி செய்தபெண்கள்
தமைக்கண்டு சினந்தார் அம்மை!

## உரிமை வேட்கை

அன்னியர்கள் இந்நாட்டில் வாணி கத்தில்
அடிக்கின்ற பகற்கொள்ளை தனை ஒழிக்கத்
தன்முதுகில் துணிமூட்டை தூக்கி விற்றுத்
தனக்குள்ள சொல்வன்மை யாலே, மக்கள்
புன்கருத்தைப் போக்கியிந்த நாட்டி லுள்ளார்
புலையரென்றும் கடையரென்றும் ஒதுக்கப் பட்ட
இந்நிலையை ஒழித்துவிட எண்ணி நாளும்
எழுதிவந்தரர், பேசிவந்தார் ஈரோட் டண்ணல்!

உடலுக்குத் தீமைதரும் கள்ளிற் செல்வம்
ஓங்குவதைக் கண்டந்த வெள்ளைக் காரர்
கடமையினை எண்ணாமல் ஆளும் போக்கில்
கள்ளுக்குக் கடைபெருக்கக் கண்டார் காந்தி
உடனொழிக்க வேண்டுமெனச் சித்தங் கொண்டார்
ஓங்கியதே பெரும்புரட்சி தமிழர் நாட்டில்
அடலேறு போலினைஞர் ஈரோட் டண்ணல்
அன்றெழுந்தார்! தமிழர்களும் உடனெ ழுந்தார்!

தொண்டர்களில் நூற்றுவரை அண்ண லோடு
தொழுவத்தில் மாடுகட்டிப் போட்ட தேபோல்,
கொண்டடைத்தார் சிறையுள்ளே, மக்கள் நெஞ்சில்
கொழுந்துவிட்டு வயிறெரிய ஆட்சி யாளர்

கண்டனர்பத் தாயிரம்பேர் மறியல் செய்து
கடுஞ்சிறைக்குள் அண்ணலுடன் செல்ல, நெஞ்சில்
எண்ணினராய் நிற்கும்நிலை கண்டார் அங்கே
இடமில்லை சிறைக்குள்ளே வெளியில் விட்டார்!

காதலனின் நெஞ்சுவக்கத் தொண்டு செய்யும்
கற்புடையார் நாகம்மை யம்மை யாரும்
மாதரிடம் வீரமுண்மை காட்ட வென்றே
மாநிலத்தில் பிறந்ததங்கை கண்ணம் மாளும்
மோதிவரும் ஆர்வத்தால் இவர்கள் பின்னே
முன்னேறும் பெண்ணினமும் கள் ஒழிப்பை
ஆதரித்த ஈரோட்டுத் தாத்தா தம்பின்
அணிவகுத்துக் கிளர்ச்சிசெய்தார்! பணியைச் செய்தார்!

திருவாங்கூர் வைக்கத்தில் தெருவில் நாயைத்
திரியவிட்டுத் தமிழர்களில் ஒருவ குப்பை
வரக்கூடா தெனக்கட்டு வைத்தி ருந்தார்.
மனம்புழுங்கி மலையாளத் தலைவ ரெல்லாம்
ஒருபுரட்சி தொடங்கிடவும், சாதிப் பித்தம்
ஓங்குமுளத் திருவாங்கூர் அரசாங் கத்தார்
வருங்காலம் நினையாமல் தலைவ ரெல்லாம்
வாடத்தம் சிறைக்கூடத் தடைத்துப் போட்டார்.

நாட்டுநலம் கருதியஅத் தலைவ ரெல்லாம்
நன்றாய்ந்து தொடங்கிவிட்ட தொண்டு செய்யக்
கேட்டெழுதி ஈரோட்டிற் காள னுப்பிக்
கிளர்ச்சியினைத் தொடர்ந்துசெயப் பணித்த போதில்
வீட்டில்வயிற் றுக்கடுப்பால் படுக்கை தன்னில்
வீழ்ந்திருந்த அண்ணலவர் எழுந்து வேண்டும்
மூட்டைகட்டி நாகம்மை யாரைக் கண்டு
முடிந்தது நோய் என்றுரைத்தார்! வைக்கம் வந்தார்!

ஈவேரா வைக்கத்தில் தலைமை ஏற்றூர்
இவர்வீட்டில் பலமுறைகள் தங்கி டில்லி
போவாரவ் வரசர்அதை நினைத்துப் பார்த்துப்
போய்விருந்திற் கழைக்கவெனப் பணிக்கக் கண்டித்
நாவேந்தர், "தீமைக்கோ? புரட்சிப் போரை
நடவாமல் தடுப்பாரோ?" என்று மக்கள்
கூவாமல் நினைக்குங்கால், அண்ணல் நன்றி
கூறியதி காரிகளை யனுப்பி வைத்தார்!

உரிமைக்குப் போராடத் தொடங்கி விட்ட
உடனவரைச் சிறையிட்டார்! பின் நாகம்மை
திரு. ராம நாதனுடன் வைக்கம் வந்தார்
சிலநாளிற் சிறைப்பட்டார் இராம நாதன்!
பெருவாரிப் பெண்களுடன் அம்மை யார்தாம்
பெருங்கிளர்ச்சி செய்யுங்கால் ஈரோட் டண்ணல்
ஒருமாதம் சிறையிருந்து விடுதலைப் பட்
டூர்விட்டு வெளியேறப் பணிக்கப் பட்டார்!

வெளியேற்றச் சட்டத்தை மீறி மீண்டும்
விளைத்தபெரும் புரட்சிகண்ட ஆட்சி யாளர்
எளியாரின் உரிமைக்குப் பாடு பட்ட
எம்பெரியார் தமைச்சிறையில் ஆறுமாதம்
துளியேனும் அருளின்றி அடைத்துப் போட்டார்
தொண்டுக்குச் சளையாத நாகம் மையார்
வெளிநின்று பெருங்கிளர்ச்சி செய்ய லானூர்
வெற்றிபெற்றூர்! உரிமைபெற்றூர் தாழ்த்தப்பட்டோர்!

தனித்தனியே பார்ப்பனர்க்கும் திராவி டர்க்கும்
தமிழ்நாட்டுக் குருகுலத்தில் உணவளித்துத்
தன்இனத்துக் குயர்வுதனை வ. வெ. சு. ஐயர்
தழைக்கவைக்க முயன்றதனுல் பணங்கொடுக்க

இனிமுடியா தெனமறுத்தார் தந்தை. காந்தி
இத்தவற்றைக் கண்டித்தும் ஐய ரோதாம்
நினைத்ததுதான் சரியென்றார்; பார்ப்ப னீயம்
நீங்கும்வரை இழிவிருக்கும் என அறிந்தார்!

தன்னாலே யானவரை பார்ப்ப னீயம்
தனையொழிக்க வழியாய்ந்தார் வகுப்பொவ் வொன்றும்
முன்னேற வேண்டுமெனும் கொள்கை நாட்ட
முதன்முதலில் 'குடியரசு' தொடங்கி வைத்தார்
தென்னாட்டார்க் கென்னென்ன தேவை என்று
தெளிவாக ஆராய்ந்து மனுவின் நீதி
சொன்னாலும் வெட்கம்வரும் கம்பன் பாடல்
சூழ்ச்சிசொலும் புராணங்கள் எரிக்கச் சொன்னார்!

## ஆரியத்தின் வைரி

சாதிகள் நான்குண் டாக்கிச்
    சமத்துவக் கொள்கை நீக்கி
வேதியப் பிழைப்புக் கண்டார்
    வீணர்கள் அவரின் போக்கை
ஆதியில் மாடு மேய்த்திங்
    கடைந்தநாள் வரையில் ஆய்ந்து
போதிய சான்று காட்டிப்
    புகன்றனர் ஈரோட் டண்ணல்!

பார்ப்பனர் பேச்சை நம்பிப்
    பாழ்பட்ட தமிழ கத்தில்
சூத்திர ராக மக்கள்
    துயர்ப்படும் தமிழ கத்தில்
நாத்திக னென்றும் இந்த
    நாயக்கன் துரோகி என்றும்
கூர்த்தறி யாதார் சொல்லக்
    கொஞ்சமும் அஞ்ச வில்லை!

சாதியால் மதத்தால் பார்ப்பான்
சதியினுல் சேர்ந்த இந்து
நீதியால் மூட பக்தி
நிறைவினுல் கெட்டி ருக்கும்
போதிலே தன்மா னத்தைப்
புகட்டுதற் கென்று வந்த
சோதியாய் ஈரோட் டண்ணல்
தோன்றினுர் தமிழர் நாட்டில்!

மக்களைப் பிரித்து வைத்து
மயக்கிடும் சமயத் திற்கும்
பக்கலில் நின்று பாட்டுப்
பாடிடும் இந்நாள் ஆட்சி
சிக்கென ஒழியு மாயின்
சிறப்புண்டு நாட்டிற் கென்று
தக்கவா றெழுதக் கண்டு
சிறையினுள் தள்ளப் பட்டார்!

ஆரியத்தின் வைரி யாகி
அதனுலாம் தீமை நீக்கப்
போரியக்கும் வீரன்! எங்கள்
பொன்னுட்டுத் தந்தை! மிக்க
சீரியற்றித் தமிழ கத்தார்
சிறப்புற வேதன் மானப்
பேரியக்கம் கண்டோன்! நல்ல
பெரியார் ஈரோட்டுத் தாத்தா!

## தமிழ்காத்த போராட்டம்

தன் வாழ்வைத் தொண்டாக்கித் தமிழ்நாட்டை
வளமாக்கத் தகுஞ்செ யல்கள்
நன்முற்றி நம்பெரியார் ஈவேரா
முதுமைதனைக் கண்ட போதில்

தென்னாட்டில் தமிழகத்தில் இந்திஎனும்
புன்மொழியைத் தேசப் பேரால்
சென்னைமுதல் அமைச்சரவர் கட்டாயம்
ஆக்கிவிடத் திட்டம் செய்தார்!

தாய்மீதில் விருப்பற்ற ஓரிளைஞன்
தன்னுழைப்பைத் தாய்நாட் டிற்கே
ஈயென்றால் மதிப்பானா? எதிரிமொழி
மதித்துயிர்வைத் திருப்பான் பேடி!
தூயதமிழ் நாட்டில்செந் தமிழ்மொழியை
மறைத்திந்தி தோன்றின், நாடே
தாயென்ற நிலைபோகும்! தமிழ்சாகும்!
இந்தியெனும் சனிமே லாகும்!

ஈதறிந்த ஈரோட்டுத் தாத்தாதாம்
ஓயாமல் எழுத்தி னாலும்
மோதியுணர் வலையெழுப்பி மக்களைத்தம்
வயப்படுத்தும் மொழியி னாலும்,
தீதுவரும் இந்தியினால்! முன்னேற்றம்
தடையாகும்! தீந்த மிழ்க்கும்
ஆதரவு கிடைக்காமல் அழிவுவரும்!
இந்திஉயர் வாகும் என்றார்.

சிறுதுரும்பும் பற்குத்த உதவும் இந்த
இந்தியெனும் தீமை மிக்க
சிறுமொழியால் எட்டுணையும் பயனில்லை!
அதுவளர்க்கச் செலவ ழிக்கும்
பெரும்பணமோ தமிழர்களின் பணமாகும்
படிக்கவரும் பெரும்பா லோர்தாம்
வெறும்பேச்சுப் பேசித்தம் வயிறடைக்கும்
வித்தைகற்ற மேலோர் என்றார்!

ஆட்சிசெயும் முதலமைச்சர் பார்ப்பனராய்
இருந்தமையால் அவர்வ டக்குப்
பேச்சுதனைத் தமிழகத்தில் வளர்த்துத்தீந்
தமிழ்கெடுக்கும் பெருவி ருப்பால்
சூழ்ச்சிசெய்தார்! இவ்வுண்மை தனையறிந்து
மக்களுக்குச் சொன்னார் தாத்தா!
'சீச்சியிவர் துரோகி' எனச் செந்தமிழ
ராய்ப்பிறந்தும் சிலர்ப ழித்தார்!

தூய்தமிழை வடமொழியாம் நச்சகற்றிக்
காப்பாற்றத் துடிக்கும் நெஞ்சு
வாய்ந்ததிருப் பாரதியார் தலைமையிலே
கூடிநின்ற மிக்க ஆர்வம்
பாய்தமிழர் மாநாட்டைத் திருச்சியிலே
பார்த்தவர்கள் இதுதான் அந்தத்
தூய்மனத்தார் ஈரோட்டுத் தாத்தாவின்
நினைவெடுத்த தோற்றம் என்றார்!

கிளர்ச்சியினை அடக்கித்தம் இந்தியினைப்
புகுத்திவிடும் கீழ்மை யான
உளவுறுதி முதலமைச்சர்க் கிருப்பதனைத்
தமிழரெல்லாம் உணர்ந்த போதில்
தளர்ச்சியிலை எருமைத்தோல் இல்லையெமக்
கெனவுரைத்துத் தமிழ்வாழ் கென்று
கிளர்ந்தெழுந்தார்! பெரியாரே தலைவரெனில்
வேறென்ன கேட்க வேண்டும்?

இந்து-தியா லாஜிக்கல் பள்ளிமுன்னும்
முதலமைச்சர் வீட்டு முன்னும்
செந்தமிழை மீட்பதற்குச் சேர்ந்தபடை
வீரரெலாம் சென்று நின்று

இந்திவிழ! தமிழ்வாழ்க! எனமுழங்கப்
பல்லடத்துப் பொன்னு சாமி
செந்தமிழைக் காவாமல் எனக்குணவு
செல்லாதென் றுணை யிட்டான்!

தமிழ்காக்கும் வீரரைத்தண் டிக்கவிலை
மற்றெவர்க்குத் தண்டிப் பென்றால்
எமைவீட்டின் எதிர்நின்று வசைமொழிந்த
தாற்செய்தோம் என்று சொன்ன
அமைச்சர்மொழி கேட்டபின்னர் ஈரோட்டுத்
தாத்தாஓர் அறிக்கை யிட்டார்:
தமிழர்களே இனிஅமைச்சர் வீட்டின்முன்
கிளர்ச்சியின்றித் தமிழ்காப் பீரே!

தலைவர்சொல் பின்பற்றித் தமிழரெலாம்
ஒதுங்கிவிட்ட தன்மை கண்டும்
நிலைமையறி யாமல்ஒரு சிங்கத்தின்
எதிர்வாலை நீட்டி நின்று
அலைக்கழிக்கும் சிறுநரிபோல் உமையெல்லாம்
சிறைக்குள்ளே அடைக்க வல்லோம்!
இலைஎம்மைத் தடுப்பவர்கள் எனுமமதை
அரசியலார்க் கேறிற் றன்றே!

மமதையினைத் தமிழரிடம் காட்டுகின்ற
அரசியலை மட்டந் தட்ட
அமைத்தபடை வீரரொரு நூற்றுவரைத்
திருச்சியினின் றனுப்பி வைத்துத்
தமிழ்காத்துத் திரும்பிடுவீர் எனவாழ்த்துக்
கூறியந்தத் தமிழர் போற்றும்
தமிழ்த்தலைவர் ஈரோட்டுத் தாத்தாநற்
சென்னைக்குத் தாமும் சென்றார்!

சென்னையிலே கடற்கரையில் மற்றுமொரு
கடல்வெள்ளம் சேர்ந்த தேபோல்
மின்னனைய மாதர்களும் ஆடவரும்
இளைஞர்களும் மிகுந்த ஆண்டு
சென்றவரும் தமிழகத்தார் எல்லோரும்
சேர்ந்திருந்து செய்முழக்கம்
நின்றுகடல் செய்த அலை ஓசையினும்
பெரிதாக நிறைந்த தன்றே!

எழுபதினா யிரமக்கள் தமிழ்வாழ்க
ஒழிகஇந்தி எனஒ லிக்கக்
கிழவரவர் எனினுமொரு இளைஞரென
முனைந்துதமிழ்க் கிளர்ச்சி செய்ய
எழுந்தனர்அங் கோர்மேடை தனிலேறி
நின்றுரைவ் ஈரோட் டண்ணல்!
எழுந்ததுகாண் வீரத்தின் திருத்தோற்றம்
மனிதஉரு வெடுத்துக் கொண்டே!

விழுந்துவிட்ட தமிழினத்தை விழித்துப்போர்
செயச்செய்த வீரப் பேச்சை;
எழுந்துதமிழ்ச் சொற்களினால் இளைஞர்களைத்
தட்டிவிட்ட இலக்கியத்தைக்
கொழுந்துவிட்டுத் தமிழார்வம் இன்றெரியச்
செயஅன்றே கொளுத்திவிட்ட
செழுந்தமிழின் வீரர்ப்பைச் செவிமடுத்தோர்
உணர்வடைந்தார்! சிங்க மானார்!

தாய்மொழியைக் காப்பாற்றத் துடித்தெழுந்து
கிளர்ச்சிசெய்த தமிழ்ச்சிங் கங்கள்
ஆயிரத்தைந் நூற்றுவரை அரசியலார்
சிறைக்கூடத் தடைத்து வைத்தார்

நோயிருந்தும் தாளமுத்து நடராசர்
தமிழ்க்குற்ற நோயை நீக்கப்
போய்ச்சிறையில் உயிர்விட்டார்! அரசியலார்
கைவிட்டார்! பொருமிற் றுள்ளம்!

மறைமலையார் தமிழ்க்களித்த திருநீலாம்
பிகைமுதலாய் மாத ரெல்லாம்
நிறை "தமிழ்நாட் டுப்பெண்கள் மாநாட்"டில்
கூடிநின்றோர் நெஞ்சிற் பாய
இறைத்துவிட்ட தாத்தாவின் சொல்வெள்ளம்
உணர்வெழுப்ப எங்கும் பெண்கள்
சிறைபுகுதற் கஞ்சாமல் கிளர்ந்தெழுந்த
வரலாறே சிலம்புக் காதை!

நெடுநாட்கள் உறங்கிவிட்ட தமிழ்ப்பெண்கள்
தமையெல்லாம் நீ எழுப்பித்
தொடுப்பீர்போர்! தமிழ்த்தாயைத் தொலைக்கும்வழி
தடுத்தென்றே தூண்டி விட்டாய்!
கொடுங்குற்றம் செய்தனை நீ யபராதம்
கொடுவென்று கூறி இன்னும்
கடுங்காவல் தண்டனையிட் டடைத்தார்கள்
தாத்தாவைக் கம்பிக் கூட்டில்!

வெள்ளியமென் தாடியசைந் தாடத்தன்
மேனியிலே முதுமை தோன்ற
அள்ளி உடை ஒருகையில் தடியைமறு
கையிலெடுத் தலர்ந்த பூப்போல்
வெள்ளைமனத் தூய்மையது முகத்தினிலே
மலர, உடல் மெலிந்து, கண்டோர்
உள்ளமெலாம் கசிய, மழை போற்கண்ணீர்
பொழிய, சிறைக் குள்ளே சென்றார்!

தாத்தாவைச் சிறையிட்டுத் தமிழர்களை
எளிதாகத் தாம்அ டக்கப்
பார்த்தார்அவ் வரசியலார் பயனில்லை!
தமிழகத்தைப் பாரத த்தில்
சேர்த்தாலும் முறைமையினால் தமிழழிக்கப்
பகைசூழ்ச்சி செய்த தாய்ந்து
தாத்தாசெந் "தமிழ்நாடு தமிழர்க்கே"
எனுந்திட்டம் தமிழர்க் கீந்தார்!

தமிழரெலாம் மாநாடு கூட்டிஅதில்,
சிறையிருக்கும் தாத்தா வைப்போல்
அமைத்தஉரு வம்தலைவ ராகப்பன்
னீர்ச்செல்வம் அருகு வந்தார்.
சுமைசுமையாய் மறவரெலாம் தனக்கிட்ட
மாலைகளைத் தூக்கி வந்து
எமதுபெருந் தலைவரேஎன் றடிபணிந்து
மாலைபடைத் தெழுந்தார் செல்வம்!

மலைபோலும் மலர்மாலை தனைப்பன்னீர்ச்
செல்வம்அவர் மதிப்பு வாய்ந்த
தலைவர்சிலை முன்படைத்த போதிலங்குக்
கூடிநின்றோர் தாத்தா உள்ள
நிலைநினைந்தார்! உளம்நொந்தார்! அருவிஎனக்
கண்களினால் நீர் பொழிந்தார்!
தலைவணங்கிப் பெரியாரே தலைவரென
உறுதிசொன்னார் தமிழ்நாட் டிற்கே!

ஓயாத உழைப்புத்தான் உடல்நலத்தைக்
காப்பாற்றும்! உழைப்புக் கெட்டால்
நோயாகும்! உடல்மெலியும்! இவ்வியற்கை
முறைப்படியே நோய்வாய்ப் பட்டுப்

போய்விடுமோ உயிரென்று தமிழரெலாம்
ஏங்குகின்ற போதில் நாட்டின்
தாய்போன்ருன் தந்தைதனை விடுதலைசெய்
தரசியலார் தமிழர்க் கீந்தார்!

நோயோடு வெளிவந்தார் விரைவில்தன்
வலிகுறைத்த நோய்ப றக்க
ஓயாமல் உழைத்திட்டார்! ஊரெல்லாம்
தன்கொள்கை உரைத்து வந்தார்!
தீயாரின் அரசியலை மதமாயை
தனையொழிக்கத் திட்டம் சொன்ஞர்!
பாயாத புதுவெள்ளம், பரவாத
பெருநெருப்புப் பார்த்த துண்டோ?

**சொல்லின் செல்வர்**

பெரியார்தம் சொற்பொழிவைக் கேட்டவர்கள்
வெறுப்பகற்றிப் பெரியார் கொள்கைக்
குரியாராய் மாறுவதாம் விந்தையிதன்
உட்பொருளைச் சொல்வேன், கல்வி
தெரியாத மக்களையும் வசப்படுத்தும்
முறைமைதனில் திறமை யாக
உரைபகர்வார்! தன்னுளத்துப் பட்டதெலாம்
ஒளியாமல் உரைப்பார் கண்டீர்!

காற்றடிக்கும்! புயல் வீசும்! இடையின்றி
மழைபொழியும்! கருத்து, வெள்ளம்
போற் பெருகும்! அருவிஎன ஓடிவரும்!
மணிக்கணக்காய்ப் பொழியும்! பேச்சில்,
ஆர்த்திருக்கும் நாட்டிலுள்ள வகைப்பட்ட
பழமொழிகள் அத்த னையும்!
சோற்றினுக்குக் காய்கின்ற ஏழைகட்குச்
செயல்காட்டிச் சோர்வ கற்றும்!

உவமைகளோ குவிந்திருக்கும்! சுவைப்பேச்சுப்
பேசுங்கால் ஒன்றூே டொன்ருய்த்
தவழ்ந்துவரும் கேள்விகட்குப் பதில்சொல்லத்
தெரியாமல் தவித்த பேர்கள்
இவர்கட்சித் தொண்டர்களாய் இன்றிருக்கும்
நிலையொன்றே ஈரோட் டண்ணல்—
இவர்பேச்சின் திறம்விளக்கப் போதுமெனக்
கூறிடுவேன்! எழுச்சி கொள்வேன்!

சொற்பொழிவு மேடையிலே ஏறியதும்
நான்சொல்லும் சொற்கள் தம்மில்
நெற்பயிரை அறுத்துவந்தே உமியரிசி
தவிடுதென நிலைபி ரித்து
வைப்பதுபோல் தனித்தனியே ஆராய்ந்து
பார்த்ததன்பின் வளர்க ருத்திற்
கொப்புவன ஏற்றிடுக ஒவ்வாதேல்
தள்ளுகென உரைப்பார் தாத்தா!

கருத்துக்குத் தடையிட்டு வைத்திருந்த
மதத்தலைவர் கயமை மாற்றிக்
கருத்துவெளிப் பட்டால்தான் மற்றவரும்
சிந்தித்துக் காரி யத்தில்
கருத்துடனே உழைத்திடலாம்! இல்லைஎனில்
முன்னேறக் கருதிச் செல்லும்
கருத்துடையார் தடைப்படுவர் எனப்பேசிப்
புதுமைமிக்க கருத்து ரைப்பார்!

## அவர்தம் ஆற்றல்

தவறுமிகச் செய்துவிட்டார் அந்நாளில்
தமிழரெலாம்! தமிழர் நாட்டில்
சுவரிருந்தும் கூரையில்லை! வளமிருந்தும்
வாழ்வில்லை! சொன்னல் வெட்கம்!

பகருமிந்த நிலைமாற்றப் பிறந்திருக்கும்
    தாத்தாவின் பண்பைத் தொண்டை
அவராற்றல் தன்னைமுழு துரைக்கவெனில்
    எனக்கந்த ஆற்ற லில்லை!

எனினும்ஒரு வாறுரைப்பேன் தமிழகத்தில்
    அறிஞரென இலகு கின்றார்
அனைவருமே அவர்பேச்சைக் கேட்டபின்னர்
    தெளிவடைந்தோர்! ஆய்ந்து தத்தம்
தனிக்கருத்தைச் சொல்வதுதான் அறிவியக்கம்
    வளரவழி தானு மென்ற
நனிபெரியார் ஈரோட்டுத் தாத்தாவின்
    அறிவுவழி நடத்தல் நன்றாம்!

அறிஞர்அண்ணுத் துரையென்றே உருவெடுத்து
    முதுமைக ளைந்(து) ஆரி யத்தை
முறியடித்துச் சூழ்ச்சிகளைக் குழிபறித்துப்
    புதைத் தொழித்து முன்னேற் றத்தை
அறிய வைத்தார்! திராவிடத்தார் பழமைகளைந்
    தேறிவந்தே ஆட்சி செய்யும்
சிறப்படைந்தார்! வாழ்வடைந்தார்! முதலமைச்ச
    ராயுமின்றுத் திகழு கின்றார்!

தமிழென்றால் புராணமெனும் நிலைமைதனை
    இடைக்காலத் தமிழ்ப்பா வாணர்
தமிழ்க்காக்கிக் கெடுத்ததெலாம் மறைத்தகவி
    பாரதிதா சன்பு ரட்சித்
தமிழ்க்கவியைப் புதுமையெலாம் சேர்த்தின்பம்
    தரும்பாடல் தமிழில் ஆக்கித்
தமிழ்ப்பெருமை வளர்த்தவனைத் தாத்தாவின்
    அறிவியக்கம் தந்த தன்றே!

நற்பார தியின்தாசன் பரம்பரையாய்ப்
பலகவிஞர் நாட்டில் தோன்றிச்
சொற்களிலே உணர்ச்சியையும் எழுச்சியையும்
கொட்டிவைத்துச் சொந்த நாட்டின்
முற்போக்குக் கெனக்கவிதை பெருக்கியின்பத்
தமிழ்வளர்த்து முன்னேற் றத்தைக்
கற்பித்தல் எலாம்பெரியார் அறிவியக்கம்
கண்டதனாற் கண்ட தன்றே!

# நெறிசூடி

குறையின்றி வாழக் குவலயத்தில் நல்ல
நெறிசூடி நிற்றல் இனிது.

கறையின்றி வாழக் கவலையற நல்ல
நெறிசூடி நிற்றல் இனிது.

துறைதோறும் இன்பம் துலங்கிடவே நல்ல
நெறிசூடி நிற்றல் இனிது.

ஆத்தி சூடி அருளிய ஔவையைப்
போற்றி இங்கொரு புதுநூல் செய்தேன்

செந்தமிழ்ப் பாட்டி செய்த திருநூலுக்கு
இந்தநூல் எவ்வாறு இணை யாகும்என

அறியேன் ஆயினும் ஆவலே கொண்ட
குறியாய் இயற்றிக் கொடுத்து விட்டேன்

பழையன கழிந்து புதியன புகுந்து
விளைவன அனைத்தும் வேறு வேறாய்

மாறினும் சட்டமும் நாட்டு வழக்கும்
ஏறு மாறாய் இருப்பினும் நெறிமுறை

என்றும் மாறுவ தில்லை என்றே
குன்றில் ஏறி நின்றுகூ றுவனே!

அறமிது வென்றே ஔவை கூறிய
திறத்தினை மறுப்பார் தெரியா தவரே!

அன்னை அவளின் ஆத்தி சூடியைப்
பின்னும் விளக்கப் பிறந்த நூலென

இதனை அறிஞர் ஏற்றிடல் வேண்டும்
புதுமை ஈதெனப் போற்றி இளையரும்

நல்ல நெறியில் நாடொறும் பழகி
வல்லவ ராகிச் செந்தமிழ் நாட்டை

வையத் துயர்ந்த வழுவிலா நாடெனச்
செய்யத் துணிக! செழித்து வாழியவே!

கற்றவ ரோடு காது குளிரப்
பெற்றவர் தாமும் பேணி மகிழ்ந்து

நல்ல தமிழில் நாச்சி யப்பன்
சொல்லிய நன்னெறி சூடி விளங்கவே.

1. அன்புநெறி நில்
2. ஆக்கம் பெருக்கு
3. இனியவை பேசு
4. ஈயென வாழேல்
5. உயர உழை
6. ஊசல் மனங் கொளேல்
7. எண்ணிய முடி
8. ஏசிப் பேசேல்
9. ஐய வினுக் கேள்
10. ஒன்றித் தொழில் செய்
11. ஓடி நலங்கொள்
12. ஔவெனக் குறுகேல்
13. அஃறிணைக்கு இழியேல்
14. கடல் கடந்துறவுகொள்
15. ஙவ்வினம் போலிரேல்
16. சட்டம் வகுத்து நில்

17. ஞண்டுபோல் ஒளியேல்
18. அடம்பிடித் தழியேல்
19. வணங்கி ஒளிகொள்
20. தமிழ்ப்பணி தொடர்ந்து செய்
21. நகத்தைக் கடியேல்
22. பகட்டு கைவிடு
23. மரத்தை வெட்டேல்
24. அயல் மொழி பழகு
25. இரக்கம் வேண்டேல்
26. இலக்கணம் அறிந்து கொள்
27. வழுவிலாச் செயல் செய்
28. அழகு சிதையேல்
29. இளவலுக்கு அன்புசெய்
30. அறன் கடை நில்லேல்
31. இன நலம் பேணு
32. கடமை தவறேல்
33. காது குத்தேல்
34. கிள்ளி மகிழேல்
35. கீரன் உரங்கொள்
36. குறிக்கோள் கொண்டுவாழ்
37. கூற்றைப் புறங்கொள்
38. கெலித்துப் பெருமைகொள்
39. கேலிக் கிடங் கொடேல்
40. கைத் தொழில் வளர்த்திடு
41. கொலைக் கதை கூறேல்
42. கோலம் புதுக்கு
43. சண்டைக் கலையேல்
44. சாவுக் கஞ்சேல்
45. சிரித்துப் பழகு
46. சீலங் கருது
47. சுட்டுத் தணியேல்

48. சூழ்ச்சி பொடி செய்
49. செம்மை நெறி நில்
50. சேவலோ டெழுந்திரு
51. சைவ உணவு தேர்
52. சொன்ன சொல் மாற்றேல்
53. சோறு சிந்தேல்
54. தனித் தமிழ் பெருக்கு
55. தாழ்ந்து நில்லேல்
56. திருத்தம் ஒப்பு
57. தீர முடி
58. துன்பம் உதறு
59. தூண்போல் தாங்கு
60. தெளிவு கொள்
61. தேவை சுருக்கு
62. தைவளம் போற்று
63. தொண்டு மகிழ்
64. தோழமை பெருக்கு
65. நலிவு தவிர்
66. நாளும் உழை
67. நிலத்துப் பயன் கொள்
68. நீறு பூசேல்
69. நுனிப்புல் மேயேல்
70. நூறுண்டு உயிர் வாழ்
71. நெகிழ்வது உயர் மனம்
72. நேரிற் புகழேல்
73. நைந்த தகற்று
74. நொள்ளைக் கிரங்கு
75. நோவன செய்யேல்
76. பண்பில் திரியேல்
77. பாமரம் அகற்று
78. பிஞ்சு பறியேல்

79. பீடு பரப்பேல்
80. புன்னகை தேக்கு
81. பூச்சில் மயங்கேல்
82. பெண்டிற் குயர்வளி
83. பேசுவ பேசு
84. பைக் களவுக் கிடங்கொடேல்
85. பொழுது வீண் கழியேல்
86. போலி விலக்கு
87. மதிக்கப் பழகு
88. மானங் காத்திடு
89. மின் விளை யாடேல்
90. மீண்டும் பிழை செயேல்
91. முள் வழி நடவேல்
92. மூத்தோர் சொற்கேள்
93. மென்று உணவுகொள்
94. மேடை பழகு
95. மையிருட் டுலவேல்
96. மொழிநலம் பேணு
97. மோதி மகிழேல்
98. மௌவியழகு செய்
99. வலிவு பெருக்கு
100. வாழும் நெறிகொள்
101. விரைந்து செயல் முடி
102. வீணுக் குழையேல்
103. வெற்றி நாடு
104. வேலைக் கயரேல்
105. வைர நெஞ்சு கொள்.

# நல்வழிப்பா

## வணக்கம்

பெற்று வளர்த்த பெரியோர்க்கும் மற்றென்னைக்
கற்றவனாய்ச் செய்தகணக் காயர்க்கும்—முற்றும்
அறநூற்கள் ஆக்கி யருளியமுன் னோர்க்கும்
முறையே வணக்கமிட்டேன் முன்.

குறளென்னும் மாமறையைக் கொண்டிவ் வுலகில்
அறத்தை நிலை நாட்டும் அன்னை;—மறத்தமிழர்
போற்றும் தமிழ்த்தாயின் பொன்னடிக்கும் என்வணக்கம்
சாற்றிப் பணிந்தெடுத்தேன் தாள்.

## நூற்பயன்

நாச்சியப்பன் நல்வழிப்பா நாற்பத்து நான்கினையும்
வாய்ச்சேரும் செந்தமிழில் வாசிப்போர்—மூச்சினிலே
வீரங் கமழும் வினையும் கருத்தெல்லாம்
ஆரத் தழுவும் அறிவு.

பாலும் தெளிதேனும் பாகுமிவை மூன்றிற்கும்
மேலும் இனிமை மிகுதமிழில்—ஞாலத்தில்
நல்வழிப்பா நானுரைப்பேன் நற்குழந்தாய் நீயதனைச்
செல்வழியாய்க் கொண்டால் சிறப்பு.

நூல்

1

சாதிபதி னாயிரமாம் சண்டைபல கோடியிவை
வேதியரென் போரால் விளைந்தவினை—மேதினியில்
செந்தமிழர் சாதிப் பிரிவினைகள் செய்ததிலை
மைந்த இவைநமக்கு மாசு.

2

கற்றுச் சிறந்தோனைக் காசினியில் எல்லோரும்
உற்றுப் பெருமைபல ஓதிடுவார்—மற்றிங்குச்
செல்வத்தால் மிக்கோனைச் சேர்ந்தெதிர்ப்பார், [ஊர்ப்பகையைக்
கொல்லென்று சீறிக் குதித்து.

3

வருந்தி யுழைப்பாரை வாடப் புரிவோர்
பொருந்தார் புவிக்கினிமேற் போதும்—இருந்து
பயனில்லை என்று பதைத்திங் குலகோர்
துயரிழைப்பார் உள்ளம் துடித்து.

4

பிறந்தவரெல் லோரும் இறப்பரெனும் பேச்சே
உறுதி புகழென்னும் ஒன்றே—இறுதியின்றி
நிற்கும் நிலையுடைத்தாம் நீயிறக்கும் முன்னந்தப்
பொற்குன்றன் வாழ்வைப் புரி.

5

பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானெதிர்க்கும்
பெண்ணிருவர் பேசமடப் பேய்மறையும்—பெண்மூவர்
பேசில் வியப்படையும் பேருலகம், பெண்களெல்லாம்
பேசில் உயர்வளிக்கும் பின்.

## 6

தன்னுறுதி யில்லானைத் தான்வெறுக்கு மிவ்வுலகம்
தன்னுறுதி யில்லா தவன்வாழ—இந்நாளில்
எச்சிறு செய்கையும் இல்லையே இல்லைகண்டீர்
பிச்சைத் தொழிலிற் பிற.

## 7

பிச்சைத் தொழிலே பெருமை யுடைத்தென்பேன்
இச்சைக் குரியதோர் இன்னுலகம்—உச்சிக்கு
மேலுண்டென் றோதி மிலேச்ச உளத்தால்தம்
தோல் வளர்க்கும் தீய தொழிற்கு.

## 8

பசித்தார்க்குச் சோறிட்டுப் பார்க்கத்தம் உள்ளத்
திசைவுடையார் எஞ்ஞான்றும் வாழ்க—புசிக்கத்
திறனுண்டு போடென்பார்க் கீதல் உறிஞ்சும்
வெறுமண்ணுக் கேநீர்வார்த் தற்று.

## 9

ஊரின் மடமை ஒருவன் மடங்கட்ட
வாரிப் பொருள்கொடுக்க வாழ்வதினும்—வாரிதியில்
ஓடிப் போய் வீழ்ந்தங் குயிரை விடுதலையே
நாடி மகிழ்தல் நலம்.

## 10

அடிப்பான் ஒருவனுக் கஞ்சிப் பயந்து
துடிப்பானின் வாழ்வெல்லாம் துன்பம்—பிடியும்
செரியாது வாழ்ந்தென்ன செத்தென்ன மற்றோர்
வரிப்புலிக் கவ்வுணவை வை.

## 11

போரிட் டுலகை வசப்படுத்தில் போய்விடுமாம்
நேருற்ற உள்ளத்தால் நீசொல்லும்—ஓரினிய
சொல்லால் உலகும் வசமாம்.இவ் வையம்சொல்
வல்லான் வகுத்த வழி.

## 12

வல்லியரும் ஆடவரும் வாழ்வ துலகமதில்
மெல்லியரைத் தாமடக்கி மேவிடவே—வல்லியல்பின்
ஆண்கள் நினைப்பரேல் ஆகாதாம். தாயுறுதி
மாண்பன்றோ வீர மகன்.

## 13

ஆட்டமும் பாட்டும்வாழ் வின்பம் அளிக்கின்ற
தோட்டங்கள் உள்ளந் தொடுகின்ற—பாட்டுக்
குலகனைத்தும் ஈந்தாலும் ஒப்பும். மகிழ்வு
நிலைத்தாடற் கேது நிகர்.

## 14

புன்மலந்தின் கோழியோ பொற்கோழி மற்றிங்குக்
கன்மனங் கொண்ட கயவரோ—நன்னர்
உருவறிவில் நம்மைப்போல் உள்ள எளியர்
திருவிலரோ தொட்டாலோ தீட்டு.

## 15

தன்போல் மனிதனிடம் தான்கருணை காட்டுவதோ
அன்னவனின் நல்வாழ்விற் காவதாம்—நன்மையோ
செய்யார் புலாலுணவு சேர்க்கா திருப்பாரேல்
ஐயோ கருணையா லன்று.

## 16

தூண்க ளிரண்டும் உயரம்வெவ் வேருயின்
ஆண்டுத் தரத்தின் நிலையென்னும்—ஆண்களுடன்
பெண்க ளிணையாகப் பேசப் படவில்லையேல்
மண்ணில் வாழ் வென்னும் மதி.

## 17

பெண்ணொருத்தி செத்தால் பிறிதொருத்தி தன்னையே
கண்டு மணக்கின்முன் காதலன்அப்—பெண்ணே
கொழுந னிறந்தபின் குந்திமூலைக்கண்
அழுவென்றால் நன்றோ அது.

## 18

பொய்சொன்னூர் நாக்குப் புழுத்தறியோம் ஆனாலும்
மெய்சொன்னூர் வையத்தில் மேன்மையினை—எய்துதலைப்
பார்க்கின்றோம் ஆதலினால் பார்மீதி லுண்மையினை
வேர்க்கொள்ள வைப்போம் விழைந்து.

## 19

உண்ணல் குறைத்தென் உழைப்பைக் குறைத்தாலும்
எண்ணல் குறைக்க இயல்வதில்லை—மண்ணகத்தே
எண்ணி வெளியிடுங்கால் ஏதுந் தடுப்பானைச்
சுண்ணத்திற் போட்டுச் சுடு.

## 20

தன்மொழியிற் பற்றில்லா தானை யுலகெல்லாம்
புன்மொழியால் தூற்றும் புவிமீதில்—அன்னோன்
பெரும்பார மாவான் பிறருந்தாம் நம்பற்
கருகதை யற்றவனுங் காண்,

## 21

தாய் மொழியைப் போற்ருதான் தன்மானம் போற்ருதான்
தாய் நாட்டைப் போற்ருதான் இம்மூவர்—ஆயுங்கால்
வையப் பெரும்பகையாம் வந்தெதிர் நிற்பாரேல்
நையப் புடைத்தலும் நன்று.

## 22

பழமையா லொன்றும் பயனில்லை யென்று
முழக்கிவருஞ் சிங்கத்தை மூடச்—சழக்கரே
நாத்திகனென் ருேதி நலங்கெடுப்பர் அன்னுரின்
வாய்த்தினவைப் போயடக்க வா

## 23

குளக்கரையில் ஆற்றில் குளிக்கச் செலுங்கால்
அளக்கின்ற வம்பை மதிப்பார்—உளரோ
குடும்பக் கலகத்தைக் கூட்டிவிடும் அல்லால்
விடுதலைப்பேச் சாமோ விளம்பு.

## 24

தாழ்ந்தோன் இவனென்றும் தக்கான் இலையென்றும்
ஆழ்ந்துநூல் கற்க அறைகின்ற—பாழான
ஏடெல்லாம் செந்தீயில் இட்டுக் கரியாக்க
வாடா குதித்தோடி வா.

## 25

பொங்கலிட்டுத் தெய்வத்தைப் போற்றின் ஒருவர்க்குப்
பொங்குவளம் சேருமென்ற புன்னினைவும்—தங்கையால்
சேர்முயற்சி யில்லாமல் தெய்வங்காப் பாற்றுமெனும்
ஓர்நினைவும் மூடர்க் குள.

## 26

தன்னுறுதி யில்லாதான் தான்தெய்வம் போற்றிடுவான்
தன்னுறுதி யில்லாதான் தான்பிறரின்—இன்துணையே
நாடிப் பொறுத்திருப்பான் நாள்தோறும் வாழ்க்கையிலே
வாடிப் புழுங்கி மனம்.

## 27

பேச்சு வழக்கற்றுப் பெருமொழிதான் மாய்ந்துவிடின்
வாய்ச்சரக்குக் கட்டிப் பயனில்லை—ஒய்ச்சலின்றிக்
கற்றதனை வாழ்நாள் கழிப்பதினும் சொல்வழக்கின்
நற்பேச்சொன் றாய்தல் நலம்.

## 28

நெய்வார்த்துப் பால்வார்த்து நீராட்டிக் கல்லுக்குப்
பொய்வணக்கம் செய்கின்ற பொல்லாத—வையகமே
ஏழைதுயர் பாரா திருக்கும் வரையறிஞர்
பாழென் றுரைப்பர் பழி.

## 29

நினைத்த முடிக்குமொரு நெஞ்சுடையான் நேர்மை
அனைத்துலகும் ஆட்கொள்ளும்.-ஆண்மை—எனும்வீறும்
அன்றனின் உள்ளத் தடங்கியதே யன்றிவே
றென்னுற்ற லார்க்கு மிலை.

## 30

அஞ்சாத உள்ளத்தில் வீரம் அணைந்தாற் பின்
கொஞ்சாதோ ஆற்றல் குவலயத்தில்—எஞ்ஞான்றும்
ஆற்றலோ டச்சம் அணைந்திரண்டுஞ் சேர்ந்தவுளம்
மாற்றரிய நஞ்சாய் விடும்.

## 31

வையத்தில் பிச்சையென வந்தொருவன் நில்லாமல்
செய்யும்நாள் வையத் திருநாள்.ஓர்—தையல்தன்
மைந்தன் பசித்தால் மனம்பதைப்பாள் எண்ணாத
சிந்தையதோ மாக்கடவுள் செப்பு.

## 32

நெற்பயிரைப் போல நிறமுருவம் கொண்டாலும்
புற்கொண்டு மிக்கபசி போக்கிடவே—நற்குழந்தாய்
யாரால் இயலும் அறிஞர்களைப் போலவரு
வாரால் பயனென் வரும்.

## 33

ஊக்கமிலா நெஞ்சுபாழ் ஊட்டமிலா உண்டிபாழ்
ஆக்கமிலாப் பேச்சில் அறிவுபாழ்—யாக்கும்
அணியிலாப் பாட்டில் அழகுபாழ் பாழே
துணிவிலா தான்வாய்த் துடிப்பு.

## 34

கற்றுத்தேர்ந் தோன்புகழ் கண்டக்கால் நெஞ்சுயர்த்தி
உற்ற பெருமிதம் ஒன்றிற்கே—கற்குன்றும்
சின்னக் கடுகாம்! சிறப்பா யவன் வழியைப்
பின்தொடரும் இப்பே ருலகு.

## 35

ஊருக்குத் தானென் றுரைப்பின் அவ்வுரையைப்
பேருக்கும் தன் வாழ்விற் பேணாதான்—யாருக்கும்
நல்ல துணையல்லன் நாயிற் கடையனும்
சொல்லின் மதிப்பையழித் தோன்.

## 36

அறிவுரைகள் எத்தனையே ஆனாலும் கேட்கும்
திறனுடையார் யாரென்று தேர்ந்தே—யறிந்துரைக்க.
புல்லறிவா ளர்க்குப் புகட்டுண்மை யத்தனையும்
கல்லுக்குச் சொன்ன கதை.

## 37

சுட்டிமண் தண் ணீரில் கரைந்துவிடும் ஆகையினால்
சுட்டமண் ணைக்கொண்டு சுவரெடுப்போம்—பட்டினியால்
வந்தோர்க் கிரங்குமுளம் ஒன்றுமற்றொன் றேகரையா
தெந்தவழிச் சென்றாலு மே.

## 38

மிக்க உணர்ச்சியால் மின்போற் குதிக்குமிள
மக்கள் சிலர்தம் மனமுடைவார்—எக்காலும்
பேரோசை காணுமெல் யாழின் நரம்பெல்லாம்
நாரா யறுந்து விடும்.

## 39

சேற்றில் வழுக்கினோர் சேர்ந்த துணியகற்றி
வேற்றுப் புதியவணி மேவலாம்—ஆற்றும்
ஒழுக்கம் வழுக்கினோர்க் கொன்றுண் டெங் கேனும்
விழுந்துயிரை விட்டு விடல்.

## 40

ஒப்பப் பிறந்தாலும் ஒன்றுபோல் செத்தாலும்
இப்படியோர் வாழ்வதிலும் இன்பதுன்பம்—ஒப்பாமோ
தத்தம் அறிவுங் குணமும் தழைத்தபடி
ஒத்திருக்கும் என்றே உணர்.

## 41

நீரோடு போன மகனுயிரும்; காற்றடித்து
வேரொடு சாய்ந்த இளங்கன்றும்—யாரோடும்
சென்றுள் ஒழுக்கச் சிறப்புமிவை யோரொருகால்
குன்று திருத்தலு முண்டு.

## 42

கோயில் குளந்தெய்வம் கும்பிட்டுத் தாமணந்த
நாயகரைப் போற்றுத நங்கையரை—வாயகன்றே
தீத்தெளிக்கும் மாமலேயே சீறுபுய லேகடலே
பார்த்திருப்ப தோஇப் படி.

## 43

கல்லேத் தகர்க்க வெடிமருந்து, நச்சரவின்
பல்லேப் பிடுங்கக் குறடொன்று—தொல்லே
மதங்கொண்டார் நெஞ்சத்து மாசை யழிக்கும்
விதமொன் றறிவான வேல்.

## 44

தேங்கா யுடைத்தும் திருவா சகம்படித்தும்
பாங்காய் மணியடித்தும் பார்த்துவிட்டோம்-போங்காலம்
வந்துற்ற போது வழிமறித்துக் காப்பதற்கிங்
கெந்தச் செயலு மிலே.

# பிள்ளைத் தமிழ்

## 1. இன்பம் தரப் பிறந்த எழிலோவியமே

இன்பம் உலகம் என்மனத்தில்
எண்ணும் பேற்றைத் தரப்பிறந்த
அன்பே கட்டிக் கரும்பேநல்
அமுதே என்றன் ஆருயிரே
அன்னை என்னும் நிலையெய்தி
அகம்பூ ரித்து மகிழ்கின்ற
என்ம டிக்குச் சிறப்பளிக்கும்
எழிலோ வியமே வாழியவே.

கோடித் தவங்கள் செய்தவரும்
கும்பிட் டன்பாய்ப் பலகடவுள்
நாடிக் குறையைச் சொன்னவரும்
நல்ல பிள்ளைப் பேறெய்தி
ஆடிக் களியா உலகத்தில்
அம்மா என்று குரலெழுப்பி
நீடிய இன்பம் தரப்பிறந்த
நித்தில மேநீ வாழியவே!

வயிறு பசித்தால் அழுதிடுவாய்
வந்தின் னமுதம் குடித்திடுவாய்
உயர்ந்த பட்டுத் தொட்டிலிலே
உறங்கி விழித்துச் சிரித்திடுவாய்
அயர்ந்த மனத்தில் தெம்பேற்றி
அன்பு விளங்க வைத்திடுவாய்
உயிரோ வியமே என்னகத்தின்
ஒளிவி ளக்கே வாழியவே!

## 2. ஆடாய் ஆடாய் செங்கீரை

நெஞ்சை யள்ளும் சிரிப்புடனே
நீளத் தவழ்ந்து வந்திங்கே
பிஞ்சுக் கையும் முழங்காலும்
பெரிதும் தேய நின்றபடி
அஞ்சொல் மழலைத் திருவாயால்
அப்பா அம்மா எனக்குழறிக்
கொஞ்சி யாடாய் செங்கீரை
குலுங்கி யாடாய் செங்கீரை!

சின்னஞ் சிறிய செவ்வாயில்
சிரிப்பு முத்துத் தோன்றிடவே
கன்னக் குழியின் இருமுத்தும்
கவலை போக்கத் தோன்றிடவே
பொன்னின் உடலில் வியர்வையெனப்
புதிதாய்ப் பலமுத் தரும்பிடவே
அன்பே யாடாய் செங்கீரை
அமுதே ஆடாய் செங்கீரை.

இருகை தட்டி வருகவென
இனிதுன் அப்பா அழைத்திடவும்
இருந்த அன்னை மடிவிட்டே
இறங்கித் தவழ்ந்து விரைந்தாய்நீ
திருவாய்க் கடையில் பாலொழுகச்
சிரிக்கும் அழகே பசும்பொன்னே
அருமைத் தமிழே செங்கீரை
ஆடாய் ஆடாய் செங்கீரை.

## 3. தாலோ தாலேலோ

எண்ணி யெண்ணித் தவமிருந்தே
இன்பக் கனவு பலகண்டே
வண்ணச் சிலையாய்ப் பெற்றெடுத்த
வைர மணியே தாலேலோ
உண்ணும் சோறும் உனக்காக
உயிரும் வாழ்வும் உனக்காக
கண்ணின் மணியே தாலேலோ
கட்டிக் கரும்பே தாலேலோ.

'அம்மா அம்மா' என்றேநல்
அமுதக் குரலில் அழைத்துளத்தில்
சும்மா சும்மா தேன்பாய்ச்சும்
சுடர்வி ளக்கே தாலேலோ.
இம்மா நிலத்தில் உனைக்காணும்
இன்பம் ஒன்றே பேரின்பம்
என்மா தவமே தாலேலோ
இன்ப மணியே தாலேலோ.

கண்டு சிரிக்கும் கற்கண்டே
கனிவாய் மழலைச் சொற்கண்டே
வண்டு விழியே பூச்செண்டே
வண்ணத் தமிழே தாலேலோ
எண்ணம் இனிக்கப் பிறந்தாய்நீ
ஏற்றம் சேர்க்கப் பிறந்தாய்நீ
கண்ணே தாலோ தாலேலோ
கனியே தாலோ தாலேலோ.

## 4. சிரித்துக் கொட்டு சப்பாணி

செந்தா மரைபோல் முகமலரச்
சிரிக்கும் அழகே ஓவியமே
நந்தா விளக்கே வாழ்வினிலே
நாளும் ஒளிரும் திருச்சுடரே
செந்தா மரைப்பூக் கையிரண்டும்
சேர்த்துக் கொட்டு சப்பாணி
திருவாய் மலர்ந்து பூரித்துச்
சிரித்துக் கொட்டு சப்பாணி.

நெஞ்சில் இன்ப ஒளிசேர்க்கும்
நித்தில மேஎன் செந்தேனே
கொஞ்சிப் பேசப் பிறந்திருக்கும்
கோலப் பச்சைப் பசுங்கிளியே
பஞ்சு போன்ற கையிரண்டும்
பழக்கக் கொட்டு சப்பாணி
பனிவாய் மலர்ந்து சிரிப்பள்ளிப்
பாய்ச்சிக் கொட்டு சப்பாணி.

வெல்லப் பாகே புன்சிரிப்பை
விரித்து நெஞ்சைக் கொள்ளைகொளும்
செல்லக் கிளியே பசும்பொன்னே
சித்திரப் பூவே திருவிளக்கே
செல்லப் பிஞ்சுக் கையிரண்டும்
சேர்த்துக் கொட்டு சப்பாணி
திருவாய் மலர்ந்து பூரித்துச்
சிரித்துக் கொட்டு சப்பாணி

## 5. முத்தந்தா நீ முத்தந்தா

சொல்லச் சொல்லப் பயின்றுகொளும்
  சோலைக் கிளியே என்னுயிரே
வெல்ல மழலை மொழிபேசி
  விரியும் திருவாய் முத்தந்தா
செல்லத் தமிழே கனியுதடு
  சிவக்கச் சிவக்க முத்தந்தா
செந்தேன் மலரே கனியுதடு
  சிவக்கச் சிவக்க முத்தந்தா.

தவழ்ந்து தவழ்ந்து வந்துளத்தில்
  தழையும் அன்புத் தளிர்க்கொடியே
அவிழ்ந்து அவிழ்ந்தே இதழ்விரியும்
  அழகு மலரே முத்தந்தா.
பவழச் செவ்வாய்க் கனியுதடு
  பதித்தோர் இன்ப முத்தந்தா.
பால்வழி யும்வாய்க் கனியுதடு
  பதித்தோர் இன்ப முத்தந்தா.

எல்லை யில்லாப் பேரின்ப
  எழிலோ வியமே காவியமே
தொல்லை மறந்து வாழ்வினிலே
  சுகத்தைக் காணச் செயப்பிறந்த
முல்லைப் பூவே செங்கனிவாய்
  முத்தந் தாநீ முத்தந்தா
முருகு விரியும் செங்கனிவாய்
  முத்தந் தாநீ முத்தந்தா.

## 6. பொன்னே வைரப் பூவே வா

கட்டிக் கரும்பே இங்கேவா
    கனியே தேனே இங்கேவா
தட்டித் தடவித் தடுமாறித்
    தளர்ந்து விழுந்து விட்டாலும
முட்டி மோதிக் கொண்டாலும்
    முயன்று மேலும் நடையிலும்
சிட்டுக் குருவி இங்கேவா
    சின்னப் பூவே இங்கேவா.

ஆடி ஆடித் தள்ளாடி
    அடிவைத் தடிவைத் தென்மடியை
நாடி நாடி முன்னேறி
    நடக்கும் மாடப் புறுவேவா
கூடிக் கூடி இருக்கவே
    கொஞ்சிக் கொஞ்சிப் பேசவே
பாடிப் பாடி இங்கேவா
    பச்சைக் கிளியே இங்கேவா.

தங்கக் கிண்ணச் சோறுநான்
    தருவேன் கண்ணே இங்கேவா
பொங்கிச் சிறுசோ றுக்கவே
    புதிய சிட்டி தருவேன்வா.
அங்கும் இங்கும் செல்லாதே
    அன்பே அழகே இங்கேவா.
பொங்கும் அன்பில் திளைக்கவே
    பொன்னே வைரப் பூவேவா.

## 7. வான நிலவே வாராயே

யாரும் இல்லா வானத்தே
அலையும் நிலவே ஓடிவா
ஊரும் உன்னைத் துணையாக
ஒன்று சேர்த்து விளையாடச்
சீரும் சிறப்பு மாய்வளர்ந்த
செல்லக் கண்ணும் அழைத்ததே
வாராய் வாராய் கீழிறங்கி
வான நிலவே வாராயே.

அஞ்சி யஞ்சிப் பகலெல்லாம்
யாங்கோ நீபோய் ஒளிகின்றாய்
அஞ்ச வேண்டாம் என்செல்வம்
அருகில் நீவந் திருந்தாலே
கொஞ்சிக் கொஞ்சி விளையாடிக்
கொள்ளை யின்பம் பெற்றிடலாம்
மஞ்சு வானம் விட்டிறங்கி
வாராய் நிலவே வாராயே!

தேய்ந்து தேய்ந்து மறைகின்ற
சிறிய நிலவே வாராய்நீ
பாய்ந்து வந்தென் கண்மணியின்
பக்கம் நீயும் இருந்தாலே
தேய்ந்து மறையா திருப்பாயே
தினமும் வளர்ந்து சிறப்பாயே
பாய்ந்து வாராய் கீழிறங்கி
வாராய் நிலவே வாராயே!

## 8. ஆடாய் அம்மானை

முத்து முத்தாய்க் காய்பொறுக்கி
முற்றஞ் சேர்ந்து பெண்களெலாம்
ஒத்தம் மனையே ஆடுகின்றார்
உயிரோ வியமே நீயும்போ
எற்றுங் காயின் விசையோடே
இசையும் ஒத்து வருமாறே
நற்றென் பாங்கு பாடிநீ
நல்லாய் ஆடாய் அம்மானை.

கையின் சுழற்சி வேகத்தில்
காய்கள் பறந்து பறந்தோட
உய்யென் றெழுந்த காற்றினிலே
சுழலும் பூவின் வண்டேபோல்
மெய்யாய் அந்தக் காய்களின்பின்
விழிகள் தொடர்ந்து தொடர்ந்தோட
மையல் மகளே இசைபாடி
மகிழ்ந்தே ஆடாய் அம்மானை.

ஊறும் தேனின் திருவாயால்
உருக்கும் தமிழில் இசைபாடி
கூறு போட்ட காய்களையே
குதித்தெ ழும்பச் செய்வாயே.
ஏறும் காய்கள் தரைவந்தே
இறங்கா வண்ணம் பிடித்தேற்றித்
தேறும் வெற்றி கண்டேஎன்
செல்வி ஆடாய் அம்மானை.

## 9. அழகோவியமே நீராடு

கோட்டுப் பூக்கள் மிதந்துவரக்
குதித்துப் பாயும் அலையோடே
ஓட்டம் போடும் ஆற்றினிலே
ஒருக ரையில் போயிறங்கிக்
கூட்டுப் பெண்கள் சூழ்ந்திருக்கக்
குடைந்து குடைந்து புதுப்புனலில்
ஆட்டம் போட்டு விளையாடி
அழகோ வியமே நீராடு.

மேலை மலையில் ஊற்றெடுத்து
மெல்லச் சோலை பலபுகுந்து
கோல வயல்கள் வழிபெருகிக்
குணவாய்க் கடலிற் போய்க்கலக்கும்
சேலும் கயலும் பாய்ந்தோடிச்
சேற்றைக் குழப்பும் ஆற்றினிலே
மேலும் குடைந்து குடைந்தாடு
மெல்லிய லன்பே நீராடு.

அன்புத் தோழி முகத்தின்மேல்
அள்ளி நீரைத் தெளித்தவளும்
தன்பங் குக்குத் தெளித்திடுமுன்
தலையை நீரின் உள்ளிழுத்துப்
பின்பு வெளிப்பட் டெதிர்நின்று
பெரிதும் குறும்பாய்ச் சிரித்தபடி
அன்பு மகளே நீராடு
அழகின் செல்வி நீராடு.

## 10. ஊசல் ஆட வாராயே

செடியும் கொடியும் பூவெல்லாம்
  தென்றல் காற்றில் மகிழ்ந்தாடும்
அடியின் றேனை வண்டெல்லாம்
  அருந்தி அருந்திப் பறந்தாடும்
இடியும் முகிலும் கண்டுமயில்
  இன்பத் தோகை விரித்தாடும்
ஓடியும் இடையாய் சோலையிலே
  ஊச லாட வாராயே.

கோலப் புறுக்கள் வட்டமிடும்
  குயில்கள் பாடிக் குதுகலிக்கும்
சோலைக் கிளிகள் பழமுழுதும்
  சுவைத்துப் பருப்பைத் தின்றிருக்கும்
சேலின் விழியே கருங்குழலும்
  தென்றல் காற்றில் அசைந்தாட
காலைத் தரையில் உதைத்தூசல்
  கண்ணே ஆட வாராயே.

தோயும் இன்பம் வாழ்வினிலே
  தோன்றித் தோன்றி மாறுதல்போல்
பாயும், ஊசல் முன்பின்னாய்ப்
  பறந்து சென்று மீண்டிடவே
சாயும் கதிரோன் உடலெங்கும்
  தங்க வண்ணம் பூசிடவே
வாயும் இன்பப் பண்பாட
  வாராய் ஆட வாராயே!

## 11. சிதைக்க வேண்டாம் என்செல்வா

தெருவின் மணலைக் குவித்தொருபால்
சின்னச் சின்ன வீடுகளை
உருவாக் கித்தாம் விளையாடி
உள்ளங் களிப்பார் சிறுமியரே.
அருமைக் கண்ணே மணல்வீட்டை
அழகு சிட்டுக் காலாலே
உருக்கு லைக்கச் செல்லாதே
உதைத்துச் சிதைக்கச் செல்லாதே.

குவித்த மணலால் சுவரெழுப்பிக்
குழிகள் தோண்டி அறைபலவும்
வகுத்து மணலைக் குறைத்தொருபால்
வாசல் வைத்து மகிழ்ந்திடுவார்
சிரித்துக் கொண்டே மணல்வீட்டைச்
சிதைத்து விட்டால் அப்பெண்கள்
வருத்தங் கொள்வார் என்செல்வா
வாராய் அங்கே செல்லாதே.

கட்டிக் கட்டி உருவாக்கக்
காலம் அதிகம் வேண்டுமடா
எட்டி உதைக்க ஒருநொடியே
இருந்தால் போதும் போதுமடா.
சுட்டித் தனத்தை விட்டென்றன்
சொல்லைக் கேளாய் என்செல்வா
சிட்டுக் காலால் மணல்வீட்டைச்
சிதைக்க வேண்டாம் என்செல்வா.

## 12. சிரித்துச் சிரித்துப் பறைகொட்டே

இன்ப வாழ்வே எனக்களிக்க
எழுந்த அன்பே செஞ்சுடரே
அன்பு மகனே உன்கையில்
அகப்பட் டிருக்கும் தட்டினிலே
உன்சிறு கையால் அடித்தடித்தே
ஓசை யெழுப்பிப் பறைகொட்டே
அன்பு விளங்க இன்பமுற
அடித்த டித்துப் பறைகொட்டே.

உன்றன் முகத்தைப் பார்த்தாலே
உள்ளக் கவலை பறந்தோடும்
உன்றன் குறும்புச் செயல்கண்டால்
உள்ளம் துள்ளி யெழுந்தாடும்
அன்பு மணியே வாழ்வினிலே
ஆசை வேண்டும் எனச்சொல்லி
சின்னக் கையால் பறைகொட்டே
சிரித்துச் சிரித்துப் பறைகொட்டே.

கூடி யுள்ள சிறுவரெல்லாம்
குதூக லித்துத் தமிழ்ப்பாட்டுப்
பாடித் தொடரப் பறைகொட்டிப்
படைந டத்தும் தளபதியே!
தேடிப் பெற்ற தெள்ளமுதே
சின்னஞ் சிறுகைப் பறைகொட்டே
ஆடிச் செல்லும் கண்மணியே
அடித்த டித்துப் பறைகொட்டே.

## 13. விரைந்து தள்ளு நடைவண்டி

வளர்ந்து வருமென் கற்பகமே
வண்ணச் சுடரே ஓவியமே
தளர்ந்த நடையும் சீராகத்
தள்ளு வண்டி நடைவண்டி
விளைந்த அன்பால் உன் தந்தை
விலைக்கு வாங்கிக் கொடுவந்தார்.
அழுந்தத் தள்ளி நடைபயில்வாய்
அன்பே நன்கு நடைபயில்வாய்.

தவழ்ந்து வந்து மடியேறித்
தழைத்த இன்பப் பொன்மலரே
தளர்ந்த நடைநீ பயிலுங்கால்
தடுமா றிப்போய் வீழ்வதனைக்
கொழுந்தே என்றன் குலவிளக்கே
கொஞ்சங் கூடத் தாளேன்நான்
எழுந்து தள்ளு நடைவண்டி
இனிது தள்ளு நடைவண்டி.

ஆளை மயக்கும் சிரிப்புடையாய்
அள்ளிக் கொள்ளத் துடிக்கின்ற
பேழைச் செல்வம் போன்றவனே
பேரின் பத்தை வளர்ப்பவனே
காலை நடைநீ பயின்றிடவே
கையால் தள்ளு நடைவண்டி
வீழா திறுகப் பிடித்தபடி
விரைந்து தள்ளு நடைவண்டி.

# மங்கல மங்கை

பகலவன் கீழ்த்திசை பளிச்செனத் தோன்றினன்
நகைமுகம் விரித்தனள் நங்கை மலர்க்கொடி.
குளிர்பனித் துளியெலாம் ஒளிபெறத் தரைமகள்
ஒளிர்பசும் புன்னுனி உவகையோ டசைத்தனள்.
ஆழ்ந்தமுன் னிரவினும் அதற்குமுன் நாளினும்
வாழ்ந்தது போல்நலம் வாய்கவென் றிசைபல
சாற்றிப் பறந்தன பறவைகள்; பகலவற்
போற்றி யெழுந்தன புவியுயிர் அனைத்துமே.
காவெனப் பாடிய காகமும் அமுதுண
வாவென அழைத்தநற் பசுவினை நோக்கியே
தாவிய கன்றொடு, தழைமரத் திடைவெளி
கூவிய குயிலும், கூரை முகட்டினில்
கொக்கரக் கோவென ஒக்க முழங்கிய
செக்கச் சிவந்த திருமுடிச் சேவலும்
புத்துணர் வளித்திடப் புதுமைக ளியற்றுட
வித்தக மக்களும் விழித்தெழுந் தனரே!

கண்ணனூர் என்னும் கணக்காய ருக்கும்
வண்ண மயில்நிகர் அமுத வல்லிக்கும்
பெண்ணாய்ப் பிறந்து பெற்றவர் அன்புக்
கண்ணாய் வளர்ந்த கவின்மிகு மங்கை

மலர்க்கொடி! கண்டவர் மனங்குடி கொண்டு
கலக்குறும் சுடர்க்கொடி! கவிஞர் நெஞ்சில்

பல்விதக் கற்பனை பாய்ச்சும் கலைமகள்!
வில்அவள் புருவம்! விரிகடல் அவள்விழி!
சொல்லெழுங் குரலோ சுண்டிய திருயாழ்!
பருவங் கொண்ட பச்சைப் பசுங்கொடி
உருவோ பொன்மகள் உருவம்! பார்த்தவர்
பார்த்த அளவால் பாசக் கயிற்றால்
ஈர்த்த பாவைபோல் இயக்கம் ஒருவழி
நிகழச் செய்யும் நேரிழை! இன்பம்
திகழச் செய்யும் செம்மை நலத்தாள்!
அழகுப் பெட்டகம்! அறிவுப் புத்தகம்!
பழகும் அன்புப் படிப்பகம்! இன்பத்
தமிழின் கல்விக் கூடம்! இசைமணம்
கமழும் பயிற்சிக் கழகம்! நடன
சாலை! முத்தமிழ்ச் சோலை! வண்ணச்
சீலை ஓவியம்! சிற்ப காவியம்!
அத்தனை அழகும் அமைந்த பொற்சிலை!
முத்து நகைபொழி முல்லை மலர்க்கொடி!

சொல்லிய இத்தனை சுவைப்பெட் டகத்தாள்
கல்லூரி யிற்பயில் கன்னிப் பெண்ணும்!
நன்னூல் தொல்காப் பியமென நவிலும்
தொன்னூல் பயின்ற சுடரொளி! பத்துப்
பாட்டும் எட்டுத் தொகையும் மயக்கம்
ஓட்டும் வகையில் ஓதிச் சிறந்தவள்

வாழ்க்கை நெறியை வகுக்கும் பதினெண்
கீழ்க்கணக் கியாவும் தெளிந்து தேர்ந்தாள்!
புவிநூல் அரசியல் பொருணூல் கணிதம்
கவிநூல் புதுவிஞ் ஞானக் கோவை
யாவும் பயின்ற அறிவுக் கோயில்!
வாவும் எழுபரித் தேரில் வருவோன்

உலகில் ஆட்சி துவங்கு முன்னே
கலகல வென்று மலர்க்கொடி எழுந்தாள்.
தன்னிளந் தங்கையும் தம்பியர் இருவரும்
இன்னும் எழவில்லை என்பது கண்டு
தட்டி எழுப்பினள்; குட்டிக் கன்றுபோல்
சட்டென் றெழுந்து தாவிப் பாய்ந்து
கொல்லைப் புறத்துக் கதவினைத் திறந்து
சில்லென்ற நீரினல் திருமுகம் கழுவி
ஓடிவந்து திண்ணையில் அமர்ந்து
பாடினர் காலை வணக்கப் பாட்டே!
புத்தகம் விரித்தனர் புதுக்குரல் எழுப்பினர்
முத்தமிழ் கமழ்ந்தது முன்வீ டெங்கணும்.

அதற்குள் மலர்க்கொடி வீட்டு முகப்புப்
பெருக்கி வாயிலில் நீர்தெளித் தழகுக்
கோல மிட்டாள்; குனிந்து நிமிர்ந்தாள்
காலை மலரினும் கனிந்த முகத்துடன்
அன்னை அமுத வல்லி அங்கே
தென்னங் கீற்றுப்போல் தன்மகள் இட்ட
கோலத் தழகில் குவிந்த கண்ணெடு
நீலக் கரைச்சிலை போல நின்ருள்.

அன்னைக் கொருபுன் சிரிப்பு வழங்கி
மின்னற் கொடிபோல் பாய்ந்து சென்று
கொல்லைக் கிணற்றில் குடத்தை இறக்கி
நல்ல தண்ணீர் இறைக்கத் தொடங்கினள்.
வறியர் வயிறுபோல் காட்சி யளித்த
சிறிய குடங்களும் கட்டுத் தொட்டியும்
நிறைய நிறையத் தண்ணீர் வார்த்துக்
குறையா மனத்துடன் குதித்துச் சென்ருள்.
பற்றுத் தேய்த்த அன்னையின் பக்கலை

உற்ருள்; கறையழுக் கோடத் தூயநீர்
இட்டுக் கழுவினுள்; எடுத்து வைத்தாள்;
சட்டென வேலை முடிந்துபோ யிற்றே!
கட்டித் தங்கம்என் கண்ணின் மணிஇவள்
தொட்ட வேலை சுறுசுறுப் பாகவே
முடியு மென்றுபுன் முறுவல் பூத்துக்
குடும்பத் தலைவி கொண்டனள் மகிழ்வே!

அமுத வல்லி அடுக்களை செல்லக்
குமுத வாய்மலர்க் கொடியாள் திண்ணைக்
கோடி யமர்ந்தாள் உடன்பிறந் தாருடன்
பாடம் படித்தாள் பச்சைப் பசுங்கிளி!
அக்கா அக்கா இக்கணக்கு மிகச்
சிக்கல் என்றிடும் சின்னத் தம்பிக்கு
வழியொடு போட்டுக் காட்டி வரும்விடை
சரிபார்க் கின்ற முறையுங் காட்டினுள்.
அரும்பொருள் கேட்ட அருமைத் தங்கைக்கு
விரிபொருள் கூறி விளக்கம் செய்தாள்.

திருமலர் வாயிதழ் தெள்ளறி வூட்டும்
விரிநூல் பருகி ஒருமணி நேரம்
பறக்கச் செய்தது! பாவையும் எழுந்து
பறந்தாள் குளிக்கும் அறையை நோக்கி!
பச்சிளஞ் சிட்டுகள் பறப்பது போன்று
இச்சைக் குரிய இளையரும் எழுந்து
தொட்டி நீரைச் சூழ்ந்தது மொண்டு
கொட்டிக் கொட்டித் தலைகுளித் தனரே!
"என் முது கிங்கே எட்ட வில்லை
சின்னக் கைபார் அக்கா அக்கா
தேய்த்து விடுவாய் செல்ல அக்கா" என்(று)
ஏய்த்துப் பேசும் இளையார் மகிழ

முதுகு தேய்ப்பாள் முன்னவர் குளித்தபின்
புதுமணம் கமழும் நுரையல் தேய்த்து
மேனி குளித்து முகத்து மஞ்சள்
பூசிக் கழுவிப் புத்துடை மாற்றிக்
கூந்தல் அழகு கொள்ளச் சீவிச்
சாந்துப் பொட்டு வைத்துக் கொண்டாள்.
கெஞ்சு முகத்தொடு வந்ததங் கைக்குக்
கொஞ்சிப் பேசிக் கூந்தல் பின்னித்
தொங்க விட்டுப் பூவைத் தொடுத்துத்
தங்கச் சிலைபோல் காட்சி தந்திடும்
தங்கை யழகில் தனைமறந் தாளே!

அடுக்களை அழைப்பினை அமுத வல்லியாள்
விடுத்தனள் அனைவரும் விரைந்துசென் றூரே!
தத்தம் வட்டிலைக் கழுவிக் கொண்டு
சத்த மின்றி வரிசையாய்க் குந்தி
இருக்கும் மக்கட்கு இட்டிலி வைத்தாள்
வறுத்து அரைத்த தேங்காய்த் துவையல்
தொட்டுக் கொள்ள வைத்தாள் அன்னை
பிட்டுந் தொட்டும் உண்டனர் பிள்ளைகள்!

குவளைப் பாலைக் குடித்து விட்டுத்
தவளை போலத் தத்திச் சென்று
புத்தகம் எடுத்தான் பொடியன் ஒருவன்.
பச்சைக் குதிரை பாய்வது போல
மிச்ச மிருந்தவன் மேவிச் சென்று
தன்பைக் கட்டைத் தாங்கிக் கொண்டான்.
பின்னல் மலர்கள் குலுங்கக் குலுங்கச்
சின்ன மான்போல் தேன்மொழித் தங்கையாள்
துள்ளிச் சென்றுதன் புத்தக மெல்லாம்
அள்ளிக் கொண்டபின் பள்ளிக் கேகினுள்!

தையல் மலர்க்கொடி தடித்த புத்தகம்
ஐந்தாறு கையில் அடக்கிக் கொண்டு,
கட்டுச் சோரொரு கையிற் கொண்டு
எட்டி நடந்தாள் எழில்நடை கொண்டே!

கல்லூரி நோக்கிச் செல்லும் மலர்க்கொடிச்
செல்வ மகளைச் சிந்தைபூ ரிக்கக்
கண்டு பெற்றவள் களிப்புக் கொண்டாள்!
உண்டோ அந்நாள் பெண்டிர் கல்வியும்!
கண்டுபோற் பெண்கள் கல்வி கற்றுச்
செண்டுபோற் புகழ்மணம் சிறந்து திகழும்
காலம் வந்ததை எண்ணிக் களித்தாள்!
ஞாலம் பெண்களால் ஆளப் படுதல்
சீலம் அன்றென மூல நூல்கள்
ஓல மிட்டது மாறி யிந்நாள்
ஆளவும் பெண்கள் அரசியல் அரங்கில்
நீள வந்தது நினைந்து மகிழ்ந்தாள்.

தாய்க்குலம் அரசியல் தலைமைமேற் கொண்டால்
பேய்க்குணம் அகலும் பெரும்பெருஞ் சூழ்ச்சிகள்
தவிடு பொடியாம்; தழைக்கும் அறமே!
சுவடுஅறி யாமல் தீமை தொலையுமே.
பெற்றவள் அறிவாள் பிள்ளைகள் அருமை!
மற்றவள் பேதம் மக்களிற் காணாள்!

நாயக மேற்று நாட்டை யாளும்
தாயினத் தாலே தழைக்கும் உலகம்!
கொஞ்சும் மக்களே குடிகள்என் றெண்ணி
விஞ்சும் அன்பால் வேண்டும் பணிகளை
ஆற்றுவாள் தாயே அதனால் சான்றோர்
போற்றும் அரசியல் புவியில் ஓங்கும்.

சூதும் வாதும் தொலையும்; சாதி
பேதம் ஒழியும் பிளவுகள் மறையும்
ஊருணி நீர்போல் உதவும் பயன்களை
யாரும் அடையலாம் அவரவு மட்டிலும்!

இப்படிப் பற்பல எண்ணஞ் சுழன்றிட
அப்படி நின்றவள் அடுத்த வேலையின்
நினைவு வந்திடத் தனது சிற்றரசு
எனுங்குடித் தனத்தை இயற்றப் புகுந்தாள்.

# குறிப்புகள்

## காவலர் இல்லத்தில்

*இளந்தமிழன் 1972 அக்டோபர் இதழில் வெளிவந்தது. இது ஓர் உண்மை நிகழ்ச்சி. சில ஆண்டுகளுக்குமுன் செய்தி இதழ்களில் வந்த ஒரு நிகழ்ச்சிக்குப் பா வடிவங் கொடுத்து இயற்றியது. ஊரும் பெயர்களும் உண்மையல்ல; மாறியுள.*

## வாழ வைத்தான்

*இளந்தமிழன் 1972 நவம்பர் இதழில் வெளிவந்தது. இது ஒரு கற்பனைக் கதை. தன் காமப் பசிக்குப் பெண்கள் பயன்பட்டால் போதும் என்று நினைக்கின்ற பொறுப்பற்ற ஒருவன் கதை. கதை கற்பனையே ஆனாலும் நாட்டு நடப்பில் இது போன்ற நிகழ்ச்சிகள் ஏராளம்.*

## இனிய பாதி

*இளந்தமிழன் 1972 டிசம்பர் இதழில் வெளிவந்தது. காதல் என்ற பெயரால் இளம்பெண்களின் நலம் உண்ண விழைந்த ஒருவன் கதை இது. தன் மனைவி இருக்கும் போதே, இளம் பெண் ஒருத்தியைச் சுற்றி வந்து கெடுக்க நினைத்தவன் கதை இது.*

## பண்பின் பரிசு

*இளந்தமிழன் 1973 ஏப்பிரல் இதழில் வெளிவந்தது. இது கற்பனை கலந்த உண்மைக் கதை. — ஆற்றோடு அடித்*

துச் செல்லப்பட்டாள் ஓர் அழகிய பெண். தன் உயிரையும் பொருட்படுத்தாமல் தாவிப் பாய்ந்து ஆற்றில் நீந்திச் சென்று அவளைக் காப்பாற்றினன் ஓர் இளைஞன். காப்பாற்றிய அவனுக்கு நன்றி சொல்லுவதற்குப் பதிலாக, அவனைக் குற்றவாளியாக்கி விசாரணை நடத்தி அந்தப் பெண்ணைத் தொட்ட கையிரண்டையும் வெட்டித் தள்ள உத்தர விட்டது ஊர்ச் சபை. காரணம் அவன் ஒரு புலையன் என்பதே. காப்பாற்றப்பட்ட பெண் நான்கு வருணத்திலே மேல் வருணத்தைச் சேர்ந்தவள்; உயிருக்கு ஆபத்தான நிலையிலும் அவளை அவன் தொட்டது குற்றமாம். இது உண்மையில் நடந்த கதை. சோதிப் பெருமான் வருகையும் பிற சில நிகழ்ச்சிகளும் கற்பனை.

## பம்பாய்ப் பஞ்சாங்கம்

இளந்தமிழன் 1973, மே இதழில் வெளிவந்தது. கண் மூடித்தனமான காதல் வேகத்திலே சில இளைஞர்கள் முன்னேற்றக் கருத்துக்களை நடைமுறைப் படுத்துவதாக எண்ணிக் கொண்டு, தங்களைப் பெரிய புரட்சி வீரர்களாக மதித்துக் கொண்டு காதல் வாழ்க்கையிலே ஈடுபடத் தொடங்கி விடுகிறார்கள். மோகங் குறைந்தவுடன் சூழுவார் போதனைகளும் சூடேற்ற, பஞ்சாங்கம், காலபலன், ராசிபலன் போன்ற குருட்டுத் தனங்களும் அறிவை வெருட்ட, பிற்போக்குவாதிகளாய் மாறித் தங்கள் இன்ப வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கிறார்கள். மூடக் கருத்துக்கள் குடும்ப வாழ்க்கையை எவ்வளவு தூரம் கெடுத்துவிட முடியும் என்பதற்கு இந்தச் சிறுகதை எடுத்துக்காட்டாக இருக்கிறது. உறுதியில்லாத நெஞ்சங் கொண்டவர்கள் முன்னேற்றங் காண முற்படுவது தன்னழிவையே உண்டாக்கும். குருட்டுத்தனங்களுக்கு அடிபணிகின்ற உள்ளங் கொண்டவர்கள் தங்கள் வாழ்வில் இன்ப வெள்ளத்தில்

திளைப்பதற்குப் பதில் துன்ப வெள்ளத்திலேயே அடித்துச் செல்லப்படுவார்கள். அவர்கள் வாழ்வு சிறக்க மனத்தில் உறுதி வேண்டும்.

## ஒளி மின்னல்

இளந்தமிழன் 1973, ஜூன் இதழில் வெளிவந்தது. காலுக்குக் கட்டை போட்டுவிட்டால் பையன் திருந்தி விடுவான் என்று பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள் பெற்றோர். சில பிள்ளைகள் திருந்திவிடுகிறார்கள். திருந்தாத பிள்ளைகள் — தங்கள் மனைவியருக்கு எவ்வளவு கொடும் பாரமாகி விடுகிறார்கள். — அந்தப் பேதைப் பெண்களின் வாழ்வு எவ்வளவு அவலச்சுவை யுடையதாகி விடுகிறது என்று எண்ணியபோது எழுந்த கற்பனை இது.

## வங்கங் கடந்த மங்கை

இளந்தமிழன் 1973 ஜூலை இதழில் வெளிவந்தது. பழக்க வழக்கத்தின் காரணமாக மணங்கொண்ட மங்கையரை உடனழைத்துச் செல்லாது, கடல் கடந்து தொழில் செய்வோர், அந்நாட்டுப் பெண்களைச் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதால் ஏற்படும் குடும்பத் துன்பங்களை எண்ணிப் பார்த்த போது எழுந்த கற்பனை இது. மன அலைகள் கடல் அலைகளாகி வாழ்க்கை மரக்கலத்தை ஆட்டிப் படைக்கும் அரிய காட்சிகளை இக் கதையில் காணலாம்.

## இருளகன்றிட ஒளிபெருகிட

உரிமை வேட்கை 1973 பொங்கல் மலரில் வெளிவந்தது. தொழிலாளர் வேலை நிறுத்தங்களைத் தூண்டிவிட்டு, அவர்கள் அவல நிலையைப் பயன்படுத்தி இடைத்தரகு ஈட்டும் புல்லரிடமிருந்து மீள வேண்டும் என்ற கருத்தை உட்கொண்டு பாடியது. தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு புத்

தியக்கங் கண்ட தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை வர வேற்கும் கருத்தில் இக் கற்பனை யமைந்தது.

## பொன்னும் வெள்ளியும்

பன்முறை இந்தியாவின்மீது படையெடுத்து கோயில் களை இடித்துக் கொள்ளையிட்டுச் சென்ற — சோமநாதபுரம் கோயிலில் இருந்த — சுயம்பு — சிவலிங்கத்தை உடைத்துப் பல பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்ற கஜினிமுகமது, கவிஞர் பர்தோசியைத் தன் மீது பாட்டெழுதும்படி வற்பு றுத்தினன். பரிசுக்கு ஆசைப்பட்டு கஜினியைப் புகழ்ந்து பாடிய கவிஞர், வாக்களித்தபடி அறுபதினுயிரம் பொன் னுக்குப் பதில் அறுபதினுயிரம் வெள்ளிகளே தருவதாகச் சொன்னதைக் கேட்டு மனமுடைந்து இறந்து போகிருர். உண்மையில் மன்னன் வாக்குத் தவற விரும்பவில்லை. அவரைத் துன்புறுத்தி வேடிக்கைபார்த்து அதன்பிறகு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தவே நினைத்தான். ஆனால், மன்ன வனின் தீச் செயல்களையே அனுபவத்தில் கண்டிருந்த கவிஞர், உண்மையிலேயே அவன் தன்னை ஏமாற்றி விட்ட தாகக் கருதி மனமுடைந்து இறந்து போகிருர். வாக்குப் படி மன்னன் அனுப்பிய பொற்குவியல் வீடு சேரும் போது, கவிஞரின் சவப்பெட்டி வெளியேறுகிறது. நெஞ்சைத் தொடும் இந்நிகழ்ச்சி எண் சீர் வடிவு பெறுகிறது.

## கொய்யாக் காதல்

குறுங்காப்பியம். 1948-ல் சிறு புத்தகமாக வெளிவந்தது. இளைஞர் திரு மு. தேனப்பன் B. E. அவர்களின் இடை விடாத முயற்சியால், பலவான்குடி ஒளிநிலையம் இராம. முத்துவீரப்பன் அவர்கள், தம் செலவில் இந்நூலை வெளி யிட்டார்கள். இலக்கியச் சுவைஞர், ஆங்கிலத்திலும் தமிழி

லும் பல பாச்சுவை நூல்களை எழுதி வெளியிட்ட திரு V.RM. செட்டியார் அவர்கள் இதற்கு ஒரு முன்னுரை வழங்கிச் சிறப்பித்ததோடு, தம்முடைய ஸ்டார் பிரசுர வெளியீடாக ஏற்று விற்பனைப் பொறுப்பை மேற்கொண்டார்கள். இந்நூலின் கற்பனைச் சிறப்பைப் பல அறிஞர்கள் பாராட்டினார்கள். ஒரு காவியத்திற்குரிய எல்லாத் தகுதிகளையும் பெற்று விளங்குகிறது இந்நூல். புத்தக வடிவில் வெளிவந்த போது எழுதப்பெற்ற பதிப்புரை, முன்னுரை ஆகியன :

## என் ஆசை

நாரா நாச்சியப்பன் அவர்களின் கவிதைகளைப் "பொன்னி"யில் பார்த்தேன். பார்த்து இப்படிப்பட்ட உயர்ந்த கவிதைகளைப் புத்தக உருவில் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. "கொய்யாக்காதல்" என்ற ஒரு சிறு காவியம் அவர் எழுதி வைத்துள்ளார் என்று அறிந்தேன். அதன் பயனாகக் கற்பனை வளங்கொழிக்கும் இந்நூல் புத்தகமாக உருவாயிற்று.

"சின்னமலர்க் கண் திறந்தான் சேவடிக்கீழ்ச் சிதறிய பூப் பல கண்டான்" என்பது அவர் கற்பனைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

ஸ்டார் வெளியீடாக வெளியிட ஒப்புக்கொண்ட திரு வி. ஆர் எம். செட்டியார் அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றி.

தமிழகம் இதற்கு நல்வரவேற்பு அளித்து ஆதரிக்க வேண்டுமென்பது என் ஆசை.

"ஒளி நிலையம்"
பலவான்குடி

இராம. முத்துவீரப்பன்

## முன்னுரை

கவிஞர் நாரா நாச்சியப்பன் சிறந்த கவிதையுள்ளம் படைத்தவர் : தமிழன்; தனித்தமிழில், தூய இயற்கை வனப்புடன் காதலின் கொய்யாத் தன்மையைச் சித்திரிக்கும் முறை இப்படித்தான் அமையும்; கவிதைநலங் கொண்டு விளையாடுகின்ற சொற்கள் சிறைவிரித்துப் பறந்து வரும் போது, எங்கிருந்து இவை உதயமாகின்றன என்று கவனித்தால், கவிஞன் உள்ளம்தான் காரணமாகத் தோன்றும். காதலும் கவிதையும் பின்னிக்கொண்டும் மின்னிக்கொண்டும் வரும் போது, மனித வாழ்க்கை காதலைச் சுற்றி வளர்கின்ற ஓவிய வில்லங்கமும் நன்கு புலனாகிறதல்லவா? படித்துப் படித்து இன்புறுவீர்களாக!—இது புதிய இனிய இதய வனப்பு வாய்ந்த காதற் கவிதை!

காரைக்குடி
4—4—48

வி. ஆர்எம். செட்டியார்

## என் செயல்

பாடல்களால் ஒரு கதை யாக்க விரும்பினேன். அதன் விளைவுதான் இந்தக் "கொய்யாக் காதல்" எனும் சிறு காவியம்.

மதவெறி எத்தனை தீயது என்பதைத்தான் கதையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். கதையை வளர்ப்பதற்குத் துணையாகக் காதற் பொறாமையால் ஏற்படும் நிகழ்ச்சிகளைச் சித்திரித்திருக்கிறேன். 'இது என் செயல்' என்று கூறிக் கொள்வதிலேதான் நான் பெருமையடைகிறேன்.

பாடல்கள் எழுதுவதற்குத் தெய்வத்தின் அருளோ, கலைவாணியின் வரமோ இருக்கவேண்டும் எனப் பலர் நினைக்

கிறார்கள்; மனித அறிவின் திறமையில் மலரும் எந்தப் பொருளும் செயற்கைப் பொருள்தான் என்பது என் சித்தாந்தம்.

இந்த 'என் செயலை'த் தமிழ் உலகத்தில் பரப்ப முன் வந்த தோழர் இராம. முத்துவீரப்பன் அவர்களுக்கும் திரு. வி. ஆர்எம். செட்டியார் அவர்களுக்கும் என் நன்றி.

நான் கவிதை எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து என்னை ஊக்கப்படுத்தியும், ஆதரவு நல்கியும், தமிழ் நாட்டிற்குப் 'பொன்னி'யின் மூலம் என்னை அறிமுகப்படுத்தியும் வந்துள்ள என் அண்ணலர் முருகு, பெரியண்ணன் இருவர் திருமுன் என் செயலால் மலர்ந்த முதல் நூலாகிய இந் நூலைப் படைக்கிறேன்.

10-4-48 நாரா நாச்சியப்பன்

## இளவரசி முல்லை

இளந்தமிழன் 1975 மார்ச் இதழில் வெளிவந்தது. ஒரு சிறு காப்பியமாகத் தொடங்கிய இந்நூல் அரை குறையாக நின்று விட்டது. தொடரும் என்ற குறிப்போடு பாதியில் நின்று விட்ட இக்கதை, இப்போது முற்றுப்பெற்று இப்புத்தகத்தில் இடம் பெறுகிறது. நூல் முழுவதும் ஒரே வகையான எண் சீர் விருத்தத்திலேயே இயன்றுள்ளது. ஷேக்ஸ்பியர் காவியம் ஒன்றைப் படித்தபோது, அதுபோல ஒன்று எழுத வேண்டும் என்று தொடங்கி, முற்றிலும் வேறாக முடிந்த ஒரு கதையைக் கொண்டு விளங்குகிறது.

## ஈரோட்டுத் தாத்தா

1948 ஏப்பிரல் மாதம் பொன்னி வெளியீடாக 4 அணா விலையில் வெளி வந்த சிறு நூல், பெரியாரின் வரலாற்றுக்

குறிப்புகளைக் கொண்டு அந்நாளில் அவர் பெருமை விளக்கும் நூலாக வெளிவந்தது. இந்நூலுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தம் குயில் இதழில் ஒரு மதிப்புரை எழுதினார்கள்.

## நெறிசூடி

ஔவையார் எழுதிய ஆத்திசூடியைப் போன்ற ஒன்று எழுதித் தருமாறு மணிவாசகர் நூலகம் பதிப்பாசிரியர் திரு ச. மெய்யப்பன் அவர்கள் வேண்டியவண்ணம் எழுதிக் கொடுத்த நூல் இது. புதிய ஆத்திசூடிகள் 12 என்ற தலைப்பில் 1980 ஆம் ஆண்டு சனவரியில் மணிவாசகர் நூலகம் வெளியிட்ட தொகுப்பு நூலில் இது இடம் பெற்றுள்ளது.

## நல்வழி

44 வெண்பாக்களைக் கொண்ட 'நாச்சியப்பன் நல்வழி' என்ற இந்நூல் 1960ஆம் ஆண்டு தென்றல் பொங்கல் மலரில் முழுமையாக வெளிவந்தது. தன்மான இயக்கத்தின் புதுக் கருத்துக்களை ஓட்டமான நடையில் ஆசிரியர் சிறந்த வெண் பாக்களாக இயற்றியுள்ளார்.

## பிள்ளைத் தமிழ்

இளந்தமிழன் 1973 சனவரி பொங்கல் சிறப்பிதழில் வெளிவந்தது.

முன்னாள் ஆசிரியர்கள் மன்னர்களையும் தெய்வங்களையும் நூற்பொருளாகக் கொண்டு பிள்ளைத் தமிழ் இயற்றினார்கள். இந்நூலில் பிள்ளையையே நூற் பொருளாகக் கொண்டு பிள்ளைத் தமிழ் இயற்றப் பெற்றுள்ளது, பொதுப் பருவங்கள் ஏழும், ஆண்பாற் பருவங்கள் 3-ம் பெண்பாற் பருவம் 3-ம் ஆக 13 பருவங்களுக்கும் பருவம் ஒன்றுக்கு மூன்று அறுசீர் விருத்தமாக 39 விருத்தங்களைக் கொண்டது இச் சிறு நூல். இளந்தமிழன் பொங்கற் சிறப்பிதழில் இந் நூலுக்கு ஆசிரியர் எழுதிய முன்னுரை இது :

## முன்னுரை

வாழ்வு தொடங்கிய நிலையில் ஒரு கணவனும் மனைவியும் தங்களுக்கு ஒரு செல்வப் பிள்ளை வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே பிள்ளை பிறக்கும் முன்பாகத் தோன்றும் அறிகுறிகளே பெருமகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் ஆற்றல் படைத்தவையாம். பிள்ளை பிறந்தபின், அதைச் சீராட்டுவதிலும் பாராட்டுவதிலும் வாழ்வு இன்பநடை போடுகிறது. மனத்திற்கு இன்பஞ் சேர்க்கும் அந்தக் குழந்தையைப் பெற்றவர்கள் பலவிதமாகக் கொஞ்சிக் குலவுவதைக் காண்கிறோம்.

காலையும் கையையும் ஆட்டிக்கொண்டு போட்ட இடத்திலேயே கிடந்த குழந்தை குப்புறக் கவிழ்ந்து கொண்டதும் ஒரு குதூகலம் பிறக்கிறது. அது வயிற்றால் நகரத் தொடங்கும்போது புது மகிழ்ச்சி தோன்றுகிறது. அந்தச் சின்னஞ் சிறிய குழந்தை தவழுவதும், எழுவதும், ஆடுவதும் கை வீசுவதும், மழலைமொழி பேசுவதும், சிரிப்பதும் நடப்பதும் எல்லாம் புதுமையாகவும் இன்பமாகவும் இருக்கின்றன.

சிற்றிளம் பருவத்தில் அக்குழந்தையின் செயல் நிலைகள் ஒவ்வொன்றையும் குறித்துப் பேசுதலும், கொஞ்சுதலும் பெற்றோர்க்குப் பெரிதும் இன்பம் தருவனவாம். இந்த இயல்பை மனத்துட் கொண்டு முன்னைத் தமிழ்ப் புலவர்கள் பிள்ளைத் தமிழ் நூல்கள் பல இயற்றியுள்ளார்கள்.

பிள்ளைத் தமிழ்நூல் இயற்றிய பழம்பெரும் புலவர்கள், தாம் தாம் விரும்பி வழிபடும் தெய்வங்களில் ஒன்றைப் பிள்ளை நிலையில் வைத்துப் பாடியிருக்கிறார்கள்.

அவர்கள் தம் அரிய நூல்களில் அத்தெய்வப் பிள்ளைகளை ஆடவும் பாடவும் வைத்தும், தாலாட்டியும் சீராட்டியும் பாராட்டியும் நீராட்டியும் மகிழ்ந்திருக்கிறார்கள்.

பிள்ளைத் தமிழ் நூல்களிலே குமரகுருபர அடிகள் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் கவினழகு வாய்ந்த

தமிழ் நடையும் கற்பவர் மனத்தை ஈர்க்கும் பெருஞ்சுவையும் பொருந்திய சிறப்புடையது.

அழகு கொழிக்கும் அப்பிள்ளைத் தமிழிலேயே எழிலின் உச்சமெனப் புலவர்கள் போற்றும் பாட்டு இதுவாகும்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

சிறப்பு மிகுந்த இந்நூல்கள் யாவிலும், பாட்டுடைத் தலைவனைப் பிள்ளையாக வைத்துப் பேசுகின்ற நூலாசிரியர்கள், பிள்ளைப் பருவத்துச் செயல்களைக் காட்டிலும், அத் தெய்வங்கள் அல்லது பெரியார்களின் அரும்பெரும் செயல்களையே பெரிதும் பாடி வைத்திருக்கிறார்கள்.

பிள்ளைத் தமிழில் பிள்ளையைப் பிள்ளை நிலையிலேயே முழுதும் வைத்துப் பாடினால் பொருத்தமாயிருக்குமே என நினைத்தேன். அதன் விளைவே இந்நூல்.

குருபரர் போன்ற அருளும் புலமையும் பெருகிய நிலையினன் அல்ல என்றாலும், பொருளும் சிறப்பும் பொருந்தவே

இந்நூலை எழுதியுள்ளேன். பெற்றோர் தம் குழந்தைகளைப் பேச்சால் மட்டுமல்லாமல் தமிழ்ப் பாட்டாலும் கொஞ்சி மகிழ இப்பிள்ளைக் கவியமுதம் பெரிதும் உதவும் என்று கூறு வேன். எவரும் பாடி மகிழத்தக்க எளிய நடையில் உள்ள இந்நூலைத் தமிழன்பர்கள் போற்றி வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**நாரா நாச்சியப்பன்**

**மங்கல மங்கை**

ஒரு குடும்பப் பெண் எப்படியிருக்க வேண்டும் என்ற கேள்விக்குப் பதிலாக இக்கற்பனைப் பாடல் இயன்றுள்ளது. பாரதிதாசனின் குடும்ப விளக்கின் சாயலை இதில் காணலாம்.

## நூலாசிரியர் பற்றிய குறிப்புகள்

**பிறந்த நாள்**

13 - 7 - 1927.

**பெற்றோர்**

சிதக. நாரா. நாராயணன் செட்டியார்
அன்னபூரணி ஆச்சி

**ஊர்**

ஆ. முத்துப் பட்டணம்,
ஆத்தங்குடி அஞ்சல்
இராமநாதபுர மாவட்டம்
தமிழ்நாடு.

**தொழில்**

அச்சகம்.

## முகவரி

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானி ஜான் கான் தெரு
சென்னை 600 014.

## எழுதிய நூல்கள்

### சிறுவர் கதை நூல்கள்

மூன்றுவது இளவரசன், குமரித் தீவு, சரவணச்சாமி, காளி கோயில், மாஸ்டர் கோபாலன், சவுக்கடி தர்பார், மாந்தோப்பு மன்னன், கிரேக்க புராணக் கதைகள், ஐந்து மூக்கு மிருகம், ஒட்டுக் குடுமி பட்டுச் சாமி, நீளமூக்கு நெடுமாறன், அழகு இளவரசி, தெய்வ அரசு கண்ட இளவரசன், சிட்டு, காக்கைப் பள்ளிக் கூடம், அசோகர் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், தாவிப் பாயும் தங்கக் குதிரை, மாயத்தை வென்ற மாணவன், தங்கத் தேனீ.

### சிறுவர் பாடல் நூல்கள்

சிறுவர் பாட்டு, மழலைச் சோலை, மழலைப் பொழில், மழலைப் பூங்கா, செம்மை நலம், கல்வி நெறி, சான்றோர், சிங்காரக் கவிதைகள்.

### புதினங்கள்

மோகனக் கிளி, நான்கு பக்கீர்கள் கதை, மதுரைச் சீமையில் புதுவைக் கள்ளன், நகரும் சுவர், உமார் கயாம், மன ஊஞ்சல்.

### பிற

ஓவியப்பாவை — வானொலி நாடகம். சிந்தனையாளர் மாக்கிய வெல்லி தமிழ் வளர்கிறது — பாநூல்.

## பாட்டு முதற்குறிப்பு அகரமுதலி
(எண்—பக்க எண்)


அங்கையின் 130
அஞ்சாத உள் 221
அஞ்சியஞ்சிப் 231
அடிப்பான் ஒரு 217
அணிகளிலும் 135
அண்டை அயல் 177
அந்த வீதி 103
அந்திக்குக் கோயி 189
அப்பாவும் அம்மா 145
அப்போதோர் 186
அம்மம்மா 166
அம்மா அம்மா 227
அம்மா நூறு 129
அரசர்க்குக் கோள் 151
அரசவையில் 97
அரசன் மகள் 109
அருகுள பெண் 115
அருமை மகள் 182
அழகரசி இள 174
அழகிற் சொக்க 105
அழகு மகள் 137
அறிஞர் அண்ணு 208
அறிவுரைகள் 223
அறுபதினாயிரம் 99
அன்பாலே கலப் 144
அன்புடையாள் 139
அன்புடையீர் 119
அன்புத் தோழி 233
அன்பு நெறி 211
அன்பே என்னுடி 161
அன்னாய் நீ 108
அன்னியர்கள் 195
ஆசையுடன் பொன் 152
ஆட்சி செயும் 201
ஆட்ட நடை 120
ஆட்டமும் 218
ஆடி ஆடித் 230
ஆத்தி சூடி 210
ஆமடி கோளை 114
ஆரியத்தின் 199
ஆர்ப்பரிப்பும் களிப் 180
ஆளை மயக்கும் 237
இங்கென்ன 138
இது நிறுத்த 171
இத்தனையும் 183
இந்த மொழி 132
இந்துநியா 201
இந்நாட்டில் 122
இப்படியோர் 126
இப்போதே பய 172
இந்துக்கள் 95
இருகை தட்டி 226
இருக்கின்றேன் 106
இருட்டிவரும் 184
இருந்த பல 99
இல்லறத் தான் 124
இல்லறத்தில் 125
இல்லையெனச் 190
இவ்வாறுமுத் 147
இளங்கொடியீர் 168
இளமையிலே 108
இளவரசி அது 171
இளவட்டக் கனவு 148
இளைஞன் அழகு 104
இறைவனைப் போய் 121
இனி நான் போய் 134

இன் குரலில் பேசு 175
இன்பமுற வாழ்க 134
இன்பம் உலகம் 225
இன்பம் ஒன்றே 104
இன்ப வாழ்வே 236
இன்றிங்கு 121
ஈதறிந்த 200
ஈரோட்டில் 194
ஈவேரா 197
உங்களுக்கும் 162
உடனெழுந்தார் 123
உடலுக்குத் 195
உடனே நாம் புறப் 185
உடன் செல்லப் 187
உடன் பிறந்தான் 181
உண்ணல் குறைத் 219
உயிர் நண்பன் 151
உயிர் பறிக்க 96
உரிமைக்குப் 197
உலகிற்கோர் 107
உலகெலாம் 192
உவமைகளோ 207
உளங்கவர்ந்த 109
உள்ளமுவப் 141
உள்ளூருக்குள் 142
உறங்குங்கால் 181
உன் கடமை 175
உன் துணையாய் 164
உன்றன் முகத்தை 236
ஊக்கமிலா 222
ஊரின் மடமை 217
ஊருக்குத் 222
ஊருணியில் நீர் 160
ஊர் சுற்றி 116
ஊர்ப் புறத்தில் 160
ஊறும் தேனின் 232
எங்கெங்கும் 149
எடுத்தெறிந்த 163
எண்ணரிய 98
எண்ணியெண்ணித் 227
எதிரெதிரே 174
எது நல்ல 106
எத்தனை நாள் அன் 169
எத்தனையோ பெண் 165
எப்போதும் இதய 143
எப்போதும் சிள் 154
எல்லோரும் போய் 186
எல்லையில்லாப் 229
எவ்வுயிரும் 137
எழில் புரியில் 116
எழுந்தந்த 120
எழுபதினாயிரம் 203
எனச் சொல்லிக் 161
எனப் பல சொல் 115
எனப் போக்கி 113
என நட்பை 150
எனினும் ஒரு 203
எனைப் பிரிந்து 144
என் மேலே 147
என்றந்த ஏருழ 158
என்றந்தத் தோழி 112
என்றனள் சென் 105
என்றுள் நோக்கி 129
என்றுனை மீண்டுங் 116
என்று சொல்லி 119
என்றென்றும் 98
என்றேதன் 140
என்ன விந்தை 123
என்னூரும் தென் 162
என்னெதிரில் 141
என்னென்ன சிந்தனை 185
ஏடி நான் 133
ஏவியநல் மன்னர் 180
ஏனிந்த ஐயங் 146
ஒத்தவய துள்ள 143
ஒப்பப் பிறந்தாலும் 223
ஒரு வேளை மன்னர் 148
ஓடிப் போய் 114
ஓயாத உழைப்பு 205
ஓய்ந்திருக்கும் 157

கடவுளுக்குச் சிலே 144
கட்டிக் கட்டி 235
கட்டிக் கரும்பே 2:0
கட்டி மண் 223
கண்ட மக்கள் 103
கண்டு சிரிக்கும் 227
கண்ணுக்கு மறை 189
கண் போல் 122
கத்தூரி சவ்வாது '67
கம்பதை ஊன்றி 119
கருதாமல் சின் 173
கருத்துக்குத் 2C7
கரையாத உன் 146
கல்லினிற் சிற்பம் 111
கல்லேத் தகர்க்க 224
கவிவாணன் 101
கறையின்றி 210
கற்பனேயோ அற் 160
கற்றுச் சிறந்தோனே 216
கற்றுத் தேர்ந்தோன் 222
கன்னிதனே 126
காணு முன்னே 163
காதலனின் 196
காதலித்துப் பேசி 171
காதலிலே தோற்ற 176
காதெ ் னும் மது 154
காதல் கொண்டே 128
காத்திருந்த கண் 153
காந்தக் சண் 1.6
காமமது 109
காமாட்சி என்னு 153
கார் மேகம் போல 179
காவலர்கள் முத் 151
காவியத்தை 99
காவிரிப்பூம் 191
காவிரியில் ஓடத் 159
காற்றடிக்குப் 206
கிழ்ப்டருவம் 127
கிளர்ச்சியினே 201
குதி கொண்டு பாய் 177
குதிரைக் கழுத்து 1:9
குவித்த மணலால் 235
குளக் கரையில் 220
குறளென்னும் 215
குறிப்பறிந்து நடக் 187
குறையின்றி 210
கூடாரத் துள் 188
கூடியுள்ள 2 6
கேளப்பா 124
கையின் சுழற்சி 232
கொண்டதொரு 181
கொதிக்கின்ற 170
கொல்லென்றும் 179
கோடித் தவங்கள் 225
கோட்டுப் பூக்கள் 233
கோயிலுக்குச் 1 9
கோயில் குளந் 224
கோலப் புருக்கள் 234
சடசடெனப் 165
சந்திக்கச் சந்திக்க 140
சாிமானே 118
சற்றேனும் 163
சாதிகள் நான்கு 198
சாதி பதினுயிரம் 2:6
சாதியால் 199
சாய்ந்தபடி 132
சிங்காதனம் பொலிய 191
சிங்கத்தின் முழக் 155
சிரிக்கின்ற மங்கையரின் 135
சிரிக்கின்ற மங்கையவள் 137
சிலே வணக்கம் 95
சிறு துரும்பும் 200
சிதைத்தாலே 133
சின்னஞ் சிறிய 226
சின்ன மலர் 107
சுந்தரி கேட்டு 104
சுந்தரியந்த 127
சூதாடி வென்ற 191
சூழ்ச்சியில் ஆர்வம் 112
செடியும் கொடியும் 234

செந்தாமரை 228
சென்னையிலே 203
சேடியர்கள் 173
சேலை யொன்று 157
சேற்றில் வழுக்கினேர் 223
சைவத்திற் 122
சைவத்தின் 117
சொல்லச் சொல்ல 229
சொல்லடி 116
சொல்லாமல் 173
சொல்லெல்லாம் 99
சொல்லேடி 109
சொற்பொழிவு 207
சொன்னவுடன் 188
சோர்வுற்ற அஞ் 182
தங்கக் கிண்ணச் 230
தஞ்சைக்குச் சென் 143
தஞ்சைக்கு வந் 145
தஞ்சை மன்னர் 190
தமிழரெலாம் 205
தமிழென்ருல் 208
தமிழ்காக்கும் 202
தயங்காமல் நேர் 188
தயங்காமல் புயங்க 183
தயங்காமல் போர் 181
தலைவர் சொல் 202
தவழ்ந்து தவழ்ந்து 229
தவழ்ந்து வந்து 237
தவறு மிகச் 207
தன் போல் 218
தன் மனைவி 194
தன் மொழியிற் 219
தன் வாழ்வை 199
தன் வீட்டார் 193
தனித் தனியே 197
தன்னுலே 198
தன்னுறுதி 217
தன்னுறுதியில் 221
தாத்தா தமக்கு 120
தாத்தாவைச் 205
தாமரைக்குப் 142
தாமரையாம் 159
தாமரையாள் 168
தாமரையும் முத்தப் 177
தாரையைத் துணை 138
தாமரையைப் 137
தாய் மீதில் 200
தாய் மொழியைக் 203
தாய் மொழியைக் 220
தார் வேந்தன் 120
தாலி எனும் 195
தாவி வந்தாள் 134
தாழ்ந்தோன் 220
தான் வந்த புரவி 180
திகைத்து நின்ற 108
திங்கள் பிறந் 88
திருவாங்கூர் 196
திருவிடத்தில் 125
திரைச்சீலை 151
தினைக்கும் வகை 112
தீயவனைப் பிடி 189
தீர்ந்தது பகை 130
துணிந்து செய 176
துறை தோறும் 210
தூக்கம் வராமல் 51
தூண்க ளிரண்டும் 219
தூய் தமிழை 201
தெருவின் மணலை 235
தென்றல் வர 1
தேங்காய் உடைத்தும் 224
தேய்ந்து தேய்ந்து 231
தேனிருக்கும் பொற் 146
தொண்டர்களில் 195
தோயும் இன்பம் 234
தோழியையுற்று 129
தோழி வரவை 105
தோன்றும் முழு 14
நகர்தள்ளி 106
நடக்கின்ற போ 157
நடந்த தெல்லாம் 166

நடந்த நடை 120
நடந்து நடந்து 156
நட்புடையான் 174
நண்பகலில் 131
நண்பகல் நேர 130
நல்ல நல்ல 95
நல்லவன் போல் 149
நற்பாரதியின் 209
நாகங்கள் 155
நாச்சியப்பன் 215
நாடோறும் 140
நாட்டில் அமைதி 120
நாட்டுக்கு 136
நாட்டு நலம் 196
நாட்டு மக்கள் 95
நாளைக்குத் திரு 184
நாள்தோறும் 164
நினைத்த தொரு 142
நினைத்தபடி 159
நினைத்த முடிக்கு 221
நின் மகனை 121
நீயிந்த 125
நீரோடு 224
நெஞ்சாரக் 170
நெஞ்சில் இன்ப 228
நெஞ்செரிய 109
நெஞ்சையள்ளும் 226
நெடு நாட்கள் 204
நெடு நாளாய்த் 182
நெடுந் தூரம் 156
நெய் வார்த்துப் 221
நெற் பயிரைப் 222
நோயோடு 206
பகலவன் கீழ்த் 238
பகலென்றும் 100
பசித்தார்க்குச் 217
பணிப்பாவை 139
பண்புண்டைய 169
பருவத்துப் பெண் 150
பல்லக்கேறி 103
பழமையால் 220
பற்றுடையான் 97
பாய் வாளை 132
பார்ப்பனரும் 194
பார்ப்பனர் 198
பாலும் தெளி 215
பிச்சைத் தொழிலே 217
பிழைத்திட்டம் 170
பிறநாட்டார் 97
பிறந்தவரெல் 216
பின் தொடர்ந் து 167
புகை கூட 135
புத்த சமயம் 104
புத்தத்தில் 125
புத்தமதம் 118
புத்தமுதச் சொல் 101
புத்தர்களை 117
புத்தன்உருவம் 102
புன் மலந்தின் 218
புன்மைமிகு 167
பூக்கூடை 185
பூசாரி இவ் 122
பூப்போன்ற 117
பூவையரைச் 165
பெண்ணென்று 175
பெண்ணுகைத்தனி 153
பெண்ணொருத்தி 216, 219
பெரியார் தம் 206
பெற்று வளர்த்த 215
பெற்றோர்க்குத் 153
பெற்றோர்பால் 176
பேச்சு வழக்கற்று 221
பேரின்பம் 127
பேருந்து நிற்கு 27
பொங்கலிட்டு 220
பொங்கி நுரை 38
பொட்டல் வெளிக் 157
பொய் சொன்னார் 219
பொருள் வேண்டும் 96
பொறுத்தருள் 150

பொன் கொடுப்ப 100
பொன்னப்பன் இம் 141
பொன்னப்பன் உட 187
பொன்னப்பன் கத் 163
பொன்னப்பன் தா 145
பொன்னப்பன் பேச 183
பொன்னப்பன் முல்லை 152
பொன்னப்பன் முல்லை 175
பொன்னுனை பிள்ளை 189
பொன்னென்றுல் 100
போகத்தான் 70
போடா நீ போ 149
போம் ஐயா 117
போய்ப் பார்க்க 113
போரிட்டுலகை 218
போர்க்களத் தேவட 178
போர் முடிந்து படை 183
மண வணிகம் செய 162
மணி தோறும் களத் 179
மதுரைநகர் வணி 161
மதுவினைக்குடித்து 1:4
மக்களைப் 199
மமதையினை 202
மயக்கியதும் நீ 132
மரக்கிளைகள் 1:5
மலர்க்கு மலர் 169
மலைபோலும் 205
மலைப்பாம்பின் 155
மறைமலையார் 204
மற்புயத்தில் அம்பு 178
மன்னருக்குப் பணி 139
மன்னருக்கு வேண்டி 165
மன்னரைப் போய் 149
மன்னர்மகள் 148
மன்னவர்க்கு 171
மன்னவர்பால் 168
மன்னவரே 187
மன்னனிடம் 127
மாதரைச் சற்றும் 111
மாதொடு கூட 114
மாதொருபாகன் 112
மாப்பிள்ளை 191
மாமல்லன் 184
மாமன்னர் என் 164
மாம்பழத்தைப் 156
மாலையிலே 143
மிக்க உணர்ச்சி 223
மீட்டொரு தோழி 113
முத்து முத்தாய் 232
முடியாது முடி 129
முது கிழவர் 118
முத்தப்பன் இவ் 136
முத்தப்பன் தஞ்சை 139
முத்தப்பன் பொன்னப் 138
முத்தப்பன் பொன்னுனை 141
முத்தப்பன் மீது 167
முல்லைக்குச் சினம் 166
முல்லைக்குப் புயங் 147
முல்லை சொல்லி 172
முல்லை தனை 190
முல்லை யெனும் 158
மூன்று கால் 119
மெல்ல நடை 131
மேலை மலையில் 233
யாரும் இல்லா 231
வஞ்சகனும் டொன் 172
வஞ்சியவள் நடுப் 158
வஞ்சியாள் 111
வஞ்சியின் பாலவன் 111
வஞ்சி தன்னை 128
வஞ்சி துணை 128
வடநாட்டான் 177
வடநாட்டில் 123
வடபுறத்துப் 179
வண்டி வந்து 186
வந்தாளச் 107
வந்திருப்பார் 185
வயிறு பசித்தால் 225
வரலாகும் 107
வருந்தியுழைப் 216

வல்லியரும் 218
வழிச் செல்லும் 145
விழுந்து விட்ட 203
வளர்ந்து வருமென் 237
வாய்பிளந்த 161
வாவென்றால் 112
வாழி தலைவி 110
வாழ்வு நலம் 126
வாளினுற் பகை 131
வாள் பாய்ந்த 98
வாள் பிடித்த 133
வானங் கருத்து 59
வில்லெடுத்து 97
வீட்டினிலே 154
வீழ்ந்தவர் 115
வெல்லப் பாகே 228
வெளியேற்றச் 197
வெள்ளிய மென் 204
வேந்தர்களால் 124
வெறுப்புற்ற மன் 173
வேற்படையும் வாட் 178
வைதாலும் 152
வையத்தில் 222

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 9 | நடைபிணம் | நடைப்பிணம் |
| 13 | 18 | காட்டுனிலே | காட்டு நிலே |
| 15 | 15 | விழுங்குபவன் போல் | விழுங்குதல் போல் |
| 27 | 13 | அவழழகை | அவளழகை |
| 30 | 12 | வளர்த்துவந்த | வளர்த்து வளர்ந்துவந்த |
| 40 | 19 | அவநம்பிக்கை யோடங்கே | அவநம்பிக் கையோடே |
| 53 | 17 | கலகலவெனச் | கலகலெனச் |
| 57 | 9 | மனத்தோடு | மனத்தோடே |
| 69 | 23 | உந்நிலேமை | உன்னிலேமை |
| 83 | 23 | வீழலாக்கும் | விழலாக்கும் |
| 102 | 6 | திருமுகம் | திருமுகமும் |
| 104 | 20 | தங்குனிழல் | தங்குநிழல் |
| 111 | 19 | என்றன் | என்ற |
| 121 | 1 | பாரேனும் | யாரேனும் |
| 121 | 23 | பதிற் சொல்லி | பதில் சொல்லி |
| 125 | 16 | வரவேற்ருன் | வரவேற்றேன் |
| 137 | 12 | பாகத்தை | பாசத்தை |
| 138 | 14 | என்னேக் | உன்னேக் |
| 138 | 15 | உன்னே | என்னே |
| 146 | 24 | மனத்துள்ளோ | மனத்துள்ளே |
| 168 | 14 | இவள்பேச்சில் | இவன்பேச்சில் |
| 182 | 23 | வீரனவர் | வீரனவன் |
| 183 | 16 | பேருமையுடன் | பெருமையுடன் |
| 190 | 13 | சொல்லுவதற்கா | சொல்லுதற்கா |